# ஏற்றமிறக்கம்



ஆசிரியர்:
ஆரையம்பதி க.சபாரெத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எம் தந்தை தாயாரிலும் பார்க்க ஒரு
படி மேலாகப் பாசத்தைச் சொரிந்து
எப்போதும் எமது உயர்வினையே
உயிர் மூச்சாகக் கொண்டு
செயற்பட்டு எம்மை ஆறாத்துயரில்
மூழ்க விட்டு திடீரென மறைந்து
போன எனதருமைப் பாட்டி
திருமதி. பொன்னம்மா
கணபதிப்பிள்ளை (பொன்னியம்மா)
அவர்களது பாதார விதங்களில் இந்
நூலைச் சமர்ப்பணம் செய்கிறேன்.
நெஞ்சம் நிறைந்த நினைவுகளுடன்

ஆரையம்பதி
க.சபாரெத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஏற்றம் இறக்கம் |
| வகை | : | சிறுகதை |
| ஆசிரியர் | : | ஆரையம்பதி. க.சபாரெத்தினம்<br>இல.177 A. 6ம் குறுக்குத் தெரு<br>செல்வா நகர்<br>ஆரையம்பதி. |
| பதிப்புரிமை | : | ச.சத்தியபாமா<br>இல.177 A 6ம் குறுக்குத் தெரு<br>செல்வா நகர் ஆரையம்பதி. |
| பக்கங்கள் | : | 166 |
| அளவு | : | A5 |
| அட்டை படம் | : | செல்வி. ச. சத்தியப்பிரியா |
| அச்சுப் பதிவு | : | டொட்கொம் அச்சகம், காத்தான்குடி.<br>தொ.பே: 065 2245570 |
| விலை | : | 200.00 |
| ISBN | : | 978-955-53426-0-5 |
| Bar Code | : | 9 789555342605 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

மட்டக்களப்பு மாவட்ட நவீன இலக்கிய வளர்ச்சியில் ஆரையம்பதிப் பிரதேசத்திற்கு முக்கியமானதொரு இடமுள்ளது. மட்டக்களப்பினைத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்திய நவம், ஈழத்தவருக்கு வெளிப்படுத்திய அன்புமணி ஆகியோர் தொடக்கம், புத்தெழுச்சியின் அடையாளங் களான மலர்செல்வன், திசேரா முதலானோர் வரை ஆரையம்பதியைச் சேர்ந்தோர் எனப் பலருள்ளனர். இவர்களில் பலரை நன்கு அறிந்திருந்தேன்; பலரோடு நட்பிருந்தது. எனினும் சில வருடங்களுக்கு முன்னர், எனது யாழ்ப்பாணத்து நண்பரான எழுத்தாளர் குப்பிளான் ஐ. சண்முகம், ஆரையம்பதி எழுத்தாளரொருவர் பற்றியும் மொஸ்கோ அனுபவங்கள் பற்றி அவர் நல்லதொரு நூலெழுதியிருப்பது பற்றியும் அவர் பெயர் சபாரெத்தினம் என்றும் அறியாததொரு தகவலை வெளிப்படுத்தியிருந்தார். அத்தகவல் புதிதாக விருந்தமையும் ஆரையம்பதி நண்பர்களெவரும் அது பற்றி-அவர் பற்றி குறிப்பிடாதிருந்தமையும் எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தன. இந்நிலையில் அன்னார் சிறுகதை எழுத்தாளராகவும் இருக்கின்றாரென்பதுடன் அவரது அத்தொகுப்பிற்கு அணிந்துரை எழுதும் வாய்ப்பும் யதேச்சையாக இன்று கிடைத்திருப்பது இரட்டிப்பு மனமகிழ்சி தருகின்றது.

இவ்வாறு இரட்டிப்பான மனமகிழ்ச்சி ஏற்படக் காரணம், எழுபதுகளில் அவர் காலத்தில் எழுதிய இம் மாவட்ட எழுத்தாளர்களது தொகுப்புக்களிலிருந்து இத் தொகுப்புச் சிறுகதைகள் வேறுபட்டிருக்கின்ற மையலாகும்.

எழுபதுகளில் இம்மாவட்ட எழுத்தாளர்களுள் விதிவிலக்கானவர்கள் தவிர, பெரும்பாலானோர் குடும்பம், காதல், சமூகம், பிரதேச வாழ்வியல் சார்ந்த சாதாரண விடயங்கள் பற்றி எழுதுபவர்களாகவும் இலட்சிய நோக்குடனோ மனோரதியப் பாங்குடனோ மேலோட்டமாக பிரச்சினைகளை அணுகுபவர்களாகவும் கதை, கதையம்சத்திற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மை கொடுப்பவராகவும் விளங்கினர். மாறாக இவரது சிறுகதைகள் அத்தகைய போக்குகளிலிருந்து விலகிச் செல்வனவாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலான எழுத்தாளர்களின் முக்கிய கவனத்திற்குட்படாத சில விடயங்கள் இவரது பார்வைக்குட்படுகின்றன. உதாரணமாக, அரச அலுவலகங்கள் தொடர்பான விடயங்கள் அத்தகையனவாகவுள்ளன. முதற் சிறுகதையான "ஏற்றம் இறக்கம்" அரச திணைக்கள மேலதிகாரிகள் அவர்களுக்குக் கீழ் பணிபுரிவோர் ஆகியோர்களுக்கிடையிலான உறவு முறை பற்றியது. எல்லோருக்கும் எப்போதும் பொருந்திவரக் கூடியது. நீதியான கோரிக்கை லஞ்சம் தொடர்பானது; (புதுமையான கற்பனை என்ற விதத்தில் புதுமைப்பித்தனின் கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும் சிறுகதையை நினைவுபடுத்துகின்றது) அரச திணைக்கள ஊழியர்களின் மதிய வேளை பற்றிய நிகழ்வுகளுடன் தொடர்புபட்டது மதிய போசன இடைவேளை.

தொழிலாளர் பற்றிய பல சிறுகதைகள் வெளிவந்திருப்பினும் மேசன்மார் பற்றி எவராவது எழுதியிருப்பதாகத் தெரியவில்லை. இவ்விதத்தில் "நாளை என்பதில்லை" மேசன் குடும்பமொன்றின் வறுமைநிலை வாழ்க்கையை விபரிக்கின்றது. புதுமைப்பித்தனின் ஒரு நாள் கழிந்தது சி. வைத்தியலிங்கத்தின் பாற்கஞ்சி முதலியன இவ்வேளை நினைவிற்கு வருகின்றது.

மத்தியதர வர்க்கத்தினரின் வாழ்க்கை எப்போதுமே நிறைவு காண்பதில்லை; "வரவு எட்டணா செலவு பத்தணா" என்ற நிலை கொண்டது. மத்தியதர வர்க்கத்தினரின் இத்தகைய குணாம்சங்கள் ஈழத்து எழுத்தாளர் பார்வைக்குட்படுவது அரிது. அத்தகைய மத்திய தர வர்க்கத்தினனொருவரது மனப்போராட்டங்களை வெளிப்படுத்துகிறது தொங்கு தோட்டமும் இறங்கு படிகளும்.

காலமாற்றம் பற்றிய சிரத்தை இவ்வெழுத்தாளருக்கு நிரம்பவுண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று மாறிவிட்ட போடியார்-முல்லைக்காரன் வாழ்க்கை முறை பற்றியும் (புதிய சமுதாயத்தின் பழைய தலைமுறை) கூத்து நுட்ப முறைபற்றியும் (இப்ப காலம் மாறிப் போச்சு) இரு சிறுகதைகளில் பதிவு செய்கின்றார் எழுத்தாளர்! எனினும் அவற்றில் ஆசிரியரது கவனம் போதியளவு குவியவில்லை என்றே கூறவேண்டும்.

குடும்பத்தைக் களமாகக் கொண்டு பல சிறு கதைகள் வெளிவந்துள்ள நிலையில் இவராலும் வித்தியாசமான பார்வைகளில் மூன்று சிறுகதைகள் எழுதப்பட்டுள்ளன. குடும்பப் பொறுப்புள்ள இளைஞனொருவன் பற்றியதாக அவனுக்குத்தான் தெரியும் சிறுகதையும், கணவன், மனைவி, உறவு விரிசல்-விலகல் பற்றியதாக உறவின் எல்லை சிறுகதையும் அமைந்துள்ளன. தமது உறவுக்கதை இளைஞன் கஷ்டங்களுக்குள்ளான போது உதவி செய்யாத பணக்காரக் குடும்பமொன்று, அவனுக்கு நல்ல தொழில் கிடைத்தபோது எவ்விதகிலேசமுமின்றி அவனை மாப்பிள்ளையாக்குவது பற்றியது "தகுதி" என்ற சிறுகதை! இது இத்தொகுப்பிலுள்ள சிறுகதைக்குள் குறிப்பிடத்தக்கதொன்று.

வறுமை பற்றி எழுதாத எழுத்தாளர்கள் இருக்க முடியாது. பொதுவாக அவ்வாறான சிறுகதைகள்-சொந்த அனுபவங்களாக அமைவதனாற் போலும்-சிறப்பாக அமைவது கண்கூடு: மட்டக்களப்பு சிறுகதை உலக முன்னோடியான பித்தனது சிறுகதைகள் பல அவ்விதத்தில் சிறப்புடையன. நத்தார் பண்டிகை அவரது படைப்புகளுள் உன்னதமானதொன்று. நத்தாரின் ஆரம்ப நள்ளிரவு வேளையில் தனக்குத் தெரிந்த ஒருவரது வீட்டிற்குச் சென்று களவெடுக்கின்ற முன்னாள் வேலைக்காரன் ஒருவன் பற்றியது அது! அவன் திருடியது சாப்பாடு தவிர வேறொன்றுமல்ல! இத் தொகுப்பிலுள்ள பத்திரிகை விளம்பரம் வறுமை வழங்கிய இயலாமை நிலையிலிருந்து தற்காலிகமாக மீளுகின்ற ஒரு இளைஞன் பற்றியது; மீட்சிக்கான வழிமுறை சுவாரஸ்யமான தொன்றாகவிருப்பதுதான் அச் சிறுகதையின் சிறப்பாகின்றது.

இங்கு குறிப்பிடத் தவறிய ஏனைய சிறுகதைகள் மூன்றும் வாசகரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுவில் ஆட்கொள்ளக் கூடியனவா என்று முன் எதிர்வு கூற முடியவில்லை. அதனாலென்ன? மொத்தமாக 14 சிறுகதைகள் கொண்ட தொகுப்பிலே, 3 தவிர ஏனைய முன் குறிப்பிட்ட 11 சிறுகதைகள் கவனத்திற்குரியவாகவிருப்பதே போதுமானது என்று கூறத் தோன்றுகின்றது. சுருங்கக் கூறின் சாதாரண விடயங்களை சாதாரணமான முறையில் கூறுகின்ற அவ்வழியில் கவனத்தை ஈர்க்கின்ற - அசாதாரண ஆற்றலும் அதற்கேற்ற மொழிநடை ஆளுமையும் (அவற்றிடையே ஏற்ற இறக்கங்ளிருப்பினும்) இவ்வாசிரியரிடமுள்ளன என்பதனை இத்தொகுதிச் சிறுகதைகள் கணிசமான அளவு வெளிப்படுத்துகின்றன என்றே கருதுகின்றேன்.

இறுதியாக முக்கியமானதொரு விடயம் பற்றிக் குறிப்பிடாதிருக்க முடியவில்லை. இந்நூலின் ஆசிரியர் எழுபதுகளிலிருந்து எழுதி வருபவர். அவர் எழுதத் தொடங்கிய காலத்து சிறுகதைப் போக்குகள் இன்று உலகளாவிய ரீதியில் மாறிவிட்டன. மட்டக்களப்பிலேகூட, திசேரா அம்ரிதா ஏயெம், மலர்ச்செல்வன், கௌரிபாலன், மு.தவராசா என்றவாறு முற்றிலும் புதியதொரு தலைமுறை அத்தகைய புதிய மாற்றங்களை ஓரளவு வெளிப்படுத்தி வருகின்றது. சிறுகதை, நாவல், புதுக்கவிதை, நவீன கவிதை முதலியன உலகப் பொதுவான நவீன இலக்கிய வடிவாதலின் உலகச் சிறுகதை ஒட்டங்கள் பற்றி அக்கறை கொள்வது? உள்வாங்குவது என்பன எழுத்தாளர்கள் ஒவ்வொருவருக்கும் அவசியமானது. இது பற்றியும் ஓரளவு சிந்திக்கவேண்டுமென்பது இவ் எழுத்தாளருக்கான எனது நட்பார்ந்த வேண்டுகோளாகிறது.

எதிர்பார்ப்புக்களுடனும் வாழ்த்துக்களுடனும்,

பேராசிரியர் செ. யோகராசா,
கிழக்குப் பல்கலைக் கழகம்,
*2011.04.10*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch) Batticaloa Centre.
Ashrama & Children Homes.

*Ramakrishnapuram, Batticaloa.*
*Phone - 0094 65 2222752*
*Email - rkmbat@gmail.com*

## ஆசியுரை

திரு.ஆரையம்பதி க.சபாரெத்தினம் அவர்களால் வெளியிடப்படும் "ஏற்றயிறக்கம்" எனும் சிறுகதைத் தொகுப்புக்கு ஆசியுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு.க.சபாரெத்தினத்தின் சிறுகதைகளின் தொகுப்பு ஒரு நூலாக வெளிவருவது பாராட்டுக்குரியது.

எழுபதுகளில் தனது எழுத்துப்பணியை ஆரம்பித்து இன்றுவரை தொடரும் இவரது இலக்கியப்பணி தமிழ்கூறும் நல்லுலகால் போற்றப்படும்.

இவரது சிறுகதைகளில் இவ்வாழ்வில் மக்கள் அனுபவிக்கும் விரக்திகள்,துன்பதுயரங்கள்,உறவுகள்,ஏக்கம்,ஏழ்மை,நம்பிக்கைகள்,வெறுப்பு புதல்,மற்றும் இன்னோரன்ன உணர்வுக் கோலங்களை,இச் சிறுகதைத்தொகுதியினூடாக காணக்கூடியதாக உள்ளது.

இவர் தனது எழுத்தாற்றலின் மூலம், ஈழத்தின் பாகங்களிலும் நடைபெற்ற சிறுகதைப்போட்டிகளில் பங்கேற்றுபல சிறப்புப் பரிசில்களைப் பெற்றுள்ளதை காணக்கூடியதாக உள்ளது.இதுவே இவரது எழுத்தாற்றலுக்கு மகுடமாகும்.

திரு.ஆரையம்பதி க.சபாரெத்தினம் அவர்கள் மென்மேலும் பல ஆக்கங்களை வெளிக்கொண்டுவந்து தமிழ்த்தாய்க்கு சிறப்பான சேவையாற்ற வேண்டுமென பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண குருதேவர், புனித அன்னை ஸ்ரீ சாரதாதேவி,சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் நல்லாசிகள் என்றும் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

இறைபணியில்.

Swami Jnanamayananda

18.04.2011

Swami Jn...
Swami in C...
Ramakrishna Mis...
Ramakrishnapuram
Batticaloa, Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தமிழ் இலக்கிய உலகிற்குப் புதிதாகக் கிடைக்கப்பெற்ற படைப்பு ஆக்கங்களில் சிறுகதைகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இவ்வின ஆக்க இலக்கியம் மேலை நாட்டு மொழி மரபுகளிலிருந்து தழுவி, காலத்துக்கேற்ற ஒரு பின் புலமாகப் புனையப்பட்டு வரும் புதுமைப் படைப்பென்று கூறப்படுவது சாலப்பொருத்தமானதே. முன்பெலாம் தமிழில் சிறுகதைகள் கிராமிய மட்டத்தில் உபகதைகள் என்றும் நாட்டார் கதைகள் என்றும் வழங்கப்பட்டு வந்தனவே ஆயினும் அவை கதைகளாகப் பரிணமிக்கும் நேரம் முதல், முடிவுறும் நேரம் வரை ஒரே சீரான கதை கூறல் போக்குடையதாய் அமைந்திருந்ததனால் இயல்பாகவே அவற்றிற்கிருக்க வேண்டிய ஜனரஞ்சகமான போக்கு, விறுவிறுப்பு, கவர்ச்சி மற்றும் கதையம்சத்தில் புதைக்கப்பட்டிருக்கும் திருப்பங்கள் என்பன புதிது புதிதாக உருவாக்கப்படாமல் வெறும் கதையோட்டமாக மட்டுமே சென்றுகொண்டே இருந்தன. கதை சொல்லும் பாணி அல்லது எடுத்தாளப்படும் உத்திகள் கூட ஏறத்தாள வாசகர்களால் எளிதில் உய்த்துணர்ந்து எதிர்வு கூறக்கூடிய வகையில் இலகுவானவைகளாகவே காணப்பட்டன.

இப்போக்கினை மாற்றி கதைக்கருவின் ஒரு முக்கிய புள்ளியில் தொடக்கத்தை நிறுவி, வாசகர்களின் கருத்தைக் கவர்ந்திழுக்கும் வகையில் சம்பவங்களின் நிகழ்வுகள் ஊடாக உள்ளே அழைத்துச் சென்று பொருத்தமான இடங்களில் பொருத்தப்பாடான உரையாடல்கள் மூலம் ஆசுவாசப்படுத்தி அடுத்து நடக்கப்போவது என்ன? என்ற அவர்களின் ஆதங்கத்தை இதயத்தில் வளர்த்து எதிர்பாராத ஒரு முடிவினை எட்டச் செய்வதன் மூலம் வாசகர்களின் இறுதித் தீர்ப்பிற்கே விட்டு விடும் ஒரு நவீன உரைநடைச் சித்திரமே இன்றையச் சிறுகதை இலக்கிய அம்சம் எனலாம்.

இவ்வகை இலக்கியம் படைப்பதில் ஒரு பொது விதிமுறையை ஏற்படுத்திக் கொள்ளும் முகமாக, சிறுகதை புனைவது எப்படி? என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்ச்சை இப்போதல்ல, ஏறத்தாள 1950ம் ஆண்டிலிருந்தே சிறுகதை ஆக்க முன்னோடிகளாலும், தமிழ்த்துறை விற்பன்னர்களாலும் காலத்திற்குக் காலம் ஏற்படுத்தப்பட்ட கலந்துரையாடல்கள் யாவும் ஒரு ஆணித்தரமான கட்டுப்பாடுகள் உள்ளடக்கப்பட்டதோர் பிரமாண நெறிமுறைகளைத் தோற்றுவிக்க முடியாமல் இடை நடுவில் நின்றுபோய் விட்டன. ஒவ்வொருவரும் தத்தமது ஆளுமைக்கும் இயல்புக்கும் ஏற்றால்போல் சிறுசிறு அபிப்பிராய விளக்கங்களை முன்வைக்க விழைந்தார்களே அன்றி அதற்கென்றோர் இலக்கண வரம்பினை முற்றுமுழுதாக ஏற்படுத்த முடியாமல் போயிற்று. ஏற்படுத்தவும் முடியாது காரணம், சிறுகதை இலக்கியம் எல்லையற்ற, விதிபாடுகளுக்கு உட்படாத ஒரு நவீன உலக இலக்கியம் என்பதனாற்றான் போலும்! சிறு கதைகள் எவ்வாறு அவற்றிற்கான அம்சங்களோடு எழுதப்பட்டிருப்பினும் அவை வாசகனால் ஜனரஞ்சகமானதல்ல என்று ஒதுக்கப்படுமிடத்து அதற்கான பரிணாம வளர்ச்சி எல்லை மட்டுமல்ல; அதன் வெற்றிகூட குன்றிவிட வாய்ப்புள்ளது. ஆகவே சிறுகதையானது வாசகனின் எதிர்பார்ப்புக்களைத் திருப்திப்படுத்தி அவனை இணைத்துக் கொள்வதில்தான் அதன் வெற்றி தங்கி இருக்கிறது.

சிறு கதைகள் தனிமனித பிரச்சினைகளை மையமாகக் கொண்டவைகளாகவோ சமூகத்தில் நிலவும் சீர்கேடுகளை குறித்து விமர்சிப்பவையாகவோ அல்லது ஒரு தாபனத்தில் நிலவும் குழறுபடிகளை வெளிக் கொணர்பவைகளாகவோ காதல் போன்ற சிருங்கார உணர்ச்சிகளை அடையாளம் காண்பவையாகவோ கூட அமையலாம்.

பொதுவாக சிறுகதை இலக்கியத்தில் கதைமாந்தராக ஒருவர் அல்லது இருவர் மட்டுமே இடம்பெறுவது வழக்கம். நாவல் இலக்கியத்தில்தான் பல பாத்திர அமைப்புக்களை உலாவவிட்டு கதை முன்னெடுக்கப்படும். மதியபோசன இடைவேளை என்ற சிறு கதை மூலம் பல பாத்திரங்களை பங்கு பற்றச் செய்து அவற்றை நகைச்சுவை கலந்த பாணியில் நடாத்திச் சென்றிருக்கின்றேன். பண்டைக்கால தமிழ் இலக்கியக் காதல்களில் வரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரப் படைப்புக்கள்போல் தற்கால கதாப்பாத்திரங்களைப் பேசவிட்டு காதல் என்பது தேன்கூடு என்ற சிறு கதையை இலக்கியப் பாங்கில் பாடல்களையும் சேர்த்து நிறுவ முற்பட்டிருக்கின்றேன். இதிகாச புராணங்களில் இடம்பெறும் அம்சங்களை உள்ளடக்கி அதனையும் ஒரு நவீன கால சிறுகதைப் படைப்புகளாக வாசகர்களுக்கு அளிக்க எடுத்த எனது முயற்சிதான் பேரின்ப ஆசை, நீதியான கோரிக்கை என்ற சிறு கதைகள். ஆயினும் இவற்றின் மூலமாகவும் தற்கால சமூகத்திற்கு ஏற்ற சில விடயங்கள் உட்படுத்தப்பட்டுள்ளமையை வாசகர்கள் இனம் கண்டு கொள்ளுவர் என நம்புகிறேன்.

சிறு வயது தொடக்கம் சிறுகதை இலக்கியத்தில் இரசனையும் ஈடுபாடும் கொண்டவனாக இருந்து வந்த நான், பள்ளிக் காதல், குறள் சுருட்டு போன்ற கதைகளை ஏற்கனவே எழுதி இருந்த போதிலும், 1975ம் ஆண்டு கொழும்பு அரச நிறுவன தமிழ் இலக்கிய மாமன்றம் தேசிய ரீதியாக நடாத்திய சிறுகதைப் போட்டியில் பங்கு பற்றி முதற்பரிசைப் பெற்றுக் கொண்டது முதலே இத்துறையில் என்னால் ஆர்வத்துடன் ஈடுபடமுடிந்தது. ஆயினும் சில முன்னோடிப் பாத்திரிகைகள் வேண்டுமென்றே வெளிப்பகட்டு அற்ற எழுத்தாளர்களை இருட்டடிப்புச் செய்து குடத்தில் இடப்பட்டு வந்ததினால் ஒளிவிட்டுப் பிரகாசிக்க முடியவில்லை. அவ்வப்போது தேசிய மட்டத்திலும். பிரதேச மட்டத்திலும் நடத்தப்பட்டுவந்த இலக்கியப் போட்டிகள் மூலமாகவே எமது ஆளுமையை நிரூபிக்கவேண்டியதொரு கட்டாய நியதி எம்போன்றோர்க்கு ஏற்பட்டது. இத்தகைய போட்டிகளில் பங்கு பற்றி பரிசு பெற்ற கதைகளைக் கூட பிரசுரிக்காமல் குப்பைக் கூடையை நிரப்பிய பத்திரிகைகள் நிறையவே உள்ளன.

இங்கு இடம் பெற்றுள்ள சிறு கதைகள் யாவும் 1970ம் ஆண்டுகளுக்கும் 1980ம் ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கால வெளிப்பாட்டைக் கொண்டுள்ளவையாதலால் குறித்த காலக் கட்டத்தில் இடம்பெறக்கூடிய வாழ்க்கைச் சிந்தனைகள் செயற்பாடுகள் மற்றும் பொருளாதார நிலைமை பற்றியும் கூட ஓரளவு அறிந்துகொள்ள வாசகர்களுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியாக அமையும் என நான் கருதுகிறேன். அத்தோடு மக்கள், வாழ்க்கை, அபிவிருத்தி எவ்வாறு படிப்படியாக முன்னேறி இன்றுள்ள நிலைக்கு எட்டியுள்ளதென்பதையும் அவர்களால் ஊகித்துப் பார்க்க இவை உதவியாக இருக்கும் எனவும் எண்ணுகிறேன்.

இச்சிறுகதைத் தொகுப்பை நூலுருப்பெறச் செய்வதற்கு எனக்குப் பக்கபலமாக இருந்தவர்கள் பலபேர். இவர்களுள் குறிப்பாக எனது மருமகனும் பட்டதாரி ஆசிரியரும் கிழக்குப் பல்கலைக்கழக முதுமாணிப் பட்டதாரியுமாகிய திரு. சி. சுரேந்திரகுமார், அயல் வீட்டுக்காரரும் கவிஞருமாகிய திரு கு. மகேஸ் அவர்கட்கும் மலை அளவு வேலைப் பளுவிலும் மனமுவந்து தராசு போன்று நிலை நிறுத்தி அணிந்துரையை அளித்து மேன்மைப்படுத்திய கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் பேராசிரியர் டாக்டர் செ. யோகராசா அவர்கட்கும், இன்முகம் காட்டி இதயம் கலந்த ஆசியுரையை எனக்களித்து வாழ்த்திய கல்லடி உப்போடை இ.கி.மி. சுவாமி தவத்திரு ஞானமயானந்த ஜீ அவர்களுக்கும் சிறந்த முறையில் அச்சு வாகனமேற்றி நூலுருப்பெற உதவிய காத்தான்குடி டொட்கொம் அச்சக உரிமையாளரும் அதன் முகாமையாளருமாகிய ஜனாப் கே.எம்.எம், அமீர் அவர்கள் மற்றும் அவர்களின் பணியாட்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் என்றும் உரித்தாகுக.

மேற்படி நூலில் தவறுகள், பொருட்குற்றங்கள் ஏதும் இருப்பின் அவற்றை மன்னிக்கும்படி மேலோராம் வாசகரை வேண்டி நிற்கிறேன்.

நன்றி

இங்ஙனம்
க. சபாரெத்தினம்
177A, 6ம் குறுக்குத் தெரு,
செல்வாநகர்,
ஆரையம்பதி-02 (30150).
23.01.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


01. ஏற்றம் இறக்கம். ........ 01
(அரச நிறுவனம் தமிழ் இலக்கிய மாமன்றம் 1975ம் ஆண்டு,
அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட சிறுகதை போட்டியில் 1ம் பரிசு பெற்றது.)

02. நாளை என்பதில்லை. ........ 10
(10.1.1980, 24.1.1980 ஆகிய தினகரன் வார மஞ்சரிகளில் பிரசுரிக்கப்பட்டது.)

03. தொங்கு தோட்டமும் இறங்கு படிகளும். ........ 21
(மட்டமாவட்ட சாகித்திய மண்டல பரிசு பெற்றது -1981.)

04. அவனுக்குத்தான் தெரியும். ........ 30

05. காதல் என்பது தேன்கூடு. (சிந்தாமணியில் பிரசுரிக்கப்பட்டது.) ........ 38

06. இப்ப காலம் மாறிப் போச்சி. ........ 52

07. மதிய போசனை இடைவேளை ........ 61
(15.02.1981ல் வெளியான தினகரன் வாரமஞ்சரியில் பிரசுரிக்கப்பட்டது.)

08. தகுதி. ........ 76
(பேராதனைப் பல்கலைக் கழக தமிழ் சங்கத்தின் 50வது ஆண்டு விழா
சிறுகதைப் போட்டியில் 1 வது சிறப்பு பரிசு பெற்றது.)

09. விபரீதம். ........ 85
(ஆரையம்பதி பரமன் சனசமுக நிலையம் நடாத்திய சிறுகதைப்
போட்டியில் 1ல் பரிசு வென்றது.)

10. பத்திரிகை விளம்பரம். ........ 93

11. உறவின் எல்லை. ........ 104

12. பேரின்ப ஆசை. ........ 116

13. நீதியான கோரிக்கை. (தினகரன் வாரமஞ்சரியில் பிரசுரிக்கப்பட்டது.) ........ 126

14. புதிய சமுதாயத்தின் பழைய தலை முறை. ........ 140




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01. ஏற்றம் இறக்கம்

**எ**திரும் புதிருமாக ஏற்பட்ட சந்திப்பு, அது. கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை, எனக்கு.

எனக்கு மட்டுமா? அவருக்கும் தான்.

ஒரு நிமிடம் இருவர் கண்களும் நிலைக்குத்தி நிற்கின்றன இருவருமே பேசவில்லை. ஏன்.......?

சிரிப்பு!

அந்த முடக்குச் சந்தியில் நின்று சிரிக்கும் அர்த்தமற்ற, வரண்ட போலிச் சிரிப்பு. சிந்தனை எனும் சுழல்காற்று ஐந்து வருடங்களுக்கு முன்னால் நிகழ்ந்துபோன அந்த நீங்கா நினைவுகளை ஞாபகச் சோலையிலே வீசி நிஸ்டையில் ஆழ்த்தி விட்டது.

[2]

கனிவும் அன்பும் ததும்பும் பார்வை, வழுக்கல் படர்ந்த மொட்டை, ஆஜானுபாகுவான உடற்கட்டு, எடுப்பான வாளிப்பான தோற்றம்.

மேசை மீது அமர்ந்து எழுதிக் கொண்டிருக்கும் நடுவயதைத் தாண்டிய அந்த உருவத்தை அண்மித்து,

"எக்ஸ் குயூஸ் மீ, சேர்"

பாடசாலைப் படிப்பை முடித்துவிட்டு வேலையற்றிருந்த எனக்கு சும்மா மெல்லும் வாய்க்கு அவல் கிடைத்துவிட்ட மகிழ்வோடு கிளார்க் நியமனத்தைக் கையேற்க ஓட்டமும் நடையுமாக கந்தோரை நோக்கி ஓடி வந்த நான் பதட்டத்துடன் கூறுகிறேன்.

பதிலில்லை. மறுபடியும் அதே வார்த்தைகள். ஆனால் சற்றுப் பலமாக, சேர் எக்ஸ் குயூஸ் மீ...... என்று வெளிவந்திருக்க வேண்டும்.

"என்ன? நான் எழுதுவது உமக்குப் பிடிக்கவில்லையோ? சரி..... சரி..... என்ன வேண்டும்?" அதட்டுகிறது அந்த உருவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாராத அந்த வார்த்தைகள் என் தலைமீது விழுந்த அடிகள். என் உணர்ச்சி, மூச்சு, சுதந்திரம், தன்னிச்சை அத்தனைக்கும் ஏற்படுத்தப்பட்ட அடக்குமுறைச் சட்டம், அது. அந்த உருவம் திருவாய் மலர்ந்த கம்பீரத்தொனி என் தைரியத்தைச் சிறகொடிக்கச் செய்துவிட்டது.

நாட்கள் மாதங்களாக, மாதங்கள் வருடங்களாக ஊர்ந்து நகர்ந்து இரண்டு ஆண்டுகள் கடந்து விட்டன.

ஆலம் பழத்தின் அழகில் மயங்கிய நான், அதையும் கனியென நம்பினேன். "அது பழமல்ல, வெறும் கோது" என்பதைப் படிப்படியாக அவர் செய்கைகள் என்னை உணர வைக்கத்தான் செய்தன.

[3]

என் அருமைச் சகோதரியின் விவாக நாள் அன்று லீவு பெறவேண்டிய விண்ணப்பத்துடன் அவர்முன் சாட்டாங்கமாக நின்று ஒரு சிரிப்பையும் வரவழைக்க முயன்றேன். அதில் தொழிலாளி முதலாளிக்குக் கொடுக்கும் மரியாதை இழையோடி இருந்தது. மாணவன் ஆசிரியருக்கு காட்டும் பக்தி பரவி இருந்தது. மகன் தந்தையிடம் வைத்திருக்கும் பயம் நிறைந்திருந்தது.

"*என்ன மிஸ்டர்? என்ன.....? கையில் லெற்றர் ?*" என்று இழுத்து விளித்து நிறுத்தினார்.

"லீவு............ விண்.....அப்பம்" தட்டுத்தடுமாறி என் வார்த்தைகள் வெளிவந்ததில் என் நிலைமையை அவர் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

"*என்னத்திற்கு லீவு ? உத்தியோகத்தில் சேர்ந்து இன்னும் ஒரு மாதம் ஆகல்ல, அதுக்குள்ள லீவா ? எத்தனை நாள் ?*"

அவர் என்னிடம் பதிலை எதிர்பார்க்கிறார். என்னிடமோ பதிலில்லையே! கையை நீட்டுகிறார். லீவு விண்ணப்பத்தைக் கேட்கிறார்.

பேசாமலே விண்ணப்பப்படிவம் கைமாறுகிறது. அவ்வளவுதான், அதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்கதி ஏற்பட்டதோ! எனக்கு லீவு கிடைக்கவில்லை.

வேலை, வேலை. ஓயாத ஒரே வேலை! உழவு மாட்டுக்கும் எனக்கும் பேதம்?

காணியில் விளைந்தாலோ விளைவு இல்லையோ, மாட்டுக்குக் கிடைப்பது அதேயளவு வைக்கோலும் வேலையும் தானே? வெதும்பிய முகத்துடன் வந்துவிட்டேன்.

மங்கலகரமான வைபவமொன்றில்; என் வாழ்நாளில் கிடைத்தற்கரிய ஒரு சந்தர்ப்பத்தை இழந்துவிட்ட நிலையில் அமைதியின்மை ஒரு புறம் சுதந்திரமின்மை மறுபுறமாக, நடந்து முடிந்த நிகழ்ச்சிகளை மனம் இரை மீட்டத் தொடங்கிவிட்டது.

[4]

"அம்மாவுக்குச் சுகமில்லை. உடனே புறப்பட்டு வா" ஊரிலிருந்து தந்தி வந்திருக்கிறது. நேரம் பகல் பதினோரு மணி பதினேழு நிமிடம்.

அழுதழுதும் அவளே பெறவேண்டும் என்ற உறுதியோடு லீவு விண்ணப்பப்பத்திரத்துடன் அவர் அருகே வந்து நின்று கொண்டிருக்கின்றேன்.

அதே கேள்வி.

"என்ன மிஸ்டர், என்ன கையில் லெட்டர்" என்றதோடு நில்லாமல் "லீவு வேணுமோ?" என்று ஏளன வினாவும் உடன் தொடர்கிறது.

முன்பு போல் இப்போது பயம் இல்லை. பக்தியும் அவ்வளவாக இல்லை. தைரியமாகக் கூறுகிறேன்.

"ஆமாம்; லீவு விண்ணப்பம்"

தைரியம் எங்கிருந்து வந்ததோ....! எனக்கே ஆச்சரியம். அவர் கைகளில் கொடுக்கவில்லை. இப்போது மேசைமீது வைத்து பறந்திடாமல் பாரமும் ஏற்றி வைக்கிறேன்; சற்றுத் திமிர் பிடித்தவனாக.

அவர் கண்கள் அகல விரிந்து சுருங்குகின்றன. பார்வையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூதனம்-வியப்பு-சந்தேகம்.

"மிஸ்டர் ராமு" அதிகாரத்தொனியில் என்னை அழைக்கிறார் அவர்.

"யெஸ் சேர்" உத்தியோக தோரணையில் அனுசரணையுடன் கூடிய எனது பதில். மேலும் கீழும் ஒரு முறை பார்த்துவிட்டு,

"ஐ காண்ட் அப்புறாப் யுவர் லீவ்" ஆத்திரத்துடன் ஆங்கிலத்தில் முழங்குகிறார். விட்டுக்கொடுக்காமலே நானும் சற்று திமிர் பிடித்தவனாக, "மே ஐ நோ த ரீசன் போ வை சேர்?" என்றே கூறிவிட்டேன்.

"தட் இஸ் நொட் நெசசறி, எனிவே..... அவசரமான வேலைகள் நிறைய உண்டு. அவற்றை முடித்த பின்பு தான் லீவு பற்றி கதைக்க முடியும்"

"அப்படி உயிர்போகும் அளவுக்கு அவசரமான வேலை ஏதும் இருப்பதாகத் தெரியவில்லையே. இரண்டு நாட்களில் திரும்பி விடுவேன் சார்"

உயர்வாகப் பேசிய நான், எப்படியும் லீவு பெற்றுவிட வேண்டுமே என்பதற்காக பணிவாகவும் பேசினேன்.

"ஐசே..... மிஸ்டர் ! டோன் ரோக் நொன் சென்ஸ். பேத நீர் ஒரு கிளாக். யூ மஸ்ட் கரி அவுட் மை ஓடர்ஸ்"

ஏற்றம் - இறக்கம்

அதில் ஏற்றமே எதேச் சாதிகாரம் புரிந்தது. ஐயா, நான் கிளார்க் என்பது உண்மை. ஆனால் கிளார்க்கிற்கும் மானம், மரியாதை, அபிலாஷைகள், சுதந்திரம், பொறுப்புகள், சட்டம் என்பன உண்டல்லவா? எந்த அதிகாரிக்கும் அவரவர் தகைமைக்கேற்ப சுதந்திரச் சுற்று போடப்பட்டிருக்கிறது. எனக்குத் தரப்பட்ட வேலையில், பொதுவாக அவசரமானது, அந்தரங்கமானது, சாதாரணமானது என்று பகுத்துணரும் ஆற்றலும், சுதந்திரமும் எனக்குண்டு. அதற்குச் சட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையறை விதிக்கின்றது.

ஆணையை நிறைவேற்றுபவனாலும் ஆணையில் உள்ள ஒவ்வொரு எழுத்தையும் அப்படியே நம்பிவிடும் இரட்டிப்புக்கருவி கிளாக்கல்ல.

ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து விட்டேன். தைரியத்துடன் கூறியது நான் தானா என்பதை நம்ப முடியவில்லை.

"நேற்று வந்த நீர் எனக்குச் சட்டம் புகட்டுகிறீரோ? நிறுத்தும்! லீவு வழங்கப்படமாட்டாது."

அதுதான் அவர் முடிவு. நியாயம் அவரது பதவி என்ற போர்வையினுள் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது.

"நேற்று வந்தார் இன்றிருப்பார், நாளை போவார் என்ற வரைவிலக்கணத்திற்குட்பட்டது தான் அரச சேவை." என்று முணுமுணுப்பதைத் தவிர வேறு என்னால் என்ன செய்துவிட முடியும்?

நாற்காலியில் போய் உட்கார்ந்ததும் என் தொண்டையை துக்கம் வெகுவாக அடைத்துக் கொண்டுவிட்டது. பேசாமல் மேசையில் தலையை வைத்துப் படுத்துக் கிடக்கிறேன். சாப்பாட்டுக்குக் கூட போக மனமில்லை.

"ராமு, உடம்புக்குச் சுகம் இல்லையோ? என்னப்பா; ஒரே படுக்கை எழும்பு" சிவசுந்தரத்தின் குரல் கேட்டு நிமிர்கிறேன். சாப்பிடப்போன சக ஊழியர்கள் பின்னேரத் தியால வேலைக்கு வந்து கொண்டிருந்தனர்.

"சாப்பிடப் போகல்லையோ?" சிகரட் புகைத்தபடி கந்தசாமி அக்கறையோடு வினாவுகின்றான். அவனது தர்மசிந்தை அவ்விதம் கேட்கத் தூண்டியது.

"டிஸ்பிரினும் சோடாவும் வாங்கித் தரட்டே" என்ற படியே "நாகேந்திரன்" என்ற பியோனைக் கூவி அழைக்கிறான் மகாலிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேண்டாமப்பா" என்றபடி திரும்பிப் படுக்கும் என் உடல் நிலையைப் பரீட்சித்துப் பார்த்துவிட்டு காய்ச்சல் இல்லை. வயிற்றில் ஏதும் கோளாறா? என்று தன் வைத்திய ஆராய்ச்சியில் முனைகிறான் ஆனந்த மயில்.

விடயம் தெரிய வந்ததும் அதிகாரியின் மீது ஒரு வாழியே பாடி விட்டார்கள் அத்தனை பேரும். இப்படியான விடயங்களுக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைத்து விடுவதென திடசங்கல்பம் பூணுகின்றனர்.

அவர்களது அனுதாப உணர்வுகளின் சின்னமாக அங்கு நான் இருந்ததைத் தவிர வேறு எதுவும் நடந்து விடவில்லை.

[5]

பல நாட்களாக உணவு முத்திரைப் புத்தகம் கிடைக்கவில்லை என்ற புகாருடன் கந்தோர்படி ஏறிய ஸ்ரீமான் பொதுசனம் ஒருவர் நானும் பிரசன்னமாக இருந்தபோதே தன் முறைப்பாட்டைக் கூற, "அந்தப் பக்கமாக வந்து சிவசுந்தரம் என்பவரிடம் கதையும்" என்ற அதிகாரியின் வாய்ச்சொல் அதிகாரத்திற்கு மதிப்பு வைத்து உள்ளே புகுந்தவர் தட்டுத் தடுமாறி தலைமைக் கிளாக்கரின் பிடியில் சிக்குண்டபோது தன்னை விடுவித்துக் கொள்வதற்காக,

"ஐயாவிடம் கேட்டுத்தான் உள்ளே வந்தேன். சிவசுந்தரம் கிளாக்கரைச் சந்திக்கும்படி ஐயா கூறினார்." என்றார் பதட்டத்துடன்.

"நிச்சயம் அவர் அப்படிக் கூறி இருக்க முடியாது. நீங்களாகவே வந்து விட்டு இப்போது..... ஏனப்பா எங்களை.....?" தலைமைக் கிளாக்கரின் சந்தேகம் கூக்குரலிடச் செய்தது.

"நான் அனுமதி பெற்றுத்தான் உள்ளே வந்தேன்." ஆணித்தரமாக எடுத்துரைக்கிறார் கூப்பன்காரரர்.

"அப்படியானால் எங்கே அனுமதியைக் காட்டுங்கள் பார்க்கலாம்". தலைமைக் கிளாக்கரின் குறுக்கு விசாரணைக்கு ஈடுகொடுக்க முடியாத நபர் "அனுமதி எழுத்திலில்லை. வாருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடமே கேட்டுத் தீர்த்துக் கொள்ளலாம்."

அதிகாரி நற்காலியில் அமர்ந்தபடி எதையோ எழுதித் தீர்க்கின்றார். அவரைச் சூழ்ந்து முத்திரைக்காரரும் நானும் நின்று கொண்டிருக்கின்றோம். தலைமைக் கிளாக்கர் பக்கத்தில் இருந்த கப்பேட்டை வலக்கரத்தினால் பற்றிக்கொண்டு ஒற்றைக் காலில் நிற்கின்றார்.

"நீங்கள் எல்லோரையும் இப்படி உள்ளே விட்டுக் கொண்டிருந்தால் நாங்கள் ஒரு வேலையும் செய்ய முடியாது" சிணுங்கி அலுத்துக் கொள்ளும் தலைமைக் கிளாக்கரைத் திகைப்பிலாழ்த்த, அப்போது,

"நான் யாரையும் உள்ளே போக அனுமதிக்கவில்லையே!" என்று கண்மூடித்தனமாக எதிர்ப்பேச்சு பேசுகிறார் அதிகாரி.

"ஐயா...! நீங்கள் தானே சிவசுந்தரம் கிளாக்கரைப் போய்ச் சந்திக்கும்படி சற்று முன்பு என்னை பணித்தீர்கள்!" கூப்பன்காரரின் பிரலாபம் இது.

"யார் ? நானா.....? அப்படி நான் கூறவில்லையே. ஏன் அப்பா பொய்யைக் கூறி எங்களை இடையில் மோதவிடப்பார்க்கிறீர் ? பிழையென்றால் ஏற்றுக்கொள்வது தானே ?"

புன்சிரிப்பு முகத்தில் நிழலாட தலைமைக் கிளாக்கரின் முகத்தை ஆராய்கிறார் அதிகாரி.

தலைமைக் கிளாக்கர் "நல்ல ஆள் ஐயா நீர். இப்படி வந்து ஏன் உயிரை வாங்குகிறியளோ தெரியவில்லை......" என்றவர் முடிக்கவில்லை.

"ஐயா......" என்ற அனுதாபக் குரல் வந்த திசையை நோக்கி அனைத்து முகங்களும் ஒருமித்து மொய்க்கின்றன. அந்தப் பார்வையில் ஏக்கமும், ஆவலும் நிறைந்து காணப்பட்டன.

திடீரென, என்னை நோக்கி "தம்பி நீங்களும் இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும்போதுதானே ஐயா என்னை உள்ளே போகும்படி கூறினார். உண்மையை மறைக்காமல் சொல்லுங்கள் தம்பி. கோடி புண்ணியம் உங்களுக்கு" என்ற வேண்டுகோளுடன் சுப்பிறீம் கோட்டு நீதிபதியின் தீர்ப்புக்காகக் காத்துக் கிடக்கும் நிரபராதியைப் போல் நீட்டிய கைகளை மடக்காமல் நின்று கொண்டிருக்கின்றான் ஏழை கூப்பன்காரன்.

எச்சந்தர்ப்பத்திலும் உண்மையை பேசுவதென்ற இலட்சியமுடைய நானும் ஒரு நிமிட நேரம் வரை மௌன ஆராதனை செலுத்திவிட்டு, சூழ நிற்பவர்களை ஒரு நோட்டம் விட்டேன்.

இறுமாந்த காம்பீரத் தோற்றத்தில் தலைமைக் கிளாக்கர் ஆதரவற்றுவிடப்பட்ட அனாதையாக அந்த ஏழைக் குடிமகன். அன்று லீவு விண்ணப்பப் படிவத்தைக் கையளித்துவிட்டு, எப்படி வழிமேல் விழி வைத்துப் பார்த்திருந்தேனோ அதே நிலையில் என் மேலதிகாரி. இவர்கள் எல்லோருக்கும் தீர்ப்பு வழங்கப்போகும் உயர்ந்த பீடத்தில் நான்!

வற்று உண்டானால் பெருக்கும் உண்டு.

ஏற்றம் உண்டானால் இறக்கமும் உண்டு.

எல்லோர் கண்களும் என்னைப் பார்த்து அகல விரிந்தன. ஆனால்...... என் உள்ளத்திலோ ஒரு சிறு மனப்போராட்டம். அது, உண்மை பேச வேண்டும் என்ற எனது வாழ்வின் இலட்சியம், ஒரு புறம். எப்படி இருந்தாலும் மேலதிகாரி அவர் என்ற பண்பாட்டொழுக்கம் மறுபுறம்.

அமைதியாக கூப்பன் காரரைப் பார்க்கிறேன்.

"ஐயா பெரியவரே", எனது குரல் நிசப்தத்தை ஊடறுத்து ஒலிக்கின்றது.

"சிவசுந்தரம் கிளாக்கரைப் போய்க் காணும்படி சொன்னது உங்களை அல்ல. பக்கத்தில் நின்று கொண்டிருந்தேனே, என்னை!". நீங்கள் பிழையாக விளங்கி விட்டீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சாட்சியை அடகுவைத்து இந்த தீர்ப்பை வழங்கினாலும் பொய்யொன்றைக் கூறி என் மேலதிகாரியின் அந்தஸ்தை உயர்த்தி விட்டேனே என்ற மனச் சாந்தி ஏற்பட்டது. ஆனாலும் நீதி தவறியவன் என்ற மனவுறுத்தலை எங்கே மாற்ற முடியும் ?

அடுத்த நாட் காலை வழமைபோல் கந்தோருக்கு வந்த எனக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி! பேரதிர்ச்சி! ஆனாலும் மட்டற்ற மகிழ்ச்சி அது, என்மேசை மீது இடமாற்றக் கடிதம் ஒன்று வைத்து பாரமேற்றப்பட்டிருப்பதுதான்.

சிரிப்பதா ? அழுவதா ? அல்லது இரண்டுமே புரிவதா ? இடமாற்றம் வாழைச்சேனைக்கு உடனடியாக.

“இப்படியான காரியங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்” என்று வீறாம்பு பேசிய என் நண்பர் குழாம், எனது பிரியாவிடைக்கான ஒழுங்குகளை முன்நின்று கவனிக்கிறது.

“ராமு, என்ன பேசாமல் நீண்ட நேரமாக எதையோ பற்றி.......” என்ற அவரின் குறுக்கீட்டினால் பழைய நிலைக்கு வந்துவிட்ட நான் பதிலுக்கு,

ஐயா நீங்கள் இப்போது......? என்றேன்.

இளைப்பாறி ஒரு வருடமாகிறது, தம்பி.

சேவைக்காலத்தில் இல்லாத பண்பும் பக்குவமும் நிரம்பிய அமைதியான வார்த்தைகள் இப்போது அவர் வாயினின்று வெளிப்படுகின்றன.

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02. நாளை என்பதில்லை.

உதயநாளிகை இன்னும் மீதம் இருந்தது. மாரிகாலக் குளிரின் தாக்கத்திற்குப் பயந்து கை, கால், முகம் தெரியாமல் முக்காடிட்டு வண்ணான் மாராப்புப்போல் உடம்பையெல்லாம் சுருட்டி போர்த்துக்கொண்டு, விடிந்தும் ஒரு மணித்தியாலத்திற்கு மேல் வெளித்திண்ணையில் நித்திரை கலைந்தபின்பும், அலுப்புத் தீரப் பாயில் படுத்துப் புரண்டு கொண்டிருக்கும் வைரமுத்து மேசிலார் வழக்கத்திற்கு மாறாக இன்று எழுவான் வெளிக்கும் வரைகூடக் காத்திருக்காதது புதுமையானதுதான்.

தனக்குள்ள கடமை உணர்வுகளை எண்ணிப் பார்த்துக் கொண்ட அவர், அந்த மை இருட்டு வேளையிலும் எழுந்து சென்று தாழ்வாரச் செத்தையில் செருகியிருந்த தகரடப்பாவினுள் கையை விட்டு ஒரு கிள்ளுப்பிடித்து வாய்த்துவாரத்தின் மையத்தை இலக்கு வைத்து இலாவகமாக வீசி எறிய, அதற்கென்றே காத்திருந்தவைகள் போல் உதடுகள் அதனை "லவக்" என்று அப்படியே சிந்தாமல் சிதறாமல் கௌவிக் கொண்டன. ஒரு தடவை உதடுகளை மேலும், கீழுமாக அசைத்துக் கொண்டார். ஈரம்படாத உமிச்சாம்பல் புகைமண்டலம் போல் காற்றில் கலந்து பறந்தது.

ஆள்காட்டி விரலை வாய்க்குள் நுளைத்து பல் இழையங்களோடு சேர்த்து ஆதி தாளத்தில் வயலினை மீட்டிக்கொண்டிருக்க, அவர் பார்வையோ அதற்கிசைவாக திண்ணையைத் தாண்டிச் சென்று இருள் மண்டிக்கிடந்த அந்த அறையினுள் புகுந்து பைரவி இராகத்தை தேடிக்கொண்டிருந்தது.

எதையோ நினைத்துக் கொண்டவர் "புள்ள.... புள்ள...." என்று குரல் கொடுத்தார். பேச்சு விளக்கமாக இருப்பதற்கு வாயினுள் இருந்த உமிச்சாம்பல் தடையாக இருந்தது.

வீணையின் தந்திகளிலொன்று அறுந்ததினால் பிறந்த "கிண்" என்ற ரீங்கார ஒலியாக "இம்" என்று எழுந்த அந்த நாதத்தைக் காதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கிக்கொண்டு உச்சத்தாயியில் கூறினார். "விடிஞ்சு போச்சுது, எழும்பித் தேயிலயக் கீயிலயப் போடு. நானும் நேரத்தோட போகவேணும் இண்டைக்கு" கால்கள் ஒருவித லயத்துடன் கிணற்றடியை நோக்கிப் போய்க்கொண்டு இருந்தன.

வாடைக்காற்றின் அசைவினால் தள்ளுண்டு மேற்குத் திசையாக வழிபெயர்ந்து கொண்டிருந்த கார்மேகத் தொடர்கள் வானமெங்கும் உப்பட்டிபோல் வரிசையாக அடுக்கப்பட்டு உச்சியில் மின்னிக்கொண்டிருந்த அந்த கிருஷ்ணபட்சத்து அர்த்தபிறைச் சந்திரனையும் முற்றாக மூடிவிட்டன.

வீட்டு முற்றங்களில் கரைந்துகொண்டிருந்த காக்கைகள் அபாய அறிவிப்புடன் மரங்களை நோக்கிப் பறந்து சென்று கொண்டிருந்தன. கோழிகள் சிறகடித்துக் கூவின. மழை இலேசாகத் துமித்துக்கொண்டிருந்தது.

அவசர அவசரமாக முகம் கழுவி, உடுத்திருந்த சாரத்தால் துடைத்துக்கொண்டே வீட்டை நோக்கி ஓடி வந்த மேசிலார், "திண்ணைப்படியில் கால் ஊன்றிவிட்டது" என்ற திடமான பரிச உணர்வு ஏற்பட்ட பிறகுதான் தலையைக் குனிந்து உடம்பையும் உள்ளே எடுத்துக்கொண்டு அரற்றினார்.

"இரிக்கமட்டும் இருந்து போட்டு..... வந்திக்குச் செய்றாப்பிலை..... போக வெளிக்கிட்ட சமயம் பார்த்து..... சனியன்புடிச்ச மழை....."

வானத்தில் முழங்கிய அதிர்வெடியைத் தொடர்ந்து திடீரென கொட்ட ஆரம்பித்த பேய் மழை விடாமல் இறைத்துக்கொண்டிருந்தது. வைரமுத்து மேசிலார் இரவெல்லாம் நித்திரையின்றி போட்டுக்கொண்டிருந்த திட்டங்கள் அந்த மழையில் கரைந்து கொண்டிருந்தன.

நேரம் செல்லச் செல்ல உதிரத்தைப் பிழிந்து சாறெடுப்பது போல் ஓர் உணர்வு அவருள்ளே தோன்றி ஒருவித எரிச்சலையும் கிளப்பிவிட்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி கொண்டுவந்து வைத்துவிட்டுப்போன தேனீரைப் பனங்கட்டித் துண்டோடு சுவைத்துக் குடித்துவிட்டு, வெற்றிலை வட்டாவுடன் திண்ணைப்படியில் போய் அமர்ந்து கொண்டவர் பத்து மணிவரை அசையவேயில்லை. வெற்றிலை அசைபோட்டுக்கொண்டு வேதனை நிறைந்த அவரது சீர்கெட்ட விதியை விரட்டியடிக்க வழிதெரியாமல் ஏதோ எண்ணி எண்ணித் தனக்குள்ளே வெந்துகொண்டு இருந்தார்.

விக்கிரமாதித்தன் ஜாதகத்தில் வாழ்க்கை நடாத்தி வரும் சமுதாயத்தில் ஒரு அங்கம் தான் இந்த வைரமுத்து மேசிலாரும். கோடை முழுவதும் ஓயாத கிராக்கிகளும் வேலைகளும், புது வீடுகள், கிணறுகள், கடைகள், பள்ளிக் கூடங்கள், கக்கூசுகள் மட்டுமென்ன உடைவுகள் பழுதுகள் என்று கூட எகப்பட்ட கிராக்கிகள் வந்த வண்ணமே இருக்கும். ஒரே நாளில் மட்டும் ஆறோ, ஏழோ வந்துவிடும். தனிக்கையால் யாருக்கென்று செய்வது? எதைச் செய்வதென்ற திகைப்பு. வருவனவற்றை விட்டுவிடவும் மனமில்லை. ஏற்றுக்கொண்டாலும் பலனில்லையே என்ற சலிப்பு. இப்படியானதொரு தொழிற் செழிப்பு.

மாரி பிறந்துவிட்டால் கல் ஓடி ஒழிந்துவிடும். மண் எடுக்கும் மடுவெல்லாம் வெள்ளம். சீமெந்து எடுப்பதில் சிரமம், அப்படி எடுப்பதாயினும் விலைவாசி அதிகம்.

கட்டடம் கட்டுவதற்கு யாருமே முன்வராத ஒரு மந்தநிலை. கோடையில் கைப்பொலிவுடனும், மன நிறைவுடனும் வாழும் கொத்தனார் வம்சம் மாரியில் பட்டினியிலே வாடிச் சோர்ந்து கிடக்கும் சகடயோகம் தவிர்க்க முடியாத ஒரு தலைவிதிதானா?

தாஜ்மகாலை கட்டி எழுப்பப் பொருளும் ஊக்கமும்தான் கொடுத்தான் மன்னன் ஷாஜஹான். உடல், பொருள், ஆவி அனைத்தையும் துச்சமாக மதித்து, செய்யும் தொழிலே உயிர் மூச்சென அந்த உயர்ந்த கலைக்கோயிலைக் கட்டி முடித்தானே சிற்பி, அவனுடைய சரித்திரத்தை, திறமையை எத்தனை பேர் வியந்து பேசுகிறார்கள் அதுதான் போகட்டும். யார் இதையெல்லாம் நினைத்துக் கதைக்கிறார்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாஜ்மகாலையும் அதற்குரியவனான அந்த மன்னனையும் போல் அதை நிர்மாணித்த அந்த கலைஞனை ஏன் சமுதாயம் மறந்துவிட்டது அல்லது நிராகரித்துவிட்டது ?

இதுதான் சமுதாயம் கலைஞனுக்கு செய்யும் கைமாறா ?

காத்தான்குடி பெரிய மார்க்கட்டுக்கு அருகில் இருக்கிறதே உயர்ந்த பெரிய கோபுரங்களைக் கொண்ட தச்சாப் பள்ளிவாசல். அதை அழகுபடுத்திய பெருமை இந்த வைரமுத்து மேசிலாரைத்தான் சார்ந்தது.

எத்தனையோ உள்ளங்கள் அதைப் பார்த்து பூரித்துப் போயிருக்கின்றன. கலை ரசனையே இல்லாதவர்கள் கூட இதனைக் கண்டு கலைத் தரிசனம் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அவர்களது அபிப்பிராயம்......?

எவ்வளவு செலவாகியிருக்கும் என்கிறார்கள், யார் யார் நிதி வழங்கினார்கள் என்று வினாவுகிறார்கள், இந்த நல்ல திட்டத்தை கூறியவர் யார் என்பதை அறிய ஆவலாக இருக்கிறார்கள். இதனை இந்த அளவுக்குச் செதுக்கிய சிற்பி யார் என்பதை அறிந்துகொள்ள அவர்களது மனத்தில் ஒரு சிறு உந்தல் ஏற்படாதது ஏன் ? அதனை நினைத்தபோதுதான் மேசிலாருக்கு உள்ளூர வருத்தமாகவிருக்கிறது.

வறுமைக்குள் திறமை கரைந்துவிடுமா ? என்றுகூட அவர் சிலசமயங்களில் சிந்திப்பதுண்டு.

ஆரையம்பதி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயக் கர்ப்பக்கிருகத்திற்கு மேற்தளத்தில் நிறுவப்பட்டு இருக்கும் அந்தச் சிற்பக் கோயிலை நிருமாணிக்கக்கோரி இந்தியாவிலிருந்து வந்த தண்டாயுதபாணி ஆச்சாரி இருபத்தைந்து ஆயிரம் ரூபா கூலியாக கேட்டுக்கொண்டிருந்த போது, அதே கிராமத்தில் பிறந்து மூன்று தலைமுறையாகக் கொத்தனாராக தொழில் புரிந்துவரும் மேசிலார் உணர்ச்சிவசப்பட்டு, அன்றாட வயிற்றுச் செலவுக்கு மட்டும் என்குடும்பத்திற்கும் எனக்கும் ஏதாவது கொடுத்தால் போதும்; ஒரே மாதத்தில் இந்த வேலையைக் கச்சிதமாக முடித்துத் தருகிறேன் என்று துணிவோடு கூறியபோது ஆலய பரிபாலனசபையார் முகத்தில் ஏழனம் தொனித்தாலும் எதற்கும் கொடுத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கலாமென்று இரு மனதுடன் முடிவெடுக்கப்பட்டது அவர் அறியாதது ஒன்றும் அல்ல.

முன்னொருபோதும் இப்படியான சித்திர, சிற்ப வேலைகளை செய்து அனுபவமில்லாது இருந்தும் "குலவித்தை கற்றுப்பாதி கல்லாமல் பாதி" என்ற துணிவோடும் தன்னம்பிக்கையோடும் முன்வந்து துரிதமாகவும் கச்சிதமாகவும் செய்து முடித்த அவரது திறமையை "நன்றாயிருக்கிறது" என்று ஒரே வார்த்தையில் பாராட்டிப் பேசியதோடு நின்றுவிட்ட இந்தச் சமுதாயம், எதற்காகத் தன்னைப் போன்ற ஏழைக் கலைஞர்களுக்கு மட்டும் இந்த ஓரநீதியைத் தண்டனையாக வழங்கி வருகின்றதென்பதை அறிய அவருக்கு ஆற்றல் போதவில்லை.

"நாளும் பொழுதும் ஆளும் கலைவடிக்கும் பாழும் கலைஞனுக்கு வாழும் வகையில்லாத தாழும் நிலைதானோ" என்று ஏங்கிக்கொண்டிருந்தார்.

திண்ணை விளிம்பிற்கு இரண்டு அங்குலம் கீழ்மட்டம் வரை வெள்ளமாக நின்றது; பெய்த மழை நீர், கூரையிலிருந்து வாசலுக்கு நீர் வீழ்ச்சிபோல் இறங்கிக்கொண்டிருந்த மழை நீரை கலைக்கோலத்தில் கண்டு கற்பனையில் மூழ்கியிருந்தார் அவர்.

நேரம் செல்லச் செல்ல அவருடைய மனமும் பதட்டமடைய தொடங்கிவிட்டது. ஒரு கிழமைக்குப் பிறகு நேற்றுத்தான் ஒரு சின்ன வேலைத்தளம் கிடைத்தது. சாயங்காலம் வழிக்குவழி சொல்லிவிட்டு வந்தும் இன்னும் கூலிப்பையன் வரவில்லை. அவன்தான் என்ன செய்வான் ? இந்த மழை விடாமல் பெய்துகொண்டிருந்தால்....?

தனக்குத் தானே ஆறுதல் கூறிக்கொண்டவர் எதையோ ஞாபகத்திற்கு கொண்டு பின் பக்கமாகத் திரும்பினார்.

தூண் ஓரமாக ஒரு கிழமைக்கு முன் வைக்கப்பட்டிருந்த கரண்டி, மட்டக்கம்பு, நீர்மட்டம், தூக்குக்குண்டு எல்லாம் அப்படியே அந்தச் சாக்குப் பையினுள் சுருண்டு படுத்துக்கொண்டிருந்தன. அவற்றைத் தட்டி எழுப்புவது போல் கூரையிலிருந்து அங்குமிங்கும் துளி துளியாக மழைநீர் கீழே இறங்கி மேசிலார் மனத்தில் சலனத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்திவிட்டது. வீட்டிற்கு ஓலை கட்டவேண்டிய பொறுப்பு வேறு இருப்பதையும் அவர் நினைத்துக் கொண்டார்.

மாமனார்; அதாவது அவருடைய அம்மாவினுடைய தம்பியார், அதுதான் அவருடைய குருநாதர் நாற்பது வருடங்களுக்கு முன்னால் சன்மானமாக அவருக்கு வழங்கியவைகள் தான் அந்த நீர்மட்டமும் தூக்குக் குண்டும்.

தூக்குக் குண்டுக்குக் போட்டிருந்த நூற்கயிறு இறந்து போனபடியால் புதிதாக ஒரு நைலோன் கயிறு போட்டுக்கொண்டது மேசிலார் செய்த சிறு திருத்தவேலை.

இப்போது நினைத்தாலும் அந்த வேலைகள் அவருக்குப் பெருமையாகத்தான் இருந்தன.

ஐந்து வயதிருக்கும். நாளொன்றுக்கு இருபத்திஐந்து சதம் சம்பளமாகப் பெறும் கூலியாள். கல்லும், மண்ணும் தூக்கிக் கொடுப்பதுதான் அவருடைய வேலை. இரண்டோ மூன்று நாட்கள் ஊர்ப் பள்ளிக்கூடத்திற்கு வற்புறுத்தலின் பெயரில் போயிருந்ததாக ஞாபகம். ஏதோ ஒரு தகராறில் பக்கத்திலிருந்த பையனுக்கு நகத்தால் கன்னத்தை கிழித்துவிட அதற்குத் தண்டனையாக சட்டம்பியார் இரண்டு அடிகள் போட்டிருக்கவேண்டும். கையில் இருந்த சிலேட்டால் அவருக்கு வீசி எறிந்துவிட்டு ஓட்டமோட்டமாக வீட்டிற்கு வந்தவர் மாமனாரோடு ஆயுதச் சாமான்கள் சுமக்க ஆயத்தமாக நின்றுவிட்டார்.

காலையில் ஏழு மணிக்கு முந்தியே ஆயுதச் சாமான்களோடு வேலைத் தளத்திற்குச் சென்றுவிடவேண்டும். கட்டுக்காரன் பெட்டியால் எண்ணிப் பத்துப்பெட்டி மண் கொட்டிவிட்டு நீறு ஒரு சாக்கையும் இழுத்துக்கொண்டு வக்கடியில் சாத்திவிட்டு நிமிர்ந்தால் மேசிலார் அதுதான்; மாமனார் வந்துகொண்டிருப்பார்.

அவரைக் கண்டால் கை, கால்கள் எல்லாம் ஒரே நடுக்கம். என்ன பிழை பிடிப்பாரோ என்று. செவியைப் பிடித்திழுத்து மண்டையில் குட்டுவாரென்ற பயம்! வக்குக்குள் கொட்டிக் கலந்து கொடுத்துவிட்டுச் சாரத்தில் ஏறிவிட்டாரென்றால் கல்லும் சாந்தும் தூக்கிச் சுமப்பதில் சந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேந்து போகும். பின்னேரம் ஐந்து மணி வரைக்கும் இதே மாதிரியான ஊழியம் தான்.

அப்படிப் பாடுபட்டதில் தான் ஆட்டவனே எண்டு மேசன் வேலையைப் பொறுத்தமட்டுல எல்லாம் ஓரளவில் தெரியும். நேரம் பத்து மணிக்கு மேல் இருக்கும் என்பது அவருடைய ஊகம். குனிந்து, தலையை அண்ணாந்து வானத்தைப் பார்த்தார். இருள் கவிந்துகொண்டுதான் இருந்தது.

"இண்டைக்கு இது உடாது போலத்தான் கிடக்கு" சப்பென்றிருந்தது அவர் வாய். வயிறு மெதுவாகக் கிள்ளியது.

"புள்ள..... ஏதும் கிடந்தா எடு. பசிக்கிறாப்பில இரிக்கி"

"ஒண்டுமில்ல கிடந்தத திண்டிட்டுப் பெடியன் பள்ளிக்குப் போயிற்றான். கிழங்கு வாங்கி அவிக்கவும் காசில்ல"

"என்னெண்டான்ன செய்தெடு. அந்த தயிலாப் பெட்டிக்குள்ள பாரு ஒரு ரூபா எழுபது சதம் மட்டில கிடக்குது. இரண்டு இறாத்தல் வாங்கன்" என்றவர் முணுமுணுத்துக் கொண்டார். "இண்டைக்கும் தகடு போலதான் கிடக்குது".

"கோபால்ற கடையில கிழங்கில்ல. காத்தான்குடிக்குத்தான் போகவேணும்"

"இதுக்குள்ள என்னை என்ன செய்யச் சொல்லுறா; குடையுமில்லாம?"

"அப்ப தேயிலைய மட்டும் போடுறன். பின்னேரம் என்னெண்டான செய்வம்"

"ஓம் புள்ள. அப்படிச்செய். வேறென்ன செய்யிறது"

"ஒண்டு செய்தா என்ன....?"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன?"

"அந்த வள்ளிக்கொடிப் பாத்தியைக் கிண்டி......."

"அதுக்குள்ள என்ன இரிக்கப் போகுது? இப்பதானே நாட்டின. அதுக்குள்ள கிழங்கு விளைந்திருக்குமா.....? நான் நினைக்கல்ல......."

"இரண்டு வருசத்துக்கு மேல போய்ச்சிது; நாட்டி. போன புரட்டாதிக்கு முந்தின புரட்டாதி நாட்டினது. இரண்டு வருசமும் இரண்டு மாதமும் வள்ளிசாக"

"அதக் கிண்டிக் கிழங்கெடுத்துப் போட்டு இது புறகு நாட்டினதெல்லுவ?" என்று சந்தேகத்தைக் கிழப்பியவர் தடுமாற்றமடைந்தார்.

மேசிலாருக்கு அது சரியான ஞாபகமில்லை. யாழ்ப்பாணம் போய் வந்தபோது பத்து இறாத்தல் ராசவள்ளிக்கிழங்கு வாங்கி வந்து அவித்துத் திண்டுபோட்டு ஒரு கிழங்கை வேலி ஓரமாக புதைத்துவிட்டார். இடையில் ஒரு தடவை பிடுங்கி எடுத்ததாக அவருக்கு ஒரு நினைவு. "இருந்தாலும் பறவாயில்லை" என்பதுபோல் சாக்கைத் தலையில் போட்டுக்கொண்டு ஓடினார்.

நடும்போது இரண்டு இறாத்தல் பருமனுடையதாகத்தான் இருந்தது. இந்த இரண்டு வருசத்திலயும் அது விளைந்து கடைசி ஐந்து இறாத்தலாவுதல் இருக்கும். கொடியை இழுத்துப் பார்த்தார். நிலத்தில் கெட்டியாகப் பிடித்திருந்தது. அவர் எண்ணத்தை அது ஊர்ஜிதம் செய்தது.

அருகில் வளைத்து மண்ணைத் தோண்டிவிட்டு மெதுமெதுவாக கொடியை அசைத்து இழுத்தார். அவர் முகத்தில் தங்கப்பாளம் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியின் சாயல்.

எதிர்பார்த்து மனதில் உருவகித்ததிலும் பார்க்கப் பெரிதாக வளர்ந்திருந்தது. பெட்டியில் வாங்கிக்கொண்ட அவர் மனைவி அதைப் பக்குவமாக வெட்டி விட்டார். மண்புழுவினால் அரிக்கப்பட்டு அழுகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருண்டு கிடந்தது! உள்ளே புழு நெளிந்தது!

வானத்தில் ஒரு சிறு ஒளிப்பிரவாகம் தோன்றியது. உச்சிவெயில் இலேசாகப் பரந்து கொண்டிருந்தது. மேசிலாரின் முகத்திலும் இலேசாக ஒரு நம்பிக்கை ஒளி கருக்கட்டியது. காலையில் வருவதாக கிராக்கி பேசிவிட்டு வந்த அந்த வேலைத் தலத்தை நினைத்துக் கொண்டார். மழை இளக்கத்தோடு பையை தோளில் போட்டுக்கொண்டு புறப்பட்டுவிட்டார். கூலியாளைக் கூடக் காத்திருக்க அவகாசமிருக்கவில்லை. சிறிய வேலைதான்; ஓடு மாத்துவது, மோட்டுக்கட்டு கட்டுவது, நிலத்திற்குச் சீமெந்து இழுப்பது.

கூலிப்பையன் இருந்தால் வசதிதான். இருந்தாலும் அவனுக்கும் ஐந்து ரூபாயாவுதல் கொடுக்கத்தானே வேண்டும்? எல்லாத்திற்கும் சேர்த்து இருபத்தைத்து ரூபாதான் தருவான். ஐம்பது ரூபா கேட்டு வைத்துவிட்டுத்தான் வந்தவர்.

"வேலையைச் செய்யுங்க பாப்பம்" என்றுதான் சொன்னவன் வீட்டுக்காரன்.

தனக்குள் எழுந்த கேள்விகளுக்கெல்லாம் சரளமாகப் பதில் சொல்லிக்கொண்டே தெருவில் நடந்துகொண்டிருந்தார். பின்னேரம் வந்து அரிசியும் வாங்கி, கறியும் வாங்கி சமைத்து சாப்பிடவேண்டும். என்னமா இளைச்சுப் போயிற்றான் பொடியன்? பள்ளிக் கூடத்தில் படிக்கிறான் ஒன்பதாம் வகுப்பு. அடுத்த முறை சோதினை எழுதிறவன்.

படிக்கக்கூடிய பொடியன். என்ன செய்யிற? ஒரு மாதிரி எப்பிடியெண்டான்ன படிப்பிச்சிட்டா, நாளை ஒரு காலம் என்னப்போல சீரழிஞ்சி சாகாம நல்லா இருப்பானே.

"இவள் சொன்னாளே அண்டைக்கு. புடிச்சி வேலைக்குப் போக்காட்டச் சொல்லி. மூளை கெட்ட செம்மங்கள்."

"அவள் தான் என்ன செய்வாள்? அவளுக்கென்ன ஆசை இல்லையா? பொடியன் படிச்சி நல்லா வந்தா வேணாமெண்டு சொல்லிருவாளா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மெய்தான். காலமே கொப்பி இல்லையெண்டு சிணுங்கிச் சிணுங்கி நிண்டவன்; கேக்கல்ல பயத்தில. நானும் கேளாத ஆளப்போல இருந்தநான். கையில இல்லாதவன் கள்ளன் தானே?"

பின்னேரம் வரக்க ஒரு கொப்பி வாங்கி வந்திரவேணும். கட்டாயம்,

வேலைத்தளத்திற்கு வந்துவிட்டார். வீட்டுப் படலையில் வந்து நின்றவர், காதைக் கூர்மையாக்கிக் கொண்டார். நிதானம் பிடிபட்டாலும் அவதியில் எழுந்த ஆசை அசைக்க முடியாத நம்பிக்கையை அளித்திருக்கவேணும். உள்ளே கால்களை நடக்கவிட்டார்.

இன்னமும் வேறாக எண்ணிக்கொண்டு இருக்கவேண்டிய அவசியமிருக்கவில்லை. இதயத்தில் ஊற்றெடுத்துச் சிந்தனை வழியாகப் பாய்ந்து கொண்டிருந்த துன்ப வெள்ளோட்டத்தைச் சாதூரியமெனும் அணையினால் தடுத்து நிறுத்தி நடப்பவற்றைச் சாதுவாகப் பார்த்துக்கொண்டிருந்தார்.

வீட்டுக்காரன் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். "காலையிலிருந்து உங்களைக் காத்து இருந்துபோட்டு வரமாட்டயள் எண்ட எண்ணத்தில றோட்டால போன இந்த மேசிலாரைக் கூப்பிட்டு வேலையைச் செய்விக்கிறன். மாரி மழைக்கு இருந்துக்க ஏலாமப் பிள்ளையள் கஸ்டப்படுகுதுகள்."

வீட்டுக்காரனின் பொறுப்பு நிரம்பிய பொறுப்பற்ற காரியத்தைக் கேட்டு செவி திரும்பவில்லை.

"எனக்கு அவசரமான வேலை அங்க கிடக்குது. இவரு தெரிஞ்ச மனிசன். மற்றது கண்டிப்பாக கூப்பிட்டதால் தான் என்ன செய்யிறதெண்டு மறுத்துக்க ஏலாமவந்தநான், இதை முடிச்சிற்று இப்ப அங்க போயாகவேணும் என்று புளிச்ச ஏவறை ஒன்றை விட்டான்" மேலுக்கு ஓடு மாற்றிக்கொண்டிருந்த சுந்தரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பங்களின் சுமைதாங்கியாகவிருந்த வைரமுத்து மேசிலாரின் கைப்பை இப்போது கனப்பதாக ஓர் உணர்வு.

மெல்லிய சிரிப்பு ஒன்றை வீணில் உதிர்த்துவிட்டு வெளியேறிவிட்டார். எல்லாம் ஒரு முடிவுடன்தான். அவர் கால்கள் வழியிலிருந்த இரும்புக் கடையில் தகைந்து நின்றன.

கைப் பையிலிருந்த சாந்தகப்பை ஒன்று கை மாறியது. கண்களில்பட்ட அந்தக் கொப்பியைக் கேட்டு வாங்கிக் கொண்டார். கொப்பிக்கான விலை போக மீதியான பதிநாலு ரூபா நாற்பது சதத்தையும் வாங்கி மடியில் செருகிக் கொண்டு கைகளை வீசி நடந்து சென்றார். கைச் சுமை மட்டுமல்ல; அவர் மனச்சுமையும் நட்டத்திற்குத்தான் தீர்ந்துபோய்விட்டன.

நாளை என்பதில்லை - இனி
ஏழை என்ற ஏட்டில்
வாழுகின்ற உயிர்கள்
வளம் காணுகின்ற வரையில்

கூடுமிந்தக் கூட்டம் - வெறும்
குப்பை ஏந்தும் தட்டம் - இது
போடுகின்ற சட்டம் - ஒரு
வால் இல்லாத வட்டம்.

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொங்கு தோட்டமும் இறங்கு படிகளும்.

*மட்டக்களப்பு சாகித்திய மண்டலப்பரிசு பெற்றது*

நாலு பாய்ச்சலில் அந்த இறங்கு படிகளை எல்லாம் ஏறிக்கடந்து விட்டு உள்ளே கால்களைப் பதித்து நிமிர்ந்த கதிரேசனை மங்களம் கூறி வரவேற்றது அந்தச் சிவப்புக்கோடு. பக்கத்தில் இருக்கும் எவரிடமாவது பேனையை வாங்கி தன் நாமாட்சரத்தை சுற்றும் சுழியுமாகக் கிறுக்கிவிட்டு ஏனோ தானோ என்று அப்பால் நகர்ந்துவிடும் கதிரேசனுக்கு இன்று இப்படி ஒரு சங்கடம் ஏற்பட்டது எதிர்பாராத ஒன்றுதான்.

வேறு நாட்களாக இருந்திருந்தால் அரை நாளோ, முழு நாளோ லீவு கேட்டு விண்ணப்பம் ஒன்று பறந்திருக்கும். ஆனால் இன்று அப்படிச் செய்வதற்கு அவரது திட்டங்களும் நிலைமையும் உடந்தையாக இல்லையே!

பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்; பாவம்.

"என்ன கதிரேசன் இதுதான் கந்தோருக்கு வாற இலட்சணமோ? எத்தின தரம் சொல்லுறது உங்களுக்கு ? மரமா மனிசரா நீங்கள்? ஏன்தான் இப்பிடி வந்து....." கருக்கட்டியிருந்த மேகம் காற்று நின்றதும் "ஓ" என்ற இரைச்சலுடன் மழையாகப் பெய்வது போல் நெஞ்சில் இருந்தவற்றை எல்லாம் நேர்த்தியாகப் பொழிந்து தள்ளினார் தலைமைக் கிளாக்கர்.

வாயெல்லாம் பல்லாகி வார்த்தைகளும் அவைகளேயாகி வளைந்து குறுகி நின்றுகொண்டிருந்த கதிரேசனின் பரிதாப கலைக் கோலத்தைப் பார்க்கப் பரிந்தோ அல்லது இகழ்ந்தோ, பிரதம இலிகிதரே மேலும் தொடர்ந்தார். "ஆ....ங்....போ....போ..... கையெழுத்தைப் போட்டுட்டு வேலையைக் கவனியுங்க. கந்தோர் எண்டா வேளைக்கு வரவேணும் இல்லெண்டா லீவைப் போட்டுட்டு......"

காகிதாதிகளைச் சீர்படுத்திக் கொண்டிருந்தவர் இடையே ஒரு தடவை தன் நிருவாக சாமர்த்தியம் கதிரேசனிடம் எவ்வளவு தூரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை செய்கிறது என்பதை அறிந்து கொள்ளும் அவாவில் கடைக் கண்ணால் கதிரேசனின் நிலையை ஆராய முற்படுகிறார். கதிரேசன் தான் எப்பொழுதோ அவ்விடத்தை விட்டுச் சென்றுவிட்டாரே!

ஆசனத்தில் வந்து அமர்ந்துவிட்ட கதிரேசனுக்கு வேலைமீது நாட்டம் ஓடவில்லை. கைகள் எதையோ எடுத்து எங்கோ வைப்பதும், மீண்டும் அவற்றைத் திறப்பதும், பின்பு வைத்தவற்றையே காணாமல் தேடுவதுமாக ஒரு நிதானமற்ற போக்குடன் ஜந்திரமாய்ச் சமைந்துவிட்டார்.

பதினைந்து வருடங்களுக்கு முன்னால் தற்காலிக அடிப்படையில் அரசாங்க ஊழியனாகச் சேர்ந்து விட்ட கதிரேசன் தன் வாழ்க்கையிலே முதன் முதலாக மனநிறைவுடன் பெறப்போகும் ஊதிய வெகுமானம் என்றால் இது ஒன்றுதான்.

பத்து வருட சேவை மூப்படைந்த அனைவருக்கும் கதிரேசன் வகித்த பதவியில் உயர்வு வழங்குவதென அரசாங்கம் எடுத்த ஓர் தீர்மானத்தின் அடிப்படையில் கிடைக்கப்போகும் நாலுவருட நிலுவைப் பணம் தான் இந்த வெகுமதி. சம்பள நாளான இன்று அதனைப் பேசீற்றில் போட்டிருப்பதுதான் அவரின் இந்த உற்சாகத்திற்குக் காரணம்.

கதிரேசனின் கணக்குப்படி கிட்டத்தட்ட பன்னிரண்டாயிரம் ரூபாயாவுதல் தேறவேண்டும். மத்தியானம் பன்னிரெண்டு மணிக்கெல்லாம் சம்பளம் கொடுத்து விடுவார்கள். அதனை எடுத்துக் கொண்டு அரை நாள் விடுமுறையில் சென்றுவிடுவதென்பது அவரது திட்டம்.

அந்த இனிய நினைவுகள் மீண்டும் ஒரு முறை அவரின் இதயக் கோயிலின் கோபுரவாசலில் ஏறி எக்காளமிட்டுச் சிரித்தன.

அந்தப்பட்டப் பகல் வேளையிலே பசுமையான தன் நினைவுகளை டீ.வி.யில் கண்டு இரசித்துக் கொண்டிருந்தார்.

முதலில் தோன்றியவள் ரஞ்சினி தான். இத்தனை அழகையும் கவர்ச்சிகளையும் வைத்துக் கொண்டுதானா தன்னுடன் சதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரகாளியாக வாழ்ந்து வருகிறாள்?

பூவும் பொட்டும் குலுங்க கழுத்தில் தங்கச் சங்கிலி அவளுக்கு எவ்வளவு எடுப்பாக இருக்கிறது!

மகள் சாருலதா கூட இத்தனை அழகாக முன்னர் எப்போதும் இருந்ததில்லையே. புத்தம் புதிய ஆடைகள் அவளை இந்திர லோகத்து வனிதையாக்கி விட்டனதாம்!

வீடே கல கலப்பாக இருக்கிறது. பட்சணங்களும் வீட்டுச் சாமான்களும் கூட மலிந்து பொலிந்து காணப்படுகின்றனவே!

பீயூன் நீட்டிய பேசீற்றைக் கையில் பிடித்த போதுதான் அவரின் இந்த நினைவுகள் நிஜம் அல்ல என்பது தெளிந்தது. பேசீற்றில் மொத்தமாக மூவாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து மூன்று ரூபா சதம் இருப்பது நான்கு போடப்பட்டிருந்தது!

அறுத்துக் கழுவிய மீன் போல் தானும் தன் வயிற்றில் பிறந்த குஞ்சுகளும் வாழாவெட்டிகள் போல் வாடி வதங்கி இருப்பதாகவும், கடந்த பன்னிரெண்டு வருட தாம்பத்திய அனுபவத்தில் கண்டு களித்தது ஒன்றுமில்லை என்றும் அடிக்கடி சலித்துக் குத்திக் காட்டிக் கொள்ளும் அவர் மனைவி ரஞ்சினியின் குரல் அவர் காதுகளில் விழுந்து கொண்டிருந்தது.

சூறாவளியினால் இடிந்து தகர்ந்து போய் விட்டிருந்த குசினிக்கு ஓலை வாங்கிக்கட்ட வகையில்லாமல் பொலீத்தீன் சீலையால் மூடி மறைக்கப்பட்டிருந்த காட்சி அவர் கண்கள் முன்னால் படமாக வந்தது. ஆறு மாதங்களுக்கு முன்னால் மூத்த பெண் "பெரியவள்" ஆன சடங்குச் செலவுக்கென்று வட்டிக்கடை ஆறுமுகத்தாரிடம் பெற்ற பத்துச் சதவீத வட்டிக்கடன் வளர்ந்து பருத்து பெருச்சாளியாக வந்து பூதாகரமாக நின்றது.

அந்த இந்தச் செலவெல்லாம் நீக்கிப் பார்த்தால் எப்படியும் ஒரு ஐநூறாவுதல் தேறத்தான் செய்யும். கடன் கட்டுகளில் இருந்து விடுபட்டால் அதுவே பெரும் காரியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் இல்லற வாழ்வின் ஒரு இணையற்ற தீபாவளித் திருநாள் இன்று. அதனை கொண்டாடி மகிழ உரிய நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார் கதிரேசன்.

"கதிரேசுவுக்கு இண்டைக்குப் பெரிய சுவீப் அதிஸ்டமாமே. என்னடாப்பா இப்பிடிக் கவலைப் பட்டுக் குந்திக் கொண்டிருக்கிறாய். கொண்டாடுறதில்லையோ...?"

வெற்றிலை குதப்பிய வாயை இடர்ந்து கொண்டு மோப்பம் பிடித்தான் பக்கத்துக் கதிரைக்காரன் கனகசுந்தரம்.

போன கிழமை இருவருமாகத்தான் "சென்றல்" கொட்டலில் ஒரு "எடுவை" எடுத்தவர்கள். கனகசுந்தரம் பெற்ற மூன்று மாத அட்வான்சில் ஆயிரம் ரூபாவுக்கு மேல் தீர்ந்து போயிற்று. "என்ன கதிரேசு மத்தியானம் பார்க்கலாமா? ஒழுங்கு பண்ணுமன். இன்றைக்குச் சலறி டே தானே....?"

கதிரேசு பதில் கூறவில்லை.

"என்னப்பா நான் சொல்லுவது உன் காதில் விழவில்லையா? நீயும் உன்பாடுமாய் இருக்கிறாயே! ஏலாதெண்டால் சொல்லுமன்!"

"அதில்ல கனகு. இண்டைக்கு வீட்டில கனக்க வேல கிடக்கு. நேரத்தோட போக வேணும் அதுதான் பார்க்கிறன்."

"ஓகோ, அப்படியா சங்கதி. ஏண்டாப்பா இப்பிடிப் பயப்படுகிறாய்? ஒரு இருபது முப்பது வரும். இதுக்குப் போய் சாட்டுப் போக்குச் சொல்லி ஏமாத்தப் பாக்கிறியே."

"சாட்டுப் போக்கில்ல கனகா. உண்மையாகத் தான் சொல்லுறன் நம்பு."

"சரி சரி கதிரேசு, நீ 'பே' பண்ண வேணாம். நான் எடுக்கிறன். சரிதானே."

கதிரேசுவுக்கு உரோசம் பொத்துக் கொண்டு வந்தது. தன்னை ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமியாகவும், சாட்டுப் போக்குக் கூறுவதாகவும் கனக சுந்தரம் முறைமுகமாகச் சுமத்திய குற்றச்சாட்டுகளை ஜீரணிக்க முடியாதவராக,

"சரி, சரி பயப்படாதை, நான் வாறன். அதுமட்டுமல்ல நானே எடுத்தும் தாறன்."

கனகிற்கு கொடுப்பிற்குள் சிரிப்பு வந்தாலும் அதைக் காட்டிக்கொள்ளாமல், "விரும்பாட்டி விடு. தெண்டிக்கல்ல. சும்மா பகிடிக்குச் சொன்னதை சீரியஸ்சாக எடுத்துக் கொள்ளாதை கதிரேசு."

"கனகு அதைஎல்லாம் விடு. சரியா பன்ரெண்டுக்கு வெளிக்கிட ஆயத்தமாக இரு. சைக்கில் இருக்கோ?"

கனகசுந்தரத்தின் கயிறை விழுங்கிவிட்ட கதிரேசு அதனை ஒரு கௌரவப் பிரச்சனையாகக் கருதி திட்டத்தை தீட்டிக் கொண்டிருந்தார்.

கனகசுந்தரம் சரியான தும்பி. தொட்டால் விடவேமாட்டான். மதியம் பன்னிரண்டு நாற்பத்தைந்திற்கு பார் ஒன்றுக்குள் நுளைந்த இருவரும் அப்படி இப்படி என்று இரண்டு மணி சுமாருக்குத்தான் ஓர் அளவாக வெளியேறினார்கள்.

கதிரேசனுக்கு இருநூறு ரூபாவுக்கு மேல் அறுப்பு

ஏதோ கடன் ஒன்று கழிந்தது என்று சமாதானத்தைத் தனக்குத் தானே கூறிக்கொண்டு பசார் வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கி விட்டார் கதிரேசன்.

ஆகச் சின்னக் குழந்தையின் முகத்தைத் திடீரென்று எண்ணிக்கொண்டவர், கையில் ஒரு குளுக்கோரசப் பக்கட் ஒன்றையும் வங்கிக் கொண்டார்.

பஸ் ஸ்ராண்டை அடைந்த போது மணி மூன்றாகிவிட்டது. புறப்படத் தயாராகிக்கொண்டிருந்த பஸ் ஒன்றில் தாவி ஏறிக்கொண்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டிம்" மில் இருந்த அவரின் சிந்தனை வாழ்க்கை நிரலின் முன் அத்தியாயத்தை இரை மீட்கத் தொடங்கிவிட்டது.

"இல்லானை இல்லாளும் வேண்டாள்" என்ற தத்துவத்தின் அனுபவரீதியான உண்மையினை அவர் மனம் ஒப்புக் கொண்டது.

சூடான பெருமூச்சொன்று அனாதரவாக வெளியேறி ஓய்ந்துகொண்டிருந்தது.

தன் உதாசீன நடத்தைக்கு வாழ்க்கை கற்றுத்தந்த நல்ல பாடம் இது என்பதை எண்ணிப் பார்த்துக் கொண்டார்.

இளமையில் தான்செய்த இறுமாப்புக்களையும், கவலையீனங்களையும் நினைத்து நொந்து கொண்டார். எல்லாம் தந்தையாருக்குச் செய்த மொத்த பாவத்தின் அறுவடை என்பதில் சந்தேகம் எழவில்லை.

நொத்தாசியாரின் ஏக புத்திரனாக அவதரித்த கதிரேசனைப் படிப்பில் ஒரு முழு மனிதனாக்கிப் பார்க்க வேண்டும் என்று அந்தப் பெற்ற உள்ளம் வருந்தி முயற்சி செய்தபோதெல்லாம் வினையும் விளையாட்டுமாக வீணே பொழுதைக் கரைத்துக் கொண்டிருந்த தன்னை மன்னிக்க முடியாத ஒரு பாவியாக ஒப்புக்கொண்டார்.

மட்டக்களப்பு நகரத்திலென்ன திருகோணமலை, யாழ்ப்பாணம் என்று எத்தனை கல்லூரிகளில் சேர்த்துவிட்டிருக்கிறார். ஒரு கிழமையோ மாதமோ ஆகுமுன் "பழையபடி வேதாளமாக" திண்ணைப் படிக்கட்டில் அம்மாவின் ஓரமாக வந்து நின்றிருக்கும் தன் செய்கையை எண்ணி இப்போது வெட்கப்பட்டுக்கொண்டார்.

கோயில் திருவிழா, கண்ணகி அம்மன் சடங்கு என்று ஊரில் வரும் எல்லா நிகழ்ச்சிகளிலும் தான் காட்டிய அக்கறை தன் தனிப்பெரும் கோயிலாக இருந்த தகப்பனாரின் விடயத்தில் இல்லாமல் போய்விட்டதே என்று பேருமூச்சு விட்டுக்கொண்டார்.

புதுவருடப் பிறப்பு வந்துவிட்டால் போதும் ஊரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடியன்களை இயக்கி நாடகம், மகிடி என்று கலைநிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து திரிவதில் இருந்த அந்த நாட்களின் இனிய சம்பவங்கள் இனி எங்கே வரப்போகிறது என்றது அவரது ஏக்கம்.

இங்கிருந்தால் பையன் கெட்டுப் போய்விடுவான் என்று தானே செலவைப் பொருட்படுத்தாமல் நொத்தாசியார் யாழ்ப்பாணக் கல்லூரியில் சேர்த்துவிட்டார். சேர்ந்து இரு வாரங்கள் ஆகவில்லை, பையன் ஒருவனின் மூக்கை உடைத்து விட்டதற்குத் தண்டனையாக விடுதியில் கதிரேசனுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தானே நொத்தாசியார் விடா முயற்சியால் ஒரு வீட்டில் வாடகை செலுத்தி இடம் பார்த்துக் கொடுத்தார்.

எல்லாவற்றிற்கும் கதிரேசனுக்குப் படிப்பில் நாட்டம் சென்றால் தானே!

கதிரேசனின் நடை, உடை, செலவு, சித்தாயம் எல்லாவற்றையும் கவனித்த வீட்டுக்காரர், “பெரிய இடத்துப் பையன் இவன்” என்று நினைத்ததால் தானோ என்னவோ வீட்டில் ஏக போக உரிமை கொடுத்தவர்கள்.

மகள் ரஞ்சினியைக் கூட அச்சம், நாணம், மடம் இல்லாமல் கதிரேசனுடன் அன்பாக பழகவைத்ததற்கும் காரணம் இதுதானோ!

எஸ்.எஸ்.சி பரீட்சை முடிவு வெளியாகிறதுக்கு ஒரு கிழமை முந்தி நொத்தாசியாருக்கு தந்தி ஒன்று கிடைச்சி ஓட்டமும் நடையுமாக ஓடி வந்த போது தானே காரியம் எக்கச்சக்கம் என்பது புரிஞ்சுது.

என்னமோ எவடமோ என்று பதை பதைச்சி ஓடிவந்த மனிசன் கதையைக் கேட்டு விறைச்சுப்போய் இருந்து விட்டார்.

பொட்டை மூன்று மாதம் கர்ப்பிணி எண்டா ஆருதான் அசையமாட்டார்கள்?

மானம் மரியாதைக்கு பயந்த மனிசன் அவர். ஈருக்கும் பேருக்கும் தெரியாம பெட்டையையும் பொடியனையும் புடிச்சி முடிச்சிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடவைத்துவிட்டுப் போனவர் போனவர்தான். பன்னெண்டு வருசத்துக்கு மேல ஆச்சி. பச்சைத் தண்ணீர் கூட இன்னும் குடிச்சறியமாட்டார் மனிசன். நாலு பிள்ளைகளுக்கு தகப்பன் ஆகவும் போய்விட்டார் கதிரேசன்.

வைராக்கியம் உள்ள மனிசன் நொத்தாசியார். சொன்னா சொன்னதுதான். ஆத்திரத்தில் கதிரேசனும் கத்தினவர் தான் சுய முயற்சியால எப்படியும் முன்னுக்கு வந்தே தீருவன் எண்டு. அவருக்குத்தான் சாண் ஏற முழம் சறுக்கிற ராசியாச்சே. முன்செய்த வினைப்பயனோ என்னவோ இந்தக் கிளறிக்கல்ல எப்படியோ நுளைஞ்சிற்றாரு. இந்தக் காலத்திலயெண்டால் ரூபா பத்தாயிரம் வேணுமே. எங்கே போறது பணத்துக்கு?

அறுபத்தேளாம் ஆண்டு உத்தியோகத்தில் சேர்ந்தவர் அதுக்கு மேல ஒரு கோடு தாண்டாக் குலமாக இண்டைக்கும் அதே நிலைமையில தான் இரிக்காரு. இது இப்ப ஆண்டவன் புண்ணியத்தால கிடைச்ச அதிட்டம்தானே. என்ன செய்யிறது எல்லாம் தலையெழுத்து.

பஸ்சில் ஒருவாறு நெருக்கடி குறைந்து அவர் இறங்கவேண்டிய இடமும் வந்துவிட்டது.

வழக்கத்திற்கு மாறான ராஜகம்பீர நடையுடன் அவர்வீட்டுத் தலைவாசலைத் தட்டியபோது ரஞ்சினி குசினி அடுப்பில் ஏதோ எரித்துக்கொண்டிருந்தது தெரிந்தது.

"ரஞ்சினி....... ரஞ்சினி....."

வழக்கமான ஆசாரசீலங்களோடு மூக்கை முகத்தைச் சுண்டிக்கொண்டு வந்து நின்ற ரஞ்சினியைப் பார்த்து கனிந்த குரலில் கதிரேசன் கூறினார்.

"ஆண்டவன் எல்லாரையும் எப்போதும் ஒரே மாதிரி வைக்கிறதில்லை ரஞ்சினி. நமக்கும் காலம் வந்திட்டுது."

ரஞ்சினிக்கு ஒன்றும் புரியவில்லை. விடயத்தைச் சுருக்கமாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறி "உன் கழுத்தில் ஒரு சங்கிலியை வாங்கிப் போட்டுக் கொள். வீட்டையும் திருத்துவம். அதற்கு ஒரு ஆயிரத்து ஐநூறு போதும். பிள்ளைகளுக்கும்......"

"கால்சட்டைப் பையினுள் நுளைத்த கையை நண்டு கௌவிக்கொண்ட வேதனையுணர்வுடன் வெளியில் எடுத்தவர் விரக்தியுடன் திண்ணைப் படியில் தூவினார் சில்லறையாகக் கையில் வந்த ஐம்பத்து மூன்று சதத்தை மட்டும்."

ஆண்டவன் எல்லோரையும் எப்போதும் ஒரே மாதிரி வைப்பதில்லை தான்.

அடுத்த மாதச் சம்பள நாள்வரை பஸ் செலவுக்காவுதல் யாரிடம் கடன் கேட்பதென்பதே அவரது அப்போதைய யோசனை.

தொங்கு தோட்டமும் இறங்குபடிகளுமாக இருக்கப்பட்டுவிட்ட கதிரேசனின் வாழ்க்கை அமைப்பை யாரால் என்ன செய்துவிட முடியும்.

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04. அவனுக்குத்தான் தெரியும்.

மூன்று வாரங்களுக்கு முன்புதான் இந்த வீட்டிற்கு குடிவந்திருந்தான். அவன் ஊருக்குப் புதுசி. வீட்டுக்காரி என்று எவரும் இல்லை. ஓடி விளையாடும் பாப்பா ஒன்று கூட அவனுடன் இருந்தது. இதைத் தவிர சொந்தம், பந்தம் என்று அங்கு வந்து போவதாக யாரையுமே காணவில்லை. அவனுக்குக் கூட அவ்வளவு வயது இருக்க மாட்டாது. அறமிஞ்சிப் போனால் முப்பதோ அல்லது முப்பத்திஇரண்டோதான் இருக்கும். இத்தனை சிறிய வயதில் அவனுக்கு இப்படி ஒரு நிலைமையா?

எவருக்குமே அவன் வாழ்க்கையின் ஜீரணித்துவிட்ட சங்கதிகள் தெரியவில்லை. பக்கத்து வீட்டுக் காரராகிய எங்களிடம் தான் கந்தோருக்குப் போகும் போது அந்தப் பாலகனை விட்டுச் செல்வான். இடையில் பத்து மணிக்கு ஒரு தடவை வந்து குழந்தைக்குப் பால் ஊட்டிவிட்டு அவனே போவான். பின்பு மதியபோசனத்திற்காக, பின்நேரம் கந்தோர் கலைந்த பின்பே வீட்டிற்கு வருவான்.

வெகு பண்பாட்டுடனும் மிக்க ஒழுக்கத்துடனும் பழகும் அவன் பெயர் ரகு. பட்டும் படாமலும் எத்தனையோ தடவைகள் என் மனைவி கூட அவனது சம்சாரத்திற்கு நடந்துபோன அந்த துன்பசாகரத்தை நாசூக்காக அறிய முற்பட்டிருக்கிறாள். எதற்கும் ஒரு புன்முறுவலினால் அலைக்கழிக்கும் அவன், "தான் உண்டு, தன்வேலை உண்டு" என்றே நடந்து வருகிறான்.

தாயில்லாமல் பிள்ளையை வளர்ப்பதென்பது சுலபமானதல்ல. அதுவும் காரியாலயம் ஒன்றில் பணிபுரிந்துவரும் ஆண்மகன் ஒருவன், கந்தோர் வேலைகளோடு, வீட்டு வேலையையும் பிள்ளைப் பராமரிப்பையும் ஏற்று நடத்துவதென்பது கடினமான காரியம். பலர் பிள்ளையின் நன்மை குறித்து விவாக சம்பந்தங்கள் கூட அவனுக்கு கொண்டு வந்திருக்கிறார்கள். எதற்கும் அவன் மசியாமல், எப்போதும் போலவே அவர்களை முகம் கோணாமல் திருப்பிவிடும் இவன் ஒரு நிறைகுடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானாகத் தன் கதையைக் கூறினாலொழிய தலையிட்டுக் கேட்டுப் பழக்கமில்லாத நான், அவனிடம் இதுவரை அவனது விவகாரங்கள் குறித்து எதுவுமே பேசியதில்லை. அதை அவனும் அறிந்தோ என்னவோ சற்று மனம் விட்டுப் பழகுவதுபோல் எனக்கு தோன்றுகிறது. சிறிது சிறிதாக அவன் வாழ்க்கையில் மறைந்து உக்கிப்போன பழைய சம்பவங்களைக் கூட என்னுடன் உரையாட நினைப்பது தெரிகிறது.

ரகுவிற்கு அப்போது இருபத்தைந்து வயது இருக்கும். அரசாங்க காரியாலயமொன்றில் தட்டச்செழுத்தாளர். தினமும் வீட்டுக்கு வந்துபோய்க் கொண்டிருந்தான். அந்த சமயத்தில் தான் அந்தப் பெண் நிர்மலாவின் அறிமுகம் ரகுவிற்கு ஏற்பட்டது. எல்லாமே ஒரு சூதுபோல் நடந்து முடிந்து விட்டது.

நிர்மலா தினமும் பைசிக்கிளில் பாடசாலைக்குச் சென்றுவரும் ஒரு பருவமங்கை. அமைதியும் ஒழுக்கமும் நிரம்பிய பெண்ணாக அவளைப் பல தடவைகள் பாதையால் போகும் போதெல்லாம் ரகு கவனித்திருக்கிறான். அங்கும் இங்கும் சிந்தனையைச் சிதறவிட்டு, சேட்டைகளில் ஈடுபட்டுச் செல்லும் ஏனைய மாணவர்களில் நின்றும் நிர்மலா வேறுபட்டவளாகவே ரகுவின் பார்வையில் தோன்றினாள்.

அன்று தற்செயலாக நடைபெற்ற சம்பவம் அது.

காலையில் நேரமாகிவிட்டதென்ற அவசரத்தில் ஓடிவந்த நிர்மலா பாடசாலைக்குள் பிரவேசித்த பின்புதான் தன் "பர்சு" இல்லாதிருந்ததைக் கவனிக்க முடிந்தது. வெறும் பணம் மட்டுமென்றால் அவள் அவ்வளவு தூரம் கவலைப்பட்டிருக்க மாட்டாள். அடுத்த வாரம் பரீட்சைக்குத் தோற்றவேண்டியிருந்தது. அடையாள அட்டை கூட அந்த பர்சுனுள்தான் அகப்பட்டுவிட்டது.

என்ன செய்வதென்றே தோணவில்லை நிர்மலாவுக்கு. அன்றைய வகுப்பு பாடங்கள் கூட நன்றாக மனதில் பதியவில்லை. மூன்றாம் மணி அடித்து முடிந்து விட்டது. நிர்மலாவை அதிபர் அழைப்பதாக ஒரு செய்தி கிடைத்தது. அதிபரின் அறைக்கு விரைந்த நிர்மலா விபரீதமாக பார்த்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் பாதையில் சந்திக்க நேரும் அந்த ஆள் அங்கே நின்றுகொண்டிருந்தான். பார்வையை அதிபர் பக்கம் திருப்பினாள், "ஏன்" என்பது போல.

"நிர்மலா, இப்படிக் கவலையீனமாக நடந்து கொள்வாய் என்று நான் நினைக்கவில்லை. உமது பர்சு சரியாக இருக்கிறதா பார். முதலில் உமது அடையாள அட்டை எங்கே?"

காலையில் வரும்போது எங்கேயோ தொலைந்து போய்விட்டது, மடம். அதுதான் கவலையுடன் இருக்கிறேன். என்ன செய்வதென்றே புரியவில்லை. அடுத்த வாரம் பரீட்சை ஆரம்பிக்கப்போகிறது.

"அவ்வளவு தூரம் அக்கறையோடு இருந்திருந்தால் கண்டபடி விட்டிருப்பாயா, நிர்மலா?" சரி சரி இதோ பார். இதுதானே நீ தொலைத்துவிட்ட பர்சும், அடையாள அட்டையும்.

ஆமாம் மடம், ஆமாம். மிக்க நன்றி. எங்கே கிடந்தது மடம்?

இதோ நிற்கும் மிஸ்டர் ரகு பாதையில் கிடந்து பொறுக்கி எடுத்து வந்திருக்கிறார். அவரது நேர்மையை பாராட்டுகிறேன்.

"அப்படியா, மிக்க நன்றி மிஸ்டர் ரகு" சொல்லிக்கொண்டே துள்ளிக் குதித்து ஓடி மறைந்தாள் நிர்மலா.

ரகு சிரித்துக் கொண்டே வெளியேறினான்.

அந்த சம்பவத்திற்குப் பிறகு ரகுவிற்கு நிர்மலாவைக்காண நேரும் போதெல்லாம் ஏதோ ஒரு வகை உணர்வு தலைதூக்கி அவளுடன் பேசிப்பார்க்கத் தூண்டியது. நிர்மலா கூட ரகுவை முன்னரிலும் பன்மடங்கு உயர்வாக எண்ணி மதித்து வந்ததோடல்லாது, ரகுவுடன் கதைத்துப் பழகவும் விரும்பினாள் என்பது உண்மை.

நாளுக்கு நாள் இருவருக்கும் இடையே இருந்து வந்த இடைவெளி குறுகி, சங்கமத்தை அடைந்துவிட்ட நதியாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிவிட்டார்கள் அவர்கள்.

சந்திப்புக்கள் அடிக்கடி ஏற்பட்டன. கடிதங்கள் பரிமாறப்பட்டன.

அதன் எதிரொலியாக அன்றையச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

கைகள் நடுங்கின, நா குளறியது. உடம்பு படபடத்தது. கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை ரகுவிற்கு.

ஆசையோடு அனுப்பி வைக்கப்பட்ட அவனது அன்புக் காணிக்கை ஆவி கலங்கச் செய்யும் யமகிங்கிலியரென வந்து நின்று வீரகர்ஜனை புரிகிறது.

"யார் இங்கு ரகு என்பவர்?" கம்பீரமான அவனது "கிண்" என்ற குரல் ரகுவை அதிர்வடையச் செய்கிறது.

அடுத்தடுத்த மேசைகளில் இருந்து வேலைசெய்த எழுதுனர்கள் அனைவரது கண்களும் "இவர்தான் ரகு" என்பது போல ஒரே நேரத்தில் அவனை அடையாளம் காட்டின.

ரகுவிற்கு பயத்தினால் நெஞ்சம் படபடத்தது. வெட்கம் ஒரு புறம், வேதனை மறுபுறம் அவனை என்னென்னவோ செய்துகொண்டே இருந்தன.

இருந்தும் தைரியத்தை எப்படியோ வரவழைத்துக்கொண்டு, "நான் தான் ரகு. என்ன வேண்டும் உமக்கு?" என்றான் ரகு.

நீர்தானோ அந்த மன்மதன். கடிதம் வரைந்து அனுப்பி வைக்கும் கலையில் பெரும் புள்ளியோ நீர்? "மரியாதையாக சொல்றன் விட்டுப்போடும். இல்லைஎண்டா, நடக்கிறது நல்லதா இருக்காது."

நெஞ்சம் பொய்த்த பின்பும் தாழவிரும்பாத தன்மான உணர்வோடு தான்தோன்றித் தனமாக கேட்கிறான் ரகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடிதமா....? யார் யாருக்கு எழுதிய கடிதம்?"
"கடிதத்தைப் பற்றி உமக்கு ஒன்றுமே புரியாதா?" என்ற அவன், சேட்பக்கட்டில் இருந்து ஒரு நீண்ட கடதாசியை இழுத்து எடுத்து வெளியே வீசி எறிந்தான். "படிச்சிப்பாரு உம்முடைய கெட்டித்தனத்தை."

அதற்குமேல் ரகுவிற்கு வார்த்தைகள் நின்றுபோய் விட்டன. தலை தானாகவே தாழ்ந்து விட்டது.

கன்னாபின்னா என்று கர்ச்சித்த அவன் ஒரு வழியாக எச்சரிக்கை செய்துவிட்டு திரும்பியும் போய் விட்டான்.

ரகுவின் மனம் சமநிலை அடையவில்லை.

வெட்கமும், வேதனையும் தொண்டையை அடைக்க கந்தோரை விட்டு அரைநாள் லீவோடு வெளியேறி விட்டான்.

"நிர்மலா, நீயும் ஒரு பெண்ணா? உன்னை எப்படியெல்லாம் நம்பி இப்படி ஏமாந்து போய் விட்டிருக்கிறேன். என்னை வஞ்சிக்க வேண்டுமென்று எத்தனை நாட்களாக நீ இப்படி திட்டம் தீட்டி வைத்திருந்தாய்? உன் வார்த்தையை உயர்வாக மதித்து நடந்த இந்த மடையனுக்கு நீ செய்துவிட்ட நற்கருமம் இதுதானா? வேண்டும் வேண்டும். நன்றாக வேண்டும். எனக்கு இஸ்டமில்லையென்று ஒரே ஒரு வார்த்தை மட்டும் கூறியிருந்தால் போதுமே உன் ஏழேழு ஜன்ம உறவில் கூட குறுக்கிட்டிருக்க மாட்டேனே. என் இதய மாளிகையை வரண்ட மணற்காடாக ஆக்கிவிட்டாயே. போதும். இது போதும் எனக்கு."

முணுமுணுத்துக் கொண்டே பஸ் தரிப்பிடத்தில் வந்து கொண்டிருந்த ரகுவிற்கு வியப்பைக் கொடுத்தது, அடுத்து விரிந்த அந்தக் காட்சி.

கையில் ஒரு சூட்கேஸ்சுடன் மகா லெட்சுமியாக ரகுவை நோக்கி நடந்து வந்துகொண்டிருந்தாள் நிர்மலா.

கள்ளமில்லாத பிள்ளைச் சிரிப்புடன் அவள் அவனை நெருங்கி வந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது ரகுவிற்கு விடயம் ஓரளவு புரிந்துவிட்டது.

வந்ததும் வராததுமாக, "ரகு, என்னை மன்னித்து விடுங்கள். என்மீது கோபமா ரகு உங்களுக்கு? அண்ணா அவ்விதம் நடந்து கொண்டிருக்கக் கூடாது தான். அதற்காக உங்களிடம் நான் மன்னிப்புக் கேட்கிறேன்."

அவனுக்கு வந்த ஆத்திரத்தில் அப்படியே கன்னத்தை அடித்து நொருக்கி விடவேண்டும் போல் இருந்தது. ஆயினும் அவன் அதிகம் பேசாமல் இருந்து விட்டான்.

"ஏன் ரகு, என்னுடன் பேசமாட்டீர்களா?"

ரகு எதுவுமே பேசாமல் அவளையே பார்த்து கொண்டிருந்தான். அவன் மனம் இவ்வாறு எண்ணியது.

"என்ன துணிச்சல் இவளுக்கு? இப்படியும் ஒரு பெண் இருப்பதா? எவ்வளவு இலாவகமாக இந்த இக்கட்டான பிரச்சனையை இவளால் இவ்வாறு அணுக முடிகிறது. துன்பத்தின் எல்லைக் கோட்டிற்கே சென்று விட்ட என்னை கேலி செய்து துன்புறுத்த இவ்விதம் நடந்து கொள்கிறாளோ?"

நிர்மலாவே மீண்டும் பேசினாள்.

"ரகு, நான் வீட்டிலிருந்து புறப்பட்டு வந்து விட்டேன். இதோ என் பெட்டி. இனி நீங்கள் தான் எனக்கு எல்லாம். வீட்டில் அம்மாவுடனும், அண்ணாவுடனும் சண்டை போட்டுவிட்டு உங்களிடம் வந்து இருக்கிறேன். என்னை மன்னித்து விடுங்கள் ரகு."

அப்போதுதான் ரகுவிற்கு விடயம் புரிந்தது. இந்த நல்லவளைப் பார்த்து எப்படியெல்லாம் கற்பனை செய்து விட்டேன் என்று மனம் நொந்த ரகுவிற்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை.

"நிர்மலா......"

ஏதோ கூறுவதற்காக வாய் எடுத்த ரகுவை இடைநிறுத்தினாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மலா.

"நீங்கள் எதுவுமே சொல்லவேண்டாம் ரகு. காலம் கடந்து விட்டது. கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரமா?"

"என்னை இப்போது என்ன செய்யச் சொல்கிறாய் நிர்மலா?"

கலகலவென நகைத்த அவள், "என்ன செய்வதா? ஆண் பிள்ளை கேட்கும் கேள்வியா இது? நாம் முதலில் பதிவுத் திருமணம் செய்து கொள்ள வேண்டியதுதான்."

"ஏற்கனவே உங்கள் அண்ணா என்னோடு......"

"தெரியும். நானே உங்களைத் தேடி வந்திருக்கிறேன். நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள். நாம் இருவருமே இப்போது மேஜர்கள்."

நிர்மலாவை ஒருமுறை உற்றுப்பார்த்தான் ரகு. அந்த சந்தடியுள்ள பஸ்தரிப்பு நிலையத்திலும் அவளை அப்படியே அணைத்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு அவனுள் ஏற்பட்டது. ஆயினும் அவ்வாறு செய்யவில்லை.

மூன்று வருட தாம்பத்திய வாழ்வுக்கு பரிசு கிடைத்தது போல் நிர்மலா கர்ப்பவதியானாள்.

கண்ணும் கருத்துமாக பார்த்து வந்த ரகுவிற்கு அழகிய ஆண் மகனொன்றை பெற்றுத்தர நிர்மலா தவறவில்லை.

பிரசவம் கூட சுகமாகவே நடந்தது.

குடும்பம் ஒரு குதூகலம் என்பதை அனுபவித்து வந்த அந்தக் குடும்பத்திலும், "கலி" புகுந்து விளையாடாமல் விட்டுவிடவில்லை.

ரகு வழக்கம் போல் காலை உணவு உட்கொண்டுவிட்டு கந்தோருக்குச் சென்றுவிட்டான்.

நிர்மலா, சமயல் கட்டில் ஏதோ அடுக்கள வேலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்முரமாக ஈடுபட்டிருந்தாள். பையன் நித்திரையாகப் படுத்திருந்தான்.

ஒரு வயது பூரணமடையவில்லை. நடந்து திரியும் பருவ வயது அந்தக் குழந்தைக்கு.

யாருக்கும் தெரியாது. பையன் விழித்தெழுந்தான். படிக்கட்டுகளில் தன் பிஞ்சுக் கால்களைப் பதித்து மெல்ல மெல்ல இறங்கி, தண்ணீர் ஓடும் கானைத்தாண்டி, நடந்து அப்பால் இருந்த ரயில் கடவையின் முன்னால் படுத்துக் கிடந்த பூனையிடம் சென்றிருக்க வேண்டும்.

வேகமாக வந்துகொண்டிருந்த புகையிரதம்..... வீரிட்டலறிய சத்தம் கேட்டு.....

நிர்மலா பித்துப்பிடித்துவிட்ட காளியாக மாறி விட்டாள்.

தண்டவாளத்தின் குறுக்கே.... ஒரு கணப் பொழுதுதான்....

பையனை தரைக்கு வீசி எறிந்துவிட்ட மறுகணம்!

ஐயோ அந்த உத்தம தாய்மையின் சின்னம்.... முகத்தில் மகிழ்ச்சிக் களையோடு.... மஞ்சள் குங்குமத்தோடு.... இரத்த வெள்ளத்தில் மிதந்தாள்.

தலையில் பலத்த காயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த நிர்மலா, இறுதியாக ரகுவைப் பார்த்து பேசிய இல்லை, குளறிய வார்த்தைகள்.

"........குழ........ந்தை........காப்........."
அதன் அர்த்தம் அவனுக்குத்தான் தெரியும்.

அந்த அன்பு முகம்-ஆசை முகம், ரகுவின் நினைவு உள்ளவரை நீங்காத உயிர் ஓவியம். அதனை ரகுவால் இலகுவில் மறந்துவிட முடியவில்லை.

ஜீவன் உள்ளவரை நிர்மலா ரகுவுடன் வாழ்ந்துதான் வருகிறாள்.

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05. காதல் என்பது தேன்கூடு.

மூடிய கண்களின் விழியலகில் அந்தச் சந்திரவதனம் கண்கொளாக் காட்சியாக நிலைத்து நின்றது. நீண்டநேரம் என்னையே மறந்து அதன் எழில்கோலத்தை முத்தமிட்டுக் கொண்டு இருந்தேன்.

அந்தச் சிறிய கால இடைவெளியில் நானடைந்த அந்தப் பெருமகிழ்ச்சி - அப்பப்பா, அதை இவ்வுலகில் ஒப்பு நோக்கி எடுத்துக் கூற வார்த்தையே இன்றித் தவித்துக் கொண்டிருக்கிறேன்.

காலையில் ஏழு மணி சுமாருக்கு வடக்கே, எனக்கென்றுதானோ என்னவோ உதயமாகும் அந்தத் தண்ணிலவுத் தாரகையைக் காணாமல் இருக்க, என்மனம் தவியாய்த் தவித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு கணப்பொழுதும் நாட்களாகி; நாட்கள் யுகங்களாகி கழிந்து கொண்டிருக்கும். எங்கே? எங்கே? என்று ஏக்க விழிகள் துளாவித் துளாவி மேய, பாதையின் குறுக்கே குறுநடைபயின்று, அந்தச் சிங்கார தேரினில் விரைந்துவரும் பூரணை நிலவைக் காணும்வரை மனதில் தொக்கி நிற்கும் இன்பக் கவலைகள் என்னைப் படுத்தும் பாட்டை என்னவென்று எடுத்துரைப்பேன்.

இடதுகை வளைவில் பரந்து வளர்ந்து நிற்கும் வேப்பை மரம் கழித்துவிட்டால், நேரிய பாதையின் இருபுறமும் நீண்டுவிரிந்து கிடக்கும் ஒரே பச்சைப் பசேல் என்ற புல்வெளி, மல்கோவா மாந்தோட்டம் போல் செழித்து வளர்ந்து, அழகிய வெள்ளைப் பூக்களை அங்குமிங்கும் தூவி, தெளிவும் வாஞ்சையும் நிறைந்த கனிகளைச் சுமந்து நிற்கும் நஞ்சு மரங்கள்.

அங்கிருந்து சிறிது தூரம் முன்னோக்கி நடக்கும் வழியில் ஜனாதிபதி வாசஸ்தலத்தில் காவலில் நின்று கொண்டிருக்கும் பொலிஸ் சிப்பந்தியைப் போல் தனியாக நிமிர்ந்து கம்பீரமாக நிற்கும் பனைமரம்.

நேராக ஓடிக்கொண்டிருந்த பாதை அவ்விடத்தில் இடுப்பை ஒரு தடவை நெளித்து நிமிருகின்ற பாவனையில், வளைந்து மேலெழும்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அங்கிருந்தபடியே அதன்மேலாக, இராட்சத இரும்புக் கட்டைகளால் சீரமைத்துப் போடப்பட்டுள்ள பெரிய பந்தல்பாலம் விந்தியமலை எனக் காட்சிதருகிறது.

பாலத்தின் கீழாகப் பரந்து, விரிந்து, நெளிந்து பாடியோடும் அந்த ஆற்றின் அழகிய தோற்றம். ஆங்காங்கே சிறுசிறு நாவாய்களிலும், தோணிகளிலும், வள்ளங்களிலும் மீன்பிடிக்கும் மீனவர்கள். அந்த மீன்களையே உரிசை பார்த்துவிடத் துடிக்கும் துரு துரு விழிகளுடன் வட்டமிட்டுப் பறந்து கொண்டிருக்கும் காக்கைகள், பருந்துகள், குழந்தைகளின் விளையாட்டைக் கிரகித்து மகிழும் மனநிலையோடு மைதானத்தை வளைந்து குதூகலத்தோடு நின்றுகொண்டிருக்கும் பெற்றோரைப் போன்று தரையில் படுத்தும் சாய்ந்தும், நிமிர்ந்தும் தலையை உயர்த்தி நிற்கும் செழிப்பான தென்னை மரங்கள். கதிரவனின் செந்தழற்கதிர்கள் நுரைகக்கிப் பாயும் நீரலைகள் மீது பட்டுத் தெறிக்கும் போது உண்டாகும் வெள்ளி மினுக்கங்கள்.

உள்ளத்திலேயே ஒரு புது வெள்ளோட்டம். உடம்பு முழுவதும் உணர்ச்சிகளின் களியாட்டம். எதிரே அந்தத் திருவதனம் வந்து கொண்டிருக்கிறது.

மெல்ல மெல்ல என் திடசித்தமெல்லாம் என்னை விட்டு எங்கோ அகன்று போய்க் கொண்டிருப்பதாக ஒரு பிரமை.

இரு வினாடிகளுக்கு முன்னால் யாருடைய வருகைக்காக இத்தனை தூரம் குதூகலத்தில் ஆழ்ந்து, பெருமூச்சு வாங்க ஓடோடி வந்தேனோ, அதே உருவம் என் முன்னால் வந்துகொண்டிருக்கும் போது அத்தனை இன்பங்களையும் இழந்து அதற்கு மாறாக, அதனைப் பார்ப்பதற்குக் கூட நாதியற்று கலங்கி நிற்கும் ஒரு வித்திர நிலை ஏற்பட்டுவிட்டது.

கண்கள் நோக்கக் கூசி - இல்லை, சக்தியற்று அடம்பிடிக்கின்றன. தலை கீழே கவிழ்ந்து எதனையோ பார்க்க முயல்கிறது. விடாப்பிடியாக நிறுத்திவைத்த போதிலும் பறித்துக்கொண்டு தானாகத் தாழ்ந்து கொள்வதையே சுகமென நாடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலெங்கும் ஒரே படபடப்பு, வியர்வை.

தங்க நிறமான ஒளிப்பிளம்பு விரைந்து வந்து விட்டது. முன்னால் என்னைக் கடந்து அப்பால் செல்லும் அந்தக் கடைசி நிமிடமும் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

ஒருக்களித்து மெதுவாகத் திரும்பிப் பார்க்கிறேன்.

கார்மேகக் கூடலாகக் கனத்து, தலையில் அத்திவாரமிட்டுக் கீழே தொங்கிக் கொண்டிருக்கும் அந்த வாழைநார்ச் சடையை ஊடுருவிச் சல்லடையாக்கிக் கொண்டிருக்கிறது என் வலிமை பொருந்திய பார்வைக் கதிர்கள்.

கையில் கிடைத்துவிட்ட ஆப்பிள் பழத்தை ஆசையோடு நோக்கும் பான்மையில் என் மன உணர்வுகள் வெளிப்பட்டு உள்ளூர ஏதேதோ நர்த்தனம் புரிந்து கொண்டிருக்கின்றன.

தொலைவில் சென்று மங்கலாகிக் கொண்டிருக்கும் அந்த ஓவியத்தை மீண்டுமொருமுறை பார்த்துவிடும் ஆவல்.

அழகான கூரிய நாசி, சிறிய மலர்ந்த மோவாய், உருண்டு திரண்ட கன்னங்கள், ஊசிமுனை வாயும் மாதுளம்பருப்பு வெண் பற்களும், நான்காம் பிறை நிலவின் வளை நெற்றி, குவிந்து சரிந்த கன்னங்களின் ஓரமாகத் தவழ்ந்து அலைகளாக இருபுறமும் மேலெழுந்து தாவும் சுருண்ட கேசம், கூரிய விறைப்பான பார்வை! கண்களை மூடியபோது நான் கண்ட காட்சிகள் இவைகளே. எங்கும் அதே உருவம். அவளுருவம்.

இதயத்தில் ஏதோ மின்சாரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது. அந்த முழுமதி என் அகக் கண்களை நிறைத்துவிட்ட நீங்கா ஓவியமாக நிலைத்துவிட்டது.

உதடுகள் மெல்ல வார்த்தைகளை உச்சாடனம் செய்கின்றன. எல்லாம் திட்டமிட்டபடி தான். ஆயினும் ஓசைகள் வெளிவரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளுக்கு நாள் அந்தப் பெருநிலவு பூரணச் சந்திரனாகத் தோன்றி நிரந்தர ஒளி பரப்பிக்கொண்டு எண்ண அலைகளைக் கொந்தளிக்க விட்டு, இன்றுவரை சலனமின்றி இருந்த என் இதய ஆழியிலே புயலைக் கிளப்பிவிட்டிருந்தது.

படிப்பறையில் உட்கார்ந்து அன்றைய தினசரியைப் புரட்டுகின்றேன். அதே முகம் என்னைப் பார்த்து முறுவலிக்கிறது. சிரிக்க முயலுகிறேன் சிரிப்பு வர மறுக்கிறது.

ஓடி மறைந்து விட்டது. ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டே இருக்கிறேன். மீண்டும் ஒரு முறை பார்த்துவிடும் ஆவல்.

கிணற்றடிக்குச் செல்லுகிறேன். தண்ணீரை மொண்டு வாளியைக் கையில் எடுத்த போது நீரின் மீது படிந்திருந்த அந்த விம்பம் என்னுடையதல்ல. முன்னர் பார்த்த அதே மோகன வதனம் என்னைப் பார்த்துக் குறுநகை கழிக்கிறதா? எட்டி அப்படியே அணைத்துவிடும் ஆவல் எனக்கு.

ஆ! இரத்தம் பீறிட்டு ஓடுகிறது. வாளியில் தொங்கிநிற்கும் கொழு கையைப் பதம் பார்த்துவிடுகிறது.

கண்ணாடி முன்னாடி வந்து நிற்கிறேன். அந்தக் காரிகையின் சிங்காரவதனம் என்னை உற்று நோக்குகிறது. பார்வையில் குறும்பு. எட்டிக் கையை பற்றுகிறேன் நாணி விலகி ஓடுகிறாள்.

"தடார்" நிலத்தில் கண்ணாடி விழுந்து சிதறுகிறது. சாப்பாட்டு மேசையில் வைக்கப்பட்டிருந்த எவர்சில்வர் பாத்திரத்தில் தெரிகிற உருவம். ஆ! அதுகூட அவளேதான்.

சலனமற்றிருந்த என் நெஞ்சக் கோயிலிலே தேவதையாகப் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்த முருகன் எங்கோ மறைந்துவிட்டான். பிரதியீடாக மகாலெட்சுமியின் இந்த மகோன்னத விக்கிரகத்தைப் பூசிக்க வேண்டியிருப்பதும் அவள் இட்ட கட்டளைதானோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசையின் வழியில் அலைந்து கொண்டிருந்த எனக்கு அவலம் எதுவும் புரியவில்லை. வெட்கம், வேதனை சோபிக்கவில்லை. எங்கிருந்தோ ஒருவித அசுரபலமும், உற்சாகமும் பிறந்து என்னைக் குதூகலத்தில் ஆழ்த்தி எப்படி அவளை அடைவதென்ற தீவிர ஆராய்ச்சியையே முறுக்கிவிட்டுக் கொண்டிருக்கிறது.

போயும் போயும் இதற்கு இப்படி யோசிப்பானேன்? அவள் யார்? பெயரென்ன? எங்கிருக்கிறாள் - இந்த விபரங்களையல்லவா முதலில் சேகரித்திருக்க வேண்டும்? அதைவிடுத்து.....

உண்மைதான். நான் ஒரு சுத்த அசடேதான். இவற்றைத் தெரிந்து கொள்வதுதான் எனது முதல் வேலை. ஆனால் எப்படி அறிவது?

இது என்ன கேள்வி. தினமும் சந்திக்கும் உன்னால் அவளிடமே கேட்டுத் தெரிந்து கொள்வதற்கென்ன?

என்ன! நானே கேட்டுவிடுவதா? ஐயோ! வேண்டவே வேண்டாம். இந்தச் சோலிகள்.

"கேட்டால் என்ன வந்துவிடப் போகிறது? முயன்று பார்ப்பது தானே?"

"எதிர்பாராத விதமாக......?"

"எதிர்பாராத விதம் என்றால்......?"

"ஒன்றுமில்லை."

"பின்பு ஏன் பயப்பட்டுச் சாகிறாய்?"

"பயப்படவுமில்லை, சாகவுமில்லை. விபரீதங்கள் ஏதும் நடந்துவிடுமோ என்று....."

"சீ! நீயும் ஒரு ஆண்பிள்ளையா? பேதைப் பெண்ணொ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருத்தியைச் சந்தித்து இரண்டு வார்த்தை பேசுவதற்கே இப்படி அஞ்சி நடுங்கும் நீயாவது காதலிப்பதாவது. விட்டுத் தள்ளும்."

"சத்தம் போட்டு ஊரைக் கூட்டிவிட்டாளென்றால்....?"

"அட பாவமே! இதற்காகவா இப்படிப் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கிறாய்?" நல்ல ஆள் ஐயா நீர். காதல் என்பது தேன்கூடு. அதைக் கட்டுவதென்றால் பெரும்பாடுதான். வெட்கம் தானே காதலுக்கு முதல் எதிரி. எதற்கும் துணிவு வேண்டுமடா துணிவு.

"முறைத்துக் கூக்குரலிட்டுவிட்டால்.....? யார் அந்தப் பெண்ணா? இதைத்தானே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு அழுகிறாய். சீச்சீ நீ திருந்தவே இடமில்லை. புத்தி சாதுரியமாக நடந்து கொள்ளத் தெரியாத உனக்கெல்லாம் இது சரிவராதுதான்."

ஐயோ! எனக்கு மூளையே குழம்பிப் போய்விட்டது. இப்போது கடைசியாக ஒன்று கேட்கிறேன். நீ என்னை என்னதான் செய்யச் சொல்கிறாய்?

அதுதான் அப்பு துணிந்து நில். தொடர்ந்து செல். தோல்வி கிடையாது என்கிறேன். சரியா?

அதிகாலையில் எழுந்து நித்திய நைமித்திய கருமங்களை அவசர அவசரமாக முடித்துக்கொண்டு வழக்கத்திற்கு சுமார் பத்து நிமிடங்கள் முன்னதாகவே புறப்பட்டும் விட்டேன். மனதில் ஒருவித கலக்கநிலை. பதட்டமும்கூட.

பாதை நெளிந்து, பாலத்தினுள் புகுந்தும் வெளிவந்தும் விட்டது. அவளின் ஒளிவீசும் அந்தக் காந்தக் கண்களைக் காணமுடியவில்லை. ஏக்கப் பெரு மூச்சு விட்டுக்கொண்டு ஏகாந்த விரக்தியுடன் தொடர்கிறேன்.

"சடார்" என்ற சத்தம் கேட்டுத் தலையைச் சற்றுச் சாய்த்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிச்சென்ற அந்தத் தீங்கனி என் நேரில் பட்டதுபோல் தகரக் கேற்றைத் தள்ளிக்கொண்டு 23ம் நம்பர் படலையைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தது என் வட்டவடிவழகு வெண்ணிலா.

உடம்பெல்லாம் புல்லரிக்க, உணர்ச்சிகள் தேம்பி நின்று பரிதவிக்க, கால்கள் நடைதளர்ந்து ஒருக்களிக்க, என் நா மட்டும் எதையோ சற்றுத் தாழ்ந்த தொனியில் அவளுக்கு அர்ச்சனை செய்துகொண்டிருந்தது.

வழி வழியே வாய்க்குள் மனனம் செய்துகொண்டு வந்திருந்த கிளிக்கண்ணியேயானாலும் அந்த இக்கட்டான நேரத்தில் உரிய அட்சரங்களோடு அதனை ஒப்புவிக்க முடியாமல் போய்விட்டது. என் கையாலாகாத் தனத்தை நொந்து கொண்டாலும், திரும்பவும் அச்சீர்வரிசையையே மெருகூட்டி, "குட் மோனிங் மிஸ்" என்றது என் வாய் பவ்வியமாக.

எதையும் சட்டைபண்ணாத அந்த உருவம் விறு விறுத்து நடந்து கொண்டேயிருந்தது. என் முகத்தில் அசடு வழிந்திருக்க வேண்டும்.

நல்லவேளை "யாரும் இல்லை" என்ற திருப்தியுடன் வந்து விட்டேன்.

தூக்கம் என் கண்களைத் தழுவாது நின்றது. என்னவோ விரைந்து என் நெஞ்சை நிறைத்துக் கொண்டிருந்தது.

கட்டிலில் படுத்துப் புரண்டுகொண்டிருந்த போது திட்டங்களும், அவற்றை செயல்படுத்தும் நடைமுறைகளும், அவ்வப்போது தோன்றி அங்கீகாரம் இன்றி மறைந்து கொண்டிருந்தன. மாற்றுத் திட்டங்கள் எதுவும் மனதிற்கிதமளிக்கவில்லை. அந்த முடிவைச் சீர்தூக்கிப் பார்த்த போது அது தகுந்ததென்ற உள்ளுணர்வொன்று தேனோடு கலந்து பார்த்தேன்.

தெவிட்டாத தேன் தமிழ்ச் சொற்கூட்டங்கள் எல்லாம் விரைந்து அலையாகப் பாய்ந்து வந்துகொண்டிருந்தன. அவற்றின் சுவையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருகியபடியே என் உள்ளம் சொர்க்கத்தில் ஒரு கணம் மிதந்து கொண்டிருந்தது. அந்த நடுநிசி நேரத்திலேயே எழுந்து என் படிப்பறையை நோக்கி இருட்டில் நடந்துகொண்டிருந்தேன்.

காலைப் பொழுதினிலே - கனிதரும்
பாலத் தெருவினிலே

கோலத் திருமகளைக் - காணநெஞ்சு
தாவிக் குதிக்குதடி

நீலப் புடவையிலே அவள் வரும்
நேர்த்தியை யாரறிவர்

காலமோ கை கொடுத்தால் - காணும் நல்
பாக்கியம் நான் பெறுவேன்.

வட்ட வடிவழகு - வாஞ்சை நிறை
உத்தமப் பெண்ணணங்கு

கிட்ட வரும்போது - ஏனோ என்னை
முற்றும் மறக்கிறேன் நான்

பேசிப் பழகவென்று - தினமுந்தான்
ஏரிக் கரையடியே

நேசக் கரம்விரித்தால் - நிமிர்ந்தென்னை
நோக்க மறுப்பதென்ன?

வந்தனம் கூறி நின்றேன் - சில நாள்
வாடி வளைந்து நொந்தேன்

இன்றும் அவள் போக்கு - என்னை மிகு
ஏக்கத்தில் ஆழ்த்துதம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையில் உள்ளவற்றைச் - சிறிதும்
துஞ்சாமல் கூறிவிட்டேன்

வஞ்சி அவள் மீது - வளருமென்
காதலை யாரறிவர்

பாடலை எழுதிப் பக்குவமாக அவள் முகவரிக்கு அனுப்பிவைத்து விட்டேன். அவள் நினைவு எழும்போதெல்லாம் அந்தக் கவிதை எனக்குத் தேனாக இனித்தது.

அவள் நினைவால் மிகுந்த துன்ப உணர்வுகளை ஆற்றிச் சில பொழுதை இன்பமாகக் கழிக்க என்னை நானே ஏமாற்றிக் கொள்கிறேனா? திரும்பத் திரும்ப என்வாய் முணுமுணுத்துக் கொள்கிறது.

பாலத் தெருவினிலே - கனிதரும்
காலைப் பொழுதினிலே....

கனவல்ல, கற்பனையுமல்ல. கையில் இருந்த புத்தகத்தில் கண்கள் லயித்திருக்கின்றன. மணி மணியான எழுத்தோவியம் அது. கடிதத்தின் உருவிலமையாத கடிதம். மேல் விலாசம் இல்லை. விளி கோள் இல்லை. வெறும் தட்டையாக எழுதப்பட்டு இருக்கிறது.

கம்பனும் பாரதியும் மட்டும் தமிழகத்தில் தோன்றி மறையவில்லை. நம்முடன் வாழ்ந்து, நம்முடன் பழகி நம்மையும் அவர்களுடன் சேர்த்து மகிழவைக்கின்ற கவிமணிகள் எத்தனை? எத்தனை? பேர்கள்.

சீதையைக் கம்பன் புகழ்ந்திருக்கலாம். அது காவியமாகத்தான் இருக்க முடியும். காதலன் காதலியைப் புகழ்ந்து பாடுவதிலும் அந்தப் புகழ்ச்சியைக் காதலியே விரும்பி படிப்பதிலும் தான் எத்தனை சிறப்பு, வனப்பு, பொருள்நயம், கவிநயம்?

கவிதையைப் படித்த போது உங்கள் மானசீக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரசிகையாகிவிட்டேன். மேலும் மேலும் உங்கள் கவிதை வளம் பெருகட்டும். அவற்றைப் படித்து மகிழும் வாய்ப்பை பெறவேண்டிய ஏழை எனது தாழ்மையான விண்ணப்பம்.

இப்படிக்கு
பிரமிளா

கனவுலகில் கவலையின்றி இருந்த என்னை படலையில் கேட்ட சைக்கிள் மணி திடுக்கிட்டு எழச் செய்துவிட்டது. மகிழ்ச்சி கரைபுரண்டோட எழுந்தோடிச் சென்றேன்.

தபால் காரனுக்குப் பதில் பத்திரிகைப் பையன் எனது கைகளில் ஒரு இதழை உருவி எறிந்துவிட்டு என்னைப் பாராமலேயே வேகமாக ஓடிக்கொண்டிருந்தான்.

ஒரு வாரம் கடந்து போய்விட்டது. அவளிடமிருந்து பதில் கடிதம் வராதென்பதில் அழுத்தம் வலுத்தது. என் நெஞ்சிலோ ஆசைத் தீ கொழுந்துவிட்டெரியத் தொடங்கிவிட்டது. நாளுக்கு நாள் அவள் சூடிமுடித்துச் சிங்காரித்து வரும் மோகனக் கோலம் என்னை என்னவோ செய்துகொண்டிருந்தது.

ஆனாலும் அவளோடு நேராகக் கதைக்க எங்கோ ஒரு மூலையில் மண்டிக்கிடந்த பயம் அவ்வப்போது தலையெடுப்பதும், பின்பு மறைந்து விடுவதுமாக என்னை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

சோர்வுடன் முடங்கிக் கிடந்தபோது சோதிடன் போல் வந்து சேர்ந்தான் என் நண்பன். என் நாளாந்த நடவடிக்கைகளை ஊகித்தே பலன்கூறத் தலைப்பட்டுவிட்ட அவன் என் மனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒளிவு மறைவுகளை எல்லாம் அப்படியே அப்பட்டமாக மதிநுட்பத்துடன் கூறியதைக் கேட்டு உண்மையிலேயே வியந்து விட்டேன்.

சில ஆலோசனைகளையும் நான் கேட்காமலேயே அவன் எனக்குக் கூறிக்கொண்டிருந்தான். கவனிக்காதவன் போல் இருந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் பொதிந்து கிடந்த அர்த்தமும் அனுபவமும் நிறைந்த ஆலோசனைகளை மனப் பூர்வமாக ஏற்றுக்கொண்டிருந்தேன்.

படலையின் சரி நேர் எதிராக இல்லாமல் சற்று ஒதுங்கி பாதையின் மறுகரையில் வசதியாக நின்றுகொண்டிருக்கிறேன். போவோர் வருவோர் மனத்தில் சந்தேகம் எழாமல் மெல்ல மெல்ல அங்குமிங்குமாக நடப்பதும் திரும்புவதுமாகப் பராக்குக் காட்டிக் கொண்டே இருக்கிறேன். யுக யுகாந்திரமாகப் பொழுது கரையாமல் அப்படியே சேமித்து நிற்பதைப் பார்க்க வயிறு எரிந்தது.

அச்சத்தால் மனம் நிம்மதியிழந்து அலைந்தது. கால்கள் நடைமெலிந்து சோர்வினால் இயங்காதொழிந்தன. விழிகள் பரக்கப்பரக்க அவள் வரவையே எதிர்நோக்கி இமைக்காது "எப்படியாவது அவளுடன் இன்று பேச்சுக்கொடுத்து வாயைக் கிளறுவது" என்ற இறுமாப்புடன் நின்று கொண்டிருந்தேன்.

ஆமாம், மறந்தே போய்விட்டதே! பேசவேண்டிய முதல் வார்த்தைதான் என்ன? அதைத் தெரிந்து கொள்ளாமல் இப்படி நின்றுகொண்டிருக்கிறேனே. இந்தப் பக்கம் ஒரு பையன் போய்க்கொண்டிருப்பதைப் பார்த்தீங்களா மிஸ்? இதென்ன கேள்வி? அவளோ அப்போதுதான் கதவைத் திறப்பாள். அதற்குள் இப்படி ஒரு விதண்டாவாதமா? பைத்தியம் என்றல்லவா நினைக்கப் போகிறாள்? கற்பனை கொஞ்சம் கூட இல்லாத அசடாக இருக்கிறேனே?

பஸ் கோல்ட் எங்கே இருக்கிறது என்று கேட்டுவிடலாமோ? பஸ்சே ஓடாத பாதையில் பஸ் கோல்டை கேட்கலாமா? சீச்சீ இவை ஒன்றுமே சரியில்லை.

வேறு என்னதான் கேட்பது?

யோசித்துத்தான் பார்ப்போமே.....

இப்படிக் கேட்டுப் பார்த்தால் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி?

மயக்கமாக இருக்கிறது. கொஞ்சம் தண்ணீர் தருகிறீர்களா மிஸ்.

எக்சலன்ற் ஐடியா! இந்தப் பக்கமாக குழாயேதும் இருக்கிறதா என்று பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஒத்திகை பார்த்து முடிந்துவிட்டது. படலைச் சத்தம் கிரீச்சிடுகிறது.

மிஸ்..... வந்து....... வந்து.......

என்ன......? அவள் இதழில் புன்னகை தவழ்கிறது.

வந்து கொஞ்சம் எனக்கு....... ஒன்றுமே தெரியவில்லை.......

ஆஷ்....... ர்........ ர்......... தடார்.

கண்களைத் திறந்து பார்க்கிறேன். உடம்புக்கு இப்போது எப்படி இருக்கிறது? இன்முகம் காட்டிச் சிரிக்கின்ற பாவனையில் கேட்கின்றாள். பதிலுக்குக் காத்திருக்கவில்லை. எழுந்து உள்ளே நடக்கின்றாள். சுற்றி வளைத்து என் பார்வை ஊடுருவுகிறது. அது ஒரு புதிய உலகமாகத் தென்படுகிறது. அந்தச் சிறிய வீட்டில் அவள் மட்டும் தான் வசிக்கிறாளா? யாருடைய நடமாட்டக் குறியையும் காணவில்லையே.

வயது சென்ற ஒருவர் மூக்குக் கண்ணாடியோடு அமர்ந்திருக்கிறார். அவர் யார்? அவளுடைய தகப்பனாராக இருக்கலாமா?

விடை தெரியாத அந்த நேரத்தில், "இந்தப் பானத்தைக் குடியுங்கள்" என்று ஆதரவுடன் நீட்டிய கரத்திலிருந்த கோப்பையை மட்டும் பெற்றுக்கொண்டு ஏக்கமாகப் பார்க்கிறேன்.

அந்தக் கணநேரத்தில் என் இதய மாளிகையில் மின்னி மறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்த்துடிப்பு நிறைந்த சோபன கீதங்கள் எத்தனை எத்தனையோ! அவள் பார்வையில் நூதனம். என் விபரம் கேட்கிறாள். நிஜமாகவே அவளுக்கு இதற்கு முன்பு என்னைத் தெரியாது தானா?

என்னால் நம்பவே முடியவில்லை. யார் நீங்கள்? உங்கள் பெயரென்ன? மயக்கம் போட்டு விழுந்தீர்களே. காலையில் சாப்பிடவில்லையா?

துன்பம் படர்ந்த சிரிப்புத்தான் அதற்குப் பதிலாகக் கிடைத்திருக்க வேண்டும். என் சிந்தனை எங்கோ போய் நின்றுகொண்டிருக்கிறது.

எனது கடிதம், எனது கவிதை நேரில் கதைக்க முயன்றது. இத்தனையிலும் அவளுக்கு என்னை ஞாபகமே இல்லையா? அப்போ என்னை இவள்.....?

இவள் உண்மையை மறைக்கிறாள். எதற்காக மறைக்க வேண்டும்.

காதல் என்பது தேன்கூடு. கட்டுவதென்றால் பெரும்பாடு.

அவள் கேட்ட விபரங்களைத் தெரிவிக்காமலேயே மனப்பாரத்துடன் வெளியேறிக்கொண்டு இருக்கிறேன். திரும்பிப் பார்க்கிறேன். கடைசிமுறையாக "நன்றி" என்று ஒரு வார்த்தை மட்டும் கூறிவிடுவதற்காகத்தான்.

அவள் நின்றுகொண்டிருந்த அந்தக் கதவோரம் வெறிச்சோடிக் கிடக்கிறது. விறுவிறுத்து நடக்கிறேன், விதியை நொந்து கொண்டு. வழியில் மழை தூறிக்கொண்டிருக்கிறது. நனைந்து நடந்து கொண்டிக்கையிலே ஒரு இனம் தெரியாத இயக்க உணர்வு. அந்த உணர்வுகளிடையே சோகம் கலந்த குதூகலராகம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

சரமாரியாகச் "சோ" வெனக் கொட்டியது ஒரு மழை. ஒதுங்காமல் நிமிர்ந்து நின்றேன். உள்ளம் அதனால் குளிர்ந்தது அந்த உவகையில் மிதந்துகொண்டே என்வாய் அரற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ கற்பனையை
எண்ணி எண்ணி நெஞ்சுக்குள்ளே
ஏங்குகிறேன் எதுவென்று
ஏன் சிரித்தாய் ஏன் சிரித்தாய்?

குங்குமச் சிமிழென வாய்
குறுநகை தெளிக்கையிலே
என்னிரு கண்களிலும்
ஏக்கம் பிறப்பதென்ன?

மங்கையரின் இதழ் பிளந்து
மலர்ந்து வரும் குறுநகையில்
மயங்கிடாத ஆடவர்கள்
மன்றதனில் யாருமுண்டோ?

சீர்வரிசைப் பல் நிறைத்து
சிருங்கார வனப்பிழைத்த
சிகையழகுக் காரிகையே - நின்
சிரிப்புக்குப் பொருளென்ன?

நேரில் வரும் வழியில்
நிமிர்ந்தென்னைப் பார்த்துப் பின்
நாரி அசைந்திடவே
நாணிச் சிரித்தனை நீ

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06. இப்ப காலம் மாறிப் போச்சி

**வா**னம் எங்கும் நன்றாகக் கறுத்துக் கிடந்தது. மார்கழி மாத மழை விடாமல் பெய்து கொண்டே இருந்தது. பகல் மூன்று மணிதான் இருக்கும். ஆனாலும் எங்கும் கும்மிருட்டாகவே தெரிந்தது!

உடுத்திருந்த மருதமுனைக் கைத்தறிச் சாரத்தை அவிழ்த்து தலையை மூடி முக்காடிட்டபடி குடிசைக்கு வெளியே வந்து எட்டிப் பார்த்த கந்தப்பரின் வாய் முணுமுணுத்தது.

“வாடை மாறி, கொண்டா வாடையாக அடிக்கிறது. மழை ரெண்டு மூணு நாளைக்கு இன்னும் தொடர்ந்து பெய்யும் தான், போல”

மழைக் குளிரினால் சிலிர்த்தெழுந்த மேனியை இறுக்கப் போர்த்துக் கொண்டு திண்ணைப் படியில் போடப்பட்டிருந்த சணல் சாக்கில் கால் ஈரத்தைத் தட்டி விட்டு மீண்டும் உள்ளே புகுந்து கதவோரமாக கவிழ்த்து மூடப்பட்டிருந்த முதிரை உரல் மீது வசதியாக உட்கார்ந்து கொள்கிறார் கந்தப்பர்.

காது மடலில் செருகி வைத்திருந்த குறள் சுருட்டை எடுத்து, கைவிரல்களால் பதம் கூட்டிவிட்டு அருகில் எரிந்து கொண்டிருந்த மண்எண்ணெய் விளக்கில் ஈர்க்கு ஒன்றினால் நெருப்பைக் கொழுத்தி சுருட்டை மூட்டிக் கொள்கிறார்.

வாயினால் உறுஞ்சி ஒரு ‘தம்’ இழுத்து இதம் பார்த்தபடியே அவரது வாய்புகையைக் கக்கிவிட அந்தப்புகை மண்டலத்தின் ஊடே கந்தப்பரின் சிந்தனையும் சிலாக்கியமாக வளைந்து விரிந்து உலா வந்துகொண்டிருந்தது!

உலகத்தில் நாளாந்தம் மாறுதல்கள் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. அந்த மாற்றங்களுக்கு இசைவாக மனித சமுதாயமும் தன்னை மாற்றியமைத்துக் கொண்டுதான் இருக்கின்றது. ஐம்பது வருடங்களுக்கு முன்னால் இருந்ததற்கும் இப்போது இருப்பதற்கும் இடையில்தான் எத்தனை வித்தியாசங்கள்! கந்தப்பரின் வாழ்க்கையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை எப்படி எல்லாம் ஊடுருவி மாற்றத்தைக் கொடுத்து விட்டன!

மூத்தவன் அரசாங்கப் பாடசாலை ஒன்றிலே ஆசிரியராக வேலை பார்க்கிறான். இளையவன் கண்டியிலே பல்கலைக்கழகத்தில் வைத்திய கல்வியை தொடருகிறான். பெண் பிள்ளைகள் இருவருக்கும் விவாகமாகி விட்டன. அவர்களது கணவன்மாரும் அரசாங்கத் துறைகளில் ஏதோ பணிபுரிகிறார்கள் தான். பேரப்பிள்ளைகளை மனைவி பார்த்து மேய்த்துவர, கந்தப்பர் சும்மா பொழுதை அவம் போக்காமல் ஆற்றங்கரையில் துறைத்தோணிமால் ஒன்று போட்டுக்கொண்டு சிறு வருமானத்தைச் சம்பாதித்து வருகிறார். இது அவருக்கு தொழில் என்று இல்லை; பொழுதுபோக்கு. காற்றும் மழையும் விடாமல் பெய்துவருவதால் இன்று தொழிலுக்குபோக யாரும் வரவில்லை. கந்தப்பரும் அவரது பக்கத்து தோணிகளும் ஆளாளைப் பார்த்தபடி மௌன பாஷை பேசிக் கொண்டிருக்கின்றனர்!

அப்போது அவர் சின்னப் பொடியன். வயது பன்னிரண்டு தான் இருக்கும். அப்பா சின்னத்தம்பியரோடு "பண்" ணையும் அள்ளித் தோளில் போட்டுக் கொண்டும் உறியில் போடப்பட்ட தண்ணீர்ச் சோற்றுப் பானையை கையில் ஏந்திக்கொண்டும் வீட்டிலிருந்து இருவரும் வெளிக்கிட்டு முன்னும் பின்னுமாக தானாச்சீனாவின் ஒழுங்கையால் நுளையும் போது மாலை ஆறுமணி. நாலு நடை எட்டி நடந்தால் பரமநயினார் கோயிலடித் துறை தெரியும். ஆற்றங்கரையை அடையும்போது கதிரவனின் பொன்னிறக் கதிர்கள் உவட்டுகளால் உயர்ந்து பணிந்து எழும் நீரலைகள் மீது பட்டு மின்னி மிளிரும் ஒளிக்காவியத்தை வியந்து நிற்கும் வேளையில்,

"டேய், கந்தையா! என்னடா அங்க புதினம் பாத்தித்து நிக்கிறா? வெள்ளி கிளம்ப முன்ன சிறுவா முனைக்கு போயிர வேணும் எண்டு நான் அவதிப்படுறன். நீ என்னடா எண்டா....." என்ற குரல் கேட்டதோ இல்லையோ, இடியின் முன் வெளியாகும் மின்னல் சற்றுத் தாமதமாகியே பூமியை வந்து சேர்வது போல வைரம் பாய்ந்த விறைத்துப் போய் இருக்கும் சின்னத்தம்பியருடைய கைகளும் கந்தப்பருடைய உச்சித் தலையில் பலமாக விழுந்து பதம்பார்க்க விழுந்த குட்டை வாங்கிக் கொண்டு கந்தப்பர் சிணுங்கி அழுதபோதும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய்........ உனக்கு நான் இப்ப என்னடா சொல்லுறன்?" என்று கேட்டுக் கொண்டு மறுபடியும் தந்தையார் பார்வையால் அவரை பயமுறுத்த....... அந்த அதட்டலின் உந்தலினால் கொல்லாவுடன் 'விசாள்' வைத்துக் கட்டப்பட்ட மா மரத்தோணியில் வலையையும் உறியையும் வெற்றிலைக் குட்டானையும் ஏற்றிக் கொண்டு தோணியை ஆற்றில் தள்ளி விடுகிறார் அவர்.

தப்புத் தண்ணீரில் பாய்ந்து ஓடிச்சென்று தோணியின் "அணியத்தில்" ஏறி கந்தப்பர் உட்கார்ந்து கொள்ள, "பிறகத்தி" ல் அவரது தகப்பனார் இருந்து கொண்டு சுக்கான் பிடிக்க, வாடைக்காற்றைக் கிழித்துக்கொண்டு வேடன் கரையை நோக்கித் தோணி பறந்து கொண்டிருந்தது.

கந்தப்பர் ஆற்றுத் தொழிலிலே பேர் எடுத்தவர். சாதாரண தொழிலாளி ஒருவர் நாளொன்றுக்கு உழைப்பதிலும் பார்க்க அவரின் வருமானம் எப்போதும் இரண்டு மடங்குக்கு மேல் தான் இருக்கும். அதுமட்டுமல்ல, "பாய்ந்து வீசுவ" திலும் அவருக்கு நிகராக இன்னும் எவரும் இந்த ஆரையம்பதியிலே தோன்றவில்லை. இதனால் "ஆற்று மாதா" என்ற பட்டத்தை மக்கள் இட்டு அழைத்து வருவது கூட அவருக்குப் பெருமையாக இருந்தது.

பின் நிலவு கிளம்ப முதல் களத்துக்கு அப்பால் சிறுவாமுனை ஆத்துக்குப் போய்ச் சேர்ந்து இரண்டு "பாடு" போட்டால் போதும்; ஒட்டி, ஓரா, சள்ளல், கெழுத்தி, செங்கண் மணல, கிளக்கன், திரளி, கொடுவா, காரல், முரல், கொய், மட்டுறால், திருக்க, நண்டு எண்டு இப்பிடிக் கூட்டமா வந்து விழும் வலையில. அப்படியே வளைஞ்சி ஏத்திற்று தோணிய மாரி மூலைக்குள்ளால உட்டுத் தொடுத்து வந்தா; அப்பதான் ஊத்துக்குப் புறப்பட்ட தோணி எல்லாம் அணியா வரும் எதிர!

எழுவான் வெளிக்க ஒரு பொழுது முன்ன தலக்கோழி கூவ முந்தி தோணிய ஊரப்பார்க்க விட்டு வலிச்சு வருவம்.

அப்பெல்லாம் என்ன? ஒரு பெரிய ஓரா ஒட்டி ஒரு சுளகு மட்டுல இரிக்கும்; மூணு சதம் தானே! பெரிய செங்கண் மணல ஒரு முளத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல இருக்கும்; ஒன்று ஆறு சதம், ஏழு சதம். ஐம்பது சதம் உழைச்சா அது பெரிய காசு, அரிசி ஒரு கொத்து பன்னெண்டு சதம் தானே?

கொண்டுவந்ததில பார்த்து பாரணிக்கமாக நாங்க எடுத்துப் போட்டு அப்படியே தோணியோட பேசிக் குடுப்பம். அக்கரப்பத்தான் வந்தானென்டா காசப் பத்திப் பார்க்க மாட்டான். நல்ல விலைக்கு குடுக்கலாம்.

மணலய வெட்டி ஒரு பொரியல். ஓரா ஒட்டிய ஒரு குழம்பும் வெச்சி கார இல ஆணத்தோட கரவாகில இருந்து கொண்டுவந்த கைக்குத்தரிசிச் சோத்தோட மத்தியானம் சாப்பிட்டுவிட்டு ஒரு கண்ணுக்கு தூங்கி பின்னேரமா பொழுது இப்படி நிக்கக்குள்ள (நாலு மணிக்கு) எழும்புவம். அப்பா வலய கந்தல் பார்த்து பொத்திக் கொண்டு இரிப்பாரு, வெத்தில வட்டாவோட. சிலநேரம் பக்கத்து ஊட்டுச் சின்னானும் வந்து அவரோட முசுப்பாத்தியா கதச்சித்து இருப்பான் வெத்தில போட்டுப் போட்டு.

புணான, வெலிகந்தப் பக்கம் இருந்து அந்த நாள்ல சடச்சணல் எல்லாம் லொறியில சிங்கள ஆக்கள் கொண்டு வருவாங்க கட்டுக் கட்டா. அப்பெல்லாம் இப்பிடிப் பிரச்சின இல்லையே. சிங்கள ஆக்கள் வந்தா நல்லா ஒரு கிழம இஞ்ச நிண்டு, பம்மல் எல்லாம் தீர்ந்து சில்லற முடிச்ச புறகுதான் ஊருக்குப் போவானுகள்.

அப்ப கோயிலுக்கு முன்னால செட்டியார் கட வைச்சிருந்தவர். கொச்சிக்கா, சரக்கு சமான் ஒரு சதம், தேங்காச் சொட்டு ரெண்டு துட்டு எண்டு கேட்டா அவரு ஒரு கறிக்கு அளவா தருவாரு. ஏழை எண்டா மனிசன் காசும் வாங்காமக் குடுக்கிறவர்தான். குடல் கொதிச்ச மனிசன்.

சணல்க் கம்ப ஆத்தில ஊறப்போட்டு அடிச்சா கம்பு களரும். பட்டைய அளவாக நீத்தி பஞ்சாக்கி காய வெச்சி கத்த கத்தயா தெரிஞ்சி பன மட்டையில வெச்சிக்கட்டி வடிக்கல் கொண்டு நூல் முறுக்கிறது தான் எங்கட பொழுது போக்கு. ஒரு பந்து நூல் முறுக்கிக் குடுத்தா கூலி இரண்டு சதம்!

இப்ப நைலோன் வல வருகிறது. அப்ப இதெல்லாம் ஏது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கட அப்பா கொய் வல, பாட்டு வல, சிறா வல மூணும் வெச்சி இருந்தவர். றால் வல மட்டும் அவரிட்ட இல்ல.

சில நேரம் சும்மா முசுப்பாத்தியா தரவளிப் பொடியனுகள் சேர்ந்து கடற்கரைக்கு அல்லது ஆத்தங்கரைக்குப் போவம். ஆத்தங்கரையில வளர்ந்து போய் நிக்கிற பெரிய பூவரச மரத்தில உச்சுக்கு ஏறி அங்க இருந்து வடிக்கல்ல உட்டு நூல் முறுக்குவம்.

ஆடி மாதம் கச்சான் அடிக்கத் தொடங்கும். அதோட பறட்ட, ஒட்டிக் குஞ்சு எல்லாம் அப்பிடியே காத்துக்கு கரை ஒதுங்கும். வெள்றால் கிளையா அடையும். சின்னப் புள்ளயள் தென்னோலய வளைச்சி றால் கட்டுவானுகள். அப்ப ஆறு முழுவதும் தீர்த்தக்கர மாதிரித்தான் சனம்.

தல மழையோட றால் எல்லாம் ஓடி ஒளிச்சிரும். மாரி அட மழை பெய்தா அங்கஞ்ச இருந்தெல்லாம் காட்டுத் தண்ணி சேர்ந்து ஆறு பெருக்கெடுக்கும். முகத்துவாரம் அடைபட்டுக் கிடந்தா தண்ணி ஓடாது தானே? அப்ப ஆத்தில அறுநீர் ஓட்டம். ஆகவும் தண்ணி பெருக்கெடுத்தாத்தான் அரசாங்கத்தால முகத்துவாரத்த வெட்டித் திறக்கச் சொல்லி கட்டள போடுவாங்க. முகத்துவாரம் வெட்டினா வெண்ணச் சுறா, வேளா, திருக்க, பாலமீன் எல்லாம் புடிபடும்.

ஆவணி மாதம் புறந்தா ஊரெல்லாம் கிழம புடிப்பாங்க. சின்னப் புள்ளயள் கூட விரதம் தான். தொழில் பெரும் சவுப்பு. அந்த நேரம் ஊட்டில சும்மா கிடக்கிற ஒரு தரவளிப் பொடியனுகள் சேர்ந்து கூத்துப் பழகுவானுகள். நாட்டுக் கூத்து.

அந்த நாள்ல ராம நாடகம், வாலபீமன் நாடகம் ரெண்டும் பேரெடுத்த கூத்து ஆரையம்பதியில. நூற்றிப் பத்துத் தரம் அங்க இஞ்செண்டு கொண்டு போய் ஆடி இரிக்கிறானுகள்.

காசியர் தான் ராமர். அவர ராமன் காசி எண்டுதான் சொல்லறது. அப்பிடி சொன்னாத்தான் விளங்கும். ராமர் எண்டா அவர்தான் ராமர். அவர்ர கண்டமும்தான், ஆட்டும்தான், பாட்டும்தான், தோற்றமும்தான். ஒண்டுலயும் கழிக்கேலா மனிசன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதான் உரைத்த போதும்
ஏந்திழை சீதை கேட்டாள்......
அந்தமானைப் பிடித்துதாரேன்
என்றசொல் அறைந்து போட்டேன்.......
தப்பியே ஓடினாலும்
தரணியில் பிடித்து வாரேன்.....
சீதைக்கு காவலாய்
இரு என் தம்பி.......
தத்தோம்...... தகுதோம்......... திருதோம் ஆ.....ஆ

எண்டு விருத்தம் இழுத்து அண்ணாவி தாளக்கட்டு வெச்சா களரி அதிரும். ஏன்; வாலமீமன் நாடகமும் போட்டுட்டதல்ல. ரெண்டும் பேரெடுத்த கூத்துத்தான்.

எனக் கென்றிசைந்திருந்த
இளமாது இன்குயிலை
மணக் கொன்றை மாயவனார்
தன் மகளை...... என்று விருத்தம் பாடி,
கிரிதனில் எழுதும் பரணாணை..... அந்த
கிளிமொழி தனை நான் மருவேனானால்
எரிதனில் வீழ்ந்து இறந்திடுவேன் - இந்த
இயலரசர் அறிந்திடுங்கோ......
தையா..... தனன்ன நன்னே நானே நன்னா
தையா தனன்ன நன்னே நானே நன்னா

ராம நாடகம் வடமோடி. வாலபீமன் நாடகம் தென்மோடி. தென்மோடி நாடகத்தில தாளம், ஆட்டு, பாட்டு எல்லாம் ஒண்டா இரிக்கவேணும். அப்பத்தான் அது சோபிக்கும். பாட்டுகளும் கொஞ்சம் கரடு முரடு - அத சரியா உச்சரித்துப் பாடினாத்தான் பொருள் தெளியும்.

கடசி ஞாயிற்றுக் கிழம கூத்து அரங்கேற்றம். ஊர் முழுதும் கொண்டாட்டம் மாதிரித்தான். அப்ப இப்பிடி மின்சாரம் கிடையாதே. தேங்காய் எண்ணெய்ப் பந்தங்கள் தான் வெளிச்சம். கண்ணாடித் துண்டுகள இழைச்சி, கணோறா கஞ்சந்தாள் பதிச்சி உடுப்புச் சரிக்கட்டி இரிப்பாரு மேத்திரியார் சின்னத்தம்பியர். அவரோட எவரும் மேத்திரி வேல செய்யேலா. அண்ணாவி நல்லார்ர தாளத்துக்கும் ராமன் காசியார்ர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டுப் பாட்டுக்கும் எங்க இருந்தெல்லாம் சனம் வரும்; கூத்துப்பார்க்க. மால ஏழுமணிக்கு கூத்து உட்டா பலபலெண்டு விடிய களரி கும்புடுவாங்க. சனம் ஒண்டும் எழும்பாது. அப்படியே திமுதிமு எண்டு இரிக்கும்.

தீபாவளி வந்தாலும் அப்பிடித்தான். வலைக்காறத்தத்தி ஒவ்வொண்டும் காசி புறிக்கக்க ஒவ்வொரு நாளும் மிஞ்சிறத்த அப்பிடியே போட்டு வைச்சிருந்து தீபாவளிக்கு இறச்சியும் சமச்சி உறட்டியும் சுட்டு சாராயமும் எடுத்துக் குடிச்சி கும்மாளம் போடுவானுகள். அப்ப இந்த ஊரில ஏழு எட்டுத் தத்தி இருந்தது. இப்ப எல்லாம் மங்கி மறைஞ்சு போச்சு. தீபாவளி ஒண்டுக்குள்ள தானே பீதாம்பரத்த வெறியில அவன் சின்னவன் கத்தியால குத்தினவன். அதுக்கும் ஆறுவரிசம் மறியலுக்குப் போய் வந்தவனாரிக்கும்.

புரட்டாதி மாதம் புறந்து தல மழையோட வயல்வேல ஆரம்பிச்சிரும். படுவான்கரையில கிடக்கிற வயல் காணியில மூணுல ரெண்டு பங்கு ஆரையம்பதி ஆட்களுக்குத்தானே இருந்தது! மாரிப்போடியார், காத்தமுத்துப் போடியார், சிதம்பரிப் போடியார், இளையதம்பிப் போடியார், தானாச்சீனாப் போடியார் எண்டு எல்லோரும் போடிமார் தானே.

புரட்டாதி பிரதம கழிச்சி ஏழாம் நாள் கோயில்ல கொடி ஏறும். எட்டுநாள் திருவிழாவும் தீர்த்தமும். நாலாம் நாள் திருவிழா ஆரைப்பத்தையார்ர. ஐந்தாம் நாள் திருவிழா நடுத்தெருவார்ர. ஆறாம் நாள் முகத்துவாரத் தெருவாருக்கு. அடுத்தது சம்மான் ஓட்டியாருக்கு. எட்டாம் நாள் திருவிழா வெள்ளாள தெருவாருக்கு.

அப்ப நடுத்தெருவார்ர ஆரப்பத்தையார்ர திருவிழா எண்டா வாண வேடிக்கைய பார்க்க வேணும்!

அந்தித் திருவிழா முடிஞ்சு சாமி கோவிலுக்குள்ள போனதும் சப்புறம் கட்டத் தொடங்குவாங்க. சரியா நடுச்சாமம் ஒரு மணிக்கு மேளம் தட்டி ஆராதன முடிஞ்சி சாமி வெளி உலா வந்து சப்புறத்தில ஏறி கோயில வளைச்சி மாமியார் மூலைக்கு வந்து சேர நாலுமணி ஆகும்.

வாண விளையாட்டுத் தொடங்கினா ஐந்து மணி மட்டும் ஒரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடிக்கைதான். குடவாணம், எலிக்குஞ்சி வாணம், மழை வாணம், சக்கர வாணம், வவுஞ்சல் எண்டு வர்ணம் வர்ணமாக எடுத்து உடுவானுகள். அதிலயும் போட்டி! நீர்கொழும்பில இருந்து இதுக்கெண்டு அந்தக் கம்பனியால கொண்டுவந்து குடுக்கிறவங்க வாணங்கள்.

ஆத்தில தொழிலுக்குப் போய் கிடக்கிற ஆக்கள் கூட அங்க நிண்டாப்பில பாப்பாங்களாம். ஆகாயத்தில இந்த வாணவேடிக்கைய.

ஐப்பசியில சூரன்போர். கந்த சட்டி விரதம். ஆறு நாளும் ஊர் முழுவதும் விரதம்தான்.

வைகாசி மாதம் கண்ணகி அம்மன் கோயில் கதவு திறந்தா ஒருவரும் போறல்ல தொழிலுக்கு. கதவு அடைக்க மட்டும் பய பக்திதான். சின்னப் புள்ளயளக் கூட சத்தம் போட்டு கத்த உடமாட்டாங்க. உரல்ல இடிக்கேலா, அம்மில அரைக்கேலா, சுளகு புடைக்கேலா, வெளியூருக்கு புதிசாக எவரும் போகேலா, இப்பிடி பல கட்டுப்பாடு. கற்பூரச்சட்டியும், காவடியும், வேப்பிலைச் சடங்கும் தான்; அவளவு நாளும் பறையன் அடிக்கிற தாளத்திற்கு தெய்வக்கிளை ஆடும். பறைத்தாளம் கூட கந்தசாமி கோயிலுக்கு வேற. கண்ணகி அம்மன் கோயிலுக்கு வேற. தைப்பொங்கலுக்கு வேற. பிரேதத்துக்கு வேற. தாளத்த மாத்தி மாத்தி அடிப்பானுகள். இப்ப எல்லாம் அருகிப் போச்சு!

தைப்புறந்தா வெள்ளாம பூவும் காயும். பூவேழு, காயேழு, பழம் ஏழு எண்டு. சிவ ராத்திரிக்கு வெட்டத் தொடங்குவாங்க. அப்ப மீன் வாங்கேலா. எல்லோரும் வெள்ளாம வெட்டுக்குப் போயிருவானுகள், வெள்ளாம வெட்டுக்குப் போய் என்னவும் கொண்டு வந்தா அவனுகளுக்கும் சோத்துப்பாட்டுக்குப் போதும். அதோட சித்திர வரிசத்தையும் சந்தோஷமாக கொண்டாடலாமே.

வரிசம் எட்டு நாளும் கொண்டாட்டம் தான். ஒருவரும் தொழிலுக்குப் போறல்ல. வெள்ளாம வெட்டிக் கொண்டுவந்த நெல்லும் இரிக்கும். கையில காசும் புளங்கும். அப்ப பின்ன கேட்கவா வேணும்?

ஒரு தரவளிப் பொடியனுகள் கோயிலடியில கொட்டக கட்டி நாடகம் போடுவானுகள். சின்னப் புள்ளயள் மகிடி, காடுகட்டி எண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் கேளிக்க வைப்பானுகள். மூணாம் நாள் சுபநேரம் பாத்து வண்ணான், அம்பட்டன், பறையன், சக்கிலியன் எண்டு எல்லோரும் வருவானுகள் அவனுகள்ற வரிசப்படி வாங்க.

முதல், கோயில் வண்ணக்கர்ர ஊட்டுக்குப் போய் அங்க அவரிட்டக் கிடந்து திண்டு குடிச்சி எல்லாம் வாங்கிற்றுத்தான் வேற ஆக்களிடம் போவானுகள். அடுத்தது கணக்கப்பிள்ளை; பிறகு தோம்புதர், இப்படி முறையா வரும்.

இப்ப எல்லாம் மாறிப் போச்சு. ஊர்ல என்ன பிரச்சின எண்டாலும் கோயில் கூட்டத்தக் கூட்டி கோயில் வண்ணக்குக் கணக்கப்பிள்ளை எல்லாத்தையும் பேசித்தீர்த்தா அது சரிதான். அவங்க றோட்டால நடந்து வரக்குள்ள ஒரு புள்ள கூட எதிர நிண்டு பேசாது! அவங்களும் அப்படித்தான். மட்டு மரியாதை. இப்ப என்னடா எண்டா சமத்துவம் பேசுதுகள்! பெரிய மனுசன் எண்டு ஒரு முகம் அரமுகம் பார்கிற காலமா இது?

நாங்க அப்ப எல்லாம் படிக்கல்ல தான். பணிவும் மரியாதையும் நிறைய இருந்தது. இப்ப படிச்ச கெறு இவனுகளுக்கு. என்ன செய்ய. இப்ப காலம் மாறிப் போச்சு.

"அப்பா, அம்மா சாப்பிடக் காத்துக்கொண்டிருக்கிறா."

சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தார். ஆசிரியராக பணிபுரியும் மூத்த மகன் குடையும் நடையுமாக நின்று கொண்டிருந்தான். மணி நான்கை எட்டிப்பிடித்துக் கொண்டிருந்தது. மனைவி இன்னும் மத்தியானம் சாப்பிடவில்லையாம். கந்தப்பருக்கு உணவு பரிமாறாமல் இந்த முப்பது வருடங்களாக அவள் முதல் சாப்பிட்டதே இல்லைத்தான்.

"குடை இல்லாம வர ஏலா எண்டு தெரியும் தானே. இவ்வளவு நேரத்துக்கு காத்துக் கிடக்காம சாப்பிட்டிருக்கலாம் தானே." என்று வாய் முணுமுணுத்த போதிலும் அது அவருக்கு பெருமையாகவும் இருந்தது. குடிலை அடைத்து விட்டு மகனுடன் சேர்ந்து நடந்தார் வீடு நோக்கி.

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07. மதிய போசன இடைவேளை.

கப்பிய கருவானம்; மப்பும் மந்தாரமுமாகக் கிடந்தது. கார்வண்ண முகிற் கூட்டங்கள் அமைதியான நீர்த்தேக்கம் போல் ஆடாமல் அசையாமல் வானம் முழுவதும் வியாபித்திருந்தது. காற்றுமில்லை மழையுமில்லை கனலாக வேகும் சூரிய ஒளியுமில்லை!

எங்கும் நிசப்தமே குடி கொண்டிருந்தது. மதிய போசனத்திற்காக ஊழியர்கள் எல்லோரும் சென்றுவிட்டனர்; எங்களைப் போன்ற இரண்டொருவரைத் தவிர.

பகல் பன்னிரண்டரை மணி. வீட்டிலிருந்து கொண்டு வந்த பார்சல் சாப்பாட்டைப் பக்குவமாகப் புசித்துவிட்டு, மத்தியூசின் கதிரையில் வந்து அமர்ந்து கொள்கிறேன். கணபதிப்பிள்ளை அண்ணருக்கு இன்னும் சாப்பாடு முடியவில்லை. நான் வந்துவிட்ட படியால் தனியாக இருந்து பேச்சுமூச்சின்றி ஆறுதலாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

ஏகாந்த நிலையில் எதிரே இருந்த எக்கவுண்டன் அறை ஜன்னலினூடாக என் வெறும் பார்வை ஊடறுத்துச் சென்று தெருவீதிகளில் உலாவுகின்றது. பாதை சுறுசுறுப்பற்று அடங்கிக் கிடக்கிறது.

உள்ளும் புறமும் ஒரே தன்மைக்காட்சி! வாய் வேலையற்றிருக்க, மனமோ சுழன்று சுழன்று வேகமாக வட்டமிட்டுப் பறந்து கொண்டே இருக்கிறது.

29-12-75 க்கு முந்திய நாட்கள் திரையாக, சம்பவங்கள் காட்சியாக, மனம் என்னும் அரங்கில் ஓடிக்கொண்டிருக்கின்றன.

உமல்பையுடன் வந்து சேர்ந்த ரைபிஸ்ற் ஐயா, புன்முறுவலுடன் என்னைத் தாண்டிப் பின்புறமாக அவரிருக்கைக்குச் சென்று, தன் அச்சுயந்திரத்தின் பக்கத்தே திருப்தியான ஒரு இடத்தில் அதனை அடைக்கலம் கொடுத்துவிட்டு யாராலோ எப்படியோ சீர்குலைந்து போய்க்கிடந்த காகிதாதிகளையும் பிறவற்றையும் அணி செய்துவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல என் அருகில் கிடந்த கதிரையொன்றில் வந்து உட்கார்ந்துவிட்டார்.

ஆடி அசைந்து, கைகளை நீட்டி நிமிர்த்தி ஏதோ சீர்திருத்தக் தத்துவார்த்த விளக்க போதனையுடன் "கணபதிப்பிள்ளை அண்ணே!" என்று கானம்போல் இழுத்தபடி நுளைவாயினுள் உட்புகுகின்றார், தனபாலசிங்க அண்ணே.

"அ.......ஆ ! தனபாலசிங்க அண்ணரா? வாங்க, வாங்க........."

சோற்றுக் கவளத்தை வாய்க்குள் போடப்போனவர், அதை நிறுத்தி விட்டு பின்னாலிருந்து வரவேற்புக்கீதம் பாடியவர் தான், அந்தப் பகுதித் தலைமைக் கிளாக்கர் திரு. மு. கணபதிப்பிள்ளை.

மேசையில் இருந்த தண்ணீர் தம்பிளரை அவரின் இடதுகரம், பேச்சுக் கொடுத்தவாறே பற்றுகிறது. ஒரு மிடறு "மடார்" என்று இறக்கி விட்டு ஏதோ பகிடிக் கதைகளை அளந்து கொண்டிருக்கிறார், கிண்டல் சிரிப்புடன், தனபாலசிங்கருடன்தான்.

கணபதிப்பிள்ளை அண்ணரைவிட தனபாலசிங்கருக்கு ஒரு வயது அதிகம். 1956ல் தான் இருவரும் ஒன்றாக நியமனம் பெற்றார்கள். சிங்களத் திணிப்பை எதிர்த்து அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் முன்னைநாள் கொள்கையில் விடாப்பிடியாக இருந்துவிட்ட இரண்டோ மூன்று ஊழியர்களில் தனபாலசிங்கரும் ஒருவர்.

வாழ்க்கையில் அவர் எடுத்துக் கொண்ட அந்தப் பிரதிக்ஞையால், அவர் பட்ட, பட்டுக்கொண்டே இருக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகள், இலாப நட்டங்கள், மனச் சோர்வுகள் எத்தனை, எத்தனையோ!

அது ஒருபுறம் இருக்க, தனபாலசிங்கர் கணபதிப்பிள்ளையரை அழைக்கும் போது "கணபதிப்பிள்ளை அண்ணே" என்றும், கணபதியார் தனபாலரை நோக்கி அண்ணர் என்று விளிப்பதுவும் விந்தையானது மட்டுமல்ல விடாப்பிடியான மரியாதை கலந்த அகம்பாவமும் என்று தான் கொள்ள வேண்டும்.

"இருவரும் ஒருவரை மற்றவர் அண்ணரென்கிறீர்களே, உண்மையான அண்ணர் உங்களில் யாரோ......?"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது என்ன கேள்வி.

வயதைப் பொறுத்தவரையில் மூத்தவர் தனபாலரே. உத்தியோக உயர்வில், உழைப்பில், ஊதியத்தில் மூப்பெய்தியவர், கணபதியார் தான்!

இளமையில் கொண்ட பற்றுக்கோடு "தம்பி" என்று அழைப்பதற்கு இணங்கவில்லை.

பெயரைச் சொல்லிக் கூப்பிடவோ பரீச்சயமற்ற பழக்கக் கோளாறு.

வேறு எப்படித்தான் அழைப்பது? "ஐயா" என்றா? அது எப்படி முடியும்?

"அண்ணே" என்பதில் - பற்று, உயர்வு, மரியாதை, இணக்கம் - எல்லாமே கலந்திருப்பதாக இருவருக்கும் ஒரு நிறைவு போலும்!

மெல்லிய வாடைக் காற்றொன்று அரும்பியது. மேகங்கள் நகர்வதிலிருந்து அதனை ஊகிக்க முடிந்தது. வானத்தில் சிறிது வெண்மை பளிச்சிட்டது.

நிசப்தமாக இருந்த அந்தக் கந்தோர் மண்டபம், இப்போது பேச்சுக்களை கட்ட ஆரம்பித்து விட்டது.

"யாழ்ப்பாணம் மெயில் வரவில்லையே, தம்பி.....?"

சாப்பிட்டுவிட்டு வாய் அலம்பி இருந்த போதிலும் தவறி எங்கேயோ கொடுப்புப் பற்களிடையே சிக்கிக்கொண்டு தவித்த சோற்றுப் பருக்கையை இச்சை கொட்டி, காற்றிழுத்து, நாக்கினால் தட்டி விடுவிக்கும் பணியோடு அன்றைய மெயிலில் தனக்கு வரவேண்டி இருந்த தபாலைப் பற்றி தான் சந்தித்த அந்தப் பியோனிடம் கேட்டுக் கொண்டே சாப்பாட்டிடை வேளை கருத்தரங்கு நோக்கி நடந்து கொண்டிருக்கிறார், பெஞ்சமின்.

மதியத்திற்கு வந்துவிட்ட சூரியன், தன் தங்கக் கம்பிக் கதிர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்மேகக் கூட்டங்களிடையே ஊடறுத்துப் பரவ விட்டதனால் எழுந்த ஒளிப் பிரவாகம், எண்ணெய் தேய்க்கப்பட்டிருந்த அவர் மயிரற்ற மண்டையோட்டில் பட்டுச்சிதறி மின்னி ஒளிர்ந்தது.

பரிதியைக் கண்ட ஆம்பலாக எல்லோர் வதனங்களிலும் மகிழ்ச்சியின் சாயல் படருகிறது. எல்லாம் பெஞ்சமினின் வருகையினால் விளைந்ததாகத்தான் இருக்க வேண்டும்.

கதைப் பராக்கில் இருந்த தனபாலர், "பெஞ்சமின் சைக்கிளைத் தாரும்" உரிமையோடு கேட்கிறார். அவரின் வழக்கமான தொனி அதுதான்.

"சேதுகாவலர் முதலில் கேட்டவர்; நான் என்ன செய்யிறது?"

அதுவரை தானுண்டு தன் வேலையுண்டு என்று கடுமையாக எழுதிக்கொண்டிருந்த சேதுகாவலர்,

"பெஞ்சமின், கீயைத் தாரும்." என்று குழந்தைபோல் அப்போதுதான் விடுவித்துக் கொண்டவராக பாய்ந்து ஓடிவந்து சாவியைப் பற்றுகிறார்.

எழுந்தவர் எப்போதும் போல் சலனமின்றி புன்னகையுடன் அமைதியாகப் பார்த்துக் கொண்டே நிற்கிறார் தனபாலர். பாவம் ஏமாற்றம் அவருடைய வாழ்க்கையுடன் ஒன்றிப் போய்விட்ட அனுபவ முதிர்ச்சி போலும்!

"கொடுப்பவரும் வாங்குபவரும் மனமொருமித்த போது குறுக்கீடு யாது பலனைத் தரும்?" என்று கேட்பது போலிருந்தது அவருடைய அமைதியான பார்வையும் முகத்தில் அலர்ந்த புன்முறுவலும்.

எதையும் சட்டைபண்ணாத பெஞ்சமின் விடுவிடென்று நுளைந்து,

"தம்பி நெருப்புப் பெட்டி இருக்கே......?" யாரையோ பார்த்து கேட்டிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை" என்ற பாவனையில் தலை பசைத்ததோ என்னவோ,

"உம்மிட்டை இல்லையே.....?" என்ற கேள்வி எழுந்தது, அடுத்தவரை நோக்கி.

அதுவும் சரிவரவில்லை!

"உம்மிட்டை....." என்றதோடு, என்னப்பா..... நீங்கள்! என்றும் அலுத்துக் கொள்கிறார்.

உள்ளே நடப்பதை அவதானித்துக் கொண்டு மலர்ந்த முகத்தோடு, இரங்கும் பாவனையில் வெளிவிறாந்தையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் ஒரு பொது மனிதரிடமிருந்து நெருப்புப் பெட்டி பெஞ்சமினுடைய கரங்களை நோக்கித் தாவுகிறது!

ஐயாமாரின் தயவை நெருப்புப் பெட்டி மூலம் வசியம் செய்யப்பார்க்கிறார் போலும் வந்தவர்.

பேச்சு மூச்சின்றித் தான் கொண்டு வந்த சிகரட்டை இரண்டாகத் தறித்து ஒரு பாதியை இதமாக்கி, அதற்கு தீ மூட்டி ஒரு "தம்" இழுத்து சுகானந்தத்தை நுகர்ந்து கொண்டே "இந்தாரும் தாங்ஸ்".

தூக்கி எறிவதற்கு முன்பே அந்த வெளிஆள் ஓடிவந்து இருகரங்களாலும் அதனைப் பெருமையோடு பெற்றுக் கொள்கிறான்.

புகையை ஊதியபடியே அலட்சியமாக, ஒரு கதிரையில் வந்து அமர்ந்து கொள்கிறார் பெஞ்சமின் அப்பாடா என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டவராக.

"என்ன..... பெஞ்சமின், பேச்சைக் காணோம்.....?"

கணபதிப்பிள்ளை அண்ணர் சாப்பிட்டு முடித்துவிட்டார். கரியரைத் தட்டி மூடிக் கொண்டவர், தண்ணீர் குழாயடிக்குச் செல்லுமுன் வேடிக்கையாக,

"பெஞ்சமின்......"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அண்ணே......."

"இண்டைக்கு என்னத்தப்பத்திப் பிரசங்கம்?"

"என்னண்ணே பிரசங்கம்? சும்மா முசுப்பாத்திக்கு....."

பிரசங்கம் என்று குறிப்பிட்டது பெஞ்சமினுக்கு திருப்தியளிக்கவில்லை.

கணபதிப்பிள்ளை அண்ணர் வெளியே போகிறார் கை கழுவுவதற்கு.

வெற்றிலைத் துவர் செவ்வாய் மணம் கமழ் முருகேசப்பிள்ளையும் பாரியாரும் திருச்சபை நோக்கி எழுந்தருளினர் பின்னேரத்தியால வேலை நிமித்தம்.

பெஞ்சமினை நோக்கி "சாமான்களெல்லாம் கொண்டு வந்தாச்சோ?" முருகேசப்பிள்ளை விசாரிக்கிறார் அக்கறையோடு.

"இன்னம் கடிதம் வரவில்லையே, தம்பி"

"சாமான் பிடிபட்டுப் போச்சுது தானே" தூரத்திலிருந்து ஒரு குரல் கேட்கிறது யார்? மத்தியேசா?

"அடுத்த நாளே பொலிஸ் ஆட்களைப் பிடிச்சு சாமான்களைப் மீட்டுப் போட்டினமாம்."

"என்ன? என்ன நடந்தது?"

பலருக்கும் இந்த உரையாடலின் தாற்பரியம் தெளிவற்று இருந்த போதிலும், அதுவரையாவுதல் பொறுமையைக் கடைப்பிடித்துக் கொண்டிருந்த தனபாலர் ஆர்வத்துடன் குறுக்கிட்டார்.

உங்களுக்குத் தெரியாதா, அண்ணே! கையலம்பிவிட்டு வந்து கொண்டிருந்த கணபதிப்பிள்ளை கிண்டலாகக் கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெஞ்சமின் ஒரு தடவை நிமிர்ந்து, கம்பீரமாக இருந்து கொண்டார்.

"தெரியாமல் தான் கேட்கிறன். என்ன நடந்தது? விபரமாகச் சொல்லுமன் பெஞ்சமின்."

கதிரையை பெஞ்சமினுக்கு அருகில் இழுத்துப்போட்டுக் கொண்டு காதைக் கூர்மையாக்கிக் கொண்டிருக்கிறார்.

ரணசிங்க வெளியில் சாப்பிடப் போயிருந்தவர் திரும்பி வந்து சைசிக்கிளை வைத்துப் பூட்டுகிறார்.

கடைக்கண்ணோட்டம் விட்ட தனபாலர்,

"ரணே சைக்கிளை தியாக்கன்ன." குரல் கொடுத்துக் கொண்டே பெஞ்சமின் பக்கம் திரும்பி,

"மெய்யே, சொல்லுமன் என்ன நடந்தது....?"

ஆவலைத் தூண்டினார்.

செவிக்குணமில்லாத போது சிறிது வயிற்றுக்கு மீய்பவர், தனபாலசிங்கம்.

ஆயினும் பெஞ்சமின் பேச்சைத் தொடங்கியதாக இல்லை.

நடந்தவற்றைச் சொல்லிக் காட்ட பெஞ்சமினுக்கு தனபாலரை விட ஆர்வம் அதிகம். என்ன செய்வது ? "சொல்லும்" என்றதும் சொல்லிவிட ஏதோ ஒருவித தயக்கம்.

"கதையை ஆரம்பிக்க ஏற்றதோர் சூழல் ஏற்படமாட்டாதா?" என்று ஏங்கிக் கொண்டிருந்தார் பெஞ்சமின். அசட்டுச் சிரிப்புடன்.

உடனேயே கதையைத் தொடங்கி இருப்பார். அப்படி ஆரம்பித்து விட்டால், அது தனக்கொரு கௌரவத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிக்கொடுக்காது என்பது ஒன்று. மற்றது, கதையில் உள்ள திகில், பரபரப்பு, சோகம் - இவற்றை கலைத்திறனுடன் ஆடம்பரமாக ரசனைகுன்றாமல் எடுத்துக் கூறுவதற்கு அது சூழலாக அமையாதென்பதுமே காரணங்களாகும்.

பெஞ்சமின் பதில் கூறாமல் இன்னும் அப்படியேதான் இருந்தார்.

உங்களுக்குத் தெரியாதே? போனகிழமை யாழ்ப்பாண பஸ்சில நடந்த திருட்டுச் சம்பவத்தை! எல்லோரும் பேப்பரில கூடப்படிச்சினம்.

ஐயர் முகவுரை கொடுத்துவிட்டு மௌனியாக இருந்து விட்டார்.

அவர்தான் அளவோடு பேசுபவராயிற்றே!

அது தெரியும். அதில பெஞ்சமினும் அகப்பட்டுப் போச்சுதோ?

சொல்லும் போதே தனபாலருக்கு அவல் மெல்லும் அக்களிப்பு - ஒருவித சேட்டைக் குணம்.

எல்லோரும் "கொல்" என உரத்துச் சிரித்தனர்.

சிரிப்பொலியில் பிறந்த குதூகலம், பெஞ்சமின் கதையைத் தொடங்குவதற்கு ஏற்றதொரு சூழலையும் அமைதியையும் அளித்து விட்டது. நேரத்தை வீணாக்காமல் உடனேயே தொடங்கி விட்டார்.

"அது தம்பி...."

"நடுச்சாமம் பன்ரெண்டு மணியிருக்கும். கபறணைச் சந்திக்கு கொஞ்சம் அப்பால. ஒரே இருள்காடு. சன நடமாட்டமே கிடையாது. பாம்பு, பல்லி, பூச்சு, புழுக்களின் இரைச்சல் மட்டும் தான் கேட்டுக்கொண்டிருந்தது. பயங்கரமாக இருந்தது."

கதைக்கு விருத்தம் முடிந்து விட்டது. எல்லோருடைய கற்பனையும் தாம் தாம் வாழ்க்கையில் சந்திக்க நேர்ந்த ஒரு அடர்ந்த காட்டுப் பகுதியைத் தொலை நோக்கிக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெஞ்சமின் தொடர்ந்தார்.

இரைச்சலுடன் ஓடிக்கொண்டிருந்த பஸ் "சடார்" என்ற திடீர்க் குலுக்கலுடன் உறுமி நின்றது.

தூங்கி வழிந்து கொண்டிருந்தோர் தூக்கிவாரி எறியப்பட்டனர், திடீர் நிறுத்தத்தினால் ஏற்பட்ட தடுப்பு விசை காரணமாக.

"என்ன ? என்ன ?" எல்லோரது மனதிலும் ஒரே பரபரப்பு.

றைவர் பயத்தினால் நிலை குலைந்து போவது அவர் பாவனையிலிருந்து தெரிகிறது.

கடவுள்தான் துணை ! என்ற கொண்டக்டரின் பக்தி நாதம் அவரின் பலநாள் அனுபவத்தை எடுத்துக் காட்டியது. பெருமூச்சுடன் பேயறைந்தவன் போல் நின்று விட்டார், அவர்.

பஸ் முன்லைட் ஒளி வீச்சில் இலேசாகத் தெரிகிறது.

பாதையின் குறுக்கே பர்வத மரமொன்று கிடத்தப்பட்டிருக்கிறது.

பதினைந்திற்கும் மேற்பட்ட, பயங்கர ஆயுதங்களை ஏந்திய முரட்டுத் தோற்றமுள்ள இளைஞர்கள் அப்படியும், இப்படியும் உடை அணிந்து கொண்டிருந்தவர்கள் வேகமாக பஸ்ஸை நோக்கி ஓடிவருகிறார்கள்.

ஆங்கிலத்தில் "டெட் சைலன்ஸ்" என்பார்களே? அதுதான்; அதே மயான அமைதிதான் எங்கும்.

"ஏக்க, மோக்க" என்று ஏதோ சிங்களத்தில் கதைக்கும் சத்தம் என் சமீபமாகவும் கேட்கிறது.

நிமிர்கிறேன். எனக்கு நிலைமை விளங்கி விட்டது.

என் பெட்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைக்கடிகாரமும் ஐம்பது ரூபா நோட்டும் என்னைப் பார்த்து எக்காளமிட்டுச் சிரித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த வினாடியே சர்வாங்க சகலுடைமைப் பரிசோதனை நிகழ்ந்து கொண்டிருந்தது.

வழிப்பறிக் கொள்ளையரின் அட்டகாசம்.

"முருகா, கதிர்காமக் கந்தா." பின்னாலிருந்து வந்த குசுகுசு சத்தம் வயதுபோன பாட்டியினுடையதென்பதில் சந்தேகமே இல்லை.

முருகனைத் தவிர அந்த நேரம் யார்தான் துணைக்கு வந்தாலும் அவர்களிடமிருந்து துப்பாக்கியை என்ன செய்திருக்க முடியும்.

ஒவ்வொருவரதும் உடல், உடை, பொதி, மிதியாவும் நுணுக்கமாகப் பரிசோதனையிடப்பட்டு, பயனுள்ள எல்லாவகைப் பொருட்களும் அவர்கள் உடமைகளாகிக் கொண்டிருந்தன.

"பெண்களையுமா?"

இடையே குறுக்கிட்ட அந்த குரலுக்குரியவர், வேறுயாருமல்ல, சிவலிங்கம் தான். எப்போது நுளைந்தார்?. கதை ரசனையில் அவர் வருகையை யாரும் கவனிக்கவில்லை.

மீண்டும் பெஞ்சமினின் குரலே ஒலித்தது.

கைக் குழந்தையை வைத்திருந்த ஒரு இளம் தாயிடம் அவர்கள் கைவரிசை ஆயத்தமானது. கழுத்தில் போடப்பட்டிருந்த தன் கணவனின் உயர்சின்னமான தாலிக்காக மன்றாடிக் கெஞ்சிக் கொண்டிருந்தாள்.

உக்கிரமான அந்த முரட்டுக்கரம் மென்மையான மலர்க் காந்தளைப் பற்றி வீசி எறிகிறது. அந்த விசையினால் இடறி பக்கத்திலிருந்த ஆசனத்தில் குழந்தையுடன் சாய்ந்து விழுகிறாள்.

கோபக்கனல் பறக்க பக்கத்தில் நின்றுகொண்டிருந்த அவளது கணவன் விழப்போனவளைத் தாங்கிப் பிடிக்க முயலுகிறான்.

தெய்வாதீனமாக குழந்தைக்கு ஒன்றும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாராத அந்தச் சந்தர்ப்பத்தில்.

அவன் கன்னம் இடியோசையுடன் செவ்வானமாகச் சிவக்கிறது. என்ன அநீதி?

பொக்கை வாயைத் திறந்து அந்த இளம் தளிர் ஈனர்களை நோக்கி இன்முகம் காட்டிச் சிரித்துக் கொண்டிருந்ததை அந்த பாசமற்ற நீசர் எங்கே கவனித்திருக்கப்போகிறார்கள்?

தன்னுடைய மழலை மொழியில் ஏதோ பேசுகிறது.

"தாலிதானே எடுத்துக்கொள். என் தாயை மட்டும் ஒன்றும் செய்யாதே" என்பதா அதற்கு அர்த்தம்?

போராட்டம் நீடிக்கவில்லை.

"லவக்" அப்படியே அந்த இருள் படிந்த இரும்புக்கரம் பிடுங்கிக் கொள்கிறது.

தாலி அவன் கைகளில் நெளிந்தது. விலை மதிக்கமுடியாத அந்த மங்கல மாங்கல்யத்திற்கு விலை குறிக்கப்பட்டிருந்தது, அவன் கழுகுப் பார்வையில்.

ஐயோ! என்ன கொடுமை! ஐயர் தன்னை மறந்தே பிதற்றினார்.
தாலியின் மகத்துவமும் புனிதத்துவமும் அவருக்கன்றோ புரியும்.

"காதற்ற ஊசியும் வாராதுகாண் கடை வழிக்கே" என்று கூறுவது போலிருந்தது சலனமின்றிக் கைகால்களை ஒதுக்கி குழந்தை பார்த்துக் கொண்டிருந்த மாதிரி.

உதைக்கப்பட்டனர்; தள்ளப்பட்டனர்; ஈவிரக்கமின்றி ஏதோவெல்லாம் துன்புறுத்தப்பட்டனர்.

அன்பு என்பதையே அறிந்திராத கொடிய புலியிடம் அன்பை எதிர்பார்ப்பது எவ்வளவு மடமை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது முறை வந்தது.

சூட்கேஸ் பெட்டிப் பரிசோதனை முடிவடைந்து விட்டது.

"ரெஸ்ட் வோச் கலவன்ன"
மனதின் சம்மதமின்றியே கை அதனைக் கழட்டிக் கொடுத்து விடுகிறது உயிர்மேல் கொண்ட பாசப்பிணைப்பால்.

"றவுசர் சாக்குவே அதுள மொனவாத தியென்னே.....?"

மணிபேஸ், சில ரூபாய் நோட்டுகள், கைக்குட்டை ஒன்று - இவ்வளவையும் நடுங்கும் கரங்கள் நாவடக்கத்துடன் தாரை வார்த்து கொடுத்து விடுகின்றன.

மீண்டும் என்மீது ஓவறோள் செக் அப்.

நகர்ந்து அடுத்தவரை நாடும் கொடுமையைப் பின் தொடர்ந்து,

"மல்லி....."

பயபக்தியுடன் என் வாய் இரந்து நிற்கிறது.

"................"
திரும்பவும் "மல்லி கருணாகர பெட்டி அதுள திவென மகே மெடிகல் செட்டிபிகேற் ஆபசு தென்ன."

"மொக்குட்டத....?" சீறிவிழுகிறான், சிங்கமாக.

"கெட்ட கந்தோருவே தெண்டோண, மல்லி" பணிவோடு பகர்கிறேன்.

"மொகத? பிஸ்சு மினிசா. ஒவ கெட கந்தோருவட்ட யனவாத? ஓயாகே ஜீவிதய தன் இவறய். தேறுணுவத?"

அவன் உதடுகளில் ஏளனச் சிரிப்புத் தவழ்கிறது. என் முகத்திலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசடு வழிந்து கொண்டிருக்கிறது. இருந்தும்,

"கருணாகர மல்லி...." விடாமல் முயற்சித்தேன்.

அடுத்து என்ன நடந்ததென்பதை அறியும் ஆவல் சிவலிங்கத்திற்கு. பெஞ்சமின் சொல்லிக் கொண்டிருந்த கதையின் சாராம்சத்திற்கேற்ப அவன் தலையும் ஆட்டம் போட்டுக் கொண்டிருந்ததில் அது நிருபணமாகிறது.

ஐயரின் கண்களில் நீர் துளிர்த்தது. வேதனை கலந்த சிரிப்பை பலவந்தமாக வரவழைத்துக் கொண்டு தனபாலசிங்க அண்ணே உன்னிப்பாகக் கதையை இரசித்துக் கொண்டிருந்தார்.

வெற்றிலை அசைப்பதை மறந்து வியந்து நிற்கிறார் முருகேசபிள்ளை. கதையின் ஆகர்சண சக்தியினால் தன்வசமிழந்திருக்க வேண்டும்.

"மறுகா......?"

கணபதிப்பிள்ளை அண்ணருக்கு ஆவல் அதிகரித்து விட்டது. அவரே தன் பதவிக்கதிரையில் அமர்ந்து கொண்டு கதையை ஓட்டுவித்தார்.

பெஞ்சமின் தொடர்ந்தார்.

"பளார்" கன்னத்தில் விழுந்த உக்கிரமான அறை, நின்றிருந்த என்னை அப்படியே அமரச் செய்து விட்டது.

இப்போது எல்லோருடைய வதனங்களிலும் இலேசான புன்னகை இழையோடிக் கொண்டிருக்கிறது.

மெதுவாகத் தலையை ஆட்டி அசைத்துப் பார்த்தேன். காதுக்குள் ஏதோ கிலுங்கும் சப்தம் மிகவும் நிதர்சனமாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

"ஆஹாகா....... ஹா......." செக் எழுதிக் கொண்டிருந்த காசிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய சத்தம் போட்டுச் சிரித்தார். அவரோடு மற்றவர்களும் சேர்ந்து கொண்டனர்.

சில நிமிடங்கள் விமர்சன விருப்பம் நடந்து முடிந்தது.

"சொல்லுமன் பெஞ்சமின். பேந்து" தனபாலர் தட்டி விட்டார், குதிரையை.

அடிக்கடி இங்கு பாடுவோமே......? நம்ம சபாரெத்தினம் பாடுவாரே..... போனால் போகட்டும் போடா சினிமாப் பாட்டு - அந்த பாடலை பாட்டின் ராகத்திற்குத் தலையை அசைத்த போது அந்த கிலுகிலுப்பு மிருதங்கமாக அமைந்து மெருகூட்டியது.

"இடுக்கண் வருங்கால் நகுக" என்று வள்ளுவர் சொல்லி வைத்த தத்துவத்தை வாழ்க்கையில் முதன் முதலாக செயல் படுத்தினேன்.

அந்தக் கணம் சங்கீத இசையுலகில் கொஞ்ச நேரம் என்னை மறந்திருந்தேன்.

அப்போது.

"என்ன ஓய்! சண்டித்தனம் காட்டுறதிங். யாப்பண மனிசு."

குரல் வந்த திசையை நோக்கினேன். திருட்டு உலுத்தர்களிடம் நியாயம் பேசிய ஒரு வீர இளைஞன் வட்டியும் முதலுமாக வாங்கிக் கொண்டிருந்தான்.

வல்லமையும் வாக்குச் சாதூரியமும் இடத்தையும் காலத்தையும் பொறுத்தே பயனளிக்கிறது. குரங்கின் கையில் பூமாலையைக் கொடுப்பது எவ்வளவு அறிவீனம்? அவர்களுடன் அந்த இளைஞன் வாதம் புரியமுற்பட்டது எத்தனை விவேகமற்ற செயல்.

பாட்டி அழைத்த தெய்வத்தாலன்றி வேறுயாரால் இந்தப் பரிதாபத்தை நிறுத்த முடியும்?

பஸ்சினுள் கொண்டல் வாடையாக எழுந்த குசுகுசு பேச்சொலி மாறாக்காற்றாக இடி மின்னலோடு மழையும் பெய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களும் குழந்தைகளும் கண்ணீர் சிந்தினர். ஆடவர்களில் தோள் வலிமையும் வாய் வலிமையும் மிக்கவர்கள் சிங்கங்களாக கர்ச்சித்தனர். ஏனையோர் சமாதானம் கூறினர்.

யாவும் நடந்தது திருடர்கள் வெளியேறி விட்ட பின்பே!

இடைக்கிடையே பேச்சிடையே புகுந்து ஓசைப்பட்ட சிங்களச் சொற்களை மட்டும் விளங்கிக் கொண்டு நடந்து முடிந்த கதாகலாட்சேபத்தில் இடம்பெற்ற அபினயங்களை பார்த்துக் கொண்டு நின்ற ரணசிங்க, கைக் கடிகாரத்தை ஒரு தடவை நோக்கிவிட்டு தன் இருக்கைக்குச் செல்ல விரும்பியவராக,

"தனபால, பைசிக்கல் என்றார்."

"தாங்கியூ" தனபாலசிங்கம் சாப்பாட்டுக்குப் போக எழுந்து விட்டார்.

"ஓ! ஒண்டரைக்கு மேல போச்சுது." வியந்தபடி ஒவ்வொருவராக தத்தமது தொழிலாசனங்களை நாடி விரைந்து கொண்டிருக்கின்றனர்.

திரையில் வணக்கம் விழும் வரை காத்திருக்கும் பொறுமை அவர்களுக்கிருக்கவில்லை.

முடிவுரை வழங்காதது பெஞ்சமினுக்கு குறைதான். என்ன செய்வது? கதை சொல்லும் என்றதும் தன் தயாள குணத்திற்கு அவர்கள் வைத்திருக்கும் சிலாக்கியம்!

இன்று.....!

பெஞ்சமின் இல்லை. அதனால் கூட்டமுமில்லை. மதியபோசன இடைவேளை கலகலப்பின்றி வெறிச்சோடிக் கிடக்கிறது.

பெஞ்சமின் மன்னாருக்கு இடமாற்றம் செய்யப்பட்டு விட்டாரே!

(கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08. தகுதி.

நாளைக்குப் பயணம் கொழும்புக்கு.

ஏழை எனக்கிருந்த துணிமணிகளைத் தோய்த்து, உலர்த்தி, மினுக்கி பெட்டியில் பக்குவமாக அடுக்கி தயாராக வைத்துவிட்டேன். பட்டணத்தில் போய் அங்கு நாலு மனிதர்களைப் போல் நல்லபடியாக நடந்துகொள்ள வேண்டுமே என்பதற்காக.

என்னிடம் இருந்த ஒரு பழைய நீளக் கால்சட்டை, இரண்டு சேர்ட்டுக்கள், ஒரு சாரம், துவாய் மற்றும் புதிதாக வாங்கிய பெட்சீட்; இவ்வளவும் ஒரு சூட்கேசினுள் அடைக்கப்பட்டு விட்டது. "மறந்தே போய்விட்டேனே! ஆத்திரகாரனுக்கு புத்தி மட்டு என்பார்களே. நல்ல வேளையாக இப்பொழுதாவது நினைவுக்கு வந்துவிட்டது."

அரைவாசியில் ஆயத்தங்களை நிறுத்திவிட்டு ஓடுகிறேன் எங்கே?

"அங்கே வெறும் காலுடன் நடக்கக்கூடாது. சிலிப்பர் போட்டுத்தான் வீதிகளில் செல்ல வேண்டும், மலசல கூடங்களுக்குள் நுழைய வேண்டும். கண்டபடி எங்கும் அலைந்து திரியக்கூடாது. கையில் தேவைக்கதிகம் காசு வைத்திருக்கக்கூடாது. போலி ஆசை காட்டுவோர் பக்கம் நம்பி ஏமாறிவிடக் கூடாது. முதல் நியமனம் பெறச் செல்லும் நீர், அதாவது ஒரு தகுதியான உத்தியோகத்தனாக அமரப் போகும் நீர், நல்லபடியாக உடுத்து மினிக்கிக் கொள்ளாவிட்டால் யாரும் மதிக்கமாட்டார்கள். காற்சட்டை, சேர்ட்டுடன் 'ரை' யும் அணிந்து கொள்ள வேண்டும். இப்படியே இடைவிடாது புத்திமதி கூறிக்கொண்டே இருந்தவர் அதற்கு முடிவுரை கூறினாற்போல் 'ரை' இல்லாவிட்டால் என்னிட்டை கிடக்கு. இப்போதைக்கு வீட்டிற்கு வந்து ஒன்றிரண்டை எடுத்துக்கொண்டு போம். நான் இல்லெண்டாலும் பரவாயில்லை. நான் சொன்னதெண்டு கேட்டால் தருவினம்" என்று நாசூக்காகத் தன்பேச்சை நிறுத்தினார்.

அந்தப் பரோபகாரியின் வாய் மொழிக்கு மதிப்பும், நம்பிக்கையும் வைத்து அவர் வாசற்படியில் என் ஓட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தினேன்.

"மாமா இருக்கிறாரே?"

"ஆரது?" சத்தத்தை அறிந்தோ என்னவோ "இல்லை, தம்பி" என்று பதிலும் கூடவே வீட்டினுள் இருந்து வந்தது. "ரை ஏதோ கிடக்குதாம். ஒன்றிரண்டு தருவதாக மாமா கூறினார். நான் இல்லெண்டாலும் உங்களிட்டக் கேட்டால் தருவீங்கள் என்று சொன்னவர்" ஒரே மூச்சில் கூறி முடித்தேன்.

"இங்கேதப்பு ரை?" உதெல்லாம் கடன்வாங்குற சாமான்களே! மாமியின் சப்பென்ற பதிலால் எந்த முடிவுக்கும் வராத நிலையில் அப்படியே நின்றுகொண்டிருக்கிறேன் பேய் அறைந்தவனாக.

கல் நெஞ்சிலும் ஓர் கசிவு.

"பிள்ளை அங்கே போய்ப் பார், பெட்டிக்குள்ள ஏதாச்சும் கிடக்குதோ எண்டு." ஆணை பிறப்பித்தவள் ஆத்திரத்தில் அனுங்கினாள் "அவருக்கென்ன? வாய்க்கு வந்தபடி உளறித் தள்ளிவிடுறது. பெரிய சீமான் மாதிரி" வீட்டு எஜமானி வார்த்தைகளால் என் நம்பிக்கையை விரட்டினாள்.

நேரம் கரைகிறது. என் நெஞ்சம் பதறுகிறது. "எங்கே, புகைவண்டி புறப்படும் நேரத்திற்குத் தாமதமாகிவிடுமோ" என்று.

"டாங்..... டாங்...... டாங்......"

ஆறு மணி. இன்னும் முக்கால் மணி நேரத்தில் பஸ் பிடித்து யாழ்ப்பாணம் ஸ்ரேசனுக்குச் சென்றுவிடவேண்டும்.

முறுகிக் கறுத்த வலுவிழந்த ஒரு 'ரை' சடலம் மகளின் கையில் நெளிந்தது.

என் அதிருப்தி முகத்தில் நிழலாடியிருக்க வேண்டும். அடுத்த கையில் தொங்குவது புத்தம் புதிய சக்லேட் கலர் ரை. அவள் முகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயத்தின் சாயல் நிழலாடியது. நடையில் தளர்ச்சி.

"அம்மா......" கனிவு குழைய அழைத்தவள் இரக்கும் குரலில் உது மிச்சம் கேவலம். "உது தேவலை இரண்டையும் கொடுக்கட்டே" தயங்கியபடி நின்றுகொண்டிருந்தாள்.

"உதக் கொண்டு போடடி. உங்களுக்கு உதுகளப் பற்றி தெரியுமே" அம்மாவின் அதட்டல் பலமாக என் காதுகளில் விழுந்தது. மகள் என்னை அனுதாபத்துடன் நோக்கினாள். ரை பரீட்சயமற்ற எனக்கே அதன் தோற்றத்தில் அதிருப்தியும் குறைபாடும் தென்பட்டதென்றால், அதன் நிலை......?

பண்பாடு என்பதற்காக அதனைப் பெற்றுக்கொண்டு திரும்பி இரண்டு அடிகள் வைத்தேன்.

"உவங்கள் ரை கட்டப் பெரிய மனிசராப் போட்டினமே! இரவல் வாங்கி உந்தமாதிரிப் போட்டுக்கொண்டு திரியிறத்துக்கு வெட்கமில்லையே? இல்லாதவங்களுக்கு என்ன சேர்ட்டு, கோட்டு, ரை, நடப்பு? எப்ப வந்த மவுசு உதெல்லாம்? தகுதி வேணாமே?"

"சும்மா இரு, அம்மா. எல்லாரும் மனிஷர் தானே."

"என்னடி நீயும் கூட சமத்துவம் பேச வந்துட்டியோ.? எல்லாம் உங்க கிடக்குதே வாய் வச்சிருக்கத் தெரியாமல் வந்த வளத்திற்கு உளறுறது பேந்து யோசிக்கிறது" மாமியின் சீற்றம் மாமா மீது சென்றது.

"நான் ஏதோ கதைக்குச் சொல்லிவைச்சன். உத நம்பிக்கொண்டு உந்த மாதிரி வெட்கமில்லாமல் வருவினம் எண்டு நாங்கள் நினைச்சதே!"

என் காதுகளைக்கூட நம்பமுடியவில்லை! முன் நோக்கி நடந்த நான் கடைசியாக் கேட்ட அந்த வார்த்தையின் ஆகர்சண சக்தியாலோ என்னவோ பின்னோக்கித் தன்னிச்சைப்படி கால்கள் வந்து கொண்டிருந்தன.

இதயத்தையும் நாவையும் வார்த்தையால் இணைப்போர் மிகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலரே. இரண்டுக்கும் தொடர்பில்லாத பேச்சினால் கேட்போருக்கு மட்டுமல்ல கதைப்போருக்கும் கூட அது பயனற்றதாகி விடுகிறது.

கீதையிலே கண்ணன் கூறிய "கடமையைச் செய், பலனை எதிர்பாராதே" என்ற வார்த்தைக்குப் புதிய கோணத்தில் அர்த்தம் பளிச்சிட்டது அப்போது.

வீட்டுக்கு வந்ததற்காக அப்போதைய சூழலுக்கு ஏற்றாற்போல் நன்றாக பேசினார் நாலு வார்த்தைகள், நல் உபதேசங்கள் - அது அவருடைய கடமை.

அந்த வார்த்தைக்குப் பலனை எதிர்பார்த்து அவர் வீட்டுக்கு ஓடினேனே - அது என் மடமை.

[2]

"என்ன தம்பி வந்த நீங்கள்? முக்கியமான விடயமோ? கட்டுப்பெத்த தொழில் நுட்பக் கல்லூரி கனிஸ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பயிற்ச்சிக்கு தெரிவுசெய்யப்பட்டு இருக்கிறேன் மாமா."

"அதுக்கு இப்ப என்ன செய்ய வேணும்? வருடமொன்றுக்கு 18,000/- சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர் அல்லது சமாதான நீதவான் இந்த ஒப்பந்தத்தில பிணைதாரராக நிற்கவேணும். அதுதான் உங்களிட்டை............."

"உதாலவாற நட்டத்திற்கு நான் பொறுப்பாளியாக கையெழுத்துப் போடவேணும் எண்டு சொல்லுங்கோ; அப்படித்தானே?"

"ஓம்" என் தலையும் சேர்ந்து ஆமோதித்தது. என் தொனியில் சற்று ஏக்கம் கலந்திருந்தது. எங்கே அவர் சம்மதிக்காமல் விட்டு விடுவாரோ என்ற பயத்தினால் கண்கள் அவரையே பார்த்தபடி இமைக்காமல் காத்திருந்தன.

"நான் எப்படி........?" என்று இழுத்தவர் தொடர்ந்தார். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் சங்கடமான சமாச்சாரம். வேறு யாரையாவது கேட்கவில்லையா?

"இல்லை"

"ஏன்"

"...................." வாய் வரண்ட அர்த்தமற்ற சிரிப்பை வரவழைக்க கைகள் எதையோ சீண்டிக்கொண்டிருந்தன.

அதுவரை என் முன்னால் நின்றுகொண்டிருந்தவர் பக்கத்தில் கிடந்த நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்து காலை மேலே தூக்கிப் போட்டபடி மூக்கில் சுட்டுவிரலை வைத்துக்கோண்டு "இம்.......... என்ன செய்யிறது..........?" தனக்குள் அனுதாபத்தோடு சிந்திப்பதாகப் பாசாங்கு செய்து கொண்டார். அவர் தலைக்குமேலே சுவரில் மாட்டப்பட்டிருந்த மகாத்மா காந்தி சிரித்தபடி நின்றிருந்தார். "தயவுசெய்து மறுக்காமல் செய்து தாருங்கள். பெரிய உதவியாக இருக்கும்." மன்றாடினாற்போல் இரந்தேன்.

"உதுகளின்ர சரித்திரம் முற்றாகத் தெரியாமல் என்னால கையெழுத்துப் போட ஏலாது, தெரியுதே? வேறுயாரையும் போய்க் கேளும், சரியா?" சாட்டுப்போக்குச் சொல்லித் தட்டிக்கழிக்க முயன்றார்.

சாதாரண இந்த உதவியைக்கூட செய்ய இயலாதவர்கள் சொந்தக்காரர்கள். பிணத்தில் விழுந்து மாரடிப்பதொன்றே இவர்களால் செய்ய முடிந்த சேவை போலும்.

பொருளில்லாதவர்கள் நாணயஸ்தர்களாக முடியாதா? என்று நினைத்த போது என் கண்கள் குளமாயின.

"பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை" என்ற வள்ளுவன் வாய்மொழி மூளையின் ஒரு மூலையில் தோன்றி நெஞ்சில் எழுந்த துன்ப அலைகள் கண்ணீராக வொட்டாமல் தடுத்து நிறுத்தியது.

"அப்பா" சிந்தனை சிறகடிக்க சிரசெடுத்தேன். "முழு விபரமும் எனக்குத் தெரியும், அப்பா. என் கூடப் படிக்கும் ஒரு பையன் கூட இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்ச்சிக்கு தெரிவாகி உள்ளான். இது ஒரு சாதாரண பிணைதான். பயப்படவே தேவையில்லை. தைரியமாகக் கையெழுத்துப் போடுங்கோ." கதவின் மறைவில் அதுவரையில் ஒளிந்து நின்றிருந்த அவர் மகள் என்சார்பில் வாதிடும் வக்கீலானாள்.

"அதெல்லாம் நான் பார்த்துக்கொள்வேன். நீ போய் உன்னுடைய அலுவலைக் கவனியும்." அவருடைய அதட்டலுக்கு அவளால் என்ன செய்துவிட முடியும்?

மின்னல் தோன்றவில்லை. பயங்கர இடிதான் தோன்றியது. தந்தையற்ற என் வாழ்வில் ஏற்பட்ட தடைகளை நினைத்த போது தண்ணீராய்ப் பொழிந்தது கண்ணீர்.

எழுந்தேன், நடந்தேன், விரைந்தேன். அவ்விடத்தை விட்டு வேகமாக. வெறும் நடைப்பிணமாக கால் போன போக்கில். என் இதயக் குமுறலைக் கொட்டி அழுது தீர்க்க என் படிப்பறையில் மாட்டப்பட்டிருந்த செல்வக்குமரன் திருத்தாள் பணிந்து நிற்க.

அப்பம் சுட்டுவிற்று என்னை வளர்க்கும் என் அன்னைக்கு அன்று முத்திரைக் காசு மிச்சம். அவள் உடன் பிறந்த தம்பி அவர். இரத்தப் பாசம் அல்லவா?

[3]

"கரிதமாத்தயா? கரிதமாத்தயா?" என்றபடி எப்பொழுதும் சிறுபிள்ளை போல் வளைய வளைய என்னை வலம் வந்து கொண்டிருந்தாள், கந்தோரில் எனது பகுதில் எழுதுவினைஞராகத் தொழில்புரியும் பத்மினி என்ற சிங்கள யுவதி. கட்டடப்பகுதி உப பரிசோதகர் என்ற வகையில் உத்தியோக ரீதியில் எனக்கும் அவளுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

"அறுணாசளம்" என்னுடைய பெயரை இப்படித்தான் எழுதிக்கொண்டு வந்து "கரிதமாத்தயா? வறதிநம் பொட்டக்......" என்று என்னிடமே காண்பித்த போது சீழ்த்தலைச் சாத்தனாராக மாறவேண்டும் போலிருந்தது. பென்சிலால் தலையில் அடித்தபடியே அருணாசலம் என்று தெளிவாக எழுதிக் கொடுத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பாடப் புத்தகங்களிலுள்ள ஐயங்களை என்னிடம் கேட்டுத் தெளிந்துகொண்டு ஆர்வத்துடன் தமிழ் மொழியைக் கற்று வந்தாள். தமிழ் மொழிக்கு என்னாலும் தொண்டு செய்ய முடிந்ததை எண்ணிச் சந்தோஷப்படாமல் இருக்க முடியவில்லை.

பத்மினி அழகி என்றோ, கவர்ச்சிக் கன்னி என்றோ கூறுவதற்கில்லை. அன்பும் பண்பும் இனிய சுபாவமும் பொருந்திய ஏழைக் கிராமப் பெண். தமிழ் மொழியில் அவள் காட்டிய அக்கறையை நேரில் அறிய முடிந்தபோது அவள் மீது எனக்கு ஒரு அன்பு ஏற்பட்டது. அதுவே அவள்மீது காதலை வளர்த்திருக்க வேண்டும்.

நாளும் பொழுதும் அவளுடன் பழகப் பழக, அவள் மொழி என்னிடமும் மெல்ல மெல்ல உறவாடத் தொடங்கியது. எனது சிங்களத்தைக் கேட்டு அவள் விழுந்து விழுந்து சிரிப்பாள். குழந்தைக்குத் தாய் சொல்லிக் கொடுப்பது போல் அன்போடு சரியான பதத்தைக்கூறி நான் முறைப்படி உச்சரிக்கும் வரை திரும்பத் திரும்ப வற்புறுத்திக் காத்திருப்பாள்.

பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்ற வார்த்தை காதலுலகிற்குப் பொருந்தாது என்பதை அனுபவம் எனக்குணர்த்தியது. நாளுக்கு நாள் அன்பும் ஆர்வமும் பெருகியதேயன்றி, குறையவில்லை.

உரோசாச் செடியில் மலர்ந்த பூவின் வாசனை எங்களுக்கு மணம் கொடுத்தாலும் இருநூறு மைல்களுக்கப்பால் இருந்த என் தாயின் மூக்கில் நுர்நாற்றமாக பரவியது! அதன் எதிரொலி, நீண்ட கடிதம் அம்மாவின் கையெழுத்துப்பட.

கடிதத்தை நான்காவது முறையாகப் படித்துக்கொண்டிருந்த போதுதான் பத்மினி என் அறையினுள் நுளைந்திருக்க வேண்டும்.

வழமையான அவளது சேட்டைகள் எனது காதுகளுக்கு இதமளிக்கவில்லை. இரசனை அற்ற நிலையில் துக்கம் தொண்டையை அடைக்க இருந்துகொண்டிருந்தேன்.

எனது மாறுதலைப் புரிந்துகொண்ட அவளால் அதற்கான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தைக் கண்டுகொள்ள முடியாமல் போய்விட்டது.

குழந்தை போல் தான் படித்த மழலைத் தமிழ் மொழியில் என்னோடு உறவாடினாள். தோளில் தட்டிச் சிரிப்பு காட்டினாள். சிரிப்புக்குப் பதில் கலங்கிய கண்களில் இருந்து நீர் துளிர்ப்பதைப் பார்த்தவள் என்ன நினைத்தாளோ?

"ஒங்களுக்குச் சொகம் இல்லையா?" என்று தமிழில் கேட்டுவைத்தாள். "இல்லை" என்ற பாவனையில் தலையை மட்டும் அசைத்தேன். மேசைமீது இருந்த கடிதம் அவளது கண்களில் பட்டுவிட்டது. கேளாமல் எடுத்துப் பிரித்து உரக்கப் படித்தாள். "அந்தச் சிங்களத்தி மயக்கிப் போட்டாளே? உன்ர மாமன் மகளைவிட அவள் என்ன அழகியே......." என்றவள் திடீரென்று நிறுத்தினாள். வழமையாக அவள் இதழ்களை அலங்கரிக்கும் இளநகை எங்கோ மறைந்து போயிற்று. ஏமாற்றம் கலந்த போலிச்சிரிப்பு வியாபித்து இருந்தது.

ஒங்கட மாமாட மகல கலியாணம் கட்டச் சொல்லி எழுதியிருக்கி, சரி......? என்ன பார்க்க அந்த குட்டி நல்லம். அப்படி செய்யுங்க.

மங்கள வாழ்த்து பாடினாள். அவளது கண்களில் நீர் துளிக்கக் காரணம்? அவள் முகத்தை நோக்கக் கூசியது எனக்கு.

அன்று நிம்மதி என்பது என்ன என்பதை அறியும் வாய்ப்பு ஏற்பட்டது. அடுத்தநாள் கந்தோருக்கு வந்ததும் வராததுமாக,

அன்புள்ள அம்மா,

கடிதம் கிடைத்தது. சுகம். மனதிற்குத்தான் நிம்மதியில்லை. ஏழைகள் நாங்கள். எங்களுக்கு எதற்கம்மா பெரிய சம்பந்தமெல்லாம்? மாமாவும் மாமியும் என் வாழ்க்கைக்கு எத்தனை முட்டுக்கட்டைகளை போட்டார்கள்? பிணைகாரனாகப் போட்டுதரத் தகுதியற்ற, நாணயமற்ற அயோக்கியன் நான். ரை அணியும் அருகதையில்லாத தாழ்ந்தவன் நான். எப்படியம்மா அவர்களுக்கு மாப்பிள்ளையாக நான் வரமுடியும்? அதற்கு மட்டும் நான் தகுதியுடையவனா? நீங்கள் சொல்லுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழையாக இருந்தாலும் அன்பும், ஒழுக்கமும் உள்ள பெண்ணே நமது அந்தஸ்திற்குப் பொருந்தும். அப்படிப்பட்ட ஒருத்தியை உங்கள் அனுமதியில்லாமல், ஆனால் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தேர்ந்தெடுத்துவிட்டேன். பிழை இருப்பின் மன்னிக்கவும். சிங்களப் பெண்ணானாலும் அவள் பண்புள்ளவள். எனக்கும் நமது குடும்பத்திற்கும் பொருத்தமானவள்.

என் வேண்டுகோளுக்கிசைந்து, என் விருப்பப்படி அவளையே மணக்கத் தடை விதிக்க வேண்டாமென்று இருகரம் கூம்பி வேண்டி முடிக்கிறேன்.

மற்றவை நேரில். வணக்கம்.

இப்படிக்கு,
தங்கள் ஆசை மகன்,
அருணாசலம்.

கடிதத்தை எழுதி அனுப்பிவிட்டேன்.

இரண்டு நாட்களின் பின் நான் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. அம்மா, மாமா, மாமி அவர்கள் மகள் எல்லோரும் விவாக ஆயத்தங்களோடு என் எதிரே நின்றுகொண்டிருந்தனர்.

அம்மா என்னை அவள் தம்பிக்கு இருபத்தைந்தாயிரத்திற்கு விற்றுவிட்டாள்.

சொந்தம், பாசம், பிணைப்பு என்பவற்றை என் அம்மாவின் காதில் ஊதி வசப்படுத்த கை நிறைந்த பணம் மாமாவிற்கு உதவி செய்தது.

பாவம் பத்மினி. பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை.

*(யாவும் கற்பனை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09. விபரீதம்.

அந்தச் சாலையின் சந்தடியற்ற பகுதியில் தன்னந்தனியாக தகிக்கும் வெயிலிலும் குனிந்தபடியே வேகமாக சென்று கொண்டிருந்த அவள், அகோர வெயிலின் கொடுமையை தணிப்பதற்காக கையில் குடையை ஏந்தியிருந்தாள்.

பாதையில் இருமருங்கும் முன்னும் பின்னுமாக திரும்பித் திரும்பி பார்க்கும் பார்வை அந்தரங்கமாக அவளுக்குள்ள அச்சத்தை வெளிப்படுத்தியது. அழகு குறைந்த அவளுடைய முகம் அச்சத்தினாலும் அகோர வெயிலின் தாக்கத்தினாலும் விகாரமாகக் காட்சியளித்தது.

இன்னும் கால்கள் விறுவிறுத்து நடந்த வண்ணமே இருக்கின்றன.

சிறிய அந்தக் தேநீர்ச்சாலையின் முன்னால் வந்ததும், நடையைச் சிறிது தளர்த்தி, அங்கும் இங்கும் பார்க்கிறாள். கையில் மாட்டப்பட்டிருந்த தன் கடிகாரத்தையும் ஒரு தடவை பார்த்து "இச்" என்று அதிருப்தியைத் தெரிவித்திருக்க வேண்டும்.

இடையினில் செருகியிருந்த கைக்குட்டையை இலாவகமாக எடுத்து வியர்வையால் நனைந்துபோன முகத்தையும், கழுத்துப் பிடரியையும் துடைத்துவிட்டு பக்குவமாக மடித்து அதனை இருந்தமாதிரியே சுற்றியிருந்த சேலையின் விளிம்பில் நாகரிகமான ஒரு பாணியில் செருகிவிட்டு,

"எங்கே இன்னும் காணோமே......? இவ்வளவு நேரத்திற்கு?" யார்மீதோ பிழையைச் சுமர்த்தி அதனால் திருப்தியை பெற முனைகிறது அவள் வாய்.

நடை தளர்ந்து ஓய்தும் விட்டது. நெடுநேரம் தொடர்ந்து ஆற்றிய கடும் வேலையின் வேகத்தினால் இப்போதும் அங்குமிங்குமாக தன்னிச்சைப்படி கால்கள் திரும்பவும் குறுநடை பயில ஆரம்பித்துவிட்டன பாதையின் ஓரமாக.

யாரது வருகையையுமே காணவில்லை! அவளுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்கடிகாரத்தின் படி பன்னிரண்டு மணி முப்பத்தைந்து நிமிடங்கள். அரைமணித்தியாலமாக அவளுக்கு பொழுது போவது மிகவும் சிரமமாகவே இருக்கிறது.

பாதையில் சென்ற அந்த இரண்டொருவர் கூட சரியில்லாத பார்வையையே அவள் மீது பரப்பி, ஏதோ ஒரு தீர்மானத்துடன் தான் நடையைக் கட்டிக் கொண்டு போனார்கள்.

முகம் ஆத்திரத்தால் சிவந்ததை அவளது மங்கல்நிறம் எடுத்துக்காட்ட மறுத்தாலும், முகபாவனை ஓரளவு நிதானிக்கச் செய்தது. சேலையைச் சரிசெய்து கொள்கிறாள். அரங்கேற்றத்தின் போது இறுதியாக நடைபெறும் ஒத்திகை போன்று தனது அலங்கார ஆயத்தங்களை ஒரு முறை குனிந்தும், நிமிர்ந்தும், வளைந்தும், கைகளால் துளாவியும் சரி செய்து கொள்கிறாள்.

"மன்னிக்கவேண்டும். கொஞ்சம் தாமதமாகி விட்டது." குரல் வந்த திசையைக் கூட பார்க்க விரும்பவில்லை. குரலுக்குரியவர் யார் என்பதைத்தான் ஏற்கனவே அறிந்தவளாயிற்றே.

"கோபிக்காதே ரஜி, வேண்டுமென்றா தாமதித்தேன்? தவிர்க்க முடியாத சந்தர்ப்பம். நானும் எவ்வளவோ முயன்றேன். சரிவரவில்லை. இப்போதுதான் ஒரு படியாக சமாளித்து விட்டு ஓடோடி வந்தேன்."

"..................."

"என்ன பேசவே மாட்டாயா? குற்றம் தான். நீ பட்டிருக்கக்கூடிய வேதனையை விட நான் பட்ட துயரமோ........ அப்பப்பா்....... நம்பமாட்டாய்."

"அப்படித்தான் சொல்வீர்கள். இந்தச் சாலையால் போய்க்கொண்டிருந்த அத்தனை பேர்களுடைய விழிகளும் சந்தித்துக் கொண்டிருந்தன. யாராவது தெரிந்தவர்கள் வேறு பார்த்துவிட்டால்......?" அழவேண்டியவள் ஆனால் அழவில்லை. இதழ்களின் ஒரு மூலையில் மெல்ல அரும்பிய குறுநகை "களுக்" என்ற சிரிப்பாக மலர்ந்தது. அது சமரசமேற்பட்டதைப் பறைசாற்றியது போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்தபடியே "வா போகலாம்" என்றான் ஜீவன்.

"எங்கே ?" ஆவலுடன் கேட்டாள் அவனையே வைத்த விழி வாங்காமல் நின்றிருந்த அந்தக் கோதை.

இருவரும் எதிரேயிருந்த அந்தத் தேநீர்ச்சாலையினுள் புகுந்தனர். "ஒரேஞ் பார்லி" ஒரு புட்டி, இரண்டு தம்ளர்கள் மேசைக்கு வரவழைக்கப்பட்டன.

மூடி திறக்கப்பட்டிருந்த புட்டியை கைகளால் தூக்கி இரண்டு தம்ளர்களையும் பேச்சு மூச்சில்லாது நிரப்பிவிட்டு பக்கத்தில் வைத்தான். சோடா இன்னும் மிகுதி இருந்தது புட்டியில்.

அவன் செய்கையையே பார்த்து மெய்மறந்திருந்த அவள் "சரி குடியுங்க" என்ற கரகரத்த அவன் குரல்கேட்டு சுயநினைவுக்கு வந்தவள், புன்னகை சிந்தியபடியே, நாணிக்கோணி கிளாசை கரம்பற்றினாள்.

விபரீதம்!

"உஸ்ஸ்....." மேசை எங்கும் ஒரே வெள்ளமாகப் பெருகியது. நொருங்கியது தம்ளரா? இல்லை! அடிப்பாகம் அப்படியே சுற்றால் கழன்று "தொப்" என்று விழுந்து விட்டது. ஊற்றப்பட்டிருந்த சோடா இடமெங்கும் பரவி வழிந்தோடியது.

[2]

"சார்....... சார்...... சார்......" படலைக்கு வெளியே நின்று குரல்கொடுத்து வெகுநேரமாகியும் பதிலைப் பெற்றுக்கொள்ளாத ஜீவன் அதனூடே இருந்த துவாரமொன்றின் வழியாக தன் கண்களின் பார்வையைச் செலுத்தினான். முன்னொருபோதும் ஏற்பட்டிருக்காத புதுவித உணர்வு, உற்சாகம், மகிழ்ச்சி. ஏன்? அதுதான் அவனுக்கும் புரியவில்லை. வார்த்தைகள் கொண்டு வர்ணிக்க முடியவில்லை. அந்த அளவுக்கு அவனென்ன கவிஞனா? அறிஞனா? எழுத்தாற்றல் படைத்தவனா? எந்தத் தகைமையும் இல்லையே! பாடசாலை மாணவன் என்பதைத் தவிர. உள்ஞர அவற்றின் தத்ரூப தரிசனத்தை கற்பனையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தி உவகைத்தேனைப் பருக முடிந்ததேயன்றி எந்த ஒரு சிறு அளவிலாவது பிறருக்கு ஊட்ட முடியவில்லை, அவனால்.

பரிசளிப்பு விழா சோடனை வேலைகட்கு வீட்டில் இருந்து இரும்பு வலைத்துண்டுகள் இரண்டையும் எடுத்து வரும்படி ஆசிரியர் சுந்தரம் தன் வீட்டுக்கு அனுப்பிவைக்க, அதற்காக ஓடோடி வந்த ஜீவனுக்கு குறுக்குக் கட்டுடன் கிணற்றடியில் தன்னந்தனியாக நீராடிக்கொண்டிருந்த அவர் தங்கை ரஜியின் அங்கவுறுப்புகள் தண்ணீரில் நனைந்து, உடலோடு ஒட்டி உறவாடிய மெல்லிய பருத்தித் துணியினால் அப்படியே "ரிகூ" காதிதமாகி கண்களுக்கு விருந்து படைத்தது. மாநிறமான அவள் தேக அழகு பருவ எழிலோடு கலந்து, பார்வைக்கு இதமளித்தது. சவர்க்கார நுரையில் அவள் கவர்ச்சிக் கன்னியாகவே தோன்றினாள். சிலையாக சமைந்து நிலையாக நின்றுவிட்டான் வலை எடுக்க வந்த கலைஞன்.

பதினைந்து நிமிடங்கள் போனதை அவன் எப்படி மறந்தானோ? ஒரு படியாகச் சமாளித்து விட்டு "சார்" என்று முணுமுணுத்திருக்க வேண்டும். எங்கே அவள் காதுகளில் பட்டால் ஓடி மறைந்து விடுவாளோ என்ற ஏக்கம்.

இரண்டு கண்களும் ஒன்றையொன்று சந்தித்தன; குரல் வந்த திசையில் தன்பார்வையை அவள் திருப்பி விட்டபோது.

அவசரமாக ஓடிச்சென்று சேலையால் அரைகுறையாக மூடிமறைத்தபடி "என்ன?" வெருட்டென்று வினாவினாள். கோபமும் சிறுது நாணமும் கலந்திருந்தன, அந்தக் கேள்வியில்.

எதையோ இரக்கும் முகபாவத்துடன் சென்று எப்படியோ இரும்பு வலைகளுடன் வெளியேறினாலும், மனம் மட்டும் பின்நோக்கிச் சென்று ரஜியின் செட்டான மேனியை வட்டமிட்ட வண்ணமே இருந்தது.

[3]

இளமையில் தாயை இழந்த ரஜி வயது சென்ற தன் தந்தையுடனும் தமையனுடனுமே வாழ்ந்து வந்தாள். பருவ பக்குவமடைந்திருந்தாலும், அவளை விலைச்சரக்காக மாற்ற அவர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. காரணம், வறுமை என்ற வல்லரக்கன் வாழ்க்கை தேடிச்சென்ற இடமெல்லாம் வன்றூது சென்று கொண்டிருந்தான்.

வாழ வேண்டியவள் அவள் ; வாழ நினைப்பதில் தவறில்லை தான். வாழ்க்கையைத் தேடிக்கொடுக்கும் பொறுப்பு ஆசிரியருடையது. ஆனால் அவர் ஆற்றலோ அளவு போடப்பட்டிருக்கிறதே, சமூகம் என்ற சமுத்திரத்தில்.

ஜீவன் படிப்புக்கு முழுக்குப்போட்டு விட்டு, எவரது உதவியுடனோ எப்படியோ அரசாங்க திணைக்களமொன்றில் சிற்றூழியனாக சேர்ந்து விட்டான்.

முன்பெல்லாம் மாணவன் என்ற வகையில் சுந்தரத்திடம் அவர் வீட்டுக்கு வந்தவன், இப்போதோ நண்பனாக, உறவினனாக, உதவுவோனாக நாள் தவறினாலும் அவன் வருகை மட்டும் குறையாதிருந்தது. பார்ப்பதற்கு வாளிப்பாகவும், ஆண்மையுடனும் விளங்கிய ஜீவனை, ரஜி உண்மையிலேயே உள்ளூர விரும்பினாலும் அவள் அடிமனதில் அதனை ஏற்க வொண்ணாமல் ஏதோவொன்று தடுப்பதை உணர்ந்தும் உணராத பேதையானாள். எல்லாம் இருந்த போதிலும் தொழில் அந்தஸ்து அவள் மனதை சாந்திப்படுத்தவில்லை! காதலில் தான் எத்தனை வகை.

முப்பது வருடமாக தாயை இழந்தும், இதுவரை எவரும் ஒழுக்கத்தில் குறைகண்டு மாசு கற்பிக்காதது, அவளுக்கு பெருமையாக இருந்தது. சமூகம் அவள் காதுகளில் படும்படியாக பாராட்டிப் பேசியதையும் அறியாமலில்லை.

சமூகத்திலென்ன, சொந்த வீட்டில் கூட அவளைப்பற்றி எப்போழுதுமே ஒரு பிரத்தியேக மரியாதை நிலைத்திருந்தது. அத்தனைக்கும் காரணம் அவளது நடத்தை என்பது மட்டுமல்ல, சமயோசித புத்தி சாதூரியங்களுமெனலாம்.

பருவ உணர்வில் ஊறித் திளைத்து அதையே கனவு கண்டுகொண்டிருந்த அவள் பிறர் தன்னை புரிந்துகொள்ளாதபடி மறைத்து ஏமாற்றி வந்தாலும், காமநோய் உள்ளூர வெகுவாக வாட்டியபோதெல்லாம் தன்னை வேறுகாரியங்களில ஈடுபடுத்தி அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டொழிக்க, எதிர்பாலாரோடு தான் பழகும் வாய்ப்பற்ற தனிமை சந்தர்ப்பத்தை தேடிக்கொடுத்தாலும் அதே சந்தர்ப்பம் ஜீவனுடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டபோது புத்தியை பேதலிக்கச்செய்து முற்றாக ஏமாற்றியும் விட்டது.

அவள் பேரழகியல்ல. அவளிடம் அப்படியொன்றும் பூத்தும் காய்த்தும் குலுங்கவில்லை. கவனிப்பாரற்றுக் கிடந்த முல்லைக் கொடி அவள். பற்றிப் படர இடம் கேட்டாள்; பாரி வள்ளலோ தன் வாழ்க்கை என்னும் தேரையே அர்ப்பணம் செய்யத் திடசித்தமாக நின்றான்.

முல்லைக்கொடி கேட்டதேல்லாம் பற்றிப்படர்ந்து பெருவிருட்சத்தை தாவவோர் இடமே. பாவம் பாரிவள்ளலோ அவள் மனக்கிடக்கையை அறிந்திருக்க அனுபவம் போதவில்லை.

எத்தனையோ தனிமைகள், இனிக்கும் இன்ப இரவுகள், அத்தனையும் பயம் கலவாத நம்பிக்கை நிறைந்த சௌகரியங்கள். இத்தனையும் அந்தக் காதல் தம்பதிகளை மகிழ்விக்க ஏற்படுத்தப்பட்ட இறைவனின் சதிகளா?

மூன்று வருடமாக யாருக்கும் புரியாதபடி தன்மதியினால் பேணிக்காத்த போலிப் புனித பெண்மை, விதியின் சதியால் இப்போது வெளியில் நாற்றம் எடுக்கத் தொடங்கி விட்டது.

முன்பும் பலதடவைகள் கையும் மெய்யுமாக அகப்பட்டுப் போனோமென்று ஜீவன் திகைப்படைந்து, நாதியற்று, நடுங்கி நின்ற வேளைகளில் "சபாஸ்" "சபாஸ்" என்று பாராட்டத்தக்கவிதமாக பொருத்தமான யுக்திகளை பிரயோகித்து தப்பவைத்திருக்கிறாள் ரஜி. இதனால் ஜீவனுக்கு அவள்மீது மதிப்பும் அவள் திறமையில் மிகுந்த நம்பிக்கையும் ஏற்பட்டது நியாயம் தானே?

தங்கையின் போக்கில் சந்தேகம் கொண்ட சுந்தரம் ஊன்றி அவதானித்தபோது தான் சுழல்காற்றின் சுழியோட்டத்தின் பாரதூரமான விளைவுகளைப் புரிந்து கொண்டார்.

அடித்தார், உதைத்தார், ஆற்றாதழுதார், நாயிலும் கீழாகத் தூற்றினார். ஆவதென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழிச்சின்னமோ அவள் வயிற்றில் வளர்வதென்பது உண்மைதானே?

"அடி சண்டாளி என்னைக் குட்டிச் சுவராக்கி விட்டாயே! எப்படியெல்லாம் கற்பனையில் மிதந்து கொண்டிருந்தேன். அத்தனையையும் தவிடு பொடியாகச் செய்து விட்டாயே, பாதகி எப்படியடி விழிப்பேன் இனிப் பண்புள்ளோர் பார்வையில்?"

"அண்ணா........"

அண்ணாவா? திரும்பவும் அந்த வார்த்தையைக் கூறாதே. அதற்குள்ள உரிமையை இழந்து விட்டாய். இத்தனை நாளும் பேணிக்காத்த பெருமையை சந்தி சிரிக்க சரித்து விட்டாயே. என் முன்னே நிற்காதே ஓடிவிடு. போய்த் தொலை "கழுதை" பித்தம் தலைக்கேறியவனாக பிதற்றினான் சுந்தரம்.

"அண்ணா" என்றவள் விம்மலுக்கும் கண்ணீருக்குமிடையே அவன் காதுகளில் நம்பும்படி நாசூக்காக ஒப்புவித்து விட்டாள் "அதனை".

அடுத்த நிமிடம், பித்துப் பிடித்தவனாக மாறி விட்டான் சுந்தரம். உக்கிர சங்கார மூர்த்தியின் தோற்றம் எங்கிருந்து கிடைத்தது அவனுக்கு.

"அண்ணா நில்லுங்கள், நில்லுங்கள்" தங்கையின் ஏமாற்று வார்த்தைக்கிருந்த சக்தி பாசமாக அழைத்த "அண்ணா" என்ற வார்த்தைக்கு இல்லாமல் போயிற்று!

சற்று நேரத்திலெல்லாம் வீறு கொண்டெழுந்து வேலுடன் புறப்பட்டுச் சென்ற வீரசிங்கம் அந்த நாகு மரத்தின் கீழ் நாதியற்று குற்றுயிராகத் துடித்துக் கொண்டிருந்தது.

இரத்தம் தோய்ந்த கத்தியுடன் பொலிஸ் நிலையத்தை நோக்கி ஓடிக்கொண்டிக்கிறான் ஜீவன் சரணடைவதற்காக.

அண்ணனின் கதியைக் கேட்டு அழுது மயக்கமுற்று கிடக்கிறாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ப்பவதியான ரஜி.

[4]

பதினைந்து வருடங்கள் உருண்டு நகர்ந்து விட்டன. வாலிபம் கலைந்து விட்டது. காமம் குறைந்து விட்டது. உலகம் புரிந்து விட்டது. ஞானம், விதி அவர்களை வெவ்வேறு திசைக்கு ஒதுக்கிவிட்டது.

ஆயுள் தண்டனை அரைமட்டமாகக் குறைக்கப்பட்டு நன் நடத்தையின் பேரால் அதிலும் குறைக்கப்பட்டு சிறையிலிருந்து விடுதலை கிடைத்து விட்டது ஜீவனுக்கு.

எல்லாமே மாற்றம். நாளுக்கு நாள் முன்னேறிவரும் உலகியல் நாகரிகத்தின் விந்தையான போக்கு.

தாளாத தண்ணீர் விடாய். அந்த நகர் வீதியின் ஏழாவது வீடு அவனை இழுத்தெடுத்தது ! கால்கள் இயந்திரம் போல் செயல்படுகின்றன.

"அம்மா, கொஞ்சம் குடிப்பதற்கு தண்ணீர் கொடுங்கள்" பிரலாபித்தான் ஜீவன்.

பன்னிரண்டு வயதைத் தாண்டிய பெண்குழந்தை ஒரு கண்ணாடித் தம்ளரில் தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்தது.

கைக் கெட்டியது வாய்க்கெட்டவில்லை! அடி சுற்றால் விட்டுவிட்டது தம்ளர். அகல விரிந்தன அவன் கண்கள் ஆச்சரியத்தால். மறைந்து கிடந்த அந்த சம்பவம் புத்துயிர் பெற்றது அவன் மனத்திரையில் மறுபடியும்.

கண்ணீரை கையால் வருடியபடி வெளியேறிக் கொண்டிருந்தான் கால் போன போக்கில்.

எங்கும் அந்தகாரகம் கௌவிக் கொண்டது. அந்த இருளில் இனந்தெரியாத ஒரு புது உலகை நாடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. பத்திரிகை விளம்பரம்.

பார்க்கிறேன்; கேட்கிறேன்; உணருகிறேன்.

பார்த்தவை, கேட்டவை, உணர்ந்தவை - இவற்றோடு படித்தவற்யையும் சேர்த்துக் கலந்து சிந்திக்கிறேன்.

முடிவு..........?

பழைய இடத்திற்கே வந்து நிற்கிறது அறிவு. எல்லோருக்கும் பிரச்சனை உண்டு. எனக்கும் உண்டு. மறுக்கவில்லை. ஆனால் இதுமிகவும் இக்கட்டான பிரச்சினை. வாழ்க்கையில் எது ஏற்படக்கூடாதோ அதே பிரச்சனை.

எனது ஆற்றலுக்கு அப்பாற்பட்ட பிரச்சினை. பாதிக்கப்படும் தாக்குப் பொருள் நானாக இருந்தால் இதனைப்பற்றி கவலையே படமாட்டேன்.

ஆனால் இதுவோ முழுக்குடும்பத்தின் எதிர்காலச் சுபீட்சம், வளர்ச்சி, செழிப்பு இத்தனையையும் நிர்ணயித்து அதற்கப்பாலும் தீங்கு விளைவிக்கக்கூடியதொரு விசமத்தனமான நிகழ்ச்சியாக இருக்கிறதே.

இன்னும் தான் என்னால் என்ன செய்துவிட முடியும்? ஒன்றில்; எனது பாதையை, இலட்சியத்தை மாற்றிக் கொள்ளவேண்டும். அதாவது - நீதி, நேர்மை, உண்மை என்னும் இவற்றை முற்றாக என்வாழ்க்கையிலிருந்து விரட்டியடிக்க வேண்டும். இல்லை; இத்தகைய உதார குணங்கள் நிரம்பப்பெற்றவர் என்று சமூகம் எனக்களித்த இந்த வெண்பட்டுத்துணிக்குள் நான் ஒரு குஸ்டரோகியாக-வெறும் வேடதாரியாக வாழ்க்கையை மறுசீரமைத்துக் கொள்ள வேண்டும்.

லஞ்சம், பொய், களவு என்பவற்றை வாழ்த்துக் கூறி வரவழைத்துக் கொள்ள வேண்டும்.

இதற்கு என் அந்தராத்மா அடியோடு இடம்தர மறுக்கிறதே. இல்லையென்றால் எதற்கும் சரி என்ற மனோபாவத்துடன் ஒத்துப்போக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியது தான். அதாவது, மற்றவர்களைப்பற்றிய எந்த நலனிலும் அக்கறை கொள்ளாது எனது நலம், எனது முன்னேற்றம், எனது அபிவிருத்தி ஆகியவற்றைப் பார்த்துக்கொண்டு சௌகரியமாக புலனைச் செலுத்த வேண்டும்.

வானம் பார்த்த பூமிபோல் என்னையே மழையாக நம்பிக்கொண்டிருக்கும் செழித்து வளர வேண்டிய பயிர் என் தங்கை. அவளையே காவல் காத்து நிற்கும் உழவர்கள் என் தந்தையும் தாயும். வேலியே பயிரை மேயும் வகையில் இவர்களுக்குத் துரோகமிழைக்கவும் என்மனதில் இடமே கிடையாது.

அப்படியானால்...........?

இறைவன் வகுத்த வழி.

இத்தனைக்கும் எனக்கு வயது முப்பதுக்கு மேலாகிறது. ஆசைகளின் உந்தல்கள், மனதில் களியாட்ட நிகழ்ச்சிகள், கடமையின் கண்ணியம், கட்டுப்பாட்டின் முக்கியத்துவம், இளமையின் இன்பக் கிளுகிளுப்பு, சமுதாயத்தின் பயங்கரத்தீர்ப்பின் பயமுறுத்தல், "நல்லவன்" என்ற பட்டத்தின் பழம்பெருமையினைக் கட்டிக்காக்க விழையும் போலிக் கௌரவம்.

இவைகளே எனது நாடகத்தின் கதாப்பாத்திரங்கள். இவர்களை வைத்து ஒரு நாவலை வரைந்து விடத்துடிக்கும் ஒரு எழுத்தாளன் நான்.

சிலந்தி வலையில் வீழ்ந்துவிட்ட ஈ இறுதிவரை தன்போராட்டத்தை நிறுத்திக் கொள்ளவில்லை. இறப்பைப் பற்றிய சிந்தனையே அதற்கில்லை. அப்போதுள்ள பிரச்சினையைத் தீர்ப்பதிலேயே முழு உற்சாகத்துடன் சளைக்காமல் இயங்கிக் கொண்டு இருக்கிறது. பாவம், அதன்விதி அதற்கு உடந்தையாக இல்லையே!

பின்னங்கால்களைத் தள்ள முன்னங்கால்கள் தவறுகின்றன. அவற்றை சீர் செய்துவிட கவிழ்ந்து பழையபடிபோல் முந்திய இடத்திற்கே கொண்டு வரப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் இறக்கைகள் ஒடிந்த நிலையில் வெற்றி பெறுகிறது.

[2]

உழைத்து அலுத்துவிட்ட வயது சென்ற தந்தை, தாய். இருபது வயதைத் தாண்டி விட்ட பருவமடைந்த தங்கை, படித்துவிட்டு வேலையற்று இருக்கும் தம்பி, வாலிப முறுக்கேறிய நிலையில் ஆசைகளையும் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் நான்.

இத்தனை பேரும் எனது பாதுகாப்பில் - வருமானத்திலே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்.

வருமானம் என்ன அவணக்கணக்கா? மாதம் முந்நூற்றி இருபத்தைந்து ரூபா.

செலவுகள்.

வாழ்க்கைச் செலவே இருநூற்றைம்பதுக்கு மேல். அதுவும் சிக்கனம், கட்டுப்பாடு என்பவற்றால் இம்மட்டு.

உள்ள பிரச்சனைகளோ-
புதுவீடு கட்ட வேண்டும்;
வரன்தேட வேண்டும்;
விவாகம் செய்தாக வேண்டும்.
உத்தேசிக்கப்படும் செலவு நாற்பத்தையாயிரத்துக்கு மேல்.

இதற்கிடையில்,

வீட்டில் எழும் அதிருப்திகள், மனக்கிலேசங்கள், பொருமல்கள், சிறுசச்சரவுகள்.

"கறி ஆக்கி இருக்கிறாங்க - கறி. முருங்கை இலைச் சுண்டலோட எப்படிச் சோறுதின்றது? எனக்கு வாற ஆத்திரத்திற்கு......"

குசினிக்குள் சாப்படப் புகுந்த தம்பியின் அட்டகாசம். இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவளங்களை புசித்த அவனுக்கு சப்பென்றிருந்த உணவின் தன்மையை நினைக்க நினைக்க வேதனையாக இருந்தது. ஆழுகையும் ஆத்திரமும் கலந்த தொனியில் ஏழுவீடடிபட கர்ச்சிக்கிறான்.

"இறைச்சி, முட்டை, பாலா கேட்கிறேன்? சாதாரணமாக ஒரு மீன் குழம்பு மட்டும் போதுமே. நெடுக இதோட........ கசம்புடிச்சி துலைஞ்சே போயிடுவம்."

அவனது வார்த்தைகள் என்தாயாரின் செவிகளில் விழுந்து தித்திக்கவில்லை. அன்பும் பாசமும் பீறிட்டெழுந்து கண்ணீராக ஓடவில்லை. சீற்றம் தான் பொத்துக் கொண்டு எழுந்தது போலும்.

"டேய் உனக்கு அறிவில்லையா. கோவில் மாடுமாதிரி நேரத்திற்கு நேரம் வந்து திண்டு திண்டு போறதுமில்லாம சொவிசும் தேடுறாரு. இஞ்ச ஆரு என்னிட்ட இதுக்கெல்லாம் உழச்சி வந்து தாறா? வாய்க்கட்டு மட்டும் பெலமாயிருக்கு."

"இனிக் களவெடுக்கத்தான் போக வேணும்." சாப்பிட்டுக் கொண்டே பதில் வந்தது.

"ஏன் களவெடுக்க? மற்ற மனிசனப்போல புழைப்புச் செய்து சம்பாதிக்கிற."

"அப்படிசம்பாதிக்கேலாது நம்மளால"

"அப்ப வாயப்பொத்தித்து உள்ளத்த தின்னு. மிச்சமான கதையள உட்டுப்போட்டு."

"வீட்டுக்கு பாரமா இருந்தா நான் இண்டைக்கே துலைஞ்சி போயிடுறன்."

"ஓ அது நல்லது. ஒருவருக்கும் கரைச்சலே இராது."

பாடசாலை விட்டு வந்து கொண்டிருந்த தங்கை தான் மூழ்கியிருந்த இன்ப உணர்வோடு "அம்மா, யூனியனில நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைத்துணி வந்து கிடக்குதாம். எனக்குச் சட்டையில்லை. ரெண்டுயார் வாங்கித்தாம்மா" என்று கூறிவிட்டு வீட்டில் நடக்கும் சமாச்சாரத்துக்குச் செவியைத் திருப்புகிறாள். சொர்க்க உலகிலிருந்து நரக உலகிற்கு வந்துவிட்ட ஒரு பிரமை அவளுக்கு.

"போடி போடி. உங்கட வேலையை பாருங்க. அறிவே இல்லாத செம்மங்கள். ஊட்டு நிலவரம் இஞ்ச ஆருக்குத் தெரியுது."

அழுகையும் சீற்றமும் பொங்கி வந்து அம்மாவின் வாயை அரைவாசியில் அடைத்துக்கொண்டது. அவள் நெஞ்சு துன்ப வேதனைகளால் இறுக்கப்பட்ட கருங்கல்தான். அதனையும் ஊடுருவிப்பாயும் தன்மை கண்ணீருக்குண்டல்லவா?

அதே சமயம் "சரீர்" என்ற சத்தம் குசினிக்குள் இருந்து கேட்டது. அதனை அடுத்து "தடார்" என்று சிதறும் ஒலி வேறு கேட்டது. சோற்றுக்கோப்பை சுக்கு நூறாக நொருங்கிக் கொண்டிருந்தது.

இரைச்சல், அழுகை, வாக்குவாதம், அல்லோலகல்லோலம். இவற்றிடையே வறுமைப் புராணம் வாசிக்கப்படுகிறது.

[3]

எல்லோர் சொல்வதிலும் ஏதோ ஒரு வகையில் நியாயம் இருக்கவே செய்கிறது. ஒரே விடயத்தில் பலர் கருத்துக்கள் நியாயம் போல் இருந்தாலும், அவை மூலக்கருத்துக்கு ஒருங்கிசைவில்லாத போது எப்படி சமாதானமும் நன்மையும் ஏற்படமுடியும்.

ஏழைகள் வாழ்க்கையில்தான் இறைவன் கூட மனம் போல விளையாடி மகிழ்கிறான் போலும். அவர்கள் சார்பில் பேச யாருமில்லை என்ற தைரியமோ?

ஒவ்வொரு நாளும்தான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் அதற்குத் தீர்வுதான் இல்லை.

ஒரு நாற்பத்தையாயிரம் ரூபா கிடைத்துவிட்டால்....? என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுவருடகால சிந்தனைக்கு - உள்ளத்திலே கேட்கப்பட்டு வந்த ஆயிரம் வினாக்களுக்கு - ஒன்று பலவாக உருவாகி விரிந்து வளர்ந்த பிரச்சினைகளுக்கு - விடையும் விளக்கமும் கூட அதுவாகவே அமைந்துவிடும்.

பெறுவதற்கான வழிவகைகளை தேடியே இத்தனை நாளாய் என் சிந்தனை அலைகள் ஆர்ப்பரித்து எழுந்து பயனில்லாது தனிமையில் கரைதட்டி விடைகாணாமலே மடிந்து கொண்டிருக்கின்றன.

ஞாயிற்றுக்கிழமை.

வீரகேசரி வார மஞ்சரி என் கைகளில் தவழ்ந்து நெளிந்தது. மேல்வாரியாக செய்திகளைத் துளாவி மேய்ந்து கொண்டிருந்த என் தாகம் நிரம்பிய கண்களில் இரண்டாம் பக்கம் மலர்ந்து விரிந்தது. ஒரு போக்காக கண்கள் சுழன்று நிலைகுத்தி நின்ற போது.

சிந்தனையைத் தூண்டி விட்டிருந்தது அந்தச் செய்தி விளம்பரம். எதிர்காலத்தின் நம்பிக்கை ஒளிப் பிளம்பாக மின்னி மறைந்தது.

அந்த விசித்திரக் கற்பனையை எண்ணி என்னுள்ளே ஒரு பரிகாசச்சிரிப்பு. இருந்தாலும் கணப்பொழுதில் மெய்மறந்து அதனோடு இரண்டறக்கலந்து இலயித்தும்விட்டேன்.

வினாவுக்கு விடைகிடைத்து விட்டாலும், ஏதோ ஒன்று தயக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. எனது ஆராய்ச்சியில் அதற்கு மேல் என்னால் செய்யக்கூடிய மாற்றுக்காரியம் எதுவுமிருக்கவில்லை.

துணிந்து விட்டேன். துரிதமாக செயல்பட்டேன். அத்திவாரத்துடன் மூன்று வருடங்களுக்கு மேலாக அப்படியே கிடந்த அந்த வீடு இப்போது இராஜ கம்பீரத்துடன் புதுப்பொலிவுபெற்று நிறை விளக்காக காட்சியளித்துக் கொண்டிருந்தது.

அழகும் குணமும் அறிவும் அமையப்பெற்ற என் தங்கையை சீதனத்துடன் மணந்து கொள்ள ஒரு மனித மிருகமும் சிரமமின்றி ஒப்புக்கொண்டு விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் மட்டிலா மகிழ்ச்சி.

சகோதரனும், சகோதரிகளும் நண்பர்கள், உறவினர்கள், பந்தினரை வரவேற்று உபசரிப்பதில் உற்சாகமாகவும் கலகலப்பாகவும் ஈடுபட்டிருந்தனர். மங்கல வாழ்த்துக்களாக ஒலிபெருக்கி சினிமாப்பாடல்களை உமிழ்ந்து பரப்பிக்கொண்டிருந்தது. ஆயிரம் சந்திரர்களின் கூட்டுறவாக வீடு, திண்ணை, வெளிவிறாந்தை தெருவெங்கும் பூட்டப்பட்டிருந்த மின்சாரக் குமிழ்களிலிருந்து பரவிய தண்ணொளி அமைதியாக உறைந்து கிடந்த அந்தகாரத்தை எங்கள் வீட்டிலிருந்து அடியோடு அழித்துவிட்டிருந்தாலும் தங்களைச் சூழ்ந்திருக்கும் அவற்றின் நிழலாக அடங்கிக் கிடந்த சிலவற்றை ஒன்றும் செய்துவிட முடியவில்லை.

இருள்கவிந்து எதிர்காலத்தை கணநேர சிந்தனையில் இடைநிறுத்திப் பார்த்த என் நெஞ்சத்தை நிறைவு செய்து அதில் ஏற்படப்போகும் சுகதுக்கத்தில் பங்காளியாக வீற்றிருக்க வரும் அந்த திருமுகத்தை எனக்குள் தேடிக் காணாமல் பெருமூச்சொன்று அனாதரவற்ற அபலையாக வெளியேறிக் கொண்டிருக்கிறது.

எனது திட்டம் அளித்த வெற்றியின் பெருமிதம் அவ்வாறு கவலையை நீடிக்க அனுமதிக்கவில்லை.

இருந்தாலும் அன்றோடு என் சுதந்திர வாழ்க்கைக்கு சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டது. வாழ்க்கையின் முதலத்தியாயத்தின் இறுதி நாள் இன்று. நாளை முதல் இதுவரை வாழ்ந்த உலகைவிட்டு நீக்கி முற்றிலும் மாறுபட்டதோர் உலகில் புகுந்து அதனோடு மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளவேண்டிய என் நெஞ்சத்தில் ஏன் உறுதி தளர வேண்டும்.

தங்கையின் விவாகம் நடந்து முடிந்த அடுத்தநாள் அங்கே அவர்கள் பெண்ணை ஏற்றுக்கொள்வதென்ற ஒப்பந்தத்தில்தானே இத்தனை ஏற்பாடுகளும் சுமுகமாகவும் துரிதமாகவும் நடந்து முடிந்தன.

வாய்மையுடன் வாழும் தூயவாழ்க்கை நரகமாகவிருந்தாலும் அதுவே சொர்க்க பூமி என்றல்லவா சொல்லப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் காலை வந்தனத்தினால் தங்கையின் கல்யாணச் சந்தை ஏற்படுத்திய சலசலப்பு சிறிது ஓய்ந்திருந்தது.

குசினிக்குள் கல்யாணச் சமையல் பண்ணிக்கொண்டிருந்த அம்மாவைத் தனியே அழைத்துப் பேச்சை எப்படித் தொடங்குவது என்று புரியாமல் எப்படியோ ஒருவகையாக,

"அம்மா, இன்றே நான் பயணமாக வேண்டும். வாழ்த்தி விடை தாருங்கள்" நாடகத்தில் பேசும் வசனமாக ஒலித்தது என்காதுகளில்.

"எங்கேடா?"

பாவம். பேதைப் பெண் அவள். இத்தனை மகிழ்ச்சிகளுக்கும் பின்னால் அதற்கெல்லாம் காரணமாக இருந்த கொடுமையை அவள் அறிந்திருக்க எங்கே வழிகிடைத்தது?

"என்னுடைய வீட்டுக்கு"

"ஏண்டா உழறுகிறாய். உனக்கு என்னதான் நடந்து விட்டது?"

"உழறவுமில்லை, ஒன்றும் நடக்கவுமில்லை. உண்மையைத்தான் சொல்கிறேன்."

"எதுடா உண்மை?"

"எனக்கு நாளைக்கே திருமணம் பதுளையில்."

"ஆருட மகள். என்னடா திடீரெண்டு உண்ட விருப்பத்திற்கு" முகம் பேய்மலக்கப்பட்டு விட்டதால் வார்த்தைகள் அவள் வாயிலிருந்து ஒழுங்காகவர மறுத்தது. என்னையே பார்த்தபடி நின்றிருந்த அவளது கண்களில் நீர் கசிந்து உருகி ஆறாகப்பாய்ந்தது. விம்மலும் விசும்பலுமே எனக்கு விடை தந்து வழியனுப்பிவைத்தன, விடயத்தைச் சுருக்கமாகக் கூறிய போது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சம் உரம் பெற்றது, நேர்த்திக்கடனாக - நிவேதனப்பொருளாக நிச்சயார்த்தம் செய்யப்பட்ட பலிக்கடா யாககுண்டலத்தை நோக்கி நேராகச் சென்று கொண்டிருந்தது. அதனைத்தடுத்து நிறுத்தும் வல்லமை நேர்மை உள்ளத்திற்கு இருக்கவில்லை.

ஒருவார இடைவெளி.

பதுளை,
*5-4-1976*

அன்புள்ள அம்மா,

பயங்கரக்கட்டுப்பாடும் முரண்பட்ட வாழ்க்கைத் திட்டமுமுடைய சமுதாய அமைப்பில், எதிர் நீச்சல் போட்டு வெற்றிபெற பணம் ஒன்றினால் தான் இயலுமானது. இதனை இலட்சியவாதிகள் மறுத்துரைக்கலாம். அவர்கள் அனுபவப் பட்டிருந்தால் அவ்விதம் பேசுவதை நிச்சயம் தவிர்த்துக் கொள்வார்கள். பணத்தைப் பெற்றிராத உயர்ந்த இலட்சியத்தையுடைய சாதாரண மனிதர்களுக்கு தியாகம் என்பதொன்றே ஊன்றுகோலாக அமையலாம். அதுகூட ஒளியையும் மணத்தையும் பிறருக்கு அளித்து தன்னை அழித்துக்கொள்ளும் தனக்கென்று எதுவும் மிஞ்சாத கற்பூரத்தையோ சிறு எச்சத்தை மட்டும் பெற்றுமறையும் மெழுகுவர்த்தியையோ பிரதிபலிக்க முடியும்.

வாழ்க்கையின் முனைப்பை அடையத் துடித்த போது அங்கே அதற்குத் தடையாக வந்து நின்றது பணப்பிரச்சனையே. நாம் எல்லோரும் பணத்தைப்பற்றியும் நம் இயலாமையைப்பற்றியும் இதுகாலவரை சிந்தித்தோமேயன்றி அதனைப்பெற்று, வாழ்க்கையில் பயன்படுத்தும் நன்னோக்குத்திட்டத்தை அறிய முடியாமல் தவித்திருந்தோம். இதனால் யாரும் வாழ்வு பெறாதவோர் வேதனையான சம்பவம் ஏற்படும் சூழல் ஒன்று உருவாகியிருக்கலாம்.

சந்தர்ப்பவசமாக என்மூளையில் உதித்த இந்த விசித்திரமான புத்தியினால் நான் மட்டும்தான் ஓரளவு பாதிக்கப்பட்டிருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் ஊன்றிச்சிந்தித்துப் பார்க்கும்போது அதுகூட இல்லை என்றநிலை உருவாகி விடலாம். தனக்கென்று ஒன்று எஞ்சி நிற்கும் போதுதானே அதனோடுள்ள பாச உணர்வினால் எதிர்காலம் என்ற ஆசை மயக்கம் ஏற்படுகிறது.

கால் ஒன்று வழங்காத பெண். குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை. அவர்களது குலவிளக்கு. தேவையான பணம் இருக்கிறது. வாழ்க்கையைப் பொறுத்தவரை அது வனப்பும் செழிப்பும் கொண்ட பசும் தரை. போற்றும் உதாரகுணம். பணமும் குணமும் குடியிருக்கும் அவளிடம் அழகும் வயதும் இல்லை என்பது உண்மைதான். ஆயினும் அறிவு இருக்கிறதே.

என்னையே நான் விலைகூறி விற்றுவிட்ட இந்த அரிச்சந்திர தத்துவத்தினால் என் வாய்மையும், நேர்மையும் பிழைத்தது. ஏன்? கடமையும் முடிந்தது. தந்தையினதும் உங்களினதும் ஆசைகள் உருவம் பெற்றுவிட்டன. ஓயாத சண்டையும் சகிக்கவொண்ணாத புலம்பலும் கூட ஓடி மறைந்து விட்டன. தங்கைக்கு கண்ணிறைந்த வாழ்வு நிலைத்து விட்டது. வரன்தேடி அலுத்துப்போய் உட்கார்ந்து இருந்த எனது மாமனாரும் மைத்துனர்களும் மகிழ்ந்தார்கள் என்பதைவிட குலப்பெருமைக்குப் பங்கம் ஏற்படாமல் ஊர்வாயிலிருந்து சிறிது தப்பி விட்டார்கள் என்றே சொல்லலாம். கால் வழங்காத என் மனைவிக்கும் ஒரு துணை கிடைத்துவிட்ட பெருமிதம். பாவம் நாற்பது வயதுக்குமேல் பெண்மை பிறந்த பயனை எப்படி அடையமுடியும்?

இத்தனை உள்ளங்களும் இன்புற அமைந்துவிட்ட இந்த எனது துணிவினாலும் செயலினாலும் எனக்கு இப்போது சிறிதும் வேதனைகிடையாது. வாழ்க்கையில் இன்பமும் இல்லை. இல்லறத்தைக் கடமை உணர்வோடு ஏற்றுக்கொண்டு விட்ட வள்ளுவன் நான். இதுவே சுயநலம் இல்லா வாழ்க்கை அறம். இதனைப் பெற்ற நான் பாக்கியசாலி. பத்திரிகை விளம்பரம் ஒரு தருமசத்திரம்.

இங்கு குறிப்பிட்டெழுதிய விடயங்களில் பொதிந்துள்ள எண்ணங்கள் உங்களைப் பொறுத்த வரையில் விளங்கிக்கொள்வது சிரமமாகவிருக்கும் என்பதை அறிவேன். இருந்தாலும் இதனை எழுதுவதற்கு உள்ள ஒரே காரணம் இளமைத்துடிப்பில் எதிர்காலத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி நான் கட்டிய கோட்டைகள் வனப்பும் உறுதியும் வாய்ந்தவை. ஆனால் எனது வாழ்க்கையை எண்ணி அதற்காகப் பரிந்து என் இதயம் ஒரே ஒருமுறை அழுதுதான் ஆகவேண்டும். நானும் மனிதன் தானே? இறுதிமுறையாக வடிக்கும் என் இந்த இதயக்கண்ணீரின் சோகக்கதை என்றுமே இனி இடம்பெறமாட்டாது. அது என்னோடு விண்ணவர் உலகுசென்று முடங்கிவிடும்.

எனக்காக எவரும் கவலைப்படக்கூடத் தேவையில்லை. எல்லாம் இறைவன் வகுத்தபடி நடக்கும். நான் வகுத்தபாதை இது. நன்றாக நடந்து செல்லுங்கள். பாதையின் குறுக்கே வந்து மட்டும் தடுக்க நினைக்காதீர்கள்.

வணக்கம்.

இப்படிக்கு,<br>
தங்கள் ஆசை மகன்,<br>
இல்லறவினோதன்.

"முடிந்தால் பத்திரிகையைத் தருகிறீர்களா?" என் எதிரில் நின்றுகொண்டிருந்த வாசகர்கள் புன்னகை தவழ கேட்டுக்கொண்டிருந்தனர். சுய உணர்வு வரப்பெற்ற நான் அப்படியும் இப்படியும் தடுமாறினேன். பல விழிகள் என்னை விசித்திரமாக நோக்குவதனை உணர்ந்து நாணத்தால் தலை கவிழ்ந்தது. பலர் நிரம்பியிருந்த அந்த வாசகசாலையை அப்போது தான் என் விழிகள் புதிதாகப் பார்த்தன.

சிந்தனை கலைந்து விட்டது.

கையில் இருந்த பத்திரிகையும் பறிபோய்விட்டது. பழைய கவலைகள் மீண்டும் கௌவிக் கொண்டன.

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. உறவின் எல்லை.

அன்புள்ள சரஸ்வதி,

உன்னுடைய முடிவைக்கேட்டு நான் கலங்கவோ அன்றி வேதனைப்படவோ கூட இல்லை. இதனை வாசிக்கும் போது எந்த மனநிலையோடு இருப்பாய் என்பதையும் நான் அறியாதவனல்ல. இருந்தும் இப்படி ஒரு கடிதத்தை ஏன் எழுதுகிறேன் என்ற கேள்வியை நீ கேட்கலாம்.

கடிதம் எழுதவேண்டியதொரு கண்டிப்பான நியதி. அதுவே காரணம்.

இன்றோ நேற்றோ நாம் ஒருவரை ஒருவர் தெரிந்து கொண்டவர்கள் என்றால் அது கூட இல்லை.

சுமார் பதினைந்து வருடங்களுக்கு மேல் தூய வெள்ளை ஆடையில் களங்கமில்லாத வெள்ளை உள்ளத்தோடும் உணர்வுகளோடும் சந்தித்துக் கொண்ட அந்த இளம் காலைப் பொழுதுகளை கனிவான இன்ப நினைவுகளை என்றும் மறப்பதற்கு இயலாது.

பட்டுச் சிறகுகளுடன் சிட்டுக்குருவிகள் போல் என்னைச் சூழ்ந்து பாடி ஆடிப் பறந்து திரிந்த அந்த இளமைக்காலம் எத்துணை எளிமையும் தூய்மையும் நிறைந்தது.

அப்போதெல்லாம் எத்தனை வாக்கு வாதங்கள், போட்டிகள் எமக்குள் எழுந்திருக்கின்றன? பொறாமை உணர்வு தோன்றியதாக நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லையே.

அத்தகைய உணர்வுகள் யாவும் எம்மைக் குதூகலத்தில் ஆழ்த்தியே மகிழ்ந்திருக்கின்றன. ஆனால் எதுவும் இப்படியானதொரு கசப்பான சூழலுக்குள் சிக்கி வைக்க விழையவில்லை ; ஏன்?

கள்ளமில்லாத அந்தப் பசுமை நினைவுகளை ஒரு முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபகமீட்டிப் பார்க்க முடிகிறதல்லவா?

தங்கை - அதுதான், உன் தோழியுடன் உரையாடிக் கொண்டிருக்கும் போதெல்லாம் என் விலாசம் தேடி. ஏக்க விழிகளால் துளாவித் துளாவி என் அறைப்பக்கமே அடிக்கொரு தடவை சிரத்தையுடன் சூழுமுன் பார்வையை அவதானித்துக் கொண்டே, வேண்டுமென்று நான் மறைந்து இருந்து உன் உணர்ச்சி வேகத்தை அளந்து இரசித்தபடி இருப்பேன்.

"என்னடி பேயறைந்தவள் மாதிரி பரக்கப் பரக்க விழிக்கிறாய்? என்னதான் நடந்துவிட்டது, உனக்கு."

அனுதாபத்துடன் விசாரிக்கும் உன் தோழி, என்வரவினால் தாத்பரியத்தை அறிந்து கொண்டு கைகளால் உன் கன்னத்தைக் கிள்ளி,

"அங்கே என்னதான் உனக்குப் பார்வை வேண்டிக்கிடக்கு." என்று அதட்டினாற் போல் கூறும் அவள் கனிமொழியைக் கூட காதில் வாங்கிக் கொள்ளாமல் என்னையே வைத்த விழி வாங்காமல் பார்த்து இலயித்து நிற்கும் உன் ஆவல் மிகுதியை இப்போதும் கூட என் மனக்கண்ணில் காணுகின்றேன்.

நேருக்கு நேர் சந்திக்க நேர்ந்து விட்ட சமயங்களிலெல்லாம் ஏதாவதொரு சமாச்சாரத்தில் இறங்கி அக்கு வேறு ஆணிவேறாக அலசி அலசி என்னை அலக்கழிக்கும் உன் போக்கின் நோக்கத்தை நான் தெரியாமலே இருந்தேனா?

உனக்கு நன்றாக விளங்கும் ; கணித பாடத்தில் ஏதாவதொரு வினாவை என் வாயைக்கிள்றுவதற்காக வம்பிற்கு விளக்கம் கேட்டு நீ செய்யும் சதிகளை அறிந்தும் கூட ஏனோ அதற்குடன்பட்டே விளக்கம் கூறிக்கொண்டிருப்பேன். செவிட்டுக் கிளி போல் விடுத்து விடுத்துக் கேள்விகள் கேட்கும் போதெல்லாம் உன்னைத் திட்டியடிக்க வந்தாலும் கூட, முகத்தில் அச்சமோ சிறிதும் நாணமோ இல்லாமல் மகிழ்ச்சியும் அமைதியும் தெளிவாக பளிச்சிட அவற்றில் நீ திளைத்திருப்பதையும் நான் அறிந்து தான் இருக்கின்றேன்.

வேண்டுமென்றே உன்னிடமிருந்து தூர ஒதுங்கி ஒதுங்கிச் சென்று கொண்டிருந்தேன். ஆனால், உன் அந்தரங்க எண்ண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைகளினால் என்னைப்பற்றிய சிந்தனைகள் உன் சமீபமாகவே தள்ளப்பட்டுத் தள்ளப்பட்டு என்னையே உன்கரைக்குக் கொண்டு வந்து ஒதுக்கியும் விட்டது.

உன்னை விட்டுத் தூர ஓட முயன்றேன் என்றால் முற்றும் துறந்து விட்ட முனிவன் ஒருவனின் தானத்தில் இருந்து கொண்டல்ல. உந்தும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி அவற்றிற்கு ஒரு நிதானத்தை வகித்துக்கொண்டு தான்.

நிச்சயமாகக் கூறுகிறேன். உன் நினைவால் நான் என்றுமே வாடி வதைந்து போனதில்லை.

மாறாக, ஒவ்வொரு கணமும் உன் காந்த விழிகளின் வீச்சிலிருந்து தப்பி மறைந்து விடவே ஒரு சுமுகமான வழியைத் தேடி அலைந்து கொண்டிருந்தேன்.

எவரது மனதையும் அனாவசியமாகப் புண்படுத்த எனக்கு இசைவில்லை. அதுவும் என்மீது அன்பு சொரியும் ஒரு பேதையைத் தண்டிக்க எனக்கு ஏனோ அத்தகையதொரு மனநிலை எழவில்லைதான்.

இல்லையென்றால், நேரிலேயே அதனைக் கூறி ஒரு முடிவுக்கு எப்பவோ வந்திருப்பேன்.

நாளையோ நாளை மறுநாளோ நீயாகவே என் போக்கை உணர்ந்து அல்லது போக்கில் வெறுப்படைந்து என் வழியை விட்டு விலகி வேறு பாதைக்கு விரைந்து விடுவாய் என்ற பூரண நம்பிக்கையுடன் உன்சேட்டைகளுக்கெல்லாம் சட்டை பண்ணாமல் அமைதியாக இருந்தேன்.

நடந்ததோ எதிர்பாராததென்பதை நீ தான் அறிவாயே.

சித்திரப் பாவைபோல் சீருடையணிந்து பட்டுச்சிறகுகளை ஆட்டிப் பறக்கும் சிட்டுக் குருவிகளாக உன்னைச் சூழ்ந்து தோழிகள் வலம் வரும் போது உன்தனித்துவத்தைப் பார்த்து நான் ஏங்கி நின்றது உண்மைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங்குமச்சிமிழ் பிளந்து குமிண்சிரிப்பை உதிர்த்தி நீங்கள் அங்கும் இங்கும் திரிகின்ற நேரங்களில் என் நெஞ்சினிலே உனக்காக ஓர் இடம் இருந்ததென்பதை இப்போதும் நான் மறுக்கவில்லை.

நாளுக்கொன்றாக வாரம் முழுவதும் அணிந்து வரும் ஆடை அணிகளை அவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது எனக்கு ஏனோ ஒருவித உணர்வு ஏற்பட்டது உண்மைதான். இல்லையென்று மறுக்கவில்லை. அவை நிச்சயம் என்கண்கள் ரசித்த கலைப்பூங்காவே தான்.

ஆனால்...........

என் உள்ளத்தின் எங்கோ ஒரு ஆழமான மூலையிலிருந்து இப்போது வெளியேறிச் செல்லும் பெருமூச்சின் வெப்ப அலகின் வேகத்தை எப்படி உன்னால் உணர்ந்து கொள்ள முடியும்? முடியாது தான்.

ஒன்று மட்டும் நான் திடமாகக் கூறிக்கொள்கிறேன். நீ நம்பவேண்டும் என்பதற்காகவல்ல. உண்மை அதுதான்.

அன்று இருந்த அதே உணர்வுகளும் எண்ணங்களும் பிரதிபலிப்புகளுமே என் மனக் கிடங்கினில் இன்றும் எதிரொலித்துக் கொண்டேயிருக்கின்றன.

ஆனால்ஒரு சிறு மாறுதல். என்னைப்பற்றி நானே கூறித்தான் உனக்கு தெரிய வேண்டுமாயிருந்தால், இத்தனை காலமும் நாமிருவரும் ஒருவரை மற்றவர் ஓரளவு விளங்கி வாழ்ந்து வந்திருக்கிறோம், என்பதற்கு அர்த்தம் கண்டு கொள்வது இயலாதது.

உன்னைப் பற்றி நான் எப்படி விளங்கிக்கொண்டு அதற்கேற்ப ஒரு முடிவை எடுத்துள்ளேனோ, அப்படி என்னை நீயும் விளங்கி உனக்கென்றோர் முடிவை எடுத்திருப்பாய் என்றே நான் கருதியிருந்தேன்.

மனிதன் ஒன்றை நினைக்கின்றான்; விதியோ வேறொன்றை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைபோடுகின்றதே!

யாரையும் குற்றம் சொல்லவோ அன்றிகுமைந்து கொள்ளவோ நான் விழையவில்லை. அதனால் பிரயோசனமில்லை!

இளமை - அதைத் தொடர்ந்து வாலிபம். அடுத்து, மூப்பு அல்லது முதுமை.

கலத்தின் கட்டாய ஒழுங்கு விதிகள் இவைகள். இத்தனை மாற்றங்களும் நடைபெற நிலைக்களமாக இருப்பதோ ஒரே சடலமே.

உருவம் மாறலாம்; உணர்வுகள் மாறலாம். ஆனால், உள்ளம் மாறவே கூடாது. அப்படி மாறுவதும் மனிதப் பண்பல்ல.

ஓலைக் குடிசையில் தான் வசிக்கின்றான். மனைவி மக்கள் மற்றும் வீட்டிலுள்ள அநேகர் உழைப்பாளிகள். கையில் இல்லாதபோது காரசாரமான சண்டை கிளம்புகிறது. உள்ளபோது குதூகலமும் கொண்டாட்டமுமாக எல்லோரும் கூடிக் களிக்கின்றார்கள்.

உள்ளத்தில் கரவு இல்லை. நாளைய எதிர்கால நினைப்புமில்லை. ஆனால் மன நிறைவும் நிம்மதியும் தாராளமாகக் கிடைக்கிறது.

தினமும் பக்கத்துக் குடிசையில் வசிக்கும் சாதாரண குடிமகன் ஒருவனின் வாழ்க்கை முறையைப் பார்க்கும் போது எனக்கு உண்மையிலேயே பொறாமை உண்டாகிறது.

ஏன் தெரியுமா?

அளவிற்கு அதிகமான சிந்திக்கும் ஆற்றல் அறிவைத் தூண்டிவிடுவதால் அது ஒவ்வொரு செய்கையையும் அதன் முன்பும் பின்பும் கவனமாக எடை போட்டு சந்தேகத்தை வளர்த்தே வருகின்றது.

விளைவு..........?

நிம்மதி இல்லாத சிந்தனை ஜந்திர வாழ்வு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஆறு மாதங்களுக்குப் பின்பு கொழும்பிலிருந்து நீ வந்திருந்த போது உன்னை சந்திப்பதற்காகக் காத்திருந்தேனே நினைவிருக்கின்றதா?

உனக்கு நினைவில்லாமல் இருக்கலாம்; எனக்கு அந்த நிகழ்ச்சி இன்னும் பசுமை மாறாமல் என்மனத்திரையில் ஓடிக்கொண்டு தான் இருக்கின்றது.

இந்தக் கடைசிக் கட்டத்திற்கு வந்தும் கூட, இதனைச் சொல்வதா அல்லது விடுவதா என்று மனம் பதறும் ஒரு நிலையில் தான் இன்னும் இருந்து கொண்டிருக்கின்றேன்.

இருந்தும் கடைசி முறையாக இங்கே கூறி வைத்து விடுகின்றேன், நிம்மதிக்காக.

உன்னைச் சூழ்ந்து உன் புதிய, பழைய நண்பர்கள் நின்று கொண்டிருந்தார்கள். எல்லோரும் நாகரிக உடையணிந்தவர்களே தவிர, அநேகமானவர்கள் நாகரிகமாகப் பழகும் முறையைத் தவறாகப் புரிந்து கொண்டிருந்தார்கள்.

சொந்த நாட்டினதும், இனத்தினதும் பாரம் பரியத்தை இகழும் வகையில் அவர்கள் தாறுமாறாக நடந்து கொண்டதைச் சகிக்காமல் எழுந்து சென்ற நான் மீண்டும் உன்னிடம் வந்து தனியாகக் கதைத்த போது அதற்கு நீ கூறிய பதில்.........!

இச்............. அதுதான் போகட்டும்.

அழகிய சேலையணிந்து நெற்றியில் குங்குமம் இட்டு, சீவிச்சிங்காரித்து, பூச்சூடி தமிழ்க் குலக்கொடியாக மிளிர்ந்த உன்னை ஆறுமாத இடைவெளிக்குப் பின்பு அந்த அருவருக்கும் சோடனையில் கண்ட போது மனம் குமையக் கூறினேனே.......?

அந்த நிகழ்ச்சியாவது ஞாபகமிருக்கிறதல்லவா?

"என்னதான் நாகரிகமாகவிருந்தாலும் அதற்கும் ஒரு அடிப்படை வேண்டுமே ?" என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்தன் எரிமலைக் கர்ச்சனையான அச்சுறுத்தும் பதிலை எங்கே என்னால் மறந்து விட முடியும்? காலமுள்ளவரை அதன் சங்கநாதம் என் காதுகளில் கேட்டுக்கொண்டே தான் இருக்கும்.

அவ்விதம் கூறியது உனக்கே சரியில்லை என்று பட்டதோ என்னவோ சமாதானமான குரலில் கூறினாயே,

“எனது உடல் பருமன், கொஞ்சம் அப்படித்தான் தெரியும் பார்வைக்கு. அதனாலென்ன?” என்று.

அந்தக்கணமே உன் புதிய மாறுதலையும் உளப்பாங்கையும் புரிந்து வியந்துபோய் நின்றேன்.

அழகம்மா அக்காவின் சேலை அணியும் மோசத்தை அருளம்பலம் மாஸ்டர் பள்ளிக்கூடத்தில் பகிரங்கமாகச் சுட்டிக் காட்டிய போது, அவருக்கு ஆதரவாக என்னை எதிர்த்து வாதிட்ட அந்த உத்தமியையும் இப்போது அதே மிடுக்கை உம்மிடமே சுட்டிக்காட்டிய போது அதற்குச் சீற்றமும் சமாதானமும் கூறி நிற்கும் பெண்ணையும் ஒன்றாக மதிக்கவா, இல்லை. வேறுபட்ட இரண்டு பிறவிகளாகக் கருத வேண்டுமா? என்று.

நான் ஒரு மடையனென்று நீ நினைக்கலாம். அப்படி நினைக்கும் எவரையும் நான் எதிர்த்து வாதிட்டதுமில்லை; வாதிடப்போவதுமில்லை. காரணம் வாதிடமுனையும் போது தான் நீ கருதும் அந்த எண்ணத்தை நிரூபணமாக்கும் வகையில் என் செய்கை அமைந்துவிடும்.

என்னைப்பற்றி எதையும் கூறிக்கொண்டிருக்கலாம். அதைப்பற்றி நான் சிறிதும் மனம் குமைய மாட்டேன்.

வழி வழி வந்த நம் பண்பாட்டை - அகிலமும் வியந்து போற்றும் சீரிய நெறியை தமிழர்க்கென்றே தமிழர்கள் போற்றி வளர்த்து வரும் வழிமுறைகளை எமது பாரம்பரியங்களை உதாசீனம் செய்வதையும் துச்சமாக மதித்து அதன் துய்மையை மாசு படச் செய்வதையும் என்னால் பொறுத்துக் கொள்ளவே முடியாது.

அப்போதெல்லாம் - வாலிப முறுக்கினால் திளைத்திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதினில் எத்தனையோ விதமான கற்பனைகளை மனதில் வளர்த்துச் சுகம் கண்டிருப்பேன். எத்தனையோ விதம் விதமான ஆடையணிகளை என் இதய ராணிக்கு உடுத்து அவள் அழகு கோலத்தை மனக்கண் முன் வாஞ்சையோடு நிறுத்தி அழகு பார்த்திருப்பேன். கச்சிதமான அவள் உடல் கட்டுக்கு தமிழ் மங்கை அணியும் பட்டுச்சேலையும் மாலை ஆபரணங்களும் நெற்றியில் குங்குமப்பொட்டும் எவ்வளவு இரம்மியமாக மிடுக்காக இருந்தன தெரியுமா?

எந்த ஒரு தடவையிலாவது இன்று போல் அவள் ஒரு அருவருக்கத்தக்க உடையலங்காரத்தைப் பேணி மானத்தைப் பேரம் பேசியதே இல்லை.

அடக்கமான, ஒழுக்கமும் சீலமும் நிறைந்த உத்தம தமிழ்க் குலப்பெண்ணாக என் இதயம் கனிந்த எழில் மங்கையாக அவள் கொலு வீற்றிருந்திருக்கிறாள்.

ஆனால் இன்று........! ஏன் இந்த எதிர்பாராத மாற்றம்? எனக்கு இன்னும் புரியவில்லை!

வாழ்க்கை "எப்படியும் வாழலாம்" என்ற நியதியை உடையவர்களும் இருக்கலாம். ஆனால் "இப்படித்தான் வாழ்க்கையமைய வேண்டும்" என்ற வரையறை கண்டு என் தேவைகளையும் ஆசைகளையும் ஒடுக்கிக்கொண்டவன், நான்.

மனம் போன போக்கிலெல்லாம் நாகரீகம் என்றும், மற்றவர்களின் ஒத்துழைப்புக்காக என்றும் சில சில காரியங்களைக் காரணமின்றிச் செய்ய என்மனதில் இடமில்லை. அதே வேளையில் உலகம் பழித்தனவற்றையும் ஏற்கும் சம்மதமும் எனக்குக் கிடையாது.

என்போக்கை எண்ணி சில சமயம் நானே வியந்து கொள்வதும் உண்டு. என்மீது எனக்கே ஆத்திரமும் அருவருப்பும் கூட வருவதுமுண்டு.

என் சுபாவம் அப்படியமைந்துவிட்டது. அதை நான் பிழையெனக் கருதவுமில்லை.

நீ இந்த முடிவுக்கு வந்தது நியாயமானது மட்டுமல்ல,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தமுள்ளதும் கூட. உன் முடிவைப் பூரணமாக ஏற்பதோடு மானசீகமாக வரவேற்கவும் செய்கிறேன்.

பொறுமையின் எல்லையை - கணவன் மீது மனைவிக்கு இருக்க வேண்டிய அன்பின் ஆழத்தை, வாஞ்சையை, அபிமானத்தை தெரிந்து கொள்வதற்காகவே அவ்விதம் நான் நடந்து கொண்டேன். ஆனால் அதை உனக்குத் தண்டனையாகவோ அல்லது பழிவாங்கும் செயலாகவோ கருதிச் செய்து வைக்கவில்லை. இதை நீ நம்பலாம்.

அழகு இருந்தது. அறிவும் இருந்தது. உடற்கட்டும் இளமையும் இருந்தன. உன் பெற்றோரிடம் பணமும் நிரம்பியிருந்தது.

இவற்றின் மிடுக்கோடும் வல்லமையோடும் என்னை எப்படியோ ஆனால் நிச்சயமாக என் விருப்பத்திற்கு விரோதமாக பெற்றோர் கூடி கைகளுக்கும் விலங்கு மாட்டி உன்னிடம் தந்துவிட்டார்கள்.

பாவம், மாட்டை வண்டிக்குக் கட்டுவதற்குப் பதில் வண்டியை மாட்டுக்குக் கட்டி விட்டார்கள்.

பாரத்தை இழுத்துச்செல்ல வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை. பாரம் வண்டியில் ஏற்றப்பட்டால் அதுவே போதும் என்ற எண்ணம் போலும்.

உலகத்திலுள்ள எல்லாவற்றையும் தான் பணம் விலை குறித்து விடும். நீதியைக் கூட விலைக்கு வாங்கி விட அதற்கு தைரியம் இருக்கலாம். ஆனால் தூய அன்பை இதயத்தில் இருந்து ஆத்ம சுத்தியுடன் மலர்ந்து மணம் வீசும் அந்த ஒப்புயர்வற்ற தெய்வீக ஒளி விளக்கை எப்படி அதனால் விலை கொடுத்து வாங்க இயலும்?

வாழ்க்கை எனும் கோயிலிலே கணவன் தெய்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டால் நிச்சயம் அங்கே அர்ச்சகர் மனைவி தான். தூய அன்புதான் அர்ச்சனை.

கோயில்கள் பல இருக்கின்றன. அவற்றில் எத்தனை கோயில்களில் தான் தெய்வம் பேசுகின்றது?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசாத கோயில்களும் இருக்கத்தான் செய்கின்றன. அங்கேயும் பூசைகளும் திருவிழாக்களும் நடைபெறுகின்றனதாம். அப்படி நடைபெறுவது அர்த்தமில்லை என்றும் கூறலாம் தான்.

தெய்வங்கள் பேசக்கூடியவைகளாக ஆக்கப்பட வேண்டும். இல்லை என்றால் அந்தத் தெய்வமே வேண்டாம் என விட்டுவிட வேண்டியது தான்.

அப்படி இல்லாததற்கும் நீ காரணம் சொல்லலாம்.

கோயில்கள் ஒன்றானாலும் அவற்றில் பிரதிஸ்டை செய்து வைக்கப்பட்டுள்ள மூர்த்திகள் வெவ்வேறுதானே? எந்த மூகூர்த்தத்திற்கும் நிவேதனம் பண்ணி வாழ்க்கை நடாத்திவரும் அர்ச்சகர்கள் வேறு நம் மத்தியில் இல்லையா? என்ன?

என்மீதும் ஒருவிதத்தில் பிழை இருந்ததுதான் என்பதை ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்.

யாரால் உந்தப்பட்டோ அல்லது சுயமாகவோ என் எதிரில் வந்து சற்றும் எதிர்பார்த்திருக்காத அந்த வேளையில் தைரியமாகக் கேட்டாயே ஒரு கேள்வி,

"நீங்கள் என்னை ஏன் விரும்பவில்லை. அப்படி என்ன நான் அவலட்சணமாகவா இருக்கிறேன்" என்று.

இப்போது உன்திறமையை மெச்சினாலும் அந்த நிமிடம் என்ன பதில் சொல்வதென்றே தெரியாமல் திக்குமுக்காடி திருதிருவென விழித்திருந்தேனே? என் சலனத்தை அப்போது உன்னிடம் காண்பித்திருக்கக் கூடாது தான்.

அதை நீ பிழையாக விளங்கி கொண்டு உன்னை நான் உள்ளூர நேசிக்கிறேன் என்று ஏமாந்து விட்டாய்; அப்படித்தானே?

உன்னை நேசிப்பது உண்மை தான், இப்போதும் தான் கூறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் அழகு, அந்தஸ்து, திறமை ஆகிய இவற்றை இன்னமும் தான் நேசிப்பேன், ரசிப்பேன், போற்றுவேன். ஆனால் என் வாழ்க்கைத் துணைக்கு ஏற்ற பத்தினியாக-இலட்சியப் பெண்ணாக உன்னை என்னால் நேசிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ முடியாமல் போனதற்காக மன்னிக்கவும்.

உன்னிடம் இந்த மன்னிப்பைக் கோரி நான் எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் இரந்து நிற்கத் தயார்.

"பிறருக்காக விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுள்ளவர் நீங்கள். எனக்கு இந்த ஒரு விடயத்தில் மட்டு விட்டுத்தந்தால், என்ன? என்று ஒரு முறை கேட்டுக்கொண்டதாக ஞாபகம்."

அப்போது ஈந்துவிடும் மனப்பக்குவம் கூட இருந்ததாகவே உணர்கிறேன். ஆனால் கண நேரத்தில் என் இதயம் ஏன் கடினமான கற்பாறை போல் வலுத்து விட்டது. அந்த நிலையில் தான் சுயநலம் பிறக்கிறது போலும்.

நடந்தது நடந்துதான் விட்டது. இனி அதைப்பற்றிக் கவலைப்படுவது பொருத்தமற்றதுதான்.

என் உள்ளம் அறிந்த வரையில் - உன்னைக் கைப்பிடித்த அந்த நிமிடம் முதல் - இந்த ஆறுமாத காலத்தில் ஒரு தடவையாயினும் உன் பெண்மை மாசுறும் வகையில் உரிமையிருந்தும் கூட நான் நடந்து கொள்ளவில்லை அல்லவா?

அப்படி நான் தவறு செய்தேன் என்று நீ கருதுகிறாயா?

மற்றொரு வகையில் பார்க்கப்போனால் அவ்விதம் நடந்து கொண்டு உன் தேவையை நிறைவு செய்யாததை என் குற்றமாகக் கருதுவது பிழையில்லைத் தான். என்றாவது ஒரு தடவை உணர்ச்சிகளுக்கு நான் ஆளாகியிருந்தால், இன்றுபோல் என்னால் இப்படி ஒரு கடிதத்தை மனம் விட்டு எழுதியிருக்க முடியாது. அதுமட்டுமல்ல ; தூய்மையானதாக தெய்வீகமானதாக இருக்க நியாயமில்லை.

என்றோ ஒரு நாள் இப்படியான ஒரு முடிவை எதிர்நோக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டி வரும், என்று திருமணம் நிச்சயிக்கப்பட்ட அன்றிலிருந்தே நான் நினைத்துக்கொண்டு தான் வந்திருக்கிறேன்.

எமது மண வாழ்க்கையின் ஆரம்பம் உனக்கு இனித்திருக்கலாம். அது எனக்கு கசப்பாகவே இருந்தது. முடிவு நீயாகவே தேடிக் கொண்டதானாலும் எனக்கே அதிகம் இனிப்பாகவிருக்கிறது. இருந்தாலும் இருவருக்குமே முடிவு திருப்தியை அளிக்கிறதே!

மெய்தான், ஒரு விடயத்தைக் கூறிக்கொள்ள மறந்து விட்டேன். எனக்காகவும் என்னைச் சார்ந்தவர்களுக்காகவும் பல உதவிகளை அவ்வப்போது கரிசனையோடு செய்து தந்திருக்கின்றாய். இந்த நன்றியை உயிர்உள்ளவரைக்கும் பேணிக்காப்பேன். சந்தர்ப்பம் கிடைத்தால் ஆண்டவனுக்கு நன்றி கூறி அதற்குக் கைமாறு செய்தும் வைக்க விழைவேன்.

ஆறுமாத காலம் கணவன் - மனைவி என்ற சட்டபூர்வமான உறவினால் ஏற்பட்ட உரிமை உணர்வாலோ என்னவோ இந்தக் கடிதத்தை எழுதும் போது பல சந்தர்ப்பங்களில் உங்களை விளிக்கும் பாவனையில் "நீ" என்றும் "உனது" என்றும் அழைத்து வந்திருக்கின்றேன்.

உறவும் உரிமையும் உள்ளவர்கள் மட்டும் பாவிக்க வேண்டிய அந்த நெருக்க வார்த்தைகளை உறவைத் துண்டாடிய நான் பாவிப்பது பொருத்தமற்றது தான்.

அவ்வித வார்த்தைப் பிரயோகங்களுக்காக என்னை மன்னிக்கும்படி கேட்டு உறவின் எல்லையை இத்துடன் வரையறை செய்கிறேன்.

வணக்கம்

இப்படிக்கு,
இல்லறவினோதன்

*(யாவும் கற்பனை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. பேரின்ப ஆசை.

கண்களைத் திறந்து பார்த்தபோது பக்தியே உருவான பார்த்தன் பாத கமலங்களில் கை கூப்பியபடியே பணிந்திருந்தான். அதே மஞ்சத்தில் எதிர்ப்புறம் தலையணை ஓரமாக வணங்காமுடி மன்னன் வேடிக்கையும் விளையாட்டுமாக வீற்றிருந்தான்.

"அர்ச்சுனா, என்ன சேதி? எப்போது வந்தாய்? அயர்ந்து தூங்கி விட்டேனோ" என்றவர் அப்போது தான் அப்புறமும் இப்புறமும் ஒருமுறை பார்த்து திகைப்படைந்தவராக,

"அட......டே இது யார்? அரவக் கொடியனா.....!? அதிசயமாக இருக்கிறதே! என்று கூறியவர் எழுந்து கால்களை தொங்கப்போட்டபடி சயனாசனத்திலேயே உட்கார்ந்து விட்டார்."

"என்ன சங்கதி...... இருவரும் வந்து உட்கார்ந்திருப்பதைப் பார்த்தால் ஏதோ முக்கியமான சமாச்சாரம் போலல்லவா தெரிகிறது. சகோதரர்கள் இருவரும் பகைமை மறந்து உறவு கொண்டாட எனக்கும் அழைப்பு விடுக்க வந்திருக்கிறீர்கள், அப்படித்தானே? அமைதியாக இருக்கிறீர்கள். பேசுங்களேன்." இருவரது முகங்களையும் மாறி மாறிப் பார்த்துப் புன்னகை பூத்தார் பரமாத்மா.

அர்ச்சுனனை முதலில் அழைத்து குசலம் விசாரித்ததினால் பெரிதும் ஆத்திரம் கொண்டிருந்த துரியோதனன், தன் ஆதங்கத்தை வெளிக் காட்டிக் கொள்ளாதவனாக ஒருவாறு சமாளித்துக் கொண்டு,

"மாதவா" என்றான் அமைதியாக.

"என்ன மன்னவா சொல்லேன். தயக்கம் எதற்கு?"

என்றார் பகவான் செவிமடுத்தவராக. துரியோதனன் பேசத் தொடங்கினான்.

"மன்றுள் வரப்போகும் மாபாரத யுத்தத்திற்கு உங்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்தாசையைப் பெறவே இங்கு முதலில் வந்து காத்திருக்கிறேன். உதவி செய்ய வேண்டும் கண்ணா." அர்ச்சுனனைக் கடைக்கண்களால் நோக்கி ஒரு விழுங்கு விழுங்கிக் கொண்டான்.

"ஆஹா........... ஹா.........." இடி இடி எனச் சிரித்த பரமாத்மா, ஒகோ ! அப்படியா? என்று கூறிவிட்டு, கட்டிலில் தொங்கப் போட்டிருந்த கால்களை வேகமாக ஆட்டத் தொடங்கினார்.

சிறிது அமைதி நிலவியது.

துரியோதனனுக்குச் சீற்றம் சிரசுவரை ஏறினாலும் "காரியம் கெட்டுவிட வேண்டாம்" என்று ஒருவகையாக அடக்கிக் கொண்டு சும்மா இருந்து விட்டான்.

பரந்தாமனே பேசினார்.

"துரியோதனன் கூறிவிட்டான். பார்த்திபா உன்சேதி என்னவென்று சொல்லவில்லையே! கண்களைப் பார்த்தால் எதையோ மறைத்து இரகசியமாக வைத்திருப்பது போல் தெரிகிறதே. சொல்வதற்கு ஏனப்பா தயக்கம்?"

அர்ச்சுனன், எதிரில் இருந்த அரவக் கொடியோனை ஒரு முறை நோட்டம் விட்டு விட்டு,

கோவிந்தா, நான் எதனை மறைப்பது எப்படி மறைப்பது? யாருக்கு மறைப்பது? சர்வேசுவரனான தங்களுக்கு அவ்வாறு மறைத்து விடத்தான் முடியுமா?

பொறுமை இழந்து விட்ட துரியோதனன் இடையில் குறுக்கிட்டான்.

"கிருஸ்ணா, உங்களது சல்லாப லீலைகளைப் பார்த்துக் கொண்டு அழ எனக்கு நேரமில்லை. பிறகு ஒத்திகையைப் பாருங்கள். இப்போது விடயத்துக்கு வந்து என்னை அனுப்பி வையுங்கள்." சொல்லி முடிக்கையிலேயே அவனது பொன்முடி ஆத்திரத்தினால் ஆட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டது!

புன்முறுவல் பூத்த வதனமாக நிதானத்துடன் அர்ச்சுனனை நோக்கினார் கிருஸ்ணர். அவனும் அவரை அன்புடன் கூர்ந்து நோக்கினான். வழமையான புன்னகை இதழில் படர,

அர்ச்சுனா, வந்த சேதியைச் சீக்கிரம் சொல், துரியோதனன் சற்று அமைதி இழந்து நிற்பது போல் தெரிகிறது.

"சுவாமி, மன்னராம் என் அண்ணர் கேட்ட அதே யாசகத்தையே அடியேனும் தங்களுக்கு விண்ணப்பித்து பெற வந்தேன் சுவாமி."

"என்ன ! உண்மையாகவா?"

"ஆமாம் பிரபு. தங்களுடன் விளையாடுவேனா?"

சிறிது நேரம் கைகளைப் பிசைந்து கொண்டு தனக்குள் ஏதோ யோசனையில் ஆழ்ந்து விட்ட பகவான், "என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லையே!" என்று அங்கும் இங்கும் தலையை அசைத்து அலுத்துக் கொண்டார்.

மீண்டும் அவ்விடத்தில் அமைதி இடம் பிடித்துக் கொண்டது. பார்த்தன் பகவான் கிருஸ்ணருடைய தேஜஸ் பொலிந்த முகத்தையே வாஞ்சனையுடன் உற்று நோக்கிக் கொண்டிருந்தான். துரியோதனனோ தன் மார்பகத்தில் தொங்கிக் கொண்டிருந்த விலை மதிப்பில்லாத வைர பொற் பதக்கங்களையும் ஆபரணங்களையும் கையினால் அசைத்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராக பகவான் நிசப்தத்தை ஊடறுத்து மொழிந்தார்.

"நீங்கள் இருவருமே எனக்கு மிக வேண்டியவர்கள். ஒரே பொருளை இருவரும் தேடிக்கொண்டு இங்கே வந்திருக்கிறீர்கள். உங்கள் இருவருக்கும் 'நான்' வேண்டுமென்றால் என்ன செய்வது? இந்த இக்கட்டான நிலையில் என்னை பொறுத்தவரையில் ஒதுங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதுவே சிறந்த வழி. வீண் மனஸ்தாபங்கள் நமக்கெதற்கு?"

அதற்குள் துரியோதனன் அவசரப்பட்டு ஆர்ப்பரித்தான்.

"நினைத்தேன்; நினைத்தேன். இது நடக்குமென்று. ஆயர்பாடிக் கண்ணனுக்கு அமர்செய்யும் திடம் எப்படி வரமுடியும்? அதற்காக அவன் போட்டுக் கொண்ட திட்டம் இதுவன்றி வேறென்ன?"

"துரியோதனா நாவைக் கொஞ்சம் அடக்கிப் பேசப்பா. நல்லவற்றைச் சிந்தி, அவற்றையே நாடு. அபாண்டத்தை ஐயன் மீது சுமத்திக் குற்றம் காண்பதில் அப்படி என்ன சுகத்தைத் தான் கண்டாய்?"

அர்ச்சுனன் நிதானமாகவே கூறினான். பகவான் புன்னகை புரிந்தார்.

"பேசு ; பேசு, நன்றாகப் பேசு. இப்படி தாஜா பேசிப் பேசித்தானே இந்த இடையர் குலக் கோமான் பாண்டவர் என்றாலே ஒரு பிரத்தியேகப் பரிவு காட்டி வருகிறான். கௌரவர் என்றாலே எப்போதுமே ஒரு அசமந்தப் போக்கு இவனுக்கு."

"துரியோதனா, இப்படி நீ குற்றம் சுமத்துமளவிற்கு இங்கு என்னதான் நடந்து விட்டது? ஏன் அப்பா அவரை அனியாயமாகத் திட்டித் தீர்க்கிறாய்?"

இருவருக்குமிடையே குறுக்கிட்ட கோபாலன்,

"பொறுங்கள், பொறுங்கள். எதற்காக ஆளுக்காள் மோதிக் கொள்ளுகிறீர்கள். என்று சமாதானம் கூறிவிட்டு துரியோதனனை விழித்து,"

"ஏனப்பா என்னைப் பழிக்கிறாய். இடையர் குலத்தில் பிறந்தேன் என்றாலும் ஒர வஞ்சினை எனக்கில்லை. அபகரிப்புப் புத்தி ஏற்பட்டதில்லை. குலத்தில் பிறப்பதை விட குணத்தால் உயர்ந்து நிற்பதுதான் மேன்மை. சரி. இந்த நிலையில் இதைத் தவிர என்னால் வேறு என்னதான் செய்துதர இயலும்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன செய்ய முடியுமா? இதயம் வேண்டுமே உதவி செய்வதற்கு. அது இல்லாமல் எதை எதிர்பார்ப்பது உன்னிடம்."

"துரியோதனா என்னை என்னதான் செய்யச் சொல்கிறாய் இப்போது?"

"நீதியின்படி பார்த்தால் எனக்குத்தானே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்."

"துரியோதனா, நீதியைப் பற்றிப் பேசக்கூடத் தெரிந்து வைத்திருக்கிறாயே. அதனை நினைத்து சந்தோஷப்படுகிறேன்."

"ஒரே கோரிக்கையை முன்வைத்து இருவரும் ஒரே சமயத்தில் வந்ததனால் தான் நீதியின் படி யாருக்கும் இல்லாமல் ஒதுங்கி இருக்க முடிவு செய்தேன் இதில் என்ன தவறு இருக்கிறது, மைத்துனா?"

"இருவரும் கேட்டுக் கொண்டோம் என்பது உண்மை. ஆனால் முதலில் உன்னை நாடி இவ்விடம் வந்து சேர்ந்தவன் நானன்றோ! அப்படி இருக்க, உன் குரோத மனப்பான்மை விழித்தெழுந்ததும் அர்ச்சுனனைத் தானே முதலில் குசலம் விசாரிக்க வைத்தது."

புன்முறுவல் பூத்தவாறே பகவான் கூறினார்.

"ஏனப்பா என்மீது வீண் பழியைச் சுமத்துகிறாய்? நீதான் முதலில் வந்து உட்கார்ந்தாய் என்பதை துயில் கொண்ட என்னால் எப்படி அறிந்து கொள்ள முடியும்? விழித்தெழுந்த போது நேரெதிரில் இருந்தவன் அர்ச்சுனன் தான். அதனால் அவனுடன் பேச்சுக் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. உனது வியாபகத்தை நான் அறியாமல் போய்விட்டேன். நீ கூட அதைச் சொல்லி என்னை எழுந்திருக்கச் செய்திருக்கலாமல்லவா?"

"சரி நடந்தது நடந்துதான் விட்டது. முதலில் வந்து சேர்ந்தவர் நீங்கள் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் முதலில் குசலம் விசாரிக்கப்பட்டவர் பார்த்திபன். அதுவுமல்லாமல் இருவருமே எனது உறவினர்கள். யாருக்கென்று உதவி செய்வது? சங்கடமான சமாச்சாரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறதே....!"

மோவாயில் கையை மடித்து வைத்துக் கொண்டு கோபாலன் சிந்தனை வயப்பட்டுக் கொண்டிருக்க துரியோதனது சிந்தனையோ வெகுதூரம் சிறகடித்துப் பறந்து சென்று பாண்டவர் சேனை முழுவதையும் துவம்சம் செய்து மன்னர் மன்னனாக மறுபடியும் முடி சூடிக் கொண்டு வீற்றிருப்பதாக இன்பக் கனவு கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தான்.

பார்த்தீபனோ மானசீகமாக பகவானை நினைத்து வழிபட்டு அமைதிடைந்தான்.

"நான் ஒன்று சொல்லட்டுமா?" என்றவாறு அமைதியைக் குலைத்த பகவானை ஆவலோடு நோக்கினான் அர்ச்சுனன். அலட்சியமாக விழித்தான் அரவக்கொடியோன். புன்னகைத்தவாறே கண்ணன் மொழிந்தான்.

"துரியோதனா ! இப்போது என் தீர்மானத்தை நன்றாகச் செவிமடுத்துக் கேள். ஏனோ தானோ என்று இருந்து விட்டு பின்னால் என்னைக் குறை சொல்லாதே!"

"சொல்லுங்களேன். நீங்கள் தான் எப்போதும் பாண்டவர் பக்கம் உயிரும் மற்றவர்களுக்கு உடலுமாக இயங்கி வருபவராச்சே." என்றான் துரியோதனன்.

"துரியோதனா, கதையைத் தொடங்கு முன்பே இப்படி அபாண்டத்தை என் மீது சுமத்துகிறாயே! சித்தப்பிரமை பிடித்தவன் போல் எப்போதும் என்னை வேவுபார்ப்பதிலேயே உன் காலத்தின் பெரும் பகுதி கழிந்து விடும், மன்னா! சரி, இப்போது நீயே முதலில் ஒன்றைத் தெரிந்து தேர்ந்தெடுத்துக் கொள்."

"சொல்லித் தொலைத்தால் தானே! நாளை மறுநாள் யுத்தம் நடக்கப் போகிறது. அதற்கான முஸ்தீபு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்ய வேண்டாமா? உள்ள நேரமனைத்தையும் உன்னோடு வீணே செலவிட்டு விட்டு மடையனாக நான் போக வேண்டாம். எதையாவுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறி என்னை அனுப்பி வைத்தால் அதுவே போதுமானது."

"துரியோதனா, இருவருமே என்னை நாடி வந்து விட்டீர்கள் என்பதற்காகவே இதனைக் கூறுகிறேன். நீ சொல்லியது போல் என்னோடு காலம் முழுவதையும் செலவிடுவதனால் யாருக்கும் ஆக்கம் உண்டாகி விடாது என்பது உண்மைதான். துரிதமாகவே உன்னை அனுப்பிவைக்க முயற்சிக்கின்றேன்."

"கூறுகிறேன்; கூறுகிறேன் என்று வீணில் காலம் கடந்து செல்கிறதே அல்லாமல் வந்து நாழியாகியும் இன்னும் விடயத்திற்கு வந்தபாடில்லையே."

"பொறுத்ததோடு இன்னும் சில நாழிகை பொறுத்திரு மன்னா. எல்லாம் சரியாகி விடும். சரி, விடயத்திற்கு வருவோமே. நடக்கப் போகும் பாரத யுத்தத்திலே என் படைகள், ரதங்கள், புரவிகள், கஜங்கள் யாவையும் ஒரு புறமும், நிராயுத பாணியாக யுத்தம் புரியாத ஒரு நிலையில் நான் மறுபுறமாகவும் நிற்கத் துணிந்துள்ளேன். துரியோதனா, இந்த இரண்டில் உனக்கு எது வேண்டுமென்பதை முதலில் கூறு."

துரியோதனனை பரமாத்மாவின் இந்தக் கேள்வி தூக்கி வாரிப் போட்டது. சிந்தனை வயப்பட்டு விட்டான், அவன்.

கேட்டாலும் கேட்டு வைத்தானே ஒரு கேள்வி! படைகள் ஒரு புறமாம். தான் மறு புறமாம். அதிலும் ஆயுதம் எடுத்து யுத்தம் செய்யவும் மாட்டானாம். ஏதும் சூது இதனுள் ஒழிந்திருக்குமோ. என்னதான் சூழ்ச்சி இதற்குள் ஒழிந்திருந்தாலும் சரி யுத்தம் செய்யாத நிலையில் இருக்கும் இந்தப் பொம்மைக் கண்ணனால் எதைத்தான் சாதித்துவிட முடியும்? இவனை நான் விரும்பி ஏமாந்து ஏற்று விடுவேன் என்று எண்ணித்தான் இப்படி சூதைச் செய்திருக்கிறான் இவன். மன்னர் மன்னனான என்னை இவன் ஏமாற்றப் பார்ப்பதா? யாதவ சேனையில் எண்ணில்லாத ரத, கஜ, புரவி, பதாதிகள் நிறையவே இருப்பதை நான் அறிவேன் என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு,

"கண்ணா !" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்திபனோடு சுவாரசியமான சம்பாசணையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பரந்தாமன் அதனை இடைநடுவில் நிறுத்தி விட்டு.

"என்ன துரியோதனா, தீர்மானித்து விட்டாயா?"

அர்ச்சுனனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்து விட்டு "இதிலும் வெற்றி எனக்கே" என்ற மனக் களிப்போடு இறுமாந்த தொனியில் "இதில் தீர்மானிப்பதற்கு என்ன இருக்கிறது?" என்றான் துரியோதனன்.

"அப்போ உனக்கு......... எதுவுமே வேண்டாமா?"

"அப்படி யார் சொன்னது? உன்னைப் பிரிந்து நிற்கும் ரத, கஜ, துரக, பதாதிகளே வேண்டும் எனக்கு."

"சபாஷ்! நான் நினைத்தேன். இது நடக்குமென்று. காந்தாரி மகன் அவ்வளவுக் கென்ன சாணாக்கியமற்றவனா என்ன! அதுதான் பார்த்தேன்."

கண்ணன் முகமலர்ந்து சிரித்தான். மின்னலும் மழையும் இடித்துப் பெய்து கொண்டிருந்தது.

வெற்றியின் களிப்பால் துரியோதனன் தன் சாணாக்கியத்தைப் பறை சாற்ற தன் சகாக்களை நாடி அந்த இடி மின்னலிலும் வழி தெரிந்து அவசர அவசரமாக சென்று கொண்டிருந்தான்.

பேச்சு மூச்சின்றி அவன் எழுந்து செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த பரந்தாமன் ஒரு முறை கண்களை இமைத்துத் திறந்த போது தன்காலடியிலே தலைவைத்து வீழ்ந்து நமஸ்கரித்துக் கொண்டிருந்த பார்த்திபனைத் தன் இரு கைகளாலும் அன்போடு எடுத்து இருத்தி,

"என்மீது உனக்கு கோபமேதுமில்லையே, அர்ச்சுனா?" என்றார் அமைதியாக.

"கோபமா? எனக்கா? அதுவும் உங்கள் மீதா? எதற்காக இப்படிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கிறீர்கள் சுவாமி?"

"உதவி கேட்டுவந்த உனக்கு உதவாமல் உதாசீனமாக நடந்து கொண்டால் கோபம் வராதா, என்ன?"

"நீங்கள் தான் நான் கேட்டதற்கும் மேலாக உங்களையே தந்து விட்ட பிறகு.....?" என்ற பார்த்தனின் கண்கள் ஆனந்தக் கண்ணீரைச் சொரிந்தன. வார்த்தையின்றி அவன் திணறிக் கொண்டிருந்தான். ஒருவாறு முயன்று "இதைவிட எங்களுக்கு பெரும் பேறு வேறுள்ளதோ கண்ணா? அப்பேறு பெற நாங்கள் செய்த பூர்வ கன்ம பயன்தான் எதுவோ?" என்று தன் உள்ளக் கிடக்கையை பேசி முடித்தான்.

"ஆயுதமெதுவுமின்றி சும்மா நிற்கப் போகும் என்னால் யாது பயன் நிகழ்ந்து விடப்போகிறது, பார்த்தா?"

"நீங்கள் மட்டும் என்னோடு எப்போதும் இருந்து விட வேண்டும். இது வொன்றே நாளும் பொழுதும் நான் கேட்கும் வரம் சுவாமி. அகில உலகையும் இழந்து ஆற்றாத் துன்பத்தில் உழலும் போதும் உங்கள் பாதார விந்தங்களில் என் சிரம் தாழ்ந்து வணங்குமேயானால் அதுவே எனக்கு வேண்டும் இன்பக் கடலென மகிழ்வேன் சுவாமி."

"யுத்த பூமியிலே எதிரிகளை மூர்க்கமாக தாக்கி அழிக்க வேண்டிய சமயத்திலும் ஆயுதம் எடுத்து யுத்தம் செய்ய முடியாத இந்தப் பூசணிக்காயை எந்த வகையில் நம்பி எதற்காக சமாதானமடைகிறாய், பார்த்தா?"

"ஆட்டுபவனும், ஆடலும், ஆட்டப்படுபொருளும் நீயாகவே இருக்க அர்த்தமற்ற சிந்தனை எதற்குச் சுவாமி? கடைந்தெடுத்த வலி தோளும் களம் கண்ட வீர மார்பும் வளைந்துதொடுக்கும் வில், வாளும் தினவெடுத்து நிற்கும் திறமைதானும் ஆவி பிரிவடைந்து அல்லல் உறும் வேளை ஏது பயன்படும் என்பதை அறியாமலா கேட்கிறீர்கள், ஐயனே!"

பார்த்திபா, ஆசை அலை மீது மோதும் மானிடர்கள் தாம் நினைத்தவற்றை அடைந்து விடத் தவறுகின்றபோது தெப்பமாகத் தேர்ந்தெடுக்கும் கருவி "ஆண்டவன் உதவி" யாக இருப்பதனால் தானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை வணங்குகிறார்கள்.

"இறைவன் பால் பக்தன் கொண்டிருக்கும் அன்பும் கூட ஒரு வகையில் ஆசைதானே, சுவாமி."

"ஆம். ஆசை தான். பேரின்ப ஆசை. தன்நலம் மிக்க உடல்நலம் கலவாத தூய வினோத ஆசை. உள்ளத்தில் தோன்றும் விலை மதிக்க முடியாத ஆசை. அதுவே இப்போது உன் உள்ளத்திலும் முகை விட்டுக் கொண்டிருக்கிறது."

ஊர் பெரிது, பார் பெரிது
உழவர் தம் ஏர் பெரிது
"கண்ணன் வந்தான்
ஏழைக் கண்ணன் வந்தான்....."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. நீதியான கோரிக்கை.

கையிலே வேலில்லை. காலிலே தண்டையும் சதங்கையும் இல்லை. கழுத்திலே மாலை, ஆபரணங்கள் எதுவுமில்லை. மின்னும் கவசமுமில்லை. ஆனால் முகத்தில் மட்டும் பிரகாசம் ஒளிர்ந்து கொண்டிருந்தது.

என் முன்னே நின்றுகொண்டிருக்கும் இந்த உருவத்தை எங்கேயோ எப்போதோ பார்த்த ஞாபகம்...!

எங்கே பார்த்திருப்பேன்.......?
யோசித்துக் கொண்டிருக்கும் போதே அந்த உருவம் என்னைப் பார்த்து முறுவலித்து,

"நண்பா;" என்றது, கனிந்த குரலில்.

"எனக்கு இந்த உருவம் நண்பனா? பிசாசா?"

உருவமே தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தது.

என்னைத் தெரிந்திருக்காது தான்!
அதற்காக இப்போது என்ன வந்துவிட்டது?

விடயத்திற்கு வருவோமே.

"என்ன வேண்டும் உனக்கு?" கடுகடுப்புடன் கேட்டு வைத்தேன்.

"அதைத்தானே சொல்ல வந்தேன். அவசரப்படாதே" என்று அந்த உருவம் ஏக்கப் பெருமூச்சுடன் தொடர்ந்தது.

"கையிலே என் படைக்கலமிருந்திருந்தால், இப்போது நான் யார் என்பதை இங்கு கூறிவைக்க வேண்டியே இருந்திருக்காது. நீங்களாகவே விளங்கிக் கொண்டிருப்பீர்கள்."

"படைக்கலமா?"

"ஆம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“துப்பாக்கியா அல்லது வேறேதும் ப பங்கர......?”

“இல்லை. இல்லை. உக்கிர சக்திவேல.”

“அது என் தெய்வம் முருகனுடையதல்லவா? உனக்கென்ன பைத்தியம் பிடித்திருக்கின்றதா?”

“ஒருவேளை...... அங்கொடை ஆஸ்பத்திரியிலிருந்து யாருக்கும் தெரியாமல் வெளியேறி.......”

“ஆகா...... கா.....” அந்த உருவம் இடி இடியென உரக்கச் சிரித்துவிட்டு, “ஆராய்ச்சி பண்ண வேண்டியதேயில்லை. நானேதான் எல்லாவற்றையும் விபரமாகக் கூறுவதற்கு உன்னை நாடி வந்திருக்கின்றேனே.”

“அப்படியானால் நீர் யார்? முதலில் அந்த விபரம் எனக்குத் தெரிந்தாக வேண்டும்.”

புன்னகைத்தபடியே அந்த உருவம் பகர்கிறது.

“பயப்படாதே. நீ வணங்கும் தெய்வம் முருகன் தான். நண்பனாக அழைத்ததால், நட்புரிமையுடன் வந்திருக்கிறேன்.”

“என்னால் நம்பவே முடியவில்லையே.”

“என்னப்பா, மனிதர்கள் எல்லோருமே இப்படிப்பட்டவர்கள் தானா? நம்பிக்கை என்பதே இவர்கள் பக்கம் தலைவைத்தும் படுக்கவில்லை போலும்; தெய்வங்கள் கூட மனிதர்களின் குணாதிசயங்களை இன்னும் தெளிவாக அறிந்து கொள்ள முடியவில்லையே. சரி, சரி சத்தியமாகச் சொல்கிறேன் நான் தான் நீ வணங்கும் தெய்வம் முருகன்.”

“அப்படியானால் எதற்காக இப்போது இங்கு வந்தாய்.”

“முற்றிலும் மாறிவிட்டாயே. உன்கேள்வியே இப்போது ஒரு தனியாக இருக்கிறதே? முருகா, சாவும் வேண்டாம், வாழ்வும் வேண்டாம். வள்ளலே உனது அடியிணை ஒன்றே வேண்டும் என்றெல்லாம் பாடித் தொழுதாயே, நானாக வந்து நிற்கிறேன். இப்போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு எதிர்மாறாக.........."

"சரி, சரி. யாராயிருந்தால் என்ன? வந்த விடயம்.......?"

"விடயத்தை விளம்ப வரவேற்பு நன்றாக இல்லையே."

"ஆகாகா, வரவேற்பு......? அன்றாடப் புசிப்பதற்கே திண்டாட்டமாக இருக்கும் வேளையில் வரவேற்பு வேறையா?"

பலத்துச் சிரிக்கிறேன், ஏளனமாக. தொடர்ந்து விடாமல் என் வாய் முணுமுணுக்கிறது.

"விடிந்தால் இப்படித்தான் எத்தனையோ பேர் வருகிறார்கள் வீட்டுக்கு விருந்தாளிகளாகவல்ல, நாகரீகமான முறையில் பிச்சை எடுக்க, பல தந்திரங்களை கையாண்டு கொண்டு. நீ வேறு வரவேற்புக் கேட்கிறாயா?"

"ஆ......." வாய் மூடாமல் வியந்து நிற்கிறேன்.

பளபளக்கும் வெள்ளிவேல். வெற்றிவேல். சூரனைச் சங்கரித்த வீரவேல். ஞானத்தை அளிக்க வல்ல ஆன்மீக வேல். அதுதான் அந்த உருவத்தின் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கிறது.

சிந்தனைச் சக்கரம் தீவிரமாகச் சுழலுகிறது.

"பக்தர்களைப் பரீட்சிக்கப் பகவான் மானிட வடிவம் தாங்கியே வருவாராம். இவர் சித்தரோ, சீவன் முக்தரோ அல்லது அந்த முருகன் தானோ, ஒன்றுமே புலப்படாது தவிக்கிறேனே? எவராக இருந்தாலென்ன? முதலுக்கா நட்டம் வந்துவிடும்?"

மேலும் தாமதிக்காமல் வேண்டும் வரங்களைப் பெறுவதில் தடையேற்படலாம் என்ற மன உணர்வில்,

"முருகா! என் அப்பனே, அடியேனை இப்படியா சோதனை செய்தாய்? பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்கு நீ அறிவொளி என்பதை அறியாமல் போயிற்றுதே. என்னை மன்னித்து ஆண்டருள்வாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகநாதா!"

கண்களில் ஆனந்தக் கண்ணீர் ஆறாகப் பெருக, அந்த உருவத்தின் பாதார விந்தங்களில் சாட்டாங்கமாக வீழ்ந்து நமஸ்கரித்து, அப்படியே கிடக்கின்றேன்.

"நண்பா, எழுந்திரு. இப்போது ஒன்றைப் புரிந்து கொண்டேன்" மலர்ந்த முகத்துடன் கூறிய அவ்வுருவம் இவ்வாறு சிந்தித்திருக்க வேண்டும்.

மனிதன் எப்பொழுதும் தனக்கு தேவையானவற்றை யார் யார் கொண்டுள்ளார்களோ அவர்களையே தெய்வமாக கருதுகிறான்; மதிக்கின்றான்; வணங்குகின்றான். அவனது பார்வையில் அப்பொழுது அவலம் தெரிவதே இல்லை."

சில வினாடி மௌனத்தைக் குலைத்துக் கொண்டு,

"உன்னால் எனக்கோர் உதவி ஆக வேண்டியிருக்கிறது. ஆட்சேபனையில்லையே.....?" என்றது.

"உதவியா? உங்களுக்கா? நானா....? அகிலமும் படைத்து, அண்டங்களும் பலவுமாகி, உள்ளானும் இல்லானுமாகி, விருப்பு வெறுப்பின்றி எங்கும் நிறைந்த பரம்பொருளுக்கு, கேவலம் நாயிற்கடையாய்க் கிடந்து பிறப்பெனும் பெருநோயில் உழலும் இந்த அற்ப மானிடப் பூச்சியா உதவி செய்வது? தேவரீர் அடியேன் மீது திருவிளையாடல் புரிவது நியாயம் தானா?"

அதிகமாக என்னைப் புகழ்கிறாய். உண்மையினை நண்பனாகிய உம்மிடம் கூறாமல் விட்டு விடுவேனா? முன்பெல்லாம் ஏதோ நீ சொன்னவை நிஜம் தான். இப்போது மனிதன் தன் ஆற்றலாலும், அறிவினாலும் வையகத்தையும் வானத்தையும் விண்வெளியண்டங்களையும் ஆட்டிப்படைக்கிறான். எனது சக்தி அவர்களது புத்தியின் முன்னே தலை வணங்குகிறது.

"இது என்ன புதுப்புராணமாக இருக்கிறதே ! முருகா, கந்த புராணமே பொய்யின் பிறப்பிடமென்று இங்குள்ளோர் எள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகையாடுவார்கள். நான் நம்பவில்லை. இப்போது நீர் கூறுவதைப் பார்த்தால், அது சரியென்றல்லவா எண்ணத்தோன்றுகிறது.''

“நண்பனே எனக்கு நேரம் போதாது. கள்ளத்தனமாகவே அங்கிருந்து வெளியேறினேன். இன்னமும் தாமதித்தால் என்னவாகுமோ.......''

“தேவரீருக்கு யான் யாது புரிதல் வேண்டுமோ......?''

“உமது காரியாலயத்தில் சரவணபவன் என்றொருவர் இருக்கிறாரே.....?''

“ஆமாம். உங்களுடைய திருநாமத்தைத் தாங்கிக் கொண்டு.''

“அதன் பின் பக்கமாக.......... அருட்சோதி''

“உங்களுடைய திருவருட்சக்தியின் பெயரை ஏந்திக் கொண்டு.''

“அது மட்டுமல்ல. கீழ் மாடியிலே....... நெடுமாறன்''

“ஆமாம் தெரியும். இவர்களெல்லாம்.......?''

“உஸ்........ பலத்துச் சத்தம் போடாதே. இவர்களெல்லாம் என்னைப் பிடித்து தங்கள் தங்கள் மேசை மீது வைக்கப்பட்டுள்ள கண்ணாடிப் பலகைகளின் கீழ் வைத்து இறுக்கமாகப் பாரமேற்றிச் சிறைப்படுத்தி விட்டார்கள்.''

“ஐயோ, போயும் போயும் இவர்களிடமா மாட்டிக் கொண்டாய்?''

“மாட்டிக் கொண்டுதான் விட்டேன். எனது அறியாமை.''

“கடவுளே அறிவின் சொரூபம் என்கிறார்களே. அப்படியிருக்க நீங்கள் அறிவிலியா? தெய்வங்களைக் கூட தோற்கடிக்கும் சாமர்த்தியம் இவர்களுக்கு உண்டென்று நான் நினைக்கவேயில்லையே.''

“என்ன செய்வது? விதி யாரைத்தான் விட்டது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விதியா? அது தெய்வங்களைக் கூட ஆட்டிப்படைக்குமா?"

"அது ஒரு பெரிய கதை நண்பா."

"எங்கே சொல் பார்க்கலாம்."

"கதை சொல்வதாகவிருந்தால் ஒரு நிபந்தனை."

"நிபந்தனையா? அது என்ன அப்பனே."

"நிச்சயமாக உதவி செய்வேன் என்று சத்தியம் பண்ணித்தர வேண்டும். அப்போது தான் வாயைத் திறப்பேன்."

"இது தானா? முருகன் சாட்சியாக உதவி செய்வேன். கதையைச் சொல்லுங்கள்."

"ஆகா.... கா..... முருகன் சாட்சியாகவா? என்னையே எனக்குச் சாட்சியாகவா? ஐயோ வேண்டாம். எனக்குப் பயமாக இருக்கிறது. நீயும் அவர்களைப் போல்தான் இருப்பாயோ என்னவோ........"

"சந்தேகப்படாதே முருகா. நிச்சயம் எப்படியும் உதவி செய்தே தீருவேன். அவர்கள் என் நண்பர்கள். சிரமம் தான். நட்பு என்ற பிணைப்பில் ஆடா விட்டாலும் எங்களது கூட்டுறவுக் கடையில் மூன்று லக்ஸ்பிறே டின் எடுத்துக் கொடுத்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும்."

"நான் நம்ப மாட்டேன். அவர்கள் அதற்கு மசிவார்கள் என்று நான் நினைக்கவேயில்லை."

"போனால் போகிறது. இப்பொழுது செத்தல் மிளகாய் எடுப்பது கஸ்டம். ஆளுக்கு இரண்டு இறாத்தல் வீதம் பகிர்ந்து கொடுத்துவிட்டால், எதையும் செய்ய அவர்கள் தயாராகி விடுவார்கள். பயப்படவேண்டியதில்லை."

"எனக்கு என்னவோ நம்பிக்கையே இல்லை. நீங்கள் சத்தியம் செய்து கொடுத்தால் தான் நான் கதையைத் தொடங்குவேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விடாப்பிடியாய் நிற்கிறாயே. சரி. யார்மீது ஆணையிட்டுக் கூற வேண்டும்?"

"இப்போதெல்லாம் எந்தக் கடவுளுக்கும் மரியாதையேயில்லை. கலியுக வரதனான எனக்கே இப்படி ஒரு நிலையென்றால், மற்றவர்களின் நிலை......? பிரயோசனமில்லை. உங்கள் நாட்டுப் பாராளுமன்ற அமைச்சர்களுக்குத் தான் சகல பய, பக்தி மதிப்புக்களும். அவர் மீது ஆணையிட்டுக் கூறினால் போதும்."

"கேட்டாலும் கேட்டாயே ஒரு கேள்வி. அது கொஞ்சம் கடினமான செயலாச்சே."

"ஏன்?"

"மினிஸ்ரர்மாரைப் பற்றி எவர்க்கும் வியாக்கியானம் கூறவோ அன்றி அனாவசியமாகப் பேசவோ உரிமையில்லை. வேண்டிய மட்டும் புகழ் பாடலாம்."

"சத்தியம் செய்வதானால் மரியாதை இன்னும் அதிகரிக்கிறது தானே. அதில் எந்தப் பிழையும் இருப்பதாகத் தெரியவில்லையே."

சுற்றும் முற்றும் ஒருமுறை திரும்பி பார்த்துவிட்டு,
"சரி எது வந்தாலும் பரவாயில்லை. சி.ஐ.டி உளவாளி இங்கில்லை என்றால் போதும். கேளுங்கள்; கௌரவ "X" சாட்சியாக, உங்களது பிரச்சனைக்கு நிச்சயம் உதவி செய்வேன். இது சத்தியம். கதையைக் கூறலாம் தானே?"

"அப்பாடா. இப்போது தான் எனக்கு நிம்மதி. சொல்கிறேன். கேளுங்கள்."

"பூவுலகில் அறம் செழிப்புற்று விளங்குகிறதா என்பதை அறிந்து நல்லதோர் அறிக்கை சமர்ப்பிக்கும்படி பலரை அனுப்பியும் திருப்திப்படாமல், இறுதியில் நானே நேரில் வந்து அறிந்துகொள்வதற்காக, சஞ்சாரம் செய்து கொண்டிருந்தேன். உங்கள் கந்தோர்ப்பக்கமாக காற்றுவாக்கிலே வந்த இரைச்சலொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவராயிருந்தாலும் நியாயத்திற்குத் தலைவணங்க வேண்டும் என்ற தத்துவக்கருத்தை என் காதுகளில் போட்டுச்(')சென்றது."

"என்கால்கள் தானாகவே தாளம் போட்டுக்கொண்டு உள்ளே நுழைந்தன. அன்று அட்டமி திதி என்பதை அறியாது போயினேனே."

தன்னையே நொந்து கொண்டு ஒரு பெருமூச்சு விட்டவராகத் தொடர்ந்தார்.

"அங்கிருந்த உத்தியோகத்தர் எல்லோரும் எதையோ பற்றி விவாதித்துக் கொண்டிருந்தனர்."

நீதி, நியாயம் என்பனவற்றைப் பற்றி எவ்வளவு ஆழகாக, ஆதாரபூர்வமாக நிறுவிக்கொண்டிருந்தார்கள், தெரியுமா?

நீதி தேவதையே மலர்ந்த முகத்துடன் தோன்றி, என் அருகில் வந்து அமர்ந்து கொண்டு, அவர்களின் பேச்சைக் கிரகித்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில்

தத்தமது கரும பீடங்களை நோக்கி எழுந்து சென்று கடமைகளைச் செய்து கொண்டிருந்தனர்.

அங்கே

இருநூறு மைல்களுக்கப்பால் இருந்து வந்த ஒரு ஏழைப் பிரஜையின் பிரலாபம்.
நீதியான கோரிக்கை.

அதற்குக் கிடைத்த பதில்,

சாட்டுப்போக்கு, விதண்டாவாதம், சட்டப்பிறழ்வாதம்.

ஐந்து பிள்ளைகளும், தாயும் வீட்டில் மூன்று நாள் பட்டினி. அவர்களின் அவலக்குரல் பிரஜையின் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயாமாரின் நீதி விளக்கத்தின் அர்த்த புஸ்டி அவனுக்கும் புரியாமல் இல்லை. சட்டைப் பையைப் பார்க்கிறான். அது வெறிச்சோடிக் கிடக்கிறது. பெருமூச்சொன்று கச்சான் காற்றாக வெளியேறுகிறது.

நீதி தேவதையின் கண்கள் கலங்கின. முன்றானைச் சேலையால் முகத்தை மூடி அழுதுகொண்டு எழுந்து வெளியே போகிறாள்.

“சொல்லாமல் கொள்ளாமல் எங்கே போகிறாய்? இங்கே சற்று வா”

நீதி தேவதையை நான் அழைக்கிறேன். அதற்குள் உங்கள் கந்தோர் உத்தியோகத்தர்கள் சேர்ந்து விட்டார்கள். என்னை எளிதில் புரிந்து கொண்டார்கள். உங்களைப் போல் தடுமாற்றமடையவில்லை.

யுக்தி செறிந்த இவர்கள் மூளையிலே புத்தி ஒன்று குறுக்கிட்டிருக்க வேண்டும்.

அடுத்த கணம்

எல்லோரும் முளந்தாளில் நின்று பஜனை வைக்கத் தொடங்கி விட்டார்கள். பக்தி கீதம் ஒலித்தது. இசை வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. அந்த இசைத்தென்றலில் மெய் மறந்து அறிவயன்றிருந்தேன்.

அடுத்த விநாடி

சொல்லவே நா தளர்கிறது. அவர்களுடைய கண்ணாடிப் பலகைக்குள் வியாபாரப் பொருளாக எனது உரு அடைக்கப்பட்டு விட்டது.

பக்தியால் என்னை அடையமுடியாத பாதகர்கள் யுக்தியால் கண்டு கொண்டதோடு என்னையும் அடிமைப்படுத்தி விட்டார்கள்.

அங்கே-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளாந்தம் நடைபெறும் கேவலங்கள், அநீதிகள், பொய்கள், புரட்டுக்கள் எல்லாவற்றையும் கண்டும், கேட்டும், உணர்ந்தும் எதுவும் செய்ய முடியாமல் நரகவேதனையில் அமிழ்ந்து துடித்துக் கொண்டிருக்கிறேன். நீசர்களின் வாயில் நீதி நூல்கள் பெறும் சிறப்பு வாழ்க்கையில் அவர்கள் கடைப்பிடிக்கும் நடைமுறைகளுக்கு எதிர்மாறானவைகளாக இருப்பதனால், நீதி தேவதை அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

சில நாட்களின் பின்பு-

தீர்த்தயாத்திரை செய்துவிட்டு வந்த ஞானி ஒருவரின் கண்களில், வெளியேறிக் கொண்டிருந்த நீதிதேவதையின் உருவம் பட்டது போலும்,

மெய்மறந்த நிலையில் பேசிக்கொண்டிருந்தார். "அங்கே ஏன் மறைகிறாய் தாயே. பாரினில் உன்னைப் பணிந்தேன். பரகதி அருள்வாய் நீயே."

அதற்குள் பெருத்த கூட்டமே கூடிவிட்டது. பித்தன் - பைத்தியகாரன் - ஏமாற்றுக்காரன் - வஞ்சகன் என்றெல்லாம் அந்தப் பரமசாதுவைத் தூசித்தனர்.

"இதனாலன்றோ நீதி தேவதை இவ்விடம் விட்டு நீங்கினாள்." என்றார் சாது அனுதாபத்துடன்.

அதற்கிடையில், ஒரு ஜீப் வண்டியில் அங்கு வந்து சேர்ந்த பொலிஸ் காவலர் கூட்டத்தைக் கலைத்துவிட்டு அவரைத் துன்புறுத்தி,

"நீதி தேவதையா" எங்கே வெளியேறிக் கொண்டிருக்கிறது? காட்டடா பார்ப்போம். பித்தம் தலைக்கேறிவிட்ட சுழற்சியா இது? என்று கர்ச்சித்தனர்.

கைகளை நீட்டினார் சாது "அதோ அங்கே" என்று நேராகச்சுட்டினார்.

எங்கே?

எதுவுமே புரியவில்லை அவர்களுக்கு. பைத்தியகாரன் என்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை வலுப் பெற்றதைத் தவிர.

"அதோ அந்த அரசு மரத்தின் பின்புறமாக. தலை மட்டும் தான் தெரிகிறது. உடம்பு ஏற்கனவே மறைந்து விட்டது."

"என்ன பிதற்றுகிறாயா? அல்லது ஏமாற்றுகிறாயா? ஆசாமி"

"ஐயா அதோ பாருங்க தேவதை மறைந்து கொண்டே நம்மைப்பார்க்கிறதே. இது கூடவா உங்கள் கண்களுக்கு புலனாகவில்லை."

"கொல்" என்று உரத்துச் சிரித்தது பெருங்கூட்டம்.

ஜீப் வண்டியில் இழுத்துப் போட்டு உதைக்கப்பட்டார் சாது. இப்போது ஜெயிலில் கண்ணீர் வடித்துக் கதறி அழுகிறார் சாது. பாரமும் பழியும் என்மீது தான் போடப்படுகிறது. சாதுவையும் விடுதலை செய்தாக வேண்டும். அதற்கு முதலில் நான் வெளியேறியாக வேண்டுமே!

"இப்போது புரிந்து விட்டதல்லவா எனது ஏமாளித்தனம்."

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த எனக்கு ஏதாவது செய்தாகவேண்டும் என்ற மனநிலை உருவாகி விட்டது.

"புரிகிறது, உன்நிலையும் சங்கடமானது தான். சரி நாளை வரும் போது மூன்று லக்ஸ்பிறே டின் கொண்டு வருகிறேன். எல்லாவற்றையும் தீர்த்துவிடலாம்."

ஒவ்வொரு வினாடியும் என்னைப் பொறுத்தவரையில் மிகவும் பெறுமதியானது. நாளைவரை பொறுத்திருக்கவா?

"வேறென்ன செய்வது?"

"இப்போது ஏன் தயங்குகிறீர்கள்?"

"பையிலே பணமில்லையே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அடடா, இதற்காகவா? நான் தருகிறேனே, இன்றே இப்போதே முடித்து விடுவோம்."

கரங்கள் இரண்டும் சந்தித்து விலகுகின்றன.

"முருகா பணத்தை அதிகமாகத் தருகிறீர்களே...? சில்லறையாகத் தாருங்கள்."

"மிகுதி உனக்கு."

"இல்லை, இல்லை. எனக்கு வேண்டவே வேண்டாம். உன் பரிதாபத்திற்காக அல்லவா இந்தக் கீழ்மட்ட நிலையிலும் உதவி செய்ய முன்வந்தேன். என்னையும் அவர்களோடு சேர்த்துக் கணக்குப் போட்டுவிடாதே. மூன்று டப்பாக்களுக்கும் நாலாயிரத்து நாற்பது ரூபா. மிகுதி அறுபது ரூபாவை நான் தருவேன். பெற்றுக் கொள்ள வேண்டும்."

"இப்பொழுது மற்றொன்றையும் தெரிந்து கொண்டேன் நண்பா."

"என்னது"

"எந்த நிலையிலும் மேல் மக்கள் மேல் மக்களே. சங்கானது சுட்டுப் பொசுக்கினாலும் அதன் வெண்மை மாறாதல்லவா?"

இடையில் ஒரு மணித்தியாலம்.

மூன்று இரண்டரை இறாத்தல் போட்ட லக்ஸ்பிறே டின்களுடன் திரும்பி வருகிறேன்.

குசு குசு மொழியில் சரவணபவன், அருட்சோதி, நெடுமாறன் - இவர்களுடன் உரையாடுகிறேன், குழைவாக.

கடும் பிரயத்தனத்தின் பின் ஒரு வாறாக இசைந்து கொடுத்தவர்கள் சைகை மூலம் சரி என்று குறித்த நேரத்தில் றெக்கோர்ட் றூமில் ஒன்று சேர்வதாக உறுதி கூறுகிறார்கள்.

முருகனோடு முன்னால் நடந்து செல்கிறேன். அவர்களைச் சமாதானம் செய்து விடுதலை பெற்றுக் கொடுப்பதற்காக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த லக்ஸ்பிறே டின்னுக்காக மட்டும் அவரை ரிலீஸ் பண்ண முடியாது."

நெடுமாறன் வியாபார பேரத்தை ஆரம்பித்து வைத்தார். மற்றவர்கள் ஆமோதிப்பது போல் நிமிர்ந்து அமர்ந்து கொண்டார்கள்.

"இவர் சிறைக்கூடத்திலேயே தொடர்ந்து அமர்ந்து கொண்டிருந்தால் எதையும் பயமில்லாமல் துணிந்து செய்யலாமே. ரிலீஸ் ஆக்கிவிட்டு பின்பு என்ன செய்வது? இது எனது அபிப்பிராயம் யோசித்து செய்யுங்கள்."

சரவணபவன் மேசையில் தாளம் போட்டுக்கொண்டே கூறினார். என் கையில் இருந்த லக்ஸ்பிறே டின்னையும் ஒரு முறை பார்த்து வரண்டு போயிருந்த தன் உதடுகளை ஈரப்பதனிட்டுக் கொண்டார்.

"படம் மட்டும் நம் கண்ணாடிப் பலகைக்குள்ளே இருந்து கொண்டிருந்தால் பல நோக்கங்களுக்கு அது பயன்படும். வீணான சந்தேகங்கள் கூட எழ நியாயமில்லை. பார்ப்பவர்கள் பக்திமான்கள் என்றே எண்ணிக்கொண்டிருப்பார்கள்." நீண்ட நாட்களின் பின் அவரின் இதழ்களில் நெளிந்த அபூர்வப் புன்முறுவலையும் அப்படியே விழுங்கி விட்டார் அருட்சோதி.

"ஐயோ நீங்கள் எல்லோரும் சண்டாளர்கள் என்பது எனக்கு இப்போது தானே புரிகிறது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகின்ற உங்களோடு உறவாடிய நான் ஒரு முட்டாள்" என்ற படி பக்கத்தில் நின்ற முருகனைப் பார்வையால் வினாவினேன் என்ன செய்வது. பார்க்கலாமா.....? என்பது போல்.

என் குறிப்பறிந்து மூன்று பசை படியாத ஐநூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆளுக்கு ஒன்றாக அவர்கள் மூவருக்கும் பகிர்ந்தளித்தார், எம்பெருமான்.

நாசியை உயர்த்திக் காற்றிழுத்து, "முருகா" என்று அங்கலாய்த்துக் கொண்டே மூவரும் அதனைப் பறித்தாற்போல் பிடுங்கிக் கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த வினாடி எதிர்பாராதது நடந்துவிட்டது. மதியை மீறி விதி ஓங்கிவிட்டது. பித்தம் தணிந்து சிலேட்டுமம் தலை தூக்கிவிட்டது.

இலஞ்சக்கமிஷனரின் கையெழுத்துப் பொறிக்கப்பட்டிருந்த இலச்சினை தான் தாங்கிருந்த வேலின் மேற்பகுதியில் இருப்பதைச் சுட்டிக்காட்டி,

"இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கையும் மெய்யுமாக உங்கள் மூவரையும் கைது செய்கிறேன்" என்று கூறி மாஞ்சி வளையல்களைப் பூட்டிக் கொண்டிருந்தார் முருகனாக வந்து அற்புதங்கள் புரிந்த இலஞ்ச ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் தில்லைக்கூத்தன்.

உங்களது மிகுதிப்பணம் எட்டு ரூபாயும் இதோ என்று கையை நீட்டிக் கொண்டிருந்தேன், நான். என் கைகள் நடுங்கின. என்னிடம் பக்தியிருக்கவில்லை. பயம்தான் நிறைந்திருந்தது.

"எங்கே போகிறோம்?" மூவரும் கேட்டுக்கொண்டனர். விண்ணுலகத்திற்கு விருந்தாளிகளாக அல்ல. அரசாங்க சிறைக் கூடத்திற்கு கைதிகளாக. ஜீப்பொன்று விரைந்து வந்து அவர்களை ஏற்றிக்கொண்டு நேராகப் பொலிஸ் நிலையத்திற்கு புறப்பட்டது.

அங்கே-

பொலிசார் சலூட் அடித்து மரியாதை செலுத்திக் கொண்டிருந்தனர். சாதுவாக வாது புரிந்தவர் முருகனின் நண்பன் சி.ஐ.டி. கண்ணன் என்பவர் தான்.

"எங்களோடு நவரெத்தினம், பீற்றர் ஆகியவர்களையும் அழைத்துக் கொண்டு போவது தானே முறை? எங்களுக்கு இதன் தாப்பரியங்களை புரியவைத்தவர்களே அவர்கள் தானே?" என்ற முணுமுணுப்பு மெதுவாகப் புகைந்து கொண்டிருக்கிறது, ஜீப்பின் பின்புறமாக.

அவர்களைப் பொறுத்தவரை அது நீதியான கோரிக்கை தானே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. புதிய சமுதாயத்தின் பழைய தலைமுறை.

மதகைத்தாண்டி ஒரே சீரான வேகத்தில் ஓடிக்கொண்டிருந்த மோட்டார் வண்டி இடதுகைப் பக்கமாகத் திரும்பி, பச்சை பசேலெனச் செழித்து வளர்ந்து நிற்கும் நெல் வயல்களினூடாக அமைக்கப்பட்டிருந்த உப பாதையால் ஊர்ந்து கொண்டிருந்தது.

காரின் ஓட்டத்தினால் தள்ளுண்ட பவன அமுக்கம், நெற்பயிர்களின் பசுந்தளிர் ஓலைகளை மீட்டி, மென்மையான சங்கீதத்தை இராகவனின் வருகைக்காகவே இசைத்து மகிழ்ந்தது போலிருந்தது.

வயலில் இறங்கித் தானியங்களைத் தேடிப் பொறுக்கிக் கொறித்துக் கொண்டிருந்த பறவையினங்கள் இறக்கைகளை ஆட்டித் தமது களிப்பைத் தெரிவித்துப் பறந்து கொண்டிருந்தன.

கார் நேராக ஓடிக்கொண்டே இருந்தது.

தெருச் சந்தியில் இருக்கும் தேனீர்க் கடையில் இருந்து கொண்டு பலவகை பயனற்ற கருத்துக்களைப் பரிமாறி, பொழுதைக் கரைத்து அதனால் பெருமையும் திருப்தியும் பெறும் அந்தச் சமுதாய மந்த மயக்கத்தின் மத்தியில் இராகவனின் வரவு பெரும் பூசலைக் கிளப்பி விட்டிருந்தது.

அந்த வயல் சாம்ராஜ்யத்தைக் கட்டியாண்ட மண்முனைக் கண்டத்துப் போடி மன்னர் வரிசையிலே, அவர்களது போக்குக்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில் இராகவனையும் அவனுக்குச் சரிசமமாக காரின் முன் ஆசனத்தில் இருந்து சவாரி செய்து கொண்டு செல்லும் கந்தனையும் பார்க்க நேர்ந்ததே அந்தக் கும்பலின் கிளர்ச்சிக்குக் காரணமாக இருக்க வேண்டும்.

தம்மைப் போல மாட்டு வண்டியை ஓட்டிக்கொண்டு தங்களில் ஒருவனாக இல்லாமல், எஜமானது விசுவாசத்திற்கும் பொறுப்புகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரமானவனாக இருப்பதோடு, தங்களையும் உதாசீனம் செய்துவரும் கந்தனின் போக்கை எண்ணி பெ றாமை கொண்டு அதனை வெளியில் காட்டிக் கொள்ளாமல் வார்த்தைகளை விஷமாகக் கொட்டித் தீர்த்தனர்.

"தகப்பனுக்கு வினை வைத்த சண்டாளன்" என்று ஒருவன் கதையைத் தொடங்கி வைக்க,

"உனக்குத் தெரியாதா அண்ணே?" என்று பூர்வோத்வ சம்பவங்களை இரசனையோடு நினைவில் கொண்டது இன்னொரு குரல். அதனைத் தொடர்ந்து வேறொரு குரல்,

"இராகவப் போடி கந்தன்ட ஊட்டில தானாமே சொந்தமாக....."

முடிக்கவில்லை. ஆவலுடன் கேட்டுக்கொண்டிருந்த பழைய குரல் முந்திக் கொண்டு,

"அப்படியா? எனக்குத் தெரியாதே இந்தச் சங்கதி. ஒருவரும் நம்ம காதில போடல்ல. இப்பதான்..... மிச்சம் நாள் கூடியோ.....?"

தன் அறியாமைக்காக தன்னைத் தானே நொந்து கொண்டது.

சம்பாசணையை அதுவரை செவிமடுத்திருந்த வேறொரு குரல் புதிதாக முளைத்தது.

"இல்லெண்டா முல்லைக்கார சாமியன முன் சீட்டில வைச்சிக் கொண்டு இவளவு அன்னியோன்னியமாக போவாங்களா, அண்ணே?"

ஆதாரத்துடன் நிரூபித்து கேள்வியுடன் நிறுத்தியது.

"எத்தனை காலத்திற்குத் தம்பி......? இந்த உடம்பில சத கரைய மட்டும் தானே!"

தத்துவ அனுபவம் பேசி பெருமூச்சு விட்டுக் கொண்டது முந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல்களில் ஒன்று.

வழக்கில் சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் வாசிக்கப்பட்டு வாதப் பிரதி வாதங்கள் நடந்து கொண்டிருந்தன. சிறிது நேரம் அமைதியாக இருந்து அந்தக் கூட்டத்தில் கொலு கொலுப்பை ஏற்படுத்தியது ஒரு குரல்.

விட்ட இடத்தைத் தேடிப் பிடித்துத் தொடர்ந்தது.

"அதைச் சொல்லுங்கோ இன்னொரு தடவை. வாலிபம் கலைகின்ற வேடம், மச்சான். அண்ணன் சொல்லுறதில நிறைய விசயம் இரிக்கி."

"எண்டாலும் இவன் கந்தன் செய்தது பெரிய அனியாயம் தானே? அது சரி. சாமியன் இப்ப எங்க? ஆளயே காணல்ல."

"ஆதம்பாவா போடியார்ர வயலில நிக்கிறான் போல......"

"இருந்தாலும் முந்தின மாதிரி இராது என்ன?"

ஓ, கிழவன் இரிக்கக்குள்ள அவனுக்கு நல்ல யோகம். அந்தாள் பாத்துப்பாராம வறுமயக் கவனிச்சி நல்லாக் குடுத்து ஆதரிக்கிற மனிசன். அந்தப் புண்ணியவான்ட இடத்துக்கு வந்து சேர்ந்துதே சனி. சரியான பிசினி?

அதிருப்தி உரை நிகழ்த்தியவர் தான் அந்தப் பகுதி வட்ட விதானையார்.

இந்த வட்டைக்குள்ள வெள்ளாமைச் செய்த போடி மாருக்குள்ள ஒரு பெருந்தன்மையான ஆள் அந்த மனிசன். ஒரு தனி ரகம் தான்.

அவர்கள் இருந்து பேசிக் கொண்டிருந்த வாங்கு கால் சறுக்கியதால் சாய்ந்து விழப்பார்த்தது. இருந்தவர்கள் துள்ளிப் பாய்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீராக நிறுத்தி வைத்து மறுபடியும் அமர்ந்து கொண்டனர்.

"சும்மா சொல்லப் போடாது. இராகவன் பிழை என்டே வெச்சிக் கொள்ளுவம். நமக்கு அவன் என்ன செய்தவன். இல்ல சாமியனுக்குத் தான் என்ன செய்தவன். கிழவனிட்ட விட்டு வந்த சேட்டை அவனிட்ட பலிக்குமோ? வெள்ளாமைய உட்டுற்றுப் போனதுக்கு இராகவனா குற்றவாளி? இதென்ன கதை அண்ணே நீங்க பேசிறது."

ஒரு இளைஞன் ஆக்ரோசத்துடன் பேசி முடித்ததும் கூட்டத்தில் சிறிது சலசலப்பு தலை தூக்கியது. பரபரப்படைந்த கும்பல் உற்சாகத்தோடு விடாமல் வாதிட்டது.

"சீச்சி. என்ன கதை தம்பி பேசிறா? இராகவப் போடிதானே சாமியன விலத்துனவன்."

"உனக்கு ஆரு சொன்ன கத அண்ணே இது? அவனாக விலகிற்றுப் போய் இப்பிடி ஒரு அபாண்டத்த.... வாய் அழுகாதா இவனுகளுக்கு."

"ஆருட்டயெண்டாலும் கேட்டுப்பாருங்க. இந்த ராகவனுடைய கொடும பொறுக்கேலாமத் தான். வம்பில புறந்த அந்த வழிசல் அவன்ட மகன் கந்தன் தானாம் காரணம்."

"இல்ல. நீங்க தப்பாச் சொல்லுறயள் அண்ண. சாமியன் தானாகத் தான் விலகினவன்."

"இல்லத் தம்பி. நீ வேற ஆக்களிட்டக் கேட்டுப் பாரு. இந்த ஊரெல்லாம் கதைச்ச விசயம்."

"ஒருவரிட்டையும் கேக்கத் தேவல்ல, அண்ண. நானும் அண்டைக்கு களத்தில நிண்ட நான். சூடு போட்டுக் கணக்கு வழக்குப் பாத்தாங்க. பொருத்தம், படி எல்லாம் போக புதுரும் கழிச்சி ஒரு சாக்கு மிச்சமாகவும் குடுத்தாங்க. இராகவன் தான் குடுத்தவன். சும்மா நிண்ட சாமியன் தான் சொன்னவன் போடியார், இனி என்னால ஏலாது. இந்த முறையோட நான் விலகிறனெண்டு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி உண்ட கதய ஒத்துக் கொள்ளுவமே. சம்பந்தமில்லாம சும்மா இருந்தாப்பில விலக ஒரு நாயம் இரிக்கோணுமே.....?"

"நாயம் இல்லாம என்ன? மாடு ஆடாம மணி ஆடுமா அண்ணே? இந்த கூலிப்பயலுகளுக்கு களவெண்ட சீதேவி கையில இரிக்கக்குள்ள, வாயால கேக்கிறவன் வழங்கா முட்டு. சூடடிச்ச கள வட்டிக்குள்ள நடத்தி முடிச்ச சமாச்சாரத்துக்கு என்ன சொல்லப்போறயள் இப்ப....?"

"இந்தச் சங்கதி எனக்குத் தெரியாமப் போச்சே!"

"இதுகளத் தெரிஞ்சிக்காம சும்மா ஒருவனப் பத்தி அனியாயமாக..... என்ன அண்ணே?"

"அப்ப..... சாமியன் விலகினதும் ஒருவகைக்கு நல்லதுதான்."

[2]

போடியாரின் வருகையை எதிர்பார்த்து சந்தியில் காத்துக்கொண்டு நின்ற முல்லைக்காரச் சாமியன், கார் வந்து நின்றதும் எதிர் கொண்டழைத்து அவர் கைகளில் வைத்திருந்த சிறுசரைகளை விநயமாகப் பெற்றுக் கொண்டபின், பிள்ளைகள் மூலம் போடியாரின் வரவை முன்கூட்டியே தன் மனைவியாளுக்கு சமிக்ஞைகொடுத்துவிட்டு காரில் இருந்த சாமான்களை இறக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு உழைத்தான்.

தலையைச் சொறிவதும், கைகளைப் பிசைவதுமாக சற்று அப்பால் நின்று கொண்டிருக்கும் சாமியனுக்கு போடியாரின் வாயிலிருந்து பிறக்கப்போகும் ஆணை இன்னதென்பது தெரிந்தது தான். என்றாலும், அவர் சொல்லும் வரையில் காத்து நிற்பதை ஒரு மரியாதைச் செயலெனக் கருதினான் அவன்.

ஏக கம்பீரத்தொனியில் உரிமையுடன் கூவினார் போடியார்.

"சாமியன் இதெல்லாத்தையும் வாடிக்கு கொண்டு போ."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கென்றே தயார் நிலையில் நிறுத்தி வைத்திருந்த தன் ஆட்களை நோக்கி,

"டேய் முத்தன், வேலன், கணபதி எல்லாரும் வாங்கவன்டா" என்றான் சாமியன்.

மூட்டை முடிச்சுக்கள் யாவும் எறும்புச் சரையென வரம்புக்கட்டுப் பாதையால் வாடியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தன.

அந்த வருடம்தான் முதன் முதலாக போடியார் மருமகன் இராகவனையும் தன்னோடு அழைத்து வந்திருந்தார்.

சித்திரை மாதத்துக் கடும் வரட்சியினால் காய்ந்து வரண்டு கிடந்த வயல் வெளியில் செம்மணிக்கதிர்கள் அறுக்கப்பட்ட பின் வெளியே தள்ளிக் கொண்டு எஞ்சி நின்ற தாள்கள் பொன்னிறம் பெற்று ஒரே மஞ்சட் காடாகக் காட்சியளித்தது.

இருபத்து மூன்று ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட அந்த நெல்வயல் பரப்பின் தென் மேல் திசை ஓரமாக அமைந்த ஒரு கால் ஏக்கர் அளவிலான நிலப்பகுதியில் சுற்றி வர கம்பி வேலியிட்டு உறுதியாக அமைக்கப்பட்ட ஒரு கல் வாடியை நிறுவியவர் போடியார்தான்.

இதற்குச் செலவானாலும் "நல்ல வேலை" என்று பலராலும் பாராட்டப்பட்டவர் போடியார்.

தென்னை மரங்கள் கடும் வரட்சியிலும் காய்த்துக் குலுங்கின. தளதளத்த இளநீர்க் குலைகளை சுமக்க வொண்ணாமல் நின்றிருக்கும் அவை நிறை மாதக் கர்ப்பிணியை நினைவு கூர்ந்தன.

மிளகாய், கத்திரி போன்ற சில புன்செய் பயிரினங்கள் கூட அங்கே அழகுற நடப்பட்டிருந்தன. ஒரு குடும்பத்தின் சுயதேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய சிறு களஞ்சியமாக அது இருந்ததெனலாம்.

அனல் கக்கும் வெயிலுக்கு அந்த நிழல் சோலை ஒரு பாலைவனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுந்தரையாக மிளிர்ந்தது.

போடியார் சேனை புறப்பட்டு வாடியை நோக்கி பாதயாத்திரை வந்து கொண்டிருந்தது. வாசற்படலையில் நின்றபடியே கணவனின் வருகையை கண்டுகொண்டாள் வள்ளி. மற்றவர் கண்களுக்குத் தரிசனம் தெளிவற்றிருந்த போதிலும், சாமியனுக்கு தன் மனைவியின் எழில் உருவம் சமீபத்தில் உள்ளது போல் மிகத் துல்லியமாகத் தெரிந்தது. தனக்குள் எதையோ முணுமுணுத்தபடி விரைந்து நடந்து கொண்டிருந்தான்.

தலைவாயிலினுள் புகுந்த போடியாருக்கு ஒதுங்கி வழிவிட்டு, மரியாதையும் அடக்கமும் கொண்ட சிரிப்பை உதிர்த்தாள், கைக் குழந்தையைக் கக்கத்தில் ஏந்தியிருந்த வள்ளி.

எதையும் சட்டை பண்ணாத போடியார் விறுவிறுத்து நடந்து சென்று வாடி முற்றத்தில் போடப்பட்டிருந்த சாய்வு நாற்காலியில் தொப்பென்று சாய்ந்து விட்டார். அவர் வாய் "பூ..... பூ....." என்று அரற்றிக் கொண்டிருந்தது.

வெயிலின் கொடுமையினால் துளிர்த்த வியர்வைக் கண்ணீரை ஆற்ற அவர் எடுத்துக் கொண்ட பிரயத்தனங்களில் இவையும் சிலவாகும்.

சுமந்து வந்த பொதிகளை விறாந்தையில் வைத்துவிட்டு அங்குமிங்குமாக மர நிழல்களில் ஒதுங்கி நின்று போடியாரின் ஒவ்வொரு அசைவுகளையும் நூதனமாகப் பார்த்து வியந்த வண்ணம் அடக்கத்தோடு இருந்தனர் கூட வந்த அந்த தொழிலாள ஏழைகள்.

சாமியன் மட்டும் போடியாரின் அருகில் நின்றுகொண்டு அவரது தாம்பூல தாகத்தை தணிப்பதற்காக வெற்றிலை, பாக்கு மடித்துக் கொண்டிருந்தான்.

மருமகன் தன்னோடு வந்த சங்கதியை அப்போதுதான் நினைவு படுத்திக் கொண்டவராக துள்ளி எழுந்த போடியார், "சாமியன், வேற கதிர இருக்குதோ?" என்றார் அவசரமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமியன் தலையைச் சொறிந்து கொண்டான்.

அதன் அர்த்தத்தைப் புரிந்து கொ.ண்ட போடியார் ஏதோ திட்டத்துடன் குனிந்து தலையை இலாவகமாகச் சாய்த்து இருள்படிந்து கிடந்த குசினிக்குள் தன்கண்பார்வையை மிகுந்த சிரமத்தோடு ஊடுருவவிட்டு எதையோ நிதானித்துக் கொண்டவராக அடுப்பு எரியும் செந்தணல் ஒளியில் சிலையாக மினிங்கிக் கொண்டிருந்த அந்தப்பெண்ணுருவத்தை விளித்து,

"ஏய் ஒரு பாய் கொண்டு வந்து போடு." என்றார். அந்தத் தொனியில் அதிகாரத்தை விட உரிமை உணர்வே மேலோங்கி இருந்தது.

ஆனால் அதற்கு எந்த வித அசைவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

சற்றுக் கடினமான குரலில் "வள்ளி, நான் சொன்னது கேட்கலையா உனக்கு" என்றார். சிறிது நேரத்தில் பாய் ஒன்று வெளியில் வந்து விழுந்தது. சாமியனின் மூத்த மகன் அதனை எடுத்து விரித்து விட்டான்.

"அதுல இருங்கோ ஆறுதலாக." இராகவனைப் பாராமலே போடியார் கூறினார். மருமகனுக்கு அந்த விதத்தில் தான் மரியாதை கொடுப்பது அவர் வழக்கம்.

எல்லாவற்றையும் பார்த்தும் கேட்டும் ரசித்துக் கொண்டு நிற்பதிலேயே இராகவன் மகிழ்ச்சியைக் கண்டான் போலும்.

தேனீர் பரிமாறப்பட்டது. இருந்தவர்கள் எல்லோரும் களைப்பைப் போக்கினர்.

"சாமியன்"

தேனீரைக் கையில் எடுத்த போடியார் குரல் கொடுத்தார் இப்படி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமியனின் கோப்பையில் இன்னும் ஒரு மிடறு இருந்தது.

போடியாரின் அழைப்பு காதில் விழுந்ததும் இசையில் கட்டுண்ட நாகமாக அந்த மிடறு தண்ணியை அப்படியே ஊற்றிவிட்டு போடியார் அருகில் வந்து நின்றான் பவ்வியமாக.

"எல்லாம் சரிதானே?"

"ஓம் போடியார்." சாமியன் தலையைச் சொறிந்து கொண்டான். அதன் விளக்கம் காரியம் நிறைவேறி இருந்தாலும் இன்னும் சொற்ப பாக்கி இருக்கிறது, என்பதுதான்.

"என்ன சாமியன், ஒரு மாதிரியா நிக்கிறா? விழுங்காமச் சொல்லு பாப்பம்." அர்த்தம் தெரிந்த போடியார் அதட்டினாற் போல் கேட்டார்.

"வந்து போடியார்.........."

"என்ன பேச்சு வருகிதில்ல. என்ன சங்கதி? பொறுத்த சமாச்சாரம் போல கிடக்கு."

"பெற்றோமக்ஸ் ரெண்டு எடுக்கோணும்......"

"எடுக்கலாம். இன்னும் இழுக்கிறாப்பில கிடக்குதே..... வேறென்ன?"

"வாறன் எண்டு சொல்லிப்போன கந்தனுக்கு ராவு பாம்பு கடிச்சிப் போட்டுது. அவன்ட இடத்துக்கும் ஆள் பாக்க வேணும்."

"எல்லாத்தையும் ஒழுங்கு பண்ணுறதானே. இப்பிடியே இருந்தா எப்ப முடியப்போகுது. உனக்குத் தெரியும்தானே இண்டைக்கு நான் வருவனெண்டு."

அசட்டுச் சிரிப்புடன் இப்போதும் தலையைச் சொறிந்து கொண்டே இருந்தான், சாமியன். போடியார் பேசாமல் கண்ணயர் வருவதுபோல் இருக்கவே, அவர் புலன்களைத் தன்பால் ஈர்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் யுக்தியாக தொண்டையைக் கனைப்பதும், செருமுவதுமாக பிரயத்தனங்களை மேற்கொள்ளலானான்.

குனிந்தபடி இருந்தாலும், அவனது சாகசங்களை மனக் கண்ணில் நிறுத்தி அதன் அர்த்தங்களை ஊகித்துக் கொண்டிருந்தார் போடியார்.

"சாமியன்....."

"ஐயா."

"காசி இரிக்கோ."

"இல்ல, போடியார்......"

அதற்காகத்தானே இத்தனை யுக்தி, தந்திரங்களைக் கையாண்டான். போடியாருக்குத் தான் இது தெரியாதா, என்ன?

குட்டானைத் திறந்து,

"சாமியன், அப்ப..... இந்தா......" என்று கூறி ஒரு நூறு ரூபா நோட்டை இழுத்து அவன் எதிரே நீட்டினார்.

மரியாதையோடு இரண்டு கைகளாலும் அதனைப் பெற்றுக்கொண்ட சாமியன் தன் வேலைக்குக் கூலி கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் திரும்பி நடக்க ஆயத்தமான வேளையில்,

"சாமியன்" என்ற குரல் கேட்டு அலுப்புப் பார்வையுடன் திரும்பினான்.

"இஞ்ச கொஞ்சம் வந்துட்டுப் போ."

"என்ன போடியார்." காதோடு காதாக அக்கறையுடன் விசாரித்தான்.

"இரவைக்கு சாப்பாட்டுக்கு ஒழுங்கு செய். வழக்கத்த விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் நல்லா இரிக்கோணும்."

"ஓம் போடியார். இத நீங்க சொல்லோணுமா? எனக்குத் தெரியும் தானே ஐயா வந்திரிக்காரு. அதெல்லாம் செப்பமா நான் செய்து முடிப்பன்."

"சாப்பாட்டு விசயத்த மட்டும் கவனிக்கிறதோட நிண்டுடாத. மற்ற வேலயளையும் ஒழுங்கா கவனி ராவைக்கு சூடு தள்ளவேணும். என்ன?"

"சரி போடியார்."

அங்கிருந்து வாயு வேகத்தில் கிளம்பிவிட்டான் சாமியன். அவன் சென்று விட்ட சில வினாடிகளில்,

"எங்கே? சாமியன் போயிற்றானே?"

குனிந்த குனியாக இருந்து குட்டானுக்குள்ளிருந்த மீதிக் காசிக் கற்றைகளை கணக்குப் பார்த்து ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த போடியார், ஏதோ சிந்தனைவயப்பட்ட நிலையில் சாதாரண குரலில் சொன்ன அவசரமில்லாத விசாரணைக்கு பெருமதிப்பளித்த அந்த விவசாயிகள் கூட்டத்தினர் கைதட்டி, குரல் கொடுத்து முடியாமல் போகவே பின்தொடர்ந்து சென்று பாதிவழி ஏறி மறைந்து கொண்டிருந்த சாமியனைப் பலவந்தமாக இழுத்துக்கொண்டு வந்து போடியார் முன் நிறுத்திவிட்டு புன்னகை தவழும் முகங்களோடு பெருமைப்பட்டுக் கொண்டிருந்தனர்.

களைப்பினால் எழுந்த மூச்சை ஒருவாறு அடக்கிக்கொண்டு "கூப்பிட்டயளாம் போடியார்" என்றான் சாமியன்.

"எங்கே அதுக்குள்ள போயிற்றயா? நீ இஞ்சதான் நிக்கிறாய் எண்டல்லவோ....? ஆ பரவாயில்லை வரச்சொல்லு பாப்பம். எனக்கு நேரமில்ல."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மனைவி மக்களைக் குறிப்பிட்டுப் பேசுகிறார் என்பதை அனுபவரீதியாக அர்த்தம் புரிந்து கொண்டு பின்புறமாக குசினியை நோக்கி கண்களை நெரித்து சமிக்ஞை செய்தான்.

அதற்கென்றே ஆயத்தங்களோடு காத்துக் கொண்டிருந்த வள்ளியும் பிள்ளைகளும் போடியார் முன்பாக தங்களை ஆஜர் செய்யும் கடைசி ஒத்திகையாக தாம் அணிந்திருந்த அழுக்குத் துணிகளை கைகளால் தட்டிச் சுத்தம் செய்தும் புரட்டி சீர்செய்து கொண்டும் ஒவ்வொருவராக வந்து தத்தமக்குரிய சன்மானங்களைப் பெற்றுக் கொண்டனர்.

கடைசியாக நாணிக் கோணி நடை பயின்று வந்த அந்த வள்ளிக்கொடி போடியாரின் கைகளிலிருந்த பணத்தைப்பற்றிக் கொண்டு பாய்ந்து மறைந்து விட்டாள்.

அவளது கூச்சத்திற்கான காரணத்தைக் கூர்ந்து, அவதானித்த போடியார் டேய் சாமியன் என்றார் அதட்டலாக.

"என்ன போடியார்."

என்னடா உன்ட வேல. இவளுக்கு ஒரு சட்டத்துணி கூட உன்னால வாங்கிக் குடுக்கேலாதடா. அவள பாத்தயா கண்ணால. சாமியன் தலையைச் சொறிந்து கொண்டு பேசாமல் நின்று கொண்டே இருந்தான்.

இரண்டு நூறு ரூபா நோட்டுக்களை எடுத்து, "சரி இந்தா. குடிச்சி அழிச்சிப் போடாம ஞாபகப் படுத்தி ரெண்டு யார்த்துணி வாங்கிக் குடுத்திரு அவளுக்கு என்ன, நான் சொல்றது கேட்டுதா?"

"ஓம் போடியார்."

முதலில் பெற்ற ஆயிரம் ரூபா. சட்டைச் சீலைக்கான இருநூறு ரூபா. அவனுக்கு சன்மானமாகக் கிடைத்த நூறு ரூபா. எல்லாமாக ஆயிரத்து முந்நூறு ரூபாயுடன் பரந்த வயல் வெளியினூடாக மகிழ்ச்சிப் பிரவாகத்தில் சிட்டுக் குருவியாக ஓடிக் கொண்டிருந்தான், சாமியன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[3]

சூரியன் மேற்கு வானிலே தன் கடமையின் எல்லையில் நின்று கொண்டிருந்தான்.

வயல் சூழலின் இரம்மியமான இயற்கை வனப்புகளைக் கண்களால் பருகி மனநிறைவோடு மென் நடையில் சூட்டுக்களம் நோக்கி வந்து கொண்டிருந்தான் இராகவன்.

முப்பது யார் நீளம், முப்பது யார் அகலமுடைய ஒரு பெரு நிலப்பரப்பு புற்களைந்து, சுத்தமாகக்கப்பட்டு தராசித் தட்டுப் போல் சீர் செய்யப்பட்டிருந்தது.

நான்கு பெரிய சூட்டுப்புரைகளும் ஒரு கந்தும் மொத்தம் ஐந்து குவியல்கள் மலைக் குன்றுகள் போல் களத் தோரத்தே அமைந்திருந்தன.

தொழிலாளர் இருவர் அதன் மீது உட்கார்ந்து கொண்டு வரிசையாக அடுக்கப்பட்டிருந்த அந்த உப்பட்டிகளை தடிகளின் உதவியினால் களத்தை நோக்கித் குதறி எறிந்து கொண்டிருந்தனர்.

ஒருக்கைச் சாய்வாகப் படுத்துக் கிடந்த போடியார் வெற்றிலையைக் குதப்பிக்கொண்டே நடப்பவற்றை பார்த்து இரசித்துக் கொண்டிருந்தார்.

தண்ணீருடன் சுரைக்குடுகொன்று அந்தப் பரணின் உயர்ந்த கால்களிலொன்றில் தொங்கிக் கொண்டிருந்தது.

ஏகப்பட்ட பணிவிடைகளை போடியாரின் அருகிலிருந்து செய்துவிட்டு வேலையாட்களுடன் தானும் சேர்ந்து கொண்டான் முல்லைக் காரச் சாமியன்.

இராமர் அணைபோட வந்த குரங்குப்படை போல் காட்சி தந்த உழவர் கூட்டம் ஆற்றிய கடுமையான உழைப்பின் விளைவு அரைமணி நேரத்தில் அங்கு அசுரபலத்துடன் நின்றிருந்த சூட்டுக் குவியல்களில் ஒன்று சின்னாபின்னமாகக் கலைக்கப்பட்டு கள வட்டியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்கோலமாகக் கிடந்தது.

போடியாரின் ஒவ்வொரு குண விசேடங்களையும் நுட்பமாக ஊகித்தறிந்து வைத்திருந்தான் முல்லைக்காரச் சாமியன். தனக்கு அனுசரணையான உதார குணங்களை மட்டுமல்லாது அவருக்கு ஏற்படக்கூடிய சீற்றத்துக்கான காரணங்கள், அதற்கான பரிகாரங்கள், மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோட அதில் அவர் நிலை மறந்து ரசித்துக் கிடக்கும் நேரங்கள், வேடிக்கை வினோதமாக தன் சாகச சாமார்த்தியங்களைக் கூறிப் பெருமைப்படும் சந்தர்ப்பங்கள் அத்தோடு அவரது அசட்டுத்தனம், ஏமாளித்தனம் - இப்படி அதிகமாக எல்லாமே கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக அவருடன் பழகியதில் அவனிடம் சிக்கிய அந்தரங்கங்கள் தான்.

இரவு எட்டு மணியிருக்கும். சூடு மிதிப்பதற்கான ஆயத்தங்கள் எல்லாம் சரியாகி இருந்தன. இரவு போசனம் சம்பந்தமாக போடியாரை அணுகி ஏதோ காதோடு காதாகக் கூறிவிட்டுத் தலையைச் சொறிந்து கொண்டு நின்றான் சாமியன்.

போடியார் தலைமையில் இரவு போசனம் விமரிசையாக நடந்து முடிந்தது. ஒன்பது மணிக்கெல்லாம் எல்லோரும் களத்தில் கூடிவிட்டார்கள். பொலியம்மா பொலி, பொலி தாயே பொலி பாடலுடன் அந்த இருள் அமைதியை பிளந்து புறப்பட்ட உணர்ச்சிக்கீதம் உழவு யந்திரத்தின் அகோர கர்ச்சனையினால் விழுங்கப்பட்டு சாக்குரலாக தூரத்தில் ஆர்த்து அடங்கிப் போய்க் கொண்டிருந்தது.

களவட்டியில் ஏறிய உழவு யந்திரம் எலியைப் பிடித்துக் கொண்ட பூனையாக மாறி துரிதமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது.

வேலையாட்கள் தத்தம்து கடமைகளில் கருத்துடன் நின்று கொண்டிருந்தனர்.

பரணில் பார்த்துக் கொண்டு படுத்துக் கிடந்த போடியார் அசதியாக கண் அயர்ந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு பெற்றோமக்ஸ் பெருக்கிய வெளிச்சத்திலும், அதற்கென்றே திட்டமிட்டு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்ட அந்த ஆற்றலும் திறமையும் செறிந்த வஞ்சனையை இராகவனுடைய கண்கள் நன்றாகப் பார்த்து விட்டதைப் பாவம் அவர்கள் எங்கே அறிந்திருக்கப்போகிறார்கள்.

அன்பைப் பகிர்ந்து கொள்வதிலும் அதற்குடந்தையான இருசாராருமே சரியாகப் புரிந்து கொள்ளாத போது, அது கூட ஒரு விதத்தில் இலாப நட்டமுடைய வியாபாரப் பொருளாகவே ஆகிவிடும்.

நான்கு நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்ற சூடுமிதிக்கும் வைபவம் ஒருவாறாக முடிவுற்றது.

முத்து முத்தாக குவிக்கப்பட்டிருந்த நெல்மணிகளைத் தொழிலாளர்கள் மூடை மூடையாகக் கட்டிக் களத்திலேயே அடுக்கி வைத்தார்கள்.

போடியாரின் ஆணையை அனுசரித்து ஒரு சிறு குவியல் மட்டும் களத்திலேயே சொரியலாகக் கிடந்தது.

கணக்கு வழக்கு சில்லறைகள் சீர்செய்யப்படும் நடவடிக்கைக்காக பரணடிக்கு வந்து முல்லைக்காரனும் வேலையாட்களும் சூழ்ந்து நின்று ஏதோ சுவாரசியமாகப் பேசி மகிழ்ச்சியடைந்திருந்தனர்.

எல்லோரையும் அமரும்படி கேட்டுக்கொண்ட போடியார் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். முல்லைக்காரனே செயலாளராக வீற்றிருந்து தலைவரின் கட்டளைகளைச் சிரம் தாழ்த்தி செயல் படுத்திக் கொண்டிருந்தான்.

முல்லைக்காரன் கொண்டு வந்த பிரேரணைகள் யாவும் அங்கீகரிக்கப்பட்டு அவை அமுலாகிக் கொண்டே இருந்தன. அவனுக்குச் சேரவேண்டிய கூலிகள், பொருத்தங்கள், வெகுமதிகள், சன்மானங்கள் யாவும் கொடுக்கப்பட்டுவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றிற்கும் இணக்கம் தெரிவித்துக் கொண்டிருந்த போடியார் தானாக ஏதாவது செய்ய வேணடுமே என்பதற்காகவோ என்னவோ,

"முல்லைக்காரனின் பொருத்தம், படி எல்லாம் போக என்னுடைய கணக்கில் ஒரு அவணம் சன்மானம்" என்று பலமாகக் கூறிவிட்டு புன்முறுவலை அடக்க முடியாதவராக சாமியனையே பார்த்தபடி சிறிது நேரம் இருந்து கொண்டிருந்தார்.

அவர்கள் இருவரையும் பார்த்து ஆவல் பெருமூச்செறிந்த வண்ணம் ஏனைய வேலையாட்களில் சிலர் அங்கே அமைதியாக உட்கார்ந்திருந்தனர்.

போடியாரிடம் ஒரு மரைக்கால் படி நெல் கூட்டித்தரும்படி மன்றாடியபோது அது மறுக்கப்பட்டதுமல்லாது மானம் கெட நேர்ந்த அந்த சம்பவத்தை நினைத்து தன்னுடைய போடியாரின் தன்மையையும் சாமியனுக்கு வாய்த்த இந்த மனிதரையும் மனத்திரையில் நிறுத்திப் பெருமூச்செறிந்தான் அங்கே அமர்ந்திருந்த முத்தன்.

சாமியனின் முகத்தில் வெள்ளி மினுக்கம் போல் பளிச்சிட்ட அந்த மகிழ்ச்சி ஒளிக்கீற்று மறுகணமே இருள்படர்ந்த கூம்பிய மலராக சோர்ந்து விட்டதற்குக் காரணம் இல்லாமலில்லை.

"தானும் மற்றவர்களைப் போல ஒரு கண்டிப்பான போடியார் தான்" என்ற கரிசனையை மற்றவர்கட்குக் காட்டவேண்டுமென்ற எண்ணத்தில் மண்ணாங்கட்டி, பதர்க்கடை விவகாரம் வந்தபோது,

"அதை எல்லாம் கட்டி இங்கே பவுத்திரமாக வை" என்று அதிகாரத் தொனியில் ஆணை பிறப்பித்தார். அவர் கண்கள் சாமியனை உற்று நோக்கின.

"என்ன சாமியன், ஒரு மாதிரியாக இருக்கிறாய்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒண்டுமில்ல போடியார்...."

ஏனோ தானோ என்ற பாவனையில் சாமியனிடமிருந்து பதில் வந்தது.

வேலையாட்களின் பக்கமாக எழுந்த குரல் ஒன்று

"அந்த மண்ணாங்கட்டி பதக்கடை அவனுக்கில்லென்டு சாமியனுக்கு மனவருத்தம் போல கிடக்கு.என்னடா சாமியன்?நான் சொல்லுறது சரிதானே?"

போடியாரையும் சாமியனையும் ஒற்றுமைப் படுத்த சதி செய்தது இப்படி.

"அடடா ! அதுவோ ? அதுக்கும் இவனுக்கும் என்ன சம்பந்தம் ? அவனுக்குச் சேரவேண்டியதெல்லாம் குடுத்த பிறகும் இவனேன் இதில.....?"

போடியார் விட்டுக் கொடுக்காமல் பேசினார்.

முன்பு பேசிய அந்தக் குரலுக்குரிய முதியவரே திரும்பவும் வாதிட்டார்.

"வழக்கமாக நீங்க குடுத்துத்தானேவந்த நீங்க. அப்ப அவன் கேக்கிறதிலயும் நாயம் இருக்குது தான்...."

"அதுக்காக........?" என்று குரலைச் செருமிக் கொண்ட போடியார் தொடர்ந்து தன் பேச்சுக்கு ஆதாரமாக,

"இவன் நெடுகே குடிச்சிப்போட்டு வீட்டப்பட்டினி போட வைக்கச் சொல்லியோ?" என்ற கேள்வியைக் கேட்டு நிறுத்தினாலும், அவரின் இந்த நியாயம் அந்த உழவர் திருச்சபையை திருப்திப்படுத்த தவறி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரை ஒருவர் பார்த்து விழித்துக்கொண்டிருக்கையிலேயே போடியாரின் குரல் விளம்பரம் செய்தது.

"மண்ணாங்கட்டி, பதக்கட எந்தக் காரணம் கொண்டும் சாமியனுக்குச் சேர மாட்டாது. அது வள்ளிக்கும் உளைக்காத அவள்ற பிள்ளையளுக்கும் சேர வேண்டிய உரிமைச் சொத்து."

வெண்ணிறத்து மல்லிகையில் வேனில் காலம் மலர்ந்த தண்மலர்கள் போல் கூடியிருந்த உழவர் இதழ்கள் உதிர்ந்த சிரிப்புக்கள் இடியென வானைப்பிளந்து கொண்டு எழுந்து மறைந்தன.

எப்படியும் அது தங்கள் தொழிலாளர் வர்க்கத்திற்கே சொந்தமாகி விட்டதென்பதில் அவர்களுக்கு ஒரு திருப்தி.

இருபத்து மூன்று ஏக்கர் நிலம் செய்கை பண்ணியதற்கு அம்முறை போடியாருக்குக் கிடைத்த மாமூல் ஐம்பத்துரண்டு அவணம். எல்லாம் போகத் தேறியது முப்பத்து ஐந்து மட்டுமே.

உழவில் தொடங்கி விதைப்பு, பசளை இடுதல், மருந்து தெளித்தல், அறுவடை செய்தல் ஆகிய அனைத்துமே சாமியனின் சொந்த அறிவுக்கும் ஆற்றலுக்கும் அமைவாகவே பழைய பாரம்பரிய முறைகளை அனுசரித்தே இந்த அறுவடை கிடைத்தது.

போடியாருக்கு அது நட்டமென்றோ, நயமென்றோ, போதுமென்றோ ,போதாதென்றோ எந்த அபிப்பிராயமும் இல்லை.அவர்வேளாண்மை செய்து வரும் முறைமை இது தான். எல்லாம் இறைவன் செயல் என்பதே அவரது அசைக்க முடியாத எண்ணம்.

உண்மைக் குண்மையாகவும் விசுவாசத்துடனும் கண்ணியமாகவும் உழைக்கும் விவசாயி தான் என்பதைப் போடியாருக்கு தன் செய்கைகள் மூலம் அவ்வப்போது உணர்த்தி வந்தாலும், இத்தனை காலமாக அவரின் முன்னேற்றத்திற்கு தடையாக இருந்த தோடல்லாமல் விளைவிலும் பிறவற்றிலும் பெரும் பங்கைச் சூறையாடி அதன் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படாதிருந்த மற்றொரு திறமையை வளர்த்து வந்த சாமியனின் சாமார்த்தியத்தை அவனோடு மனம் விட்டுப் பழகிய போடியாரால் அறிந்திருக்க முடியாத போதிலும் தூரத்திலிருந்த இராகவன் தெளிவாக அவதானித்துக் கொண்டுதான் இருந்தான்.

காலை வெயிலின் தன்மை மாறி வெப்பம் அதிகரித்துக் கொண்டே சென்றது. அடிவானத்திலிருந்து மேலே சஞ்சரித்த சூரியன் தன் நிலையில் மணி எட்டு என்பதை விவசாயிகளுக்கு அறிவித்துக் கொண்டிருந்தான்.

களவட்டியில் நெல் மூடைகளையும் பிறவற்றையும் அப்படி அப்படியே விட்டு விட்டு காலைப் போசனத்திற்காக சென்று விட்டனர் வேலையாட்கள். திட்டமிட்டுயிருந்த படி இராகவன் சாமியனுடைய மூத்த பையனை அழைத்துக் கொண்டு களவட்டியைச் சுற்றி சுற்றி ஆராய்ச்சியில் இறங்கினான்.

எல்லோருக்கும் முன்பாகவே தமது ஆகாரத்தை உட்கொண்டிருந்த படியால் எவரும் அந்த இருவரைப் பற்றி கருத்துக் கொள்ளவில்லை.

சாமியன் மட்டும் பையனிடம் ஐயாவோடு இருடா. ஒரு இடமும் ஓடாதே. சாப்பிட்டு விட்டு வந்திடுவோம். என்று திரும்பி நின்று எச்சரிக்கை போல் கூறிவிட்டு கடகத்தைக் கையிலேந்திக் கொண்டு வாடியை நோக்கி நடந்தான்.

எல்லோரும் பார்வையிலிருந்து அகன்று விட்டார்கள் இராகவன் தனக்குள் மெதுவாகச் சிரித்துக் கொண்டான்.

சந்தேகம் தெளிந்து விட்டது . சாமியனின் சாமார்த்தியம் அவன் கண் எதிரே மூடைகளாக பதுக்கி வைக்கப்பட்டு இருந்தன!

பையனின் உதவியோடு அவற்றை எடுத்து மூடைகளோடு மூடையாக அடுக்கி விட்டு எதுவும் தெரியாதவன் போல் இருந்து விட்டான் இராகவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தவன் தேட முயலவில்லை!

[4]

கார், வாடிக்கு நேராக வரக்கூடிய விதத்தில் வயலினூடாக மக்குக் களியையும் கிறவலையும் கொண்டு செம்மையான பாதை போடப்பட்டு விட்டது.

உழவின் போதும் விதைப்பின் போதும் பசளை எறியும் நாட்களிலும் வேறு தேவைப்படும் சமயங்களிலெல்லாம் இராகவன் தானாகவே சென்று நேரடி மேற்பார்வை செய்வதோடல்லாமல், நவீன முறைகளை விளக்கிக்காட்டி அவ்வாறே செய்யும் படி கண்டிப்புடன் இருந்தும் வந்தான்.

தொழிலாளர்கள் சொல்லிக் கொடுத்தவற்றைத் திருப்தியாகச் செய்ய முடியாமல் தடுமாறும் போது அவனாகவே வயலில் இறங்கி அந்த நுட்பங்களை செயல் முறைகள் மூலம் கற்பித்துக் கொடுத்தும் வந்தான்.

விதை நெல், பசளை, மருந்துக்களை அளவுக்கு மீறி சாமியன் வேண்டும் போது நியாய பூர்வமான பல கேள்விகளைக் கேட்டு அவ்விதம் செய்யவேண்டிய தில்லை என்றும் தான் சொன்னபடி செய்தால் அது போதுமான தென்றும் பிடிவாதமாக இருந்து வந்தது சாமியனைப் பொறுத்தவரை அது பெரும் நிர்ப்பந்தமாகவே இருந்திருக்க வேண்டும்.

அவனுக்கிருந்த ஏகபோக சுதந்திரம் முற்றாகப் பறிக்கைப்படுவதை எப்படி அவனால் சகித்துக் கொண்டிருக்க முடியும்?

வெளியில் காட்டிக் கொள்ளவும் முடியவில்லை. தனக்குள் அடக்கிக் கொள்ளவும் முடியவில்லை. உள்ளூர மனதில் குமைந்து கொண்டே இருந்தான்.

இத்தனைக்கும் இராகவன் ஒரு விவசாயப் பட்டதாரி என்பதை பாவம் சாமியன் அறிந்திருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகவனது வயலில் நெற்பயிர் செழிப்பாக வளர்ந்தது. அதனைக் கண்டு இயற்கை வாழ்த்துக் கூறியது. சாமியன் நெஞ்சினிலோ முளைத்த பொறாமை விதை கரவு எண்ணங்களில் வளர்ந்து பலவிதமான வதந்தி முடைகளாக விளைவுகண்டது.

இந்தத் துறையில் சாமியனின் சம்சாரம் மிகக் கச்சிதமாகச் செயல் பட்டதன் எதிரொலி அந்தப் பிராந்தியம் முழுவதுமே இராகவனின் கொடுமைகள் பல்வேறு உருவங்கள் பெற்று இறக்கைகள் ஏந்திப் பறந்து கொண்டிருந்தன.

இராகவனைப் பற்றி கீழ்தரமாகத் தாக்க அவர்கள் பிரயோகித்த தந்திரங்களில் முதன்மையானதாக இதனைக் கூறலாம்.

போடியாரின் குணாதிசயங்களையும் அவரோடு தமக்கிருந்த இனிய அனுபவங்களையும் பெருந்தன்மைகள், ஈகைக் குணம் என்ற இன்னோரன்ன விடயங்களையும் அத்தியாயங்களாக பகுத்து, அதேசமயம் இராகவனைப் பற்றிய கற்பனைகளை ஈவிரக்கமின்றிப் பழித்தும் திறம்பட இயக்கப்பட்ட அந்த நாடகத்தை பல மேடைகளில் அரங்கேற்றிக் கொண்டிருந்தனர்.

எது எப்படி இருந்த போதிலும் இராகவன் தன் முயற்சியை இடைநிறுத்திக் கொண்டதாகத் தெரியவில்லை.

எதற்கும் அசைந்து கொடுக்காமல் சிறு சிறு விவகாரமாக இருந்தாலும், அவற்றிற் கெல்லாம் தனித் தனித் கணக்கென்றும் செலவென்றும் எழுத்து வடிவிலான வைப்பு முறை வழக்கமொன்றை ஏற்படுத்தி, அதன் பொருட்டு உண்டான சந்தேகங்களை அல்லது கணக்கு வேறுபாடுகளை நறுக்காகக் கேட்டுத் தெரிந்து கொண்டு வந்த இப்புதிய முறை சாமியனைச் சிறிதும் திருப்திப்படுத்தவில்லை, மாறாக, எரியும் விளக்கிற்கு எண்ணை வார்ப்பதாகவே அவன் உள் உணர்வுகளைச் சுடர் விட்டெரியச் செய்து கொண்டிருந்தது.

அவன் உள்ளத்தில் வளர்ந்து கொண்டிருந்த கோபத்தையும் குரோதத்தையும் எல்லைக் கோடிட்டு மறைக்க எவ்வளவோ முயன்ற போதிலும், தகாத சில நேரங்களில் தன் சாமார்த்தியம் கை கூடாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் அவ்வுணர்வுகள் வெளிப்படக் கூடிய அபாய எச்சரிக்கையை அறிந்து கொண்டு அசம்பாவிதங்கள் நிகழாத வகையில் முன்யோசனையோடு விளையாட்டுப் போல் கூறியும் விட்டான்.

"மாமா இருந்த காலம் இனி வருமோ? ஐயா. அந்த ஆத்மாவுக்கு நிகராக.......என்ன செய்யிறது.......... அப்பவே நான்...... பிழை விட்டுட்டன்." என்றான் ஏக்கப் பெருமூச்சுடன்

அறுவடை முடிந்து சூடும் வைக்கப்பட்டு விட்டது. பத்துப் பெரிய சூட்டுக் குவியல்கள் வயல் வெளியில் ஒரு மலைப் பிராந்தியமாகக் காட்சி அளித்தது;

பார்த்தவர்கள் கண்களுக்கு ஏனோ மகிழ்ச்சி ஏற்படவில்லை.

"இப்படியான மனிதனுக்குத்தான் கடவுளும் பார்த்துப் பாராமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறான்." என்று தங்கள் அதிருப்தியைப் பகிரங்கமாகவே தெரிவித்துக் கொண்டனர்.

தொழிலாளர் வர்க்கம் இன ரீதியாக சாமியனின் சார்பில் ஒரு பொது எதிர்ப்பையும் அனுதாபத்தைபும் தெரிவிக்கும் தோரணையில் இராகவனிடமிருந்து மட்டும் வழக்கத்தில் தாம் பெறுவதற்குரிய விகிதத்திற்கும் சற்று உயர்வாகவே கூலியைக் கோரிப்பெறுவதில் மிகவும் கண்டிப்பாக இருந்து வந்தனர்.

எதிர்பார்த்ததற்கு மாறாக பேரம் பேசாமலே கேட்ட கூலியின் அளவில் அவர்களின் திருப்திப்படி எந்த மாற்றமுமின்றி வழங்கப்பட்டு வந்த தோடல்லாமல் விளைவின் அளவைக் கருத்திற் கொண்டு வேலையாளர் அனைவருக்கும் சிறு சன்மானமும் வழங்கி வந்தான் இராகவன்.

தனக்கு முன்னாலேயே தன் சக வேலையாளர்கள் சாமியனுக்கு ஆதரவென்றில்லா விட்டாலும், பொதுப் படையான நியாயத்தை எடுத்துக் கூறவேனும் இரண்டொருவர் இப்போது தலைநிமிர்ந்து விட்டார்களே என்பதை நினைத்த போது சாமியனால் வயிற்றெரிச்சலைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமியன் கூட அதைப் பற்றிச் சிந்தித்தவன் தான்.

"நேரடியாகப் பழக நேரும் போதெல்லாம் தொழிலாளர்களை எந்த ஏற்றத்தாழ்வும் இன்றி சமமாக நடத்தும் இராகவனின் மனப் பக்குவத்திற்கு எந்த மனித உள்ளம் தான் மறுத்துக் கூறத் துணியும். அதுவும் வயற்காட்டிலே பிறந்து வயல் பூச்சிகளாக தாழ்வு மனப்பான்மையிலே தம்மை மறந்து வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த ஏழைத் தொழிலாளிக்கு இப்படியானதொரு புதிய சூழலில் ஏற்படும் சொகுசு நிறைந்த தன்மான உணர்வை மதிக்காமல் விட்டு விட மனம் தான் வருமா?"

அந்த தேத்தண்ணிக் கடையில் பழைய சரித்திரத்தை சாமியன் புதுப்பிக்க முனைந்த போது முனைத் திட்டிக் காத்தி கூறிய பதில் அவனுக்கு ஞாபகம் வந்தது.

"பணத்தை முதலிட்டு செலவு செய்பவர்கள் கண்காணிப்புடன் இருப்பதில் என்ன தான் தவறிருக்கிறது. அதற்காக நாம் ஏன் பொறாமைப்பட வேண்டும்."

பக்கத்தில் இருந்த செல்லன் கூட தலையில் அடித்தது போல் கூறினானே...!

வேலைக் கேற்ற கூலி பழுதில்லாமல் கிடைத்து விட்டால் நமக்கெதற்கண்ணே பெரியவனுகளுடைய வீண் விவகாரமெல்லாம் என்று

அது மட்டுமா? கூட இருந்த அந்த காடையர் கூட்டம் கூட தரும சத்திரத்தில் முழங்கியது போல் பேசியதே முகத்தில் கரியை அள்ளிப் பூசியதுபோல.

"மழை பெய்தாலும் நன்றி இல்லை. வெயில் எறிந்தாலும் சுகம் இல்லை. என்ன உலகம்டா இது" என்று.

சூடு போடப்பட்ட பின்பு நெல் மணிகள் நிலத்தில் குவியலாக சொரியப்பட்டுக் கிடந்தது. உழைப்பின் பயனைக் காண இராகவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சம் நிறைந்திருந்தது. இனந்தெரியாத ஒரு வித குதூகலம் இழையோடி பரவச உணர்வையூட்டிக் கொண்டிருந்தது.

சாமியனுக்கோ அதனைக் காணவும் சகிக்காமல் எங்காயினும் ஓடி ஒழிந்து விட வேண்டு மென்ற மனவுந்தல் செறிந்திருந்தது. சொல்லவும் முடியாமல் இடத்தை விட்டு நகரவும் முடியாமல் இக்கட்டான நிலையில் அவன் தவித்துக் கொண்டிருந்தான்.

அந்த வட்டையின் சரித்திரத்திலேயே ஒரு சாதனை.

அமோக விளைச்சல். மொத்தம் நூற்றி நாற்பத்து நான்கு அவணம். கண்டிந்தது. "வழக்கம் போல் நரசிங்க தேவதைக்கு தொயிலாட்டம் போடாமலே இப்படி ஒரு வாரியா" என்று வயது சென்ற தொழிலாளர் மத்தியில் ஒரு வியப்பை ஏற்படுத்தியது. நரசிங்க தேவதை தண்டனை கொடுக்குமென்ற நம்பிக்கையில் விளைவைப் பற்றி அவர்கள் வேறு விதமாக எதிர்பார்த்திருந்தனர் போலும்!

வழக்கம் போல் போடியாரே விழாவுக்குத் தலைமை வகித்தார். அவரையே கூலிகள் கொடுப்பனவுகள் ஆகிய கொடுக்கல் வாங்கல் சிக்கல்களை நீக்கும் பொறுப்பை ஏற்கும்படி இராகவன் பணித்திருந்தான்.

அங்கிருந்த எல்லோருக்கும் அவரவர் செல்மதிகள் போக விசேட படியாக இரண்டு மரைக்கால் வீதம் நெல் பகிர்ந்தளிக்கப்பட்டது.

சாமியனைப் பொறுத்தவரை அது ஒரு சாக்காக மேலும் உயர்த்தப்பட்டது.

என்றாலும் அவனது இதயத்தில் நிரந்தர தானத்தைப் பெற்றிருந்த மனக்குறையை அதனால் நீக்கி முன்போல் முழுமை அடையச் செய்ய முடியவில்லை.

கைகளை உற்றுப்பார்த்து விட்டு மௌனமாக ஒரு வரண்ட பெருமூச்சை உகுத்தான். நரம்பு முறுக்கேறி அனுபவ முதிர்ச்சியடைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கரங்கள் அவனை நோக்காமலே கூம்பி மடிந்து விட்டன.

"என் திறமைக்கு இங்கேது இனி இடம்" என்ற மானசீக உணர்வின் உந்தலோடு ஆக்ரோச சிந்தனை வயப்பட்டவனாக அவ்விடத்திலேயே எல்லோருக்கும் முன்னால் எழுந்து நின்று தைரியமாகக் கூறினான்.

"ஐயா, அடுத்த முறை வயல் செய்கை பண்ண என்னால ஏலாது . எந்தக் குறையும் எனக்கில்ல. நீங்க ஆரயாவுதல் புடிச்சி உங்கட, கருமத்தப் பாருங்க. நான் நிக்கப் போறன்."

இரண்டு அடிகள் நகர்ந்து சொல்லி விட்டு சற்றுத் தொலைவில் போய் அமர்ந்து கொண்டான்.

"ஏன் சாமியன், என்ன நடந்தது? சும்மா இருந்தாப்பில .....?" போடியார் எதிர்பாராத அந்த நிகழ்ச்சியால் துக்கம் தொண்டையை அடைக்கும் தாழ்த்த தொனியில் கேட்டார் சற்றுப் பதட்டமாக.

அவரது வெள்ளை உள்ளம் அவனது பிரிவு ஈடுசெய்ய முடியாத தென்று கருதியிருக்க வேண்டும்.

"என்னிட்ட ஒன்றுமே கேளாதங்க போடியார். எனக்கு விருப்பமில்லை. அவ்வளவு தான்."

"ஏன் சாமியன். நீ இத்தின வருசமாக இந்த வயல்ல நிண்டு போட்டு திடீரென்று ஒருவிதமான அதிருப்தியோட...... மறைகாமச் சொல்லன் . ஏன் ஒழிக்கிறாய் ?"

"நடந்தது நடந்து போச்சி . இனி ஒண்டும் ஒத்து வராது. முறிஞ்சது திரும்பவும் ஒட்டாது போடியார் . நீங்க சும்மா உட்டிருங்க."

"எண்டாலும் சாமியன், இஞ்ச பாரு. என்ன நிமிர்ந்து பாரன். வீணான மனத்தாபம் நமக்குள்ள எதுக்கு? வாய் இருக்கு. பேச நாக்கிருக்கு. எதையும் ஒத்துக்கொள்ற மனம் இரிக்கு. அப்ப ஏன் நமக்குள்ள இப்பிடி ஒரு ...... என்ன நான் சொல்றது சரிதானே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடியார் நான் கதச்சிக் கதச்சி உங்கட நேரத்த வீணாக்கல்ல. உங்கள்ல எனக்கு எந்த வித மனத்தாங்கலும் இல்ல. நல்ல சந்தோஷமாத்தான் போறன். இதுக்கு மேல தயவு செய்து என்னிட்ட வேற ஒண்டும் கேளாதங்க."

"புன்னச் சரிராப்பா . நாம என்ன செய்யலாம் ......யோசிச்சுப் பாத்துச் செய். வேறென்னத்த சொல்லலாம் .......?"

அவர்களின் உரையாடலை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த இராகவனுக்கு நினைக்க நினைக்கச் சிரிப்பாகவே இருந்தது.

மனித உள்ளமே விசித்திரமானது தான். நல்ல தென்றும் கெட்ட தென்றும் தெரிந்த பின்பு கூட நல்லவற்றை விடுத்து கெட்டதனையே தாவி ஓடும் மனிதனின் வீம்பும் வைராக்கியமும் நிறைந்த குணவோரையில் அவன் அறிவு தலை தாழ்த்தி மௌனம் சாதிக்கின்றதா?

தூரத்தில் தெரிந்த குட்டை ஒன்றில் எருமை ஒன்று பாய்ந்து சேற்றைக் கிளறி பேரின்ப சுகானுபவத்தை நுகர்ந்து கொண்டிருந்தது. பின்னால் துரத்திக் கொண்டு வந்த பையன் அதனைப் புல்வெளிக்கு ஓட்ட எடுத்த பிரயத்தனங்கள் பயனற்று போய் விட்டன.

தனக்கு மாறாக எதனைச் செய்த போதிலும் இராகவனின் உள்ளம் உண்மையிலேயே சாமியனின் குடும்பத்தை நினைத்து இரக்கப்பட்டது.

மதுவின் மயக்கத்தில் அவன் அலைந்து திரிவதையும் பசியால் பிள்ளைகள் அலை மோதி நாதியற்று நிற்பதையும் அவன் மனைவி தன்னைத் திட்டி அலறுவதையும் அவன் கண்கள் தூரதிஸ்டியால் பார்த்துக் கொண்டன.

சிந்தனையில் மூழ்கிவிட்ட இராகவன் தெளிவும். தீர்க்கமும் கொண்ட முடிவுடன் மீண்ட போது அவன் வதனம் பிரகாசமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களவாக அடுக்கப்பட்டிருந்த நெல் மூடைகளை வைக்கோல் புதரிலிருந்து மீட்க தன்னோடு உதவியாக நின்ற சாமியனின் மகன் கந்தனை நினைந்து கொண்டதே அதற்குக் காரணம்.

தந்தையின் கண்களைத் திறந்து விடவும். ஊர்வாயை உலமூடி கொண்டு அடைக்கவும் ஒரே சமயத்தில் இரண்டுக்கும் சாதகமான அந்த முடிவை எண்ணி உண்மையிலே அவன் சில நேரம் இரசித்து இருந்தான்.

ஆம். நவீன முறையில் விவசாயம் செய்யக் கற்றுக் கொண்டு முன்மாதிரியாக வாழும் புதிய சமுதாயத்தின் பழைய தலை முறை கந்தன் அல்லவா?

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றமிறக்கம் – (சிறுகதைத் தொகுதி)

ஆரையம்பதி க. சபாரெத்தினம்

நவீன இலக்கிய வடிவங்களுள் சிறுகதை குறிப்பிடத்தக்கவொன்றாகும். தனிமனித வாழ்க்கை அல்லது சமுதாய வாழ்க்கையின் ஒரு குறிப்பிட்ட போக்கை அது சுவையோடு பிரதிபலிக்க வேண்டும். இத்தகு சிறுகதையானது ஆழமான மனித உணர்வுகளை அழுத்தமாக விபரிக்கின்றது.



கணபதிப்பிள்ளை சபாரெத்தினம் (1946) மட்டக்களப்பில் ஆரையம்பதிக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மட்/சிவானந்த தேசிய பாடசாலையில் கற்றுத்தேறி இலங்கை பொது எழுது வினைஞர் போட்டிப் பரீட்சையில் சித்தி யடைந்து எழுது வினைஞராக மட்/கல்வித் திணைக் களம் மற்றும் இதர திணைக்களங்களில் சிறப்புடன் சேவையாற்றி இலங்கை வெளிநாட்டு சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து (1991) ரஷ்ய நாட்டிற்கான இலங்கை வெளிநாட்டு தூதரகம் மொஸ்கோவில் பணியாற்றும் காலை இவரது அனுபவ அறிவின் மூலமாக தமிழ் இலக்கியப் பரப்பிற்கு மொஸ்கோ அனுபவங்கள் என்றதொரு பயணக் கட்டுரை வகை நூலைத் தந்து வளம் சேர்த்தமை குறிப்பிடத்தக்கதாகும். பாடசாலைக் காலத்திலிருந்தே பீஸ்மாச்சாரி, ஆரையம்பதி க.சபாரெத்தினம் எனும் புனைப் பெயர்களில் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், மொழிபெயர்ப்பு, சிறுவர் இலக்கியம் முதலானவற்றை எழுதியவர். தற்போது அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற நிலையில் மண்முனைப் பற்று மத்தியஸ்த்த சபையின் உறுப்பினராக சேவையாற்றுகின்றார்.

கே.எம். முகம்மட் அமீர்

ISBN 978-955-97102-4-0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org